# முகவுரை

குற்றாலம் என்றால் குற்றாலந்தான். அதுபோல் குறவஞ்சி என்றால் குற்றாலக் குறவஞ்சியே தான். அந்தக் குற்றாலம் என்றாலோ குற்றாலநாதர்தான். குற்றாலநாதர் கோவில்தான். ஆயிரம் வருஷத்துக்கு முன் வேறு என்ன இருந்தது குற்றாலத்தில். ஊருண்டா? தெருவுண்டா? வீடு, வாசல் உண்டா? ஜனங்கள் உண்டா? குடியிருப்புத்தான் உண்டா? ஒன்றும் இல்லை கோவில்தான். கோவிலும் ஒரு மரந்தான். பலாமரந்தான். அதுதான் அம்பாள். அதுதான் சாமி. வேறு எதுவுமே இல்லையா என்று சிலர் கேட்கலாம். அப்படிக் கேட்டால் அருவி இருந்தது, மலை இருந்தது, சாரல் இருந்தது, காடு, ஒரே காடு, கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரே காடு இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

ஊரில்லை, கடைத்தெரு இல்லை, சினிமா கொட்டகை இல்லை, பள்ளிக்கூடம் இல்லை. ஆனாலும் மக்கள் வந்திருக்கிறார்கள் குழந்தை குட்டியோடு குற்றாலத்துக்கு. ஆயிரம் வருஷத்திற்கு முன்னாடியே மாணிக்கவாசகர் வந்திருக்கிறார். அதற்கும் முன்னாடியே திருஞானசம்பந்த சுவாமி வந்திருக்கிறார். அப்பர் சுவாமிகள் வந்திருக்கிறார். எல்லோருக்கும் முன்னால் மூவாயிரம், நாலாயிரம் வருஷத்துக்கு முன்பே அகஸ்திய மாமுனிவர் வந்திருக்கிறார்.

இவர்கள் எல்லோரும் எதற்காக வந்தார்கள், யாரைத தேடி வந்தார்கள் குற்றாலத்துக்கு. குற்றாலநாதரைத்தான் தேடி வந்தார்கள். அவர் குடிகொண்டிருக்கும் காட்டையும், மலையையும் தேடியே வந்தார்கள்.

வெயில் நுழைய முடியாத பச்சைப் பசேல் என்று இருண்ட காடாகத் தானே இருந்தது குற்றாலம். ஊராகவா இருந்தது. நாலாபக்கமும் போகப் போகப் போய்க் கொண்டே இருந்தது காடு. அந்தக் காட்டுக்குள் ஊடுருவி வந்த மாதிரி எப்படியோ தத்திப் பித்தித்தான் வந்தார்கள். அகஸ்தியர், மாணிக்கவாசகர், பட்டினத்தார் முதலிய சித்தர்களும், பக்தர்களும் எவ்வளவு சிரமப்பட்டு வந்திருக்கிறார்கள். வந்த உடனேயே சிரமம் எல்லாம் பறந்தோடிவிட்டன. சிரமம் மட்டுமா, பிறவித் தொல்லையே,

மனப்பாரமே, நான் என்னும் அறியாமையே, ஆணவமே அத்தனையும் பறந்தோடி விட்டன.

என்ன நிம்மதி, என்ன அமைதி, ஆனந்தம் என்றால் பேரானந்தம் என்றால் அதுதானே, வேறென்ன.

உண்மையில் மோட்சம் என்றால் வீடுபேறு அல்லது ஜீவன் முக்தி என்றால் அதுதான் அமைதியும், நிம்மதியும் கொடுக்கும் ஆனந்தந்தான்.

அந்த இன்பம், பேரின்பம் குற்றாலத்துக்கு வந்த உடனேயே கிடைத்துவிடுகிறது. குற்றாலநாதரே அள்ளி அள்ளி வழங்குகிறார் ஆனந்தத்தை என்றே சொல்ல வேண்டும்.

குற்றாலம் வந்தவுடன், அதாவது இருண்ட காட்டுக்குள் அத்துவானக்காட்டுக்குள் வந்ததுமே ஆனந்தம், குற்றாலநாதரைப் பார்த்ததுமே பேரானந்தம் என்று மாணிக்க வாசகர் சொல்கிறார். பாடலிலேயே அவருடைய வாக்கு மூலத்திலேயே பார்க்கலாம்.

**உற்றாரை யான் வேண்டேன்,**

**ஊர் வேண்டேன், பேர் வேண்டேன்,**

**கற்றாரையும் வேண்டேன்,**

**கற்பன இனி அமையும்,**

**குற்றால நாதன்**

**குரைகழற்கே ஆளானேன்,**

**கற்றாவின் மனம் போலக்**

**கசிந்துருக வல்லானே.**

எப்படி வந்துவிட்டது வெளிச்சம்! அந்த இருண்ட காட்டுக்குள்ளிருந்தல்லவா வந்துவிட்டது வெளிச்சம், கோடி சூரியப் பிரகாசமாகவல்லவா வந்துவிட்டது வெளிச்சம்.

இனி குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர் திரிகூடராஜப்பக் கவிராயர் கண்ட அனுபவம் எப்படி என்று பார்க்கலாம்.

குற்றாலமலையும் காடும் தனி. பொதிகை மலை என்று பெயர். அங்கு வந்து பார்த்தவர்களுக்குத்தான் அதன் அருமை தெரியும். பொதிகை மலையில் (குற்றாலத்தில்) உள்ள

அருவிகளும் அப்படித்தான். வேறு எங்கும் அப்படிப்பட்ட அருவிகள் இல்லை. உச்சிமுதல் உள்ளங்கால் வரை அரைக்கித் தேய்த்துக் குளிப்பாட்டி விடும் அருவி. குழந்தையைத் தாயானவள் குளிப்பாட்டுகிற மாதிரியே குளிப்பாட்டும் அருவி. லட்சோபலட்சம் குடம் அளவு பாலை மேலிருந்து கொட்டுகிற மாதிரி கொட்டிக்கொண்டே இருக்கும் அருவி. கடல் பொங்கி ஆர்ப்பரிக்கிற மாதிரியே, அதுவும் பாற்கடலே பொங்கி ஆர்ப்பரிக்கிற மாதிரியே திம், திம் என்று விழுந்து கொண்டே இருக்கும் அருவி.

பொங்குமாங்கடல் என்றே பெயர் அதற்கு. ஒரு தடவை வந்து பார்த்தால் போதும், குற்றாலம், அருவி, குற்றாலநாதர் என்று அனுபவித்தால் போதும். ஆயுள்நாள் முழுவதும் மனதில் அப்படியே நிற்கும் அவை. நினைக்க நினைக்க ஒரே ஆனந்தந்தான். அந்த ஆனந்தத்தில் பிறவிப் பிணியே அடிபட்டு ஓடத்தானே செய்யும். எந்த வைத்தியத்திற்கும் கட்டுப்படாத நோய், கர்ம நோய்களே கரைந்து மறைந்து விடும். எல்லாம் குற்றாலநாதர் அருள்தான்.

**சுற்றாத ஊர்தோறும்**

**சுற்ற வேண்டாம் புலவீர் !**

**குற்றாலம் என்றொரு கால்**

**கூறுங்கள் - வற்றா**

**வடஅருவி போலும்**

**வளம் பெருக்கும் ; மாளா**

**இடர்களையும் எந்தை**

**கழல்**

(எந்தை கழல் - குற்றாலநாதரின் அருள்)

பக்தியானது உருண்டு, திரண்டு ஒய்யாரமாய் நிற்கிறது கண்முன். தமிழ் செய்கிற காரியம் அது. குறவஞ்சி ஆசிரியர் திரிகூடராஜப்பக் கவிராயர். அவருடைய பூர்வீகம் நெல்லை மாவட்ட நான்குனேரி பக்கம். சிறு ஊர், பட்டிக்காடு. முந்நூறு முந்நூற்றைம்பது வருஷத்துக்கு முந்தியவர் கவிஞர். அதற்கும் இருநூறு இருநூற்றைம்பது வருஷத்துக்கு முன்பே பராக்கிரம பாண்டியன் என்ற அரசன், பரமபக்தன். அவன் குற்றாலம் மலையடி

வாரத்தில் பல மைல் சுற்றளவில் இருந்த காட்டில் ஒரு இடத்தை தேர்ந்தெடுத்தான். புலி நடமாட்டம் அதிகமாக இருந்த காடு அது. அதையே தேர்ந்தெடுத்தான். அது 'சிற்றாறு' என்னும் பேராற்றங்கரையில் இருந்தது. அதைத் தெளித்துத் திருத்தினான். அரண்மனை கட்டினான், குடி படைகளையும் குடி ஏற்றினான்.

புலியூர் என்றே அதற்குப் பெயர் சூட்டினான். தென்காசியை ஒட்டி முக்கால் மைல் தூரத்தில் கிழக்கே இருக்கிறது புலியூர். புலியூருக்கு கிழக்கே இருந்த காடும் புலி நடமாட்டம் அதிகம் உள்ளதுதான். அதற்குக் கடுவாய்க்காடு என்று பெயர். புலியூரை ஒட்டி தென் மேற்கே மூன்று, நான்கு மை தொலைவில் மலைச்சரிவில் ஒரு அருவி. சிறு அருவி, ஆனால் பெருங்காட்டுக்குள் இருந்தது அருவி. அங்கும் புலி நடமாட்டம் அதிகம் அதனால் அதற்குப் பெயரே புலி அருவி.

இனி, பராக்கிரம பாண்டியன் புலியூரில் இருந்த படியே மேற்கே முக்கால் மைல் தூரத்தில் ஒரு காட்டைத் திருத்தினான். அதுவும் சிற்றாறங்கரையில் தான் இருந்தது. திருத்திய இடம் விஸ்தாரமான இடந்தான். அதில் உலக நாயகனுக்கு ஒரு மாபெரும் கோவிலை எழுப்பினான். ஒன்பது மாடங்களோடு கூடிய பிரமாண்டமான கோவில், தென்காசி விஸ்வநாதப்பெருமான் கோவில் என்னும் பெயரில். இனி சிற்றாற்றின் வடபகுதி. தென்பகுதியில் இருந்த ஆற்றை ஒட்டி இருந்த ஒரு காட்டைத் திருத்தி தெளித்தான் பாண்டியன். அருமையான நன்செய் நிலமாகியது காடு. முப்போகம் விளையும் நன்செய் ஆகப் பண்படுத்தினான் பாண்டியன். நூறு ஏக்கருக்கு மேல் விஸ்தாரமான நன்செய். அதை அப்படியே உலக நாயகனுக்கு (விஸ்வநாதப் பெருமானுக்கு) நித்திய பூஜை, தேர்த்திருவிழா என்ற வழிபாட்டுக்காகக் கொடுத்து விட்டான் பாண்டியன். அப்படிக் கொடுத்த அந்நிலப் பகுதிக்கு வாழ்விலான் குடி(வயல்) என்று பெயர். வாழ்விலான் என்றால் இறைவன் என்று பொருள். எல்லாம் வல்ல இறைவன் என்று பொருள். நம்மைப்போல் பிழைப்பையே குறியாக வைத்து வாழ்கிறவன் இல்லை இறைவன்.

வாழ்விலான் குடி வயலை ஒட்டி குற்றாலம் போகும் வழியில் ஒரு மேடு, அதில் கோவில் பூசாரிகளுக்கு வீடுகள் கட்டிக்

கொடுத்துக் குடி அமர்த்தினான். அவர்களுக்கு மானியமாக வயலும் கொடுத்தான், காடு திருத்தி வயலாக்கி அவர்களுக்குக் கொடுத்தான்.

பூசாரிகளை ஒட்டி வேறு இனத்தார்களும் இங்கு குடி ஏறினார்கள். அந்த இடம் ஒரு ஊராகிவிட்டது. அதற்குத்தான் மேலகரம் என்று பெயர். அந்த மேலகரத்தில் வந்து குடி ஏறியவர்தான் திரிகூடராஜப்பன் என்னும் கவிராயர். குறவஞ்சி ஆசிரியர்.

வறண்ட நான்குநேரிப் பகுதியிருந்து வந்தவர் கவிஞர். அவர் வளமான குற்றாலம் பகுதியை, மலையை,காட்டை, கரும்பும், வாழையும், இஞ்சியும், மஞ்சளுமாய்க் குலுங்கும் விளைச்சலைப் பார்த்துப் பார்த்து வியந்தார். அவர் வியந்த வியப்புக்கு ஏது அளவு? அவர் பாடல்களை, குறவஞ்சிப் பாடல்களைப் பார்க்க வேண்டும். படிக்க வேண்டும். அப்படியே கண்முன் வந்து நிற்கும் கவிஞரின் அதிசயமும் ஆனந்தமும்.

இனி கோவில் இருந்த இடம் மெல்ல மெல்ல விரிந்து தெப்பம், திருவிழா, ரதவீதி, குடிபடைகள், கடைகண்ணிகள் என்று பெருத்து, தென்காசி என்னும் பெயரில் பெரிய ஊராகிவிட்டது.

எல்லாம் கோவிலை வைத்துத்தான். பராக்கிரமபாண்டியன் கட்டிய கோவிலை வைத்துத்தான்.

இனி, கோவிலுக்கு வேண்டிய ஆபரணங்களைச் செய்த தட்டார்கள் (பொற்கொல்லர்) குடி இருக்க அரசன் ஒரு இடம் கொடுத்தான். அது புலியூருக்குக் கிழக்கே இருக்கிறது. அதற்குத்தான் தட்டான்குளம் என்று பெயர். அப்படியே தேவாரம், திருவாசகம் என்று தெய்வப் பாசுரங்களைக் கோவிலில் காலையும், மாலையும் ஓதுகிறவர்கள் ஓதுவார் (மூர்த்தி)கள் அவர்கள் குடி இருக்கக் கொடுத்த இடமே பாட்டா(ர்) குறிச்சி என்று இப்பொழுதும் இருக்கிறது. இங்கெல்லாம் காட்டைத் திருத்தி நஞ்சை ஆக்கினான் பாண்டியன். சிற்றாற்றில் அணைகட்டி கால் மூலம் பாசன வசதி செய்தும் கொடுத்தான் பாண்டியன்.

தென்காசி, மேலகரம், வாழ்விலான்குடி, தட்டான்குளம், பாட்டாகுறிச்சி இவ்வளவும் தென்காசி விஸ்வநாதர் கோவிலுக்காக உண்டான ஊர்களே. கோவிலுக்காக இத்தனை ஊர்களை

உண்டாக்கி முப்போக விளை நிலங்களாகத் திருத்திய பாண்டியன் தனக்கென்று ஒரு விளை நிலத்தை உண்டாக்கினான். அரண்மனைக் காரியம், அரச தர்பார், சொந்தக்காரியம் என்று எத்தனையோ செலவுகள் உண்டுதானே. அதற்கெல்லாம் வருமானம் வேண்டுமே. அதற்காக உண்டாக்கின ஊர்தான் சுந்தரபாண்டியபுரம். சுந்தரபாண்டியபுரத்தை உண்டாக்குவதற்கு முன்பே புலி (கடுவய்) நடமாட்டம் அதிகமுள்ள கடுவாய்க் காட்டை அழித்து, திருத்தி, நன்செய் ஆக்கினான். அப்படி உண்டாக்கிய பகுதிதான் கடுவாய் அகற்றி எனும் பெயரோடு கூடிய சிற்றூர் அது இன்று கடுவாய்க்கத்தி என்று திரிந்து வழங்குகிறது.

மேலகரத்தில் வந்து குடியேறிய திரிகூடராஜப்பக் கவிராயர் குற்றாலமலை, அருவி, காடு. வயல், தோப்பு, கோவில், குற்றாலநாதர், குழல்வாய்மொழி அம்மை, தேர்த்திருவிழா என்று அத்தனையும் கண்ணாரக் கண்டார். அவர் உள்ளத்தை உருக்கிவிட்டன. அவர் கண்ட காட்சிகள். பக்தியே உண்டாகிவிட்டது கவிஞருக்கு. கண்டதும் காதல் என்பதற்கு ஏற்ப காதல் மயமாகவே ஊறியது கவிஞரின் இதயத்தில். பக்தி ஊறி, ஊறி ரசமாகப் பெருகியது. அப்படிப் பெருகிய ரசத்தையே தமிழானது கவியாக சிருஷ்டிக்கிறது. நாடகத்துறையில் வைத்து ஒரு இதிகாசமாகவே படைக்கிறது தமிழ்.

குறவஞ்சி என்ற பெயரில் ஒரு நாடகம். ஓரங்க நாடகம் போலத்தான் எழுந்து வருகிறது கவிஞரின் அனுபவமும், ஆனந்தமும். எப்படி கட்டடங்களை அமைத்துக் கொள்கிறது நாடகம்? குற்றாலநாதர், குழல்வாய்மொழி அம்மை சகிதமாக தேரேறி வீதி உலா (பவனி). பவனியைக் காண ஒரே கூட்டம், கண்ணுக்கெட்டிய தூரம் வரை கூட்டம், ஆரவாரம், எக்களிப்பு உல்லாசம், மயக்கம், ஆனந்தம் இப்படி வருகிறது கூட்டப்பவனி.

வசந்தவல்லி என்று ஒரு இளம் நங்கை. வழக்கம் போல் பந்தாட வருகிறாள். பந்தாடவும் செய்கிறாள், ஆட்டம் விறுவிறுப்பாக நடக்கிறது.

அங்கும் ஒரு கூட்டம், ஆரவாரமும் கூடத்தான். பந்து விளையாடும் இடம் நோக்கி வருகிறது பவனி, ஏதோ வசந்தவல்லியைக் குற்றாலநாதர் ஆசையோடு பார்க்க வருகிறது

மாதிரியே வருகிறது பவனி.

ஆட்டத்திலேயே நோக்கமாய் இருக்கிறாள் வசந்தவல்லி. முதலில் கவனிக்கவில்லை பவனியை. பிறகு எப்படியோ பார்த்துவிட்டாள். அவ்வளவுதான். நிலை கொண்டு நிற்க முடியவில்லை வசந்தவல்லியால். குற்றாலநாதரின் எடுப்பும், தோரணையும், மிடுக்கும், ஒய்யாரமும் உருக்கிவிட்டன வசந்தவல்லியை. தோழிமார் பதறிவிட்டார்கள். என்னமாயமோ, மந்திரமோ என்று ஒரே திகைப்பு அவர்களிடம். திகைப்பில் ஏதேதோ பக்குவம் பண்ணுகிறார்கள் வசந்தவல்லிக்கு. பக்குவம் ஒன்றும் எடுபடவில்லை. பிறகுதான் தெரிகிறது தோழியர்க்கு, இவளுக்கு வெருட்சியும் இல்லை, மருட்சியும் இல்லை. எதைக் கண்டும் பயப்படவும் இல்லை வசந்தவல்லிக்குக் கண்டிருப்பது காதல்தான், அந்த நோய்தான் என்று.

இப்படியா பளிச்சென்று ஏமாறுவது? என கிண்டல் பண்ணுகிறார்கள் தோழியர், பிறகு தூது போகவும் தயாராகிறார்கள். தூது போகவும் செய்கிறாள் ஒரு தோழி. தூது போன தோழி இன்னும் வரவில்லையே? இன்னும் வரவில்லையே? என்று மயங்குகிறாள் வசந்தவல்லி. மயக்கத்தில் என்னென்னவோ செய்கிறாள்.

இந்த நேரம் பார்த்து குறி சொல்லும் குறத்தி வருகிறாள். அவளிடம் குறி கேட்கிறாள் வசந்தவல்லி. பொருத்தமாகச் சொல்கிறாள் குறத்தியும் குறியை.

இப்படி முடிகிறது இந்தக்காட்சி. அடுத்த காட்சி குறி சொல்லப் போன குறத்தி நாள் பல ஆகியும் வரவில்லையே என்று ஆசை நோய்க்கு ஆளாகிறான் குறவன் (சிங்கன்) ஆளாகி என்னென்னவோ செய்கிறான். எப்படி எப்படி எல்லாமோ புலம்புகிறான் நேரம் பார்த்துச் சிங்கன் முன் வந்து ஒய்யார நடை நடந்து வந்து நிற்கிறாள் சிங்கி. (குறத்தி) கேட்பானேன் ஆனந்தத்துக்கு இரண்டு பேரும் துள்ளிக் குதித்து ஆனந்த ஆட்டமே ஆடுகிறார்கள்.

விஷயத்தைப் பார்த்தால் சாதாரணமாகத்தான் தெரியும். என்ன இருக்கிறது இதில். புதிதாக பிரமாதம் என்று சொல்ல என்ன இருக்கிறது இதில்? எல்லாம் நடைமுறையில் உள்ள சாமான்ய காரியம்தானே என்று கூடத் தோன்றும். உண்மைதான். விஷயம்

எதாக இருந்தாலும் அது சாதாரணந்தான். சாதாரணமாகத்தான் தெரியும். சூரியன், சந்திரனே சாதாரணமாகத்தானே தெரிகின்றன. ஏன் மனிதனே சாதாரணமாகத் தானே தெரிகிறான். அதுவும் மனிதன் கண்ணுக்கே மனிதன் சாதாரணமாகத் தான் தெரிகிறான். அப்படி இருக்க வேறு எதுதான் அற்புதமாகத் தெரியும். அசாதாரணமாகத் தெரியும்.

உணர்ச்சி ஒன்றுதான், உணர்ச்சியின் உச்சந்தான் அற்புதமாகத் தெரியும். அசாதாரணமாகத் தெரியும், தெய்வீகக் காட்சி என்றால் அதுதான்.

எதுபற்றியும் இருக்கலாம் உணர்ச்சி. எது பற்றி இருந்தாலும் அது உண்மையாக இருக்க வேண்டும். உண்மையாக இருந்து விட்டால் உச்சநிலை பெற்றுவிட்டால் அதற்கு உருவம் கிடைத்துவிடும். அழியாத் தன்மையோடு கூடிய உருவமே பெற்றுவிடும் உணர்ச்சி.

கண்ணீராகவும் இருக்கலாம், புன்முறுவலாகவும் இருக்கலாம், ஆனந்தமாகவும் இருக்கலாம், துயரமாகவும் இருக்கலாம். எதாக இருந்தாலும் உணர்ச்சியானது உருவம் பெற்றுவிடும். பெற்றுவிட்டால் போதும். எல்லாம் இன்பமயம் என்பதுபோல் அத்தனையும் தித்தித்திப்பாகவே இருக்கும்.

உண்ண உண்ணத் தெவிட்டாத தித்திப்பாகவே இருக்கும். நஞ்சே அமிர்தமாகிவிடும். செம்பு பொன்னாகும் ரசவாதம் என்றே சொல்ல வேண்டும் அதை.

அப்படி எடுக்கிற உணர்ச்சி உருவஙகள்தான் கலை. கலைமகளின் அரசி என்று போற்றப்படுவது கவி.

திரிகூடராஜப்பக் கவிராயர் கவியை, குற்றாலக் குறவஞ்சிப்பாடலைப் பார்த்தால் போதும். கவி உருவம் இன்னதென்று தெரிந்துவிடும். கவி உருவம், உணர்ச்சியின் அவதாரம், அது எடுக்கும் உருவம், அப்படி அப்படியே கண்முன் நிற்கும்.

குற்றாலநாதா பவனி வருகிறார். மேளதாள முழக்கத்தோடு வருகிறது பவனி. கூட்டமான கூட்டமா அது. அத்தனை கூட்டமும் ஒரே குரலில். ஒரே உணர்ச்சியில் ஒரே பக்திப்

பரவசத்தில் "ஜே" போட்டு வருகிறது பவனிக்கு முன்னும் பின்னும்.

இசைவாணர்களின் தேன் சொட்டும் பாடல்கள் என்ன, நடனம் என்ன இத்தனையையும் கையமர்த்தி நிற்க வைத்த படியே. ஆவேசமாய் எழுந்துவரும் பெண்களின் குலவை (ஒலி) என்ன, ஒரே ஆரவாரம், ஒரே முழக்கம் இத்தனை ஆரவாரமுழக்கத்தில் குற்றாலநாதர் பவனி வருகிறார். அன்னை குழல்வாய்மொழி அம்மையோடு சேர்ந்தே வருகிறார் பவனி, பவனி என்றால் அதுவல்லவா பவனி.

**கொத்து மலர்க்குழல்**
**தெய்வ மங்கையர்**
**குரவை பரவையை**
**நெருக்க வே,**
**ஒத்த திருச்செவி**
**இருவர் பாடலும்**
**உலகம் ஏழையும்**
**உருக்க வே,**
**மத்த ளம்புயல்**
**போல் முழங்கிட**
**மயில னார்நடம்**
**பெருக்க வே,**
**சத்தி பயரவி**
**கௌரி குழல் மொழி**
**தைய லாள் இடம்**
**இருக்கவே!**

பாடலைப் பாட வேண்டும். நிறுத்தி நிதானமாகப் பாட வேண்டும். வசனத்தை வாசிப்பதுபோல் வாசிக்கக் கூடாது, அவசரப்படவும் கூடாது.

**தான தன்னை**

**ன்ன தள்ள தன்னை**

**தான தன்னை**

**தான தன்**

என்னும் சந்தத்தில் பாட வேண்டும். பாடப் பாட கலைப்பண்பு, தமிழ்ப் பண்பு, இசைப்பண்பு, கவிப்பண்பு எல்லாம் தெரியும். தமிழின் சிருஷ்டியே தெரியும்.

பவனியின் தோரணை இப்படி, இனி பந்துவிளையாட வரும் வசந்தவல்லியின் தோரணை எப்படி என்று பார்க்கலாம். வசந்தவல்லி கட்டி முடித்த கொண்டையைப் பற்றிச் சொல்லவா? இல்லை, அதன் ஒய்யாரத்தைப் பற்றித்தான் சொல்லவா?

**இருண்ட பருவமுகில்**

**சுருண்டு சுழிஎறியும்**

**கொண்டை யாள் - குழை**

இனி, அப்படியும் இப்படியும் வாள்வீச்சுப்போல ஒளிவீசும் கண்(விழி) வீச்சைப் பற்றித்தான் சொல்லவா?

**குழை**

**ஏறி ஆடிநெஞ்சைச்**

**சூறை யாடும் விழிக்**

**கெண்டை யாள் - வரி**

செக்கச் செவேலென்று பூத்துக் சொரியும் வசந்தவல்லியின் வாயிதழ் பற்றிச் சொல்லவா? வாயிதழா அது, அமிர்தம் கசியும் தெய்வத்திருமலரல்லவா, அம்மலரின் இதழல்லவா அது. தேனூறும் செவ்விதழை வேறு என்ன சொல்ல. முருக்கம் பூவாவது, அதன் இதழாவது, பக்கத்தில் வரமுடியுமா வசந்தவல்லியின் வாயிதழுக்கு.

"திருந்து பூ முருக்கின் அரும்புபோலிருக்கும் இதழினாள். இனி அவள் நெற்றி இருக்கிறதே அதைப் பற்றி என்ன சொல்ல. சாதாரண வில்லின் வளைவையும், பிறைச்சந்திரன் ஒளியையும் தான் சொல்ல வேண்டும். ஒப்புக்குச் சொல்வதுவதான் அது.

**வரிச்**

**சிலையைப் போல் விளைந்து**

**பிறையைப் போல் இலங்கும்**

**நுதலி னாள்.**

இனிப்பாடலின் முழு உருவத்தையும் ஒன்றுபடுத்திப் பார்க்கலாம்.

ராகம் - பைரவி  தாளம் - சாப்பு

**கண்ணிகள்**

**இருண்ட பருவமுகில்**

**சுருண்டு சுழி எறியும்**

**கொண்டை யாள் - குழை**

**எறி ஆடி நெஞ்சைச்**

**சூறையாடும் விழிக்**

**கெண்டை யாள் ;-**

**திருந்து பூ முருக்கின்**

**அரும்பு போலிருக்கும்**

**இதழி னாள் - வரிச்**

**சிலையைப் போல் வளைந்து**

**பிறையைப் போல் இல்ங்கும்**

**நுதலி னாள்.**

குழை - காதணி. நெஞ்சை - பார்ப்பவர் உள்ளத்தை. விழிக்கெண்டை - கண்ணல்ல, கெண்டை மீன்தான். அந்தத் துள்ளு துள்ளுகிறது கண். வரிச்சிலை - நாண் பூட்டி முறுக்கிய வில். நுதல் - நெற்றி.

வசந்தவல்லியின் எடுப்பான தோற்றமும், மிடுக்கான பார்வையும் இப்படி, இனி வசந்தவல்லி ஆடும் பந்தாட்டம் எப்படி என்று பார்க்கலாம்.

**நாடகம் ஆடிய**

**தோகை மயில் என**

**நன்னகர் வீதியிலே - அணி**

**ஆடக வல்லி**

**வசந்தஓய்யாரி**

**அடர்ந்து பந்தாடினளே.**

தோகை மயில்போல் ஆடும் வசந்தவல்லியின் ஆட்டத்தில் எத்தனை நெளிவு, எத்தனை குழைவு, எத்தனை எத்தனை ஒசிவு. பார்ப்பவர்களை எல்லாம் குழைத்துக் குழைத்துப் பிசைகிறது அவள் ஆடும் ஆட்டம்.

**பொங்கு கனங்குழை**

**மண்டிய கெண்டை**

**புரண்டு புரண்டாடக் - குழல்**

**மங்குலின் செண்டு**

**கலைந்தது கண்டு**

**மதன்சிலை வண்டோட - இனி**

**இங்கு துவண்டிடை**

**என்படும் என்றயல்**

**நின்றவர் திண்டாட - மலர்ப்**

**பங்கய வல்லி**

**வசந்த சவுந்தரி**

**பந்து பயின்றாளே.**

குழல் மங்குலின் - கூந்தலாகிய மேகத்தில். செண்டு - பூங்கொத்து கலைந்தது கண்டு; மதன்சிலை வண்டு ஒட - பூங்கண்ணி கலையைக் கண்ணியில் மொய்த்திருந்த வண்டுகள் பயந்தும் கலைந்தும் ஒடின. வண்டுதான் மன்மதனுக்கு வில். இப்படிப் பம்பரமாக வசந்தவல்லி சுற்றிச் சுற்றி ஆடுகிறாளே. அதனால் இவள் இடை முறிந்துவிடுமே என்று பார்த்துக் கொண்டிருந்தவர்கள் கலங்கினார்கள். அவர்கள் அப்படி எல்லாம் கலங்கக் கலங்கச் சுழன்று சுழன்று ஆடினாள் வசந்தவல்லி.

அழகுக்கு அழகூட்டும் வசந்தவல்லியின் அழகு. அட்டகாசமான அழகு நம் மனதை விட்டு அகலுமா, அகலாது கண்ணை விட்டுத்தான் அகலுமா, அகலாது. அதுதான் கவி

செய்கிற காரியம்.

அப்படியே நம் மனதிலும் கண்ணிலும் நிற்கிறது. அவள் ஆடும் பந்தாட்டம் வலசாரி, இடசாரி என்று பம்பரமாய் சுற்றி சுழன்று அவள் ஆடும் ஆட்டத்தை என்னவென்று சொல்ல. வாய்திறந்து ஒன்றும் சொல்ல முடியாது. பார்த்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான்.

ஆட்டத்திலேயே குறிவைத்து பந்தாடினாள் வசந்தவல்லி. வேறு நினைப்புக்கே இடம் இல்லை அவள் உள்ளத்தில். அப்படி இருந்தும் குற்றாலநாதர் பவனியை, குற்றாலநாதரையே பார்த்துவிட்டாள். வசந்தவல்லி பார்த்த மாத்திரத்திலேயே மயங்கிவிட்டாள். கண்டதும் கொண்டுவிட்டாள் காதல். அந்தக்காதல் என்னபாடு படுத்துகிறது வசந்தவல்லியை.

ராகம் - அடாணா தாளம் - ரூபகம்

பல்லவி

**இந்தச் சித்தர் யாரோ – வெகு**

**விந்தைக்கார ராக விடையில் ஏறிவந்தார் – இந்த**

சரணங்கள்

**அருள்கண் பார்வையால் என்**

**அங்கம் தங்கம் ஆக**

**உருக்கிப் போட்டார்**

**கண்ட உடனேதான் ;**

**பெருக்கம் பார்க்கில் எங்கள்**

**திருக்குற் றாலர் போலே**

**இருக்கு(து) இவர் செய்மாயம்**

**ஒருக்கா லே! (இந்தச்)**

அங்கம் தங்கமாக உருக்கிப் போட்டார் - பார்த்த பார்வையிலேயே என் மேனி முழுவதும் பசலை பூக்கும் படி (அங்கம் தங்கமாக) உருக்கிவிட்டாரே. என்னை உருக்கியே விட்டார், கருக்கியே போட்டு விட்டார் என்னை, என் மேனியை. பொல்லாத ஆள்தான்

சரியான செப்படி வித்தைக்காரர் (சித்தர்)தான்.

ஆனால் ஒரு சாயலில் குற்றாலநாதர் போலல்லவா இருக்கிறது என்று மயங்குகிறாள் வசந்தவல்லி. அப்படி மயக்கி விட்டது காதல்.

இப்படி எல்லாம் மயங்கிப் புலம்புகிறாள் வசந்தவல்லி. உடனிருந்த தோழியர் பதறிவிட்டார்கள். பதற்றத்தில் எப்படி எல்லாமோ தேற்றினார்கள் வசந்தவல்லியை, ஆனால் வசத்துக்கு வரவில்லை வசந்தவல்லியின் காதல், அதன்மயக்கம், அதன் வேகமுந்தான்.

சித்தர், சித்தர் என்றே புலம்ப ஆரம்பித்து விட்டாள் வசந்தவல்லி. அப்பொழுது தோழியர் சொன்னார்கள். "ஏதோ பார்த்தால் ஒரு சாயலில் குற்றாலநாதர் போல் இருக்கிறார் என்கிறாயே, அவரேதான், குற்றாலநாதரே தான். சரியான சித்தர்தான் அவர். சித்தர் மட்டுமல்ல, சித்தர்களுக்கெல்லாம் சித்து விளையாட்டுக் காட்டும் மகா பெரிய சித்தராக்கும்" என்று.

விருத்தம்

**திங்களை முடித்தார், கண்டாய்**
**திரிகூட ராஜர்கண் டாய்**
**எங்குள சித்துக்கெ ல்லாம்**
**இறையவர் இவரே என்று**
**நங்கைமார் பலரும் கூடி**
**நன்மொழித் தேறல் மாந்தி**
**மங்கையாம் வசந்தவல்லி**
**மனம் கொண்டாள்; மயல் கொண்டாளே !**

குற்றாலநாதர்தான் இந்த கூத்துப் பண்ணினவர் என்று தெரிந்ததோ இல்லையோ, உச்சிக்கே ஏறிவிட்டது காமவெறி வசந்தவல்லிக்கு. ஜன்னிக் கோளாறு வந்த மாதிரி உருண்டாள், புரண்டாள். அவள் மேனி எல்லாம் அனலாய்க் கொதித்தது. மூச்சுக் காற்றே தீச்சுவாலை போலிருந்தது.

என்னென்னவோ செய்து பார்த்தார்கள் தோழிமார்,

ஒன்றும் எடுபடவில்லை. ஆனால் மனதில் உள்ளதைத் தோழியரிடம் வசந்தவல்லி கொட்டக் கொட்ட மெல்ல மெல்ல நிதானத்துக்கு வந்தாள் வசந்தவல்லி.

இதுதான் சரியான நேரம் என்று, "உனக்கு என்ன செய்ய வேண்டும் சொல் செய்கிறேன் என்றாள் தோழியரில் ஒருத்தி. குற்றாலநாதரிடம் தூது போய் வர வேண்டும் என்றாள் வசந்தவல்லி. போகவும் செய்தாள் தோழி. ஆனால் தோழியானவள் தூது போய் வருவதற்குள் வசந்தவல்லி வந்த வரத்து ஒன்றா, இரண்டா? வட்டம் போட்டுப் பார்ப்பாள், வட்டம் கூடவில்லை என்றால் குற்றாலநாதர் அருள் கிடைக்காதே என்று பதறுவாள், பதற்றத்தில் வட்டத்தை முடிக்க மாட்டாள். அரைகுறையில் நிறுத்தவாள், தேவார திருவாசகப் பாடல் ஏடுகளில் கயிறு சார்த்திப்பார்ப்பாள். பல்லிச் சத்தம் கேட்பாள், தெருவில் போகிறவர் வருகிறவர் பேச்சில் என்ன வருகிறது சாதகமா, பாதகமா என்றெல்லாம் யோசிப்பாள், தவியாய்த் தவித்தாள் வசந்தவல்லி. அதோடு விட்டாளா வசந்தவல்லி. சந்திரனை ஒரு பிடி பிடிக்கிறாள். மன்மதனையும் குடுமியைப் பிடித்து ஆட்டுகிறாள். தவியாய்த் தவிக்கிறாள் வசந்தவல்லி. அப்பொழுது வருகிறாள். குறிசொல்லும் குறத்தி. ஆடம்பரத்தோடு வருகிறாள் குறத்தி. வசந்தவல்லியின் முன்னால் வந்தே நிற்கிறாள் குறத்தி. அவளை விசாரிக்கிறாள் வசந்தவல்லி எப்படி விசாரிக்கிறாள்.

விருத்தம்

**அந்தரதுந் துடி முழங்கும்**
**நன்னகர்க்குற் றாலலிங்கர்**
**அருளைப்பாடி**
**வந்தகுற வஞ்சிதனை**
**வசந்தவல்லி கண்டுமனம்**
**மகிழ்ச்சி கொண்டு**
**சந்தமுலைத் துவளும் இடை**
**தவளநகைப் பவள இதழ்த்**
**தையலே! உன் ;**

**சொந்தமலை எந்தமலை,**
**அந்தமலை வளம் எனக்குச்**
**சொல்லென் றாளே.**

இப்படி ஒருத்தர் கேட்டால் விடுவாளா குறத்தி.

**வானரங்கள் கனிகொடுத்து**
**மந்தியொடு கொஞ்சும்**
**மந்திசிந்து கனிகளுக்கு**
**வானரங்கள் கெஞ்சும்**
**கானவர்கள் விழி எறிந்து**
**வானவரை அழைப்பார்**
**கவனசித்தர் வந்து வந்து**
**காயசித்தி விளைப்பார்**
**தேனருவித் திரை எழும்பி**
**வானின்வழி ஒழுகும்,**
**செங்கதிரோன் தேர்க்காலும்**
**பரிக்காலும் வழுகும்**
**கூனலிளம் பிறை முடித்த**
**வேணி அலங் காரர்**
**குற்றாலத் திரிகூட**
**மலை எங்கள் மலையே.**

அதோடு விடுவாளா குறத்தி.

**அஞ்சு நூறு**
**மகம் கொண்ட நாடு**
**அநேக கோடி**
**யுகம் கண்ட நாடு**
**கஞ்ச யோனி**

**உதிக்கின்ற நாடு**

**கமலவாணி**

**துதிக்கின்ற நாடு.**

கஞ்சயோனி - பிரம்மன். கஞ்சம் - தாமரை. யோனியில் - அவதரித்தவன். திருமாலின் உந்திக் கமலத்தில் உதித்தவன் பிரம்மன். திருமால் பிரம்மனைப் பெற்றெடுத்ததே குற்றாலத்தில்தான். கமலவாணி - கலைமகள். கமலம் - தாமரை.

என்றும் சொல்கிறாள். மேலும் சொல்கிறாள்.

**மாதம் மூன்று**

**மழையுள்ள நாடு,**

**வருசம் மூன்று**

**விளைவுள்ள நாடு,**

**வேதம் ஊன்றும்**

**பலா உள்ள நாடு,**

**விசேஷம் மூன்றும்**

**குலாவுள்ள நாடு**

வேதம் அதாவது சயன்ஸ் என்னும் விஞ்ஞானமே கண்ணும் கருத்துமாய்ப் பயிரிட்டு உண்டானது தானாம் பலா, குற்றாலத்துக்குறும்பலா.

இப்படி எல்லாம் அடுக்கிக் கொண்டே போகிறாள் குறத்தி. அப்பொழுது அவளிடம் குறி சொல்ல முடியுமா என்று கேட்கிறாள் வசந்தவல்லி. குறியும் சொல்கிறாள் குறத்தி. அதில் அவர்களுக்குள் வாக்கு வாதமே வருகிறது. அவ்வளவையும் சமாளித்து விடுகிறாள் குறத்தி.

அங்கு ஒரு திரை விழுகிறது நாடக மேடையில், பிறகு திரை விலகுகிறது. காட்சி மாறுகிறது. குறி சொல்லப் போன குறத்தியை நினைத்து விரகதாபத்தால் தவிக்கிறான் குறவன் சிங்கன். அதன் வேகத்தைத் தணிக்கவே பறவை வேட்டை ஆடுகிறாள். அதில் எல்லாம் அடங்குமா ஆசைநோய்.

கொச்சகக் கலிப்பா

**கள்ளுலவும் கொன்றையந்தார்**

**கர்த்தர்திரி கூடவேற்பில்**

**பிள்ளைமதி வாள் நுதலாள்**

**பேசாத வீறடங்கத்**

**துள்ளிமடி மேலிருந்து,**

**தோளின்மேல் ஏறி, அவள்**

**கிள்ளைமொழி கேட்க ஒரு**

**கிள்ளையா னேன் இல்லையே**

" ஒரு கிளியாய்ப் பிறந்திருந்தால் அவள் தோள் மீதமர்ந்து அவள் அமுதமொழியைப் பருகும் பாக்கியம் பெறுவேனே! கொடுத்து வைக்கவில்லையே பாவிக்கு" என்று கலங்குகிறான் சிங்கன் (குறவன்)

இப்படி எல்லாம் அவன் மயங்கும்போது சிங்கி (குறத்தி) எதிரில் வந்துவிட்டாள். வசந்தவல்லி எதிரில் திடுதிப்பென்று வந்து நின்றாள் அல்லவா குறத்தி. அதே குறத்தி தான் தன் கணவன் முன் திடுதிப்பென்று வந்து நின்றாள்.

எப்படியிருக்கும் குறவனுக்குக் குறத்தியைப் பார்த்தவுடன். கவிஞரே சொல்லட்டும் அதை.

**தொண்டாடும் சுந்தரர்க்குத்**

**தோழர்திரி கூட வெற்பில்**

**திண்டாடி நின்ற சிங்கன்**

**சீராடும் சிங்கிதனைக்**

**கண்டாடித் துள்ளாடி**

**கள்ளாடும் தும்பியைப் போல்**

**கொண்டாடிக் கொண்டாடிக்**

**கூத்தாடிக் கொண்டானே.**

பாடல் ஒவ்வொன்றும் வைரமாய் ஜொலிக்கின்றன. கவிஞர் திரிகூடராஜப்பக்கவிராயர் தான் பாடுகிறதாகத் தெரியும் நமக்கு. அப்படி இல்லை. பாடல் ஒவ்வொன்றும் தமிழ் செய்கிற காரியம்.

தமிழின் விளைச்சல் அது எப்படி எல்லாம் சிருஷ்டிப்பதற்கு, பாடல் விளைவதற்கு கவிஞர் கருவியாக இருக்கிறார். கவிஞரின் உண்மை உணர்ச்சியும், அதன் வேகமும், நயமும் தமிழுக்குக் கருவியாக அமைகின்றன.

குறவஞ்சியில் உள்ள பாடல் ஒவ்வொன்றும் தமிழின் விளைச்சல், தமிழில் விளைந்த அரிய ரத்தினங்கள்தான் பாடல்கள்.

முந்நூறு வருஷத்துக்கு முன் குறவஞ்சி நாடகத்தைப் பாடினார் திரிகூடராஜப்பக்கவிராயர். குறவஞ்சிப் பாடல்களைக் கேட்டவர்கள் எல்லோரும் நிமிர்ந்து நின்றார்கள். ஏன் தமிழகமே நிமிர்ந்து நின்றது. தமிழே வானளாவி உயர்ந்து நிமிர்ந்து நின்றது.

தமிழர் ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுதெல்லாம் குறவஞ்சிப் பாடல்களைச் சொல்லியே பேச்சைத் தொடங்குவார்கள். விசாரிப்பார்கள். சேமலாபவிசாரிப்பு ஒவ்வொன்றிலும் குறவஞ்சிப் பாடல் வரும். குறவஞ்சியிலிருந்து ஒருவரியாவது வரும். அது வந்துதான் விஷயத்துக்கு விளக்கம் கொடுக்கும்.

ஊர் ஊருக்கு குறவஞ்சி நாடகமே நடந்தது. குறவஞ்சி நாடகம் என்றால் கொட்டகையே பிடிக்காது கூட்டம். சுற்று வட்டாரம் முழுவதுமே கொட்டகைக்குள் வந்து நிறைந்துவிடும். திருவிழாக்காலம் என்றால் குறவஞ்சிப் பாடல்கள்தாம். அறுபது, எழுபது வருஷத்துக்கு முன் வரை தமிழகத்தில் அப்படி நீக்கமற நிறைந்திருந்தது குறவஞ்சிப் பாடல்கள்.

திண்ணைப் பள்ளிக் கூடத்திலிருந்து கல்லூரிப் படிப்பு முடிகிற வரை தமிழ்ப் பாடப்புத்தகம் என்றால் அதில் குறவஞ்சிப் பாடல்கள் இரண்டு, மூன்று இல்லாமல் போகாது.

மற்ற பாடல்களை எப்படிப் படிப்பார்களோ மாணவர்கள். ஆனால் குறவஞ்சிப் பாடல்களை மனம் வைத்துப் படித்தார்கள். பாடிப் பாடியே படித்தார்கள். வேறு வேறு நூல்களின் பாடல்கள் எல்லாம் மறந்தாலும் குறவஞ்சிப் பாடல்களை மட்டும் மறக்கவே மாட்டார்கள் மாணவ மாணவியர். ராகம் போட்டே அப்பாடல்களைப் பாடிப் பாடி ஆனந்தம் அடைந்தார்கள்.

இசைவாணர்கள், நாடகக்காரர்கள் எல்லாம்

குறவஞ்சியிலிருந்து பாடல் பாடாமல் முடிக்கமாட்டார்கள். நடனக்காரர்களைப் பற்றிச் சொல்ல வேண்டாம். குறவஞ்சிப் பாடல் இல்லாத நடனமே இல்லை என்று சொல்லும்படி இருந்தது.

தமிழர்களிடம் உண்மையான கலை உணர்வு, கவி உணர்வு இருக்கும் வரை குறவஞ்சிக்கு அப்படி ஒரு நிலை இருந்தது. தமிழர்களிடமிருந்து மெய்யுணர்வு மழுங்க மழுங்க குறவஞ்சி ஒதுங்கிவிட்டது. ஒதுக்கியே விட்டார்கள் தமிழ்ப்பெருமக்கள் குற்றாலக் குறவஞ்சியை பாடல்களைத்தான்.

இந்த நிலையில்தான் ரசிகமணி டி.கே.சி என்னும் சிதம்பரநாத முதலியார் அவர்கள் குற்றாலக் குறவஞ்சிப் பாடல்களைத் தமிழர்களுக்கு எடுத்துக் காட்டினார்கள். கம்பர், வள்ளுவர், மாணிக்கவாசகர் போன்ற தெய்வமாக்கவி திரிகூடராஜப்பக் கவிஞர் என்று எடுத்துக் காட்டினார்கள். டி.கே.சி சொல்லச் சொல்ல உண்மை விளங்கியது. விளங்க விளங்க பழையபடி தமிழகம் எங்கும் கொடிகட்டிப் பறந்தது குற்றாலக் குறவஞ்சிப் பாடல்கள்.

ஸ்ரீமதி. ருக்மணி அருண்டேல் அவர்களே ரசிகமணி அவர்களிடம் வந்து குறவஞ்சிப் பாடல்களையும், அவற்றில் நாடக நயங்களையும் கேட்டு அனுபவித்தார். அனுபவித்தது மட்டுமல்ல, குற்றாலம் கோவிலிலிருந்து அமெரிக்கா வரை, ஐரோப்பா முதலிய இடங்களில் எல்லாம் நடனத்தில் குறவஞ்சிப்பாடல்களை ஜொலிக்கச் செய்தார்.

ஆனாலும் பழைய குருடி கதவை திறடி என்பது போல பழையபடி குற்றாலக் குறவஞ்சிப் பாடல்களை விட்டு தமிழ்ப்பெருமக்கள் ஒதுங்குகிறார்கள். அப்படி ஒதுங்கக் கூடாது. அரிய பெரிய செல்வம் குற்றாலக் குறவஞ்சிப்பாடல்கள். அதை எக்காரணம் கொண்டும் இழக்கக் கூடாது

## கடவுள் வாழ்த்து

(1) சுற்றும் முற்றும் பார்த்தால் நாம் என்பதாக ஒன்று இல்லை. உண்மையில் அப்படி எதுவுமே இல்லை என்பது தெரியும். தெளிவாகவே தெரியும்.

பலாப்பழம் ஒன்றை எடுத்துக்கொள்வோம். சாதாரணப்பட்ட நோஞ்சானால் ஒரு பழத்தைத் தூக்க முடியாது. அத்தனை கனம். எவ்வளவு நீளம் பலாப்பழம். வேறு எந்த ஒரு பழமும் அவ்வளவு நீளம் (உயரம்) உண்டா? நீளத்துக்கு ஏற்ற அகலம் (சுற்றுவட்டம்)

பார்த்துக் கொண்டே இருக்கலாம். பலாப்பழத்தை பார்க்கப் பார்க்க நாவில் தேனூறும்.

பலாப்பழத்தை எளிதில் பிளக்க (பிரிக்க) முடியாது. கத்தி கொண்டுதான் பிளக்க வேண்டும். பிளந்த பெருந்துண்டங்களுக்குள் பார்த்தால் எழுபது, எண்பது, நூறு என்று சுளைகள் தேன் சொட்டும் சுளைகள், ஒவ்வொரு சுளையும் தங்கத்தகடாக ஜொலிக்கும்.

ஒவ்வொரு சுளைக்கும் தனித்தனி அறை, நீர்க்கசிவோடு கூடிய மெல்லிய இழையால் பொதிந்து வைத்திருக்கும் அறையை. ஏதோ வைக்கோல் வைத்து வேய்ந்தது போலவே இருக்கும். அதற்கும் மேலே நீர் சொட்டும் கனத்த நார்க்கொடி கொண்டு மூடி இருக்கும். முரட்டுச்சாக்கு, கிஸ்தான் சாக்கு வைத்து மூடியது போலவே இருக்கும். இனி அத்தனை

கண்ணறைகளையும் சுற்றி கனத்த வலுவான சுவர். அதற்கும் மேலே எந்த ஒரு விரல் நகத்துக்கும் மசியாத முரட்டுத்தோல்.

அந்த தோலை வைத்து பழத்தைச் சிப்பம் கட்டி இருக்கிற பாங்கே பாங்கு, எந்த ஒரு எஞ்சினீயரிங் நுட்பத்துக்கும் அடைபடாத மர்மம் அது.

அதோடு விட்டதா காரியம் முரட்டுத்தோலுக்கும் மேலே ஆணி வைத்து அடித்த மாதிரி பலாப்பழத்தின் சுற்றுவட்டம் முழுவதும் முள்வேலி. எந்த ஒரு பிராணியும் கை வைக்க முடியாது பழத்தின் மேல். தப்பித்தவறி வைத்தால் ரத்தக் கோரைதான் கை.

பலாப்பழம் ஒன்றில் மட்டுமா இந்த அற்புதம். அத்தனை பழங்களிலும், லட்சோபலட்சம் பழங்களிலும் இதே அற்புதம். ஆயிரம் ஆயிரம் வருஷமாக ஒவ்வொரு பலாப்பழத்தோடும் தொடர்ந்து வருகிறது இந்த அற்புதம்.

இனி வித்தை (பலாக்கொட்டையை) ஒவ்வொரு சுளைக்குள்ளும் பத்திரப்படுத்தி வைத்திருக்கிற நேர்த்தியைப் பார்த்தால் ஒரே அதிசயந்தான்.

அதிசயப்படத்தான் முடியும் நம்மால். ஏன் இப்படி நடக்கிறது, எது நடத்துகிறது இப்படி என்று தெரிய முடியுமா நம்மால். நம்மை விட்டுவிடுவோம், பலாமரத்துக்காவது தெரியுமா அதில் நடக்கிற அதிசயம். இல்லை, பலாப்பழத்துக்குக் தான் தெரியுமா?

கடவுளுக்குத் தான் தெரியும். கடவுளின் காரியந்தான் எல்லாம். எல்லாம் கடவுளின் செயல்தான் என்று தெரிந்த மாத்திரத்திலேயே, நாம் என்பதும், நம் செயல் என்பதும் கழன்று ஓடத்தானே செய்யும்.

அது கழன்று ஓட வேண்டும். ஓடிவிட்டால் அணுவிலிருந்து அண்டம் பேரண்டம் முடிய எல்லாம் கடவுள் தத்துவந்தான். அது ஒன்றுதான். வேறு ஒன்றும் இல்லை என்பது விளங்கும்.

பலாமரம் வெறும் விருட்சமாகவா தெரியும். இறைவனாகவே, இறைவன் கொலுவீற்றிருக்கும் சந்நிதானமாகவே தெரியும். பழம், சுளை, வித்து, கிளை, களை எல்லாமே இறைவன்தான் என்று தெரிந்துவிடும். உண்மையான (விஞ்)ஞானி என்றால் காணும் காட்சி அதுதான்.

ஒன்றாகக் காண்பதுவே காட்சி என்பதன் பொருள்தான் அது.

திரிகூடராஜப்பக் கவிராயர் நேருக்கு நேராக நின்று உண்மையைத் தரிசிக்கிறவர். அவர் எப்படிப் பார்க்கிறார் என்று பாருங்கள்.

**கிளைகளாய்க் கிளைத்த பல**

**கொப்பெலாம் சிவலிங்கம்,**

**கிளைகள் ஈன் ற**

**சுளைஎலாம் சிவலிங்கம்,**

**கனிஎலாம் சிவலிங்கம்,**

**கனிகளீன் ற**

**சுளையெல்லாம் சிவலிங்கம்,**

**வித்தெலாம் சிவலிங்க**

**சொரூபமா க**

**விளையுமொரு குறும்பலவின்**

**முளைத்தெழுந்த சிவக்கொழுந்தை**

**வேண்டுவோ மே (1)**

(2) பேரண்டம் முழுவதும் கடவுள்த்தத்துவந்தான். கடவுள்த்தத்துவம் என்றால் சக்திதான். ஒரேசக்தி மயந்தான். அதாவது உணர்ச்சிமயந்தான். ஆனந்தமயந்தான்.

கண்ணுக்குப் புலனாகாது சக்தி. நம் கண்ணுக்குப் புலனாவதில்லை என்றாலும் அதற்கென ஒரு வடிவம் (உருவம்) இருக்கத்தானே வேண்டும். அந்த வடிவந்தான் கடவுள்த்தத்துவம்.

---

(1) கிளை - கொம்பு, சுளை - முளை, பிஞ்சு

குறிப்பு : எழுபத்தைந்து வருஷத்துக்கு முன் சென்னை கிறிஸ்தவக்கல்லூரியில் ஒரு விழா, பழைய மாணவர் சங்க விழா. ரசிகமணி டி.கே.சி. பழைய மாணவரில் ஒருவர். விழாவில் பங்குபெற்றார். ஸ்காட்லண்ட் தேசத்துப் பாதிரியார் அப்பொழுது டி.கே.சி யிடம் கேட்டார்"நாங்கள் மரங்களிடத்து மிக்க அன்புடையவர்கள் நீங்கள் எப்படி" என்று. உடனே டி.கே.சி. சொன்னபதில் "எங்களுக்கு மரங்களிடம் ரொம்ப பக்தி உண்டு, கோவிலில் தல விருட்சம் என்று வைத்து வழிபடுகிறவர்கள் நாங்கள். ஏதோ ஒப்புக்கு அன்பு மட்டும் காட்டுவதில்லை" என்று. கப்சிப் என்று பம்மிவிட்டார் பாதிரியார். ஸ்காட்லண்ட் பாதிரியார்தான்.

சயன்ஸ் சம்பந்தப்பட்ட வழக்கில் சொல்வதென்றால் பொருள், சக்தி என்றுதான் சொல்ல வேண்டும்.

நம்மவர்களோ அனுபவத்தோடும் ஆனந்தத்தோடும் சொல்லி இருக்கிறார்கள் சயன்ஸ் வழக்கை. பரம்பொருளைச் சிவ(ம்) என்றும், சக்தியை உமை என்றும், இரண்டும் இணைபிரியாது சேர்ந்திருக்கும் உறவை உமையொரு பாகம் என்றும் நாடக இயலில் வைத்தே நயம்படச் சொல்லி இருக்கிறார்கள்.

கணவன், மனைவி என்று சொல்வதைவிட மெய்ப்பொருளையும், அதன் ஆற்றலையும் வேறு எப்படிச் சொல்ல முடியும்.

கணவன், மனைவி என்றால் ஊடல் இருக்கவே செய்யும். பிணக்கு இருக்கவே செய்யும். இருக்கவே வேண்டும் அது. ஆனால் அதன் மயம் ஆகிவிடக்கூடாது. ஒருவரை ஒருவர் நெருங்கவே வேண்டும். நெருங்க நெருங்க ஆனந்தந்தான்.

அந்த ஆனந்தத்தின் விளைச்சல் தானே சிருஷ்டி. கடவுளின் திருமேனி.

பனிமலையில் முளைத்த பவளமலை போன்ற பெருமானை, பச்சைப் பசுங்கொடியாகிய அம்மை எப்படிச் சுற்றிவளைக்கிறாள் என்பதைப் பாடலில் பார்க்கலாம்.

**தவளமதி தவழ்குடுமிப்**

**பனிவரையின் முளைத்தெழுந்த**

**தகைசேர் முக் கண்**

**பவளமலை தனில் ஆசை**

**படர்ந்தேறிக் கொழுந்துவிட்டும்,**

**பருவம் ஆ கிக்,'**

**குவலையம் பூத்(து) அருள்கொடியைக்**

**கோதைகுழல் வாய்மொழியைக்**

**கூறுவோ மே. (2)**

(3) புல்லிலிருந்து கற்பக விருட்சம் வரை, எறும்பிலிருந்து யானைவரை எத்தனை கோடி தோற்றங்கள். அத்தனையும் கடவுள்த்தத்துவந்தான். கடவுள்த்தத்துவத்தின் அவதாரந்தான். ஒவ்வொன்றும் ஒவ்வொரு சாயல். இறைவனின் தனித்தனிச் சாயல்தான்.

---

(2) தவளமதி - வெண்நிலா, குடுமி - (மலை) உச்சி. முக்கண்பவள மலை - சிவபெருமான், குற்றாலநாதர். இனி, குழல்வாய்மொழி அம்மை எனும் பச்சை பசுங்கொடி செய்தது என்ன. பவளமலையைச் சுற்றி வளைத்து கொழுந்துவிட்டது, மகப்பேறு பருவம் பெற்றது. அண்ட பிண்ட சராசரம் எனப்பூத்து சொரிந்தது.

குறிப்பு : சிருஷ்டித்தத்துவத்தின் முடிச்சுகளை எளிதாய் அவிழ்க்கிறது தமிழ். பாடலில் அது தெளிவாய்க் கிடக்கிறது.

(3) இனி மனிதனை எடுத்துக்கொண்டாலோ இறைவனின் ஒரு சாயல் என்று சாதாரணமாகச் சொல்லி விட முடியாது. கடவுளின் நேர்சாயல் என்று தான் சொல்ல வேண்டும் மனிதனை. அறிவுத்தத்துவம் அப்படி மனிதனோடு ஒன்றி நின்று செயல்படுகிறது.

அறிவுத்தத்துவம் முளைவிட்ட உடனேயே நிலத்தில் பயிரிட ஆரம்பித்து விட்டான் மனிதன். தனக்குத் தேவையான உணவையும், உடையையும் நிலத்திலிருந்து, முயற்சியிலிருந்து பெற்றுவிட்டான் மனிதன்.

உணவையும், உடையையும் தேடிப்பெற்றதுமே மானம் வந்துவிட்டது. வீரம் வந்துவிட்டது. பிறகு கேட்பானேன், தனக்கென்று மனையாள், குழந்தை, அதற்காகவே தனக்கென்று ஒரு குடி இருப்பு (வீடு) எல்லாவற்றையும்பெற்றுவிட்டான் மனிதன். குடும்பமே, வாழ்க்கையே கைக்குவந்துவிட்டது மனிதனிடம். உற்றார், உறவினர், நண்பர் என்று சுற்றம் சூழ்ந்தது. தெரு, ஊர் என்று ஏற்பட்டது. தெருக்காரர், ஊர்க்காரர் என்று நெருக்கம் உண்டாகியது. அப்படியே நாடு, நகரம், அரசு, சட்டதிட்டம், தொழில், வணிகம், கலை, மொழி, கோவில், வழிபாடு என்றெல்லாம் பெருகிவிட்டன மனிதனிடம்.

உறவு பெருகப்பெருக அன்பு ஊறியது, பொறுமை பூத்தது. ஒருவருக்கொருவர் ஆதரவு, உதவி, ஒற்றுமை, பாசம், பரிவு என்று அடுக்கடுக்காய் மலர்ந்தன. மொத்தத்தில் மனிதன்

மனிதனாகிவிட்டான். முழு மனிதனே ஆகிவிட்டான்.

இத்தனைக்கும் அடிப்படை அறிவுத்தத்துவந்தான். அறிவுத்தத்துவந்தானே கடவுள்த்தத்துவம். நம்மவர்கள் நாமகள் என்றும், கலை மகள் என்றும் அறிவுத்தத்துவத்தை நெடுகிலும் போற்றி வழிபட்டு வந்திருக்கிறார்கள்.

சகல சக்திகளுக்கும் ஆதாரம் அம்மை உமையாள். அந்த உமையாள்தான் கலைமகள், நாமகள். ஆனாலும் அறிவுத்தத்துவத்தின் அற்புதத்தை இழை இழையாய்க் கையில் எடுத்து உதறி உதறிப் பார்க்கிறவர்கள் பரவசத்துக்கு ஆளாகிவிடுகிறார்கள். பரவசமேலீட்டில் எப்படி உதிக்கிறது அவர்கள் நெஞ்சில் உணர்ச்சி?. சக்தி மயமான உமையம்மையே நாமகளை "நீயே கண்கண்ட தெய்வம்" என்று போற்றி வழிபடுவதாகவே உதிக்கின்றது. உமைஅம்மையே 'நீதான் சரண் என்று காலில் விழுந்து கும்பிடுகிறபொழுது, பாவம் லெட்சுமி தேவியின் நிலை' பற்றிச் சொல்லவா வேண்டும்.

இது சம்பந்தமாகப் பூர்வமான பாடல்.

**இமையவர்தம் மோலி**

**இணைமலர்த்தான் சூடச்**

**சமயம் தொறும் நின்ற**

**தையல்:- சிமைய**

**மலைமடந்தை வாச**

**மலர்மடந்தை போற்றும்**

**கலை மடந்தை நாவலோர்**

**கண்.**

பாடல் பூர்வமான பாடல். கலைமகள் துதியாக எத்தனையோ பாடல்கள். குறவஞ்சி ஆசிரியர் அந்தப்பாடல்களில் தோய்ந்து அனுபவிக்கிறவர். அவருடைய அனுபவம் ஆனந்தப் பெருக்கோடு எப்படி வருகிறது. ஆட்டமும் பாட்டமுமாய் கும்மாளி போட்ட படியே வருகிறது. அதன் தோரணை எப்படி என்பதைப் பாடல் மூலம் பார்க்கலாம்.

**அடிஇணை மலரும்,**

**செவ்வாய் ஆம்பலும்,**

**சிவப்பினா ளை,**

**நெடியபூங் குழலும்**

**மைக்கண் நீலமும்**

**கறுப்பினா ளை,**

**படிவமும் புகழும்**

3. இமையவர்தம் மோலி இணைமலர்த்தாள் சூட சமயம்தொறும் நின்ற தையல் - கலைமகள். தேவர்கள் வரிசைப்படிகாலில் விழுந்து வணங்குகிறார்கள். அவர்கள் சிரம் கலைமகள் பாதத்தில் படுகிறது. அத்தனை வழிபாட்டிலும் அவள்தான். சிமைய(ம்) மலைமடந்தை - உமையம்மை. வாசமலர் மடந்தை - லட்சுமிதேவி. நாவலோர் - கவிஞர்.

**கையில் படிகம்போல்**

**வெறும்பாம் ஞா னக்**

**கொடிதனைத் திருக்குற்**

**றாலக் குறவஞ்சிக்(கு)**

**இயம்புவோ மே (3)**

(4) குறவஞ்சி ஆசிரியர் முதலில் பலாமரத்தை வணங்கினார். எல்லாம் வல்ல இறைவனாகவே பாவித்துத்தான் பலா மரத்தை வணங்கினார். அடுத்து இறைவனின் சக்தியாகிய உமையம்மையை வணங்கினார். அதன்பின் அறிவுத்தத்துவமாகிய கலைமகளை வணங்கினார். இப்பொழுது மூத்த பிள்ளையாராகிய விநாயகப் பெருமானை வணங்குகிறார்.

---

குறிப்பு : அறிவுத்தத்துவம் உலகம் முழுவதையுமே ஒரு உலுக்கு உலுக்கவே செய்தது. அதனால் எங்கும் ஒரு பரபரப்பு, கிளுகிளுப்பு, உத்சாகம் எல்லாந்தான். பக்தியாக விளைந்தது அந்த உத்சாகம்.

நாலாதிசையில் உள்ள தூர தூர தேசத்தாரும் கோவில் கட்டி வழிபட்டார்கள் கலைமகளை. 'அதினா' என்னும் பெயரில் கோவில் கட்டி கலைமகளை வழிப்பட்டனர் கிரேக்கர். அந்தக் கோவிலை வைத்து உண்டான நகரந்தான் ஏதென்ஸ் (கிரேக்கர்களின் தலைநகர்)

இனி நம்மவர்களோ, தெய்வம் யாவும் வணங்கிடும் தெய்வம் என்றே வழிபட்டுவந்தனர் அன்னை கலை மகளை

கலைமகளின் நிறம் பளிங்கு போல் தூய வெண்மை. இருந்தாலும் திருவடித்தாமரையும் சரி, வாயிதழ்க்குமுதமும் சரி செக்கச்செவேல் என்று தான் ஒளிர்கின்றன. குழல் - கூந்தல். மைக்கண் - மைதீட்டிய கண். கருவண்டுபோல் கரு கரு என்றிருக்கும் கண் இரண்டும் கறுப்புத்தான். அன்னை கலைமகளின் நிறம் மட்டுமா வெள்ளை. வானத்துக்கும் பூமிக்குமாக ஓங்கி உயர்ந்த அவளுடைய புகழும் ஒரே வெண்மைதான். கண்ணைப் பறிக்கும் தூய வெண்மைதான்.

விநாயகப் பெருமானுக்கு கழுத்தளவு நம் போல் தான் உடம்பு. கழுத்துக்கு மேலே அப்படி இல்லை. முகம், நெற்றி, மண்டை எல்லாம் யானையைச் சேர்ந்தது. அதனால் நீண்டு தொங்கும் தும்பிக்கையும் உண்டு. தெய்வம் என்றால் கை நான்கு உண்டு. நம்போல் இரண்டல்ல. இனி நான்கு கையோடு தும்பிக்கையும் சேர ஆக மொத்தம் ஐந்து கை. அது காரணமாக ஐங்கரன் என்று பெயர் விநாயகருக்கு.

ஆனைமுகம் காரணமாக தும்பிக்கை மட்டுமல்ல ஆனைக்கே உரிய மதநீர் ஒழுக்கும் உண்டு. அருவி கொட்டுகிற மாதிரி கொட்டும் மதநீர். அப்படியானால் ஆனை முகப்பெருமான் ஓங்கி உயர்ந்த ஒரு மலைதான். யானைக்கே உரிய மதம் கொட்டும் அருவியோடு கூடிய

(4) கா - காடு, தரு - கற்பகத்தரு. காவலான் - நம்பி ஒப்படைத்து விட வேண்டியதுதான் நம்மை ஐங்கரனிடம். கண்ணை இமை காப்பது போல் நம்மை அவன் காப்பான். சந்தேகம் வேண்டாம்.

மலைதான், மலையில் ஓங்கி வளர்ந்த கற்பக விருட்சந்தான். அவர் கை தும்பிக்கை.

கற்பகக்காடும் வலுவான மலையும் துணையாக இருக்க யாருக்குத்தான் பயம்வரும், சஞ்சலம் வரும்.

விநாயகப் பெருமான் என்றாலே அச்சம் இன்மைதான், நிம்மதிதான், அமைதியேதான்.

இனிப்பாடல்

**மாமதத்(து) அருவிபாயும்**

**மலைஎன வளர்ந்த**

**மே னிக்**

**காமலி தருப்போல்**

**ஐந்து கைவலான்**

**காவலா னே.** (4)

"ஐங்கரன் என் இதயத்தில்தான் இருக்கிறான். என்னோடுதான் இருக்கிறான். ஐங்கரனாகிய காடு என்றால் இருள்மயந்தான். ஆனாலும் இந்த யானை சுற்றி அலையும் காடு, (ஓர் இதயக்காடு) கோடி சூரியப்பிரகாசமாய் ஜொலிக்கிறது. என்ன அதிசயம் இது."

---

குறிப்பு : ஆனைமுகப்பெருமான் மேல் எத்தனையோ பாடல்கள் உண்டு தமிழில். பக்திமயமானது துதிப்பாடல்கள் அவை. பலபாடல்கள் கால வெள்ளத்தில் அடிபட்டுப்போயின. கைக்கு கிடைத்த சில பாடல்களில் ஒன்று.

(5) தேவாரம், திருவாசகம், காரைக்காலம்மையார், கண்ணப்பத்தேவ நாயனார், பட்டினத்தார், தாயுமானவர் முதலிய அருளாளர்களின் பாடல்களைப் பார்க்கிறோம். இவற்றில் கடவுள் வாழ்த்து என்று தனியாக ஒன்று இல்லை. ஆழ்வார் பாசுரங்களிலும் அப்படியே.

அப்படியே திருக்குறள், நாலடியார் முதலிய நீதி நூல்களிலும் கடவுள் வாழ்த்து என்று இல்லை. ஆனால் நான்மணிக்கடிகையில் உண்டு கடவுள் வாழ்த்து. இனி சிலப்பதிகாரக் கடவுள் வாழ்த்து ஒரு தினுசு. எட்டுத்தொகைப் பாடல் என்னும் சங்ககாலப் பாடல்களுக்குக் கடவுள் வாழ்த்து என்று ஒன்று இல்லை. ஆனால் அப்பாடல்களை அகநானூறு, புறநானூறு என்று தொகுத்தவர்கள் கடவுள் வாழ்த்து என்று பாடி இருக்கிறார்கள்.

**தன்தோள் நான்கின்**

**ஒன்றுகை மிகூஉம்**

**களிறுவளர் பெருங்கா(டு)**

**ஆயினும்**

**ஒளிபெரிது சிறந்தன்று**

**அளியஎன் மனனே**

பாடல் பூர்வமான பாடல் ஆனாலும் ஆராய்ச்சியாளர் கண்ணில் படவில்லை பாடல். பட்டாலும் காடு(இருள்) ஒளி என்னும் முரண் பாடலைப் பார்க்க விடாமல்ச் செய்துவிட்டது.

திருமுருகாற்றுப்படை முதலிய பத்துப்பாடல்களில் பெரும்பாலான பாடல்களின் முடிவில் துதிப்பாடல் உள்ளன. கடவுள் வாழ்த்தாகப் பாடி இருக்கலாம். அப்படிப் பார்த்தால் தமிழையே தெய்வமாகப் பாவித்து வாழ்த்திப்பாடி இருக்கிறார்கள் சிலர் என்று சொல்லத் தோன்றுகிறது. மதுரைக்காஞ்சியின் கடைசியில் உள்ள வெண்பாக்கள் தமிழையே வழிபடுதெய்வமாக மதித்துப்பாடியதுதான்.

இனி சீவகசிந்தாமணி முதலிய காப்பியங்கள் கடவுள் வாழ்த்தோடுதான் தொடங்கும். தொடங்குகின்றன. புராணங்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். கடவுள் வாழ்த்திலேயே தம்தம் கைவரிசையைக் காட்டிவிடுவார்கள் பௌராணிகப்புலவர்கள்.

குறவஞ்சி, கலம்பகம், அந்தாதி முதலியவற்றிலும் கடவுள் வாழ்த்துத்தான் பிரதானம். நன்னூல் முதலிய இலக்கண ஆசிரியர்களும் கடவுள் வாழ்த்தைவிடவில்லை. ஆனால் தொல்காப்பியத்தில் அப்படி எதுவும் இல்லை.

கடவுள் வாழ்த்து என்பது ஒரு நிலையில் நிற்காமல் அப்படியும் இப்படியுமாகக் கண்ணாம் பொத்தி ஆட்டம் போடுகிறது.

முத்தொள்ளாயிரம் என்னும் பூர்வமான பாடல்களுக்குக் கடவுள் வாழ்த்து என்று ஒன்று இல்லை. ஆனாலும் பக்திமயமான தெய்வப்பாசுரங்கள் இருக்கவே செய்கின்றன முத்தொள்ளாயிரத்தில்.

விளங்கமாட்டேன் என்கிறது விஷயம். குழப்பமாகவே இருக்கிறது விஷயம்.

இனி அவையடக்கமும் அப்படித்தான். சங்க செய்யுள்களுக்கோ, சிலப்பதிகாரம், திருக்குறள், தேவார திருவாசகம், ஆழ்வார் அருளிச்செயல் முதலியவற்றுக்கோ இல்லை. அவையடக்கம் கலிங்கத்துப்பரணி, நந்திக்கலம்பகம் ஆகிய நூல்களிலும் இல்லை. ஆனால் மகாகவி கம்பர் போன்ற தொடர்நிலைச் செய்யுள் ஆசிரியர்களே பாடி இருக்கிறார்கள் அவையடக்கம்.

குறவஞ்சி ஆசிரியரின் கடவுள் வாழ்த்துப்பாடல் நான்கையும் பார்த்தோம். இனி அவைஅடக்கமாக அவர்பாடும் பாடல் ஒன்றையும் பார்க்கலாம்.

"பூமாலையை விரும்பாதவர் உண்டா உலகில். ஆவலோடு வாங்கி அணிபவர்தான் எல்லோரும். இனி பூவைத்தொடுத்து மாலை கட்டிய நார் இருக்கத்தானே செய்கிறது அதில். அதையாராவது பிரித்து வெளியில் எறிவதுண்டா? என் பாடல்களும் நார் மாதிரிதான்"

**தாரினை விருப்பமா கத்**

**தலைதனில் முடிக்குந்தோறும்**

**நாரினைப் பொல்லாதென் றே**

**ஞாலத்தார் தள்ளுவா ரோ**

**சீரிய தமிழ்மாலைக் காம்**

**செல்வர் குற்றாலத்தீ சர்**

**பேரினால் எனது சொல் லைப்**

**பெரியவர் தள்ளார்தா மே (5)**

(5)தார் - பூமாலை, ஞாலம் - உலகம். இங்கு மட்டுமல்ல உலகில் எப்பகுதியைச் சேர்ந்தவரானாலும் பூவோடு நாரையும் சேர்த்து அணிவார்கள். குற்றாலநாதர் காரியம் பூ. எனது சொல்லோ நார். என்னுடைய சொல்லிலும் பூவின் அந்த மணம் ஏறத்தான் செய்யும்.

குறிப்பு : அவையடக்கத்தையே ஒரு சுழட்டுச் சுழட்டி அடிக்கிறார் கவிஞர். கவிஞர் கவிஞரேதான். சாட்டையடி மாதிரியல்லவா விழுகிறது அவையடக்கம்.

# என்ன கூட்டம் என்ன நெரிசல்

(1) குற்றாலக்குறவஞ்சி ஒரு நாடகம். கூத்தும் பாட்டுமாய்க் கும்மாளிபோடும் நாடகம்.

குற்றாலநாதர் தேரேறிப் பவனி வருகிறார். மேளதாள முழக்கத்தோடு வருகிறது பவனி. குற்றாலநாதரின் பவனியிலிருந்து எழுந்துவருகிறது (தொடங்குகிறது) நாடகம்.

உச்சி முதல் உள்ளங்கால்வரை பொன்னாலும் பூவாலும் அலங்காரம் பண்ணிவருகிறார் குற்றாலநாதர். மாலை நேரத்து மஞ்சள் வெயிலில் தகதக என்று ஜொலிக்கிறது அலங்காரம்.

உதயசூரியனின் செம்மை ஒளிரும், பொன்வண்ணந்தான் குற்றாலநாதரின் மேனி (நிறம்). அது கோடி சூரியப்பிரகாசமாய் ஜொலிக்கிறது. கையிலோ காப்பு, காலிலோ சிலம்பு, கழுத்திலும் மார்பிலும் நவரத்னகசிதமான சர்ப்பாபரணம். தலைமுடியிலோ திங்கள். குளிர்ந்த வெண்ணிலவு.

பார்க்க பார்க்க எப்படி இருக்கிறது காட்சி.

**"மேக்கெழுந்த மதிசூடிக்**

**கிழக்கெழுந்த ஞாயிறுபோல்**

**மேலினாரே"**

என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது. இனி

தேரில் (சப்பரத்தில்)வெள்ளி மலை ஒத்தகாளை. அந்தக்காளையில் ஏறித்தான் சவாரி வருகிறார் குற்றாலநாதர். அவர் காலில் அணிந்திருக்கும் சிலம்பு (சலங்கை) வெறும் வெண்கலத்தால் ஆனதல்ல. ஞானக்கொழுந்து என்று போற்றப்படும் ஆன்றோராலும் சான்றோராலும் அருளிச் செய்த தெய்வப் பாசுரங்களால் (மறைநான்காய்) ஆனது. பாடல், ஒவ்வொன்றும் தேன் சொட்டும். (தேக்கெழுந்தமறை)

அழகிய இளநங்கையர் அணிவகுத்து முன்னேவர தோகை மயில்க்கூட்டம்போல் முன்னே வர குற்றாலநாதர் வருகிறார் பவனி.

**மூக்கெழுந்த முத்துடையார்**
**அணிவகுக்கும் நன்னகர**
**மூதூர்வீ தி**
**தேக்கெழுந்த மறை நான்காய்ச்**
**சிலம்பெழுந்த பாதர்விடைச்**
**சிலம்பில்ஏ றி**
**மேக்கெழுந்த மதிசூடிக்**
**கிழக்கெழுந்த ஞாயிறுபோல்**
**மேவினா ரே** **(6)**

(2) இன்றும் பார்க்கலாம். நீதிமன்றங்களில், உயர்நீதிமன்றம் போன்ற நீதிமன்றங்களில் ஒரு

காட்சியை. வழக்காடுமன்றை நோக்கி தம் இருப்பிடத்திலிருந்து நீதிபதி போகிறார், அல்லது வழக்காடு மன்றிலிருந்து நீதிபதி தம் இருப்பிடம் நோக்கி வருகிறார் என்றால் சிவப்பு டவாலி அணிந்த சேவகர் முன்னே வருவார்.

கையில் வெள்ளியால் வேய்ந்த தண்டை ஏந்தியபடியே 'பராக்', 'பராக்' என்று முழக்கமிட்டபடியே வருவார். "நீதிபதி எழுந்தருள்கிறார்கள், பார்வையாளர்கள் வழிவிட்டு ஒதுங்கிநின்று பார்க்கவும்" என்னும் பொருளில் பராக்போட்டு வருவார் சேவகர்.

நீதிபதிக்கே இப்படி ஒரு பராக் என்றால் குற்றாலநாதருக்கு எப்படி இருக்கும் பராக். அதைப்பாடலிலே பார்க்கலாம்.

கட்டியங்காரன் அதாவது வாசல்க்காப்போன் சேவகன்தான் 'பராக், பராக்' என்று சத்தம் போட்டபடி முன்னே வருகிறான். பாடலை இசைப்பாடலாக, பதசாகித்யமாகவே பாடி இருக்கிறார் கவிஞர்.

---

(1) மூக்கெழுந்தமுத்துடையார் - முத்துக்கல்பதித்த மூக்குத்தி அணிந்த பெண்கள். தேக்கெழுந்த மறை - தேன் சொட்டும் துதிப்பாடல்கள். சிலம்பு எழுந்த பாதர் - சலங்கை அணிந்த பாதம் உடையவர் குற்றாலநாதர். விடைச்சிலம்பு - காளையாகிய மலை. விடை - காளை. மலைபோல்க் காத்திரமாய் கம்பீரமாய் விடைத்துப்புடைத்து நிற்கிறது காளை. மேக்கு - மேற்கு. மதி - பிறைச்சந்திரன். ஞாயிறு - இளஞ்சூரியன். சிலம்பெழுந்தபாதர் விடைச்சிலம்பில் ஏறிவருகிறார். மதி சூடிய ஞாயிறாகவே வருகிறார். பேஷ், பேஷ். வெகுஜோர் பவனி.

ராகம் - பந்துவராளி      தாளம் - சாப்பு

பல்லவி

**பவனி வந்தன ரே - மழவிடைப்**

**பவனி வந்தன ரே          (பவனி)**

அனு பல்லவி

**அவனி போற்றிய**

**குறும்ப லாஉறை**

**மவுன நாயகர்**

**எவன நாயகர்**

**சிவனு மாய்அரி,**

**அயனு மானவர்**

**கவன மால்லிடை**

**அதனில் ஏறியே          (பவனி) (7)**

---

(3) பவனி வந்தனர் - வந்துவிட்டார் பவனி. மழவிடை - இளங்காளை. அவனி - உலகம். மவுனநாயகர் - அமைதியே வடிவானவர். எவன நாயகர் - மாறா இளமைக்கு உரியவர். அரி - திருமால். அயன் - பிரம்மன். மும்மூர்த்திகளிலுமே அவர்தான் என்றால் வேறு மிச்சம் என்ன இருக்க முடியும். எல்லாம் அவர்மயந்தான். கவன மால்லிடை - வேகமாகப் பாய்ந்து பறக்கும் காளை. அதில் அமர்ந்தபடி வருகிறார் பவனி.

(3)'வந்துவிட்டார் பவனி', 'வந்துவிட்டார் பவனி'என்று கட்டியங்காரன் கூப்பாடு போடத்தான் செய்தான். கூட்டமும் விலகி விலகி ஒதுங்கியதிலும் குறைச்சல் இல்லை. ஆனாலும் நாலாதிசையிலிருந்தும் வெள்ளம்போல் வந்து மோதுகிறது கூட்டம். நெரிசலைக் கட்டுப்படுத்த, ஒழுங்குபடுத்த மிக்க சிரமந்தான்.

முண்டி அடித்தபடி எப்படி வந்து மொய்க்கிறது கூட்டம். பாடலிலேயே பார்க்கலாம்.

பல்லவி, அனுபல்லவி முடிந்து வருகிறது சரணம். இசைப்பாடலின் முடிவுதான் சரணம்.

சரணங்கள்.

தேவர்கள்,முனிவர்கள், ஏன் அசுரர்கள் கூடக் கலந்து விட்டார்கள் கூட்டத்தில். மனிதக்கூட்டத்தைப் பற்றிக் கேட்கவா வேண்டும். விழாஎடுத்து வழிபாடு நடத்துவதற்கென்றே பிறந்த கூட்டம் அல்லவா மானுடக்கூட்டம்.

அவ்வளவுபேரும் திறந்த கண் மூடாமல் பார்க்கிறார்கள் பவனியை. வானவர்களுக்குத்தான் இமை மூடாது என்று படித்திருக்கிறோம். இங்கே பவனியைப் பார்க்கும் அத்தனை பேருக்குமே மூடுவதில்லை இமை.

**அண்டர் கூட்டமும்**

**முனிவர் கூட்டமும்**

**அசுரர் கூட்டமும்**

**மனிதராகிய**

**தொண்டர் கூட்டமும்**

**இமைப்பி லாரென**

**சூழ்ந்து தனித்தனி**

**மயங்க வே :-**

**பண்டை நரர் இவர்**

**தேவர் இவரெனப்**

**பகுத்துநிறுவிய**

**வேளைதொறும் தொறும்**

**மண்ட லீகரை**

**நந்தி பிரம்படி**

**மகுடகோடியில்**

**புடைக்கவே. (பவனி) (8)**

(4) என்ன கூட்டம், என்ன ஆரவாரம் பவனியில் இப்படி எல்லாம் உல்லாசமும், எக்களிப்பும் உண்டாகிறது பவனியில் என்றால் தேவர்கள் மட்டுமா வருவார்கள். அரன், திருமால், பிரமன் என்னும் மூவருமே ஓடோடி வரத்தானே செய்வார்கள். கூட்டத்துக்குக் கேட்பானேன்.

(4) அண்டர் கூட்டம் - தேவர்கள். விழாவுக்காகவே வானுலகிலிருந்து வந்தவர்கள். மனிதராகிய தொண்டர் - பக்த கோடிகள். பக்தர் வேறு, மற்றவர் வேறு என்று பிரித்துத் தான் வைக்கிறார்கள் அதிகாரிகள் (மண்டலீகா) ஆனாலும் திமிறி உழப்பிவிடுகிறது கூட்டம். கோபம் வருகிறது நந்திக்கு. பூண்கட்டிய பிரம்பால் அடித்துவிடுகிறார். அடிபட்ட இடம் தடித்துவிடுகிறது. என்ன செய்ய. பட்டது பட்டதுதான்.

கோவில் என்றால் வழிபாடென்றால் தேர்த்திருழாவை வைத்துத்தான். தேரோட்டமோ, தெப்பமோ எதுவானாலும் அது பவனியை வைத்துத்தான்.

திருவிழாக் கூட்டத்தைப் பார்த்தாலே போதும். தொல்லை எல்லாம் ஓடிவிடும். எல்லை இலாஇன்பந்தான். கோடி ரூபாய் கொடுத்தாலும் கிடைக்குமா இப்படி ஒரு ஆனந்தம். இனி, வடத்தைத்தொட்டுக் கண்ணில் ஒற்றி கூட்டத்தோடு கூட்டமாய்ச் சேர்ந்து தேரை இழக்கிறதில் என்ன சுகம். எங்கு போய்க் காண முடியும் இப்படி ஒரு சுகத்தை.

நமக்கு மட்டுமல்ல பெருமானுக்கே (இறைவனுக்கே) ஆனந்தம் திருவிழாவில்தான்.

திருவிழாவை வைத்துத் தான் கோவில், அது இல்லை என்றால் வெறும் பிரார்த்தனைக் கூடந்தான் கோவில். பக்தியின் லட்சணமும் அப்படி அப்படித்தான். ஆற்றில் குளித்து விட்டுக்கரையேறி பிள்ளையாரிடம் வந்து தோப்புக்கரணம் போட்டு நகர்கிற காரியமாகிவிடும் வழிபாடு. பவனி இல்லாத தேர்த்திருவிழா இல்லாத கோவில் வழிபாடு.

இனி, பவனி வருகிறார் குற்றாலநாதர். குழல்வாய்மொழியம்மை சகிதமாகவே வருகிறார் பவனி. ஒரே உல்லாசம். உல்லாச வெறி என்றே சொல்லலாம் குற்றாலநாதரிடம்.

கையை வீசுகிறார். காலை உதறுகிறார். மேலே பார்க்கிறார். கீழே பார்க்கிறார் பொங்கி வழிகிறது ஆனந்தம்.

முகத்தில் புன்முறுவல்பூத்த படியே வருகிறார் பவனி.

சிவபெருமானுக்குப் பெண் கொடுத்த மாமனார்தான் தட்சன். ஆனாலும் ஒருவருக்கொருவர் ஒத்துப்போக முடியவில்லை. விரோதமே வந்துவிட்டது. ஆங்காரத்தில் கண், மூக்குத் தெரியவில்லை மாமனுக்கு. மருமகன் மேலேயே மூர்க்கமான சர்ப்பத்தை ஏவினான். அதைப்பிடித்து வசக்கி கழுத்தில் மாலையாகப் போட்டுக் கொண்டார் பெருமான். பிறகு வஞ்சனை மிக்க மானை ஏவினான் தட்சன். அதையும் அடக்கி வசப்படுத்திக் கொண்டார். கொடியமழுவாயுதத்தையும் ஏவினான். அதை ஒரு படைக்கலமாகவே வைத்துக் கொண்டார். ஆங்கார வெறியில் புலியையே அனுப்பினான். அதை வகிர்ந்து தோலை உரித்தார் பெருமான். அரையில் வேட்டியாக அதே தோலைக் கட்டிக் கொண்டார். கடைசியாக மதயானையை ஏவி விட்டான். அதன் கதியும் அப்படியே. அதன் தோலைப்போர்வையாகப் போர்த்திக் கொண்டார்.

மாமனுடைய பாச்சா மருமகனிடம் எடுபடவில்லை. குற்றாலநாதருக்கு நான்கு கை. ஒரு கையில் மழு, இன்னொரு கையில் மான், இன்னொரு கையோ அடியார்களின் பயத்தைப்போக்கும் அபயமுத்திரை. மற்றொரு கையோ அடியார்களுக்கு நிம்மதி கொடுக்கும் கொடைக்கரம்.

யானைத் தோல் போர்த்து, புலியின் உரி உடுத்து நான்கு கைகளையும் ஆட்டிக் காட்டுவது போல் காட்டி ஒய்யாரமாக வருகிறார் குற்றாலநாதர் பவனி.

**தடுப்ப(து) ஒருகரம்,**

**கொடுப்ப(து) ஒரு கரம்,**

**தரித்த சுடர்மழு**

**விரி த்த(து) ஒரு கரம்,**

**எடுத்த சிறுமறி**

**பிடித்த(து) ஒரு கரம்**

**இலங்கப் பணி மணி**

**துலங்க வே.**

**அடுத்த ஒரு புலி**

**கொடுத்த சோமனும்**

**ஆனைகொடுத்த**

**விதானச் சேலையும்**

---

(4) சுடர் மழு - பளபளக்கும் கோடரி. சிறுமறி - மான்குட்டி. பணிமணி - சர்ப்பாபரணம் (பாம்புமாலை) அடுத்த - கொல்லவந்த. சோமன் - வேட்டி. விதானச் சேலை - போர்வை. மலர்அயன் கொடுத்த பரிகலம் - பிரமன்கொடுத்த மண்டை ஓடு. திருவோடு.

குறிப்பு : இத்தனைக்கும் மத்தியில் திருவோட்டையும் மறக்கவில்லை குற்றாலநாதர். பூர்வவாசனை எளிதில் நீங்கவா செய்யும்.

**உடுத்த திருமருங்(கு)**

**அசைய மலரயன்**

**கொடுத்த பரிகல(ம்)**

**மிசைய வே'　　　(பவனி) (9)**

(5) வாடிய பயிரில் மழைத்துளி விழுந்தால் குப்பென்று எப்படி எழுந்திருக்கும் பயிர். அப்படி எழுந்து நின்றது பக்த கோடிகளின் உள்ளம். குற்றாலநாதரின் பவனியைக் கண்டு கண்டு களித்த அந்த ஆனந்தத்தை என்ன சொல்ல.

இனி, மூத்த பிள்ளையாராகிய விநாயகர் கூட்டத்தின் முகப்பில் நின்று கையையும் காலையும் ஒரு உதறு உதறியபடியே ஒழுங்குபடுத்துகிறார்; வெள்ளப் பெருக்கெடுத்து வரும் கூட்டத்தை.

தோகை மயில்வாகனாகிய இளையவரோ முருகப்பெருமான்தான் பளபளக்கும் வேலை இப்படியும் அப்படியுமாகச் சுற்றுகிறார். கை மாற்றுகிறார். கூட்டத்தை ஒழுங்குபடுத்த அது ஒரு உத்தி.

**தொடரும் ஒருபெருச்**

**சாளிஏ றிய**

**தோன்றல் செயப்படை**

**தாங்க வே**

**அடல்கு லாவிய**

**தோகை வாகனத்(து)**

**அரசு வேல்வலம்**

**வாங்க வே.**

பெருச்சாளி வாகனம் விநாயகருக்கு. தோன்றல் - மூத்தபிள்ளையார் செயப்படை தாங்க - வெற்றிப்படை போல் வீர முழக்கமிட்டு வருகிறது கூட்டம். அதை அமர்த்தி நடத்தி வருகிறார் பிள்ளையார்.

தோகை வாகனத்து அரசு - முருகன். மயில்வாகனன் சாதாரணப்பறவை அல்லமயில். விஷப்பாம்மையே கொத்தி நார்நாராய்க் கிழித்திவிடும் மயில். அடல் குலாவிய - வல்லமைமிக்க.

விநாயகமூர்த்தியும், முருகப்பெருமானும் கூட்டத்தை சிந்தாமல், சிதறாமல் நடத்திக் கொண்டு வருகிறார்கள். குற்றாலநாதரோ புதுமாப்பிள்ளை போல மார்பிலே பூமாலை புரள, பொன்மாலை அசைய நவரத்னகண்டிகை துவங்க வருகிறார் பவனி.

வெறிகொண்டதாய் ஆரவாரிக்கிறது கூட்டம். குற்றாலநாதா, குழல்வாய்மொழியப்பா" என்றெல்லாம் சொல்லி முழங்குகிறது கூட்டம்.

**தொடரும் ஒருபெருச்**

**சாளி ஏறிய**

**தோன்றல் செயப்படை**
**தாங்க வே,**
**அடல் கு லாவிய**
**தோகை வாகனத்(து)**
**அரசு வேல்வலம்**
**வாங்க வே,**
**படலை மார்பினில்க்**
**கொன்றை மாலிகை**
**பதக்கம் மணியொளி**
**தேங்க வே :-**
**உடைய நாயகன்**
**வரவு கண்டு கண்(டு)**
**உலகெலாம் தழைத்(து)**
**ஓங்க வே. பவனி (10)**

(6) கூட்டத்தின் ஆரவாரமே செவியை அடைக்கிறது. அதற்கும் மேலே பேரிகை முழக்கம் வேறு. அது விண்ணைப் பிளக்கிறது. மலைஒத்த யானை மேல் பேரிகையை வைத்து முரட்டு ஆசாமி ஒருவன் டமடம என்று கொட்டுகிறான்.

(5) படலை மார்பு - பரந்த மார்பு. மாலிகை - மாலை. தேங்க - ஒளி பொங்க -உலகெலாம் - கூட்டம் முழுவதும். தழைத்து ஓங்க - புத்துயிர் பெற்றுப்பூரிக்க

இடியோசை தோற்றுப்போகும் அதனிடம். பேரிகையைத் தொடர்ந்து உடுக்கை ஒலி. திசை யானைகளே துதிக்கையால் காதைப் பொத்திக் கொள்கின்றன. அப்படிப்பட்ட சத்தம்.

**இடியின் முழக்கொடு**
**படரும் முகிலென**
**யானை மேல்க்கன**
**பேரி முழக்கமும்,**
**துடியின் முழக்கமும்**
**பரந்து திசைக்கரி**
**துதிக்கை யால்ச்செவி**
**புதைக்க வே! (பவனி) (11)**

(7) அப்படி வருகிறது பவனி. ஒரே அட்டகாசந்தான்.

இனி ராணுவ மெய்க்காப்பாளர் போல் மகாவிஷ்ணுவும், பிரம்மதேவனும், குற்றாலநாதருக்கு வலப்பக்கமும், இடப்பக்கமுமாக ஒட்டி வருகிறார்கள்.

---

(6) முகில் - மேகம். கனபேரி - முரட்டுப்பேரிகை. துடி - உடுக்கை. திசைக்கரி - திசைக்கு ஒன்றாக மொத்தம் எட்டு யானைகள். கைவல் ஆழியங்கடவுள் - விஷ்ணு. ஆழி - சக்கராயுதம்.

கூட்டமும் ஆரவாரமும் எதைக் காட்டுகிறது. சைவசமயப் பண்பாட்டின் உன்னதத்தையே கையில் எடுத்து, உச்சிக்கும் மேலே உயர்த்தி உலகுக்கே காட்டுகிறது என்றுதான் சொல்லத் தோன்றும்.

**சைவர் மேலிடச்**

**சமணர் கீழிடச்**

**சகல சமயமும்**

**ஏற்க வே,**

**கைவல் ஆழியங்**

**கருணை மாலொடு**

**கமலத் தோன்புடை**

**காக்க வே,**

**ஐவர் நாயகன்**

**வந்த னன், பல**

**அமரர் நாயகன்**

**வந்த னன்**

**தெய்வ நாயகன்**

**வந்த னன் எனச்**

---

(7) கமலத்தோன் - பிரம்மன். கமலம் - தாமரை. சின்னம் -எக்காளம்.

குறிப்பு : வாத்தியம் எத்தனை இருந்தாலும் எக்காளந்தான் உயிர். அதுதான் அரசவாத்தியம் (சின்னம்)

**சின்னம் எடுத்தெடுத்(து)**

**ஆர்க்க வே (பவனி) (12)**

(8) கண்ணுக்கெட்டிய வரை கூட்டம், திருவிழாக்கூட்டம். பக்தர், முனிவர், வானவர், நாட்டார், நகரத்தார், சாதாரணப் பட்டவர்கள் என்று இவர்கள் மட்டுமா கூட்டத்தில். ஒரு பக்கம் பந்தி பந்தியாகக் குதிரைகள், இன்னொரு பக்கம் மந்தை மந்தையாக யானைகள், தேர்களின் அணிவகுப்புக்கும் அளவில்லை. ஒவ்வொரு வரிசையும் வீர சேனை மாதிரி அணிவகுத்துப் போகிற அழகே அழகு.

இனி எங்கு பார்த்தாலும் கொடிகள், யானைமேல், குதிரைமேல், தேர் மேல் எல்லாம் கொடிகள் ஒவ்வொருவரும் கையில் கொடியை ஏந்தி உயர்த்துகிறார்கள். எங்கும் ஒரே கொடிமயம். கொடிகளின் பெருக்கமும் நெருக்கமும் சூரியனையே மறைத்துவிட்டது. எங்கும் இருள். கும்மிருட்டு, திகைத்துவிட்டது கூட்டம் (பவனி)

பார்த்தது ரிஷபக்கொடி. எரிச்சலே வந்துவிட்டது அதற்கு. அவ்வளவுதான் அணுவிலிருந்து அண்டம் விரிவதுபோல் நாலா திசையிலும் விரிந்தது ரிஷபக்கொடி. விரிந்து பரந்த மாதிரியே மேலே மேலே உயர்ந்தது ரிஷபக்கொடி. எத்தனை பிரகாசம் அதனிடம். கோடி சூரியப்பிரகாசம் என்று தான் சொல்ல வேண்டும்.

ஏனைய கொடிகள் போன இடம் தெரியவில்லை.

ஒரே ஒரு கொடிதான். ரிஷபக்கொடிதான். அதுதான் ஆடி அசைகிறது ஜோதிமயமாக.

பவனியும் நகர்கிறது.

**சேனைப் பெருக்கமும்,**
**தானைப் பெருக்கமும்,**
**தேரின் பெருக்கமும்,**
**தாரின் பெருக்கமும்,**
**ஆனைப் பெருக்கமும்,**
**குதிரைப் பெருக்கமும்,**
**அவனி முழுதினும்**
**நெருக்க வே ;-**
**மோனைக் கொடிகளின்**
**காடு நெடுவெளி**
**மூடி அடங்கலும்**
**ஓடி இருண்டபின்**
**ஏனைச் சுடர்விரி**
**இடப கேதனம்**
**எழுந்து திசைதிசை**
**விளங்க வே (பவனி) (13)**

(9) அங்கங்கே சிறிது நிற்கிறது பவனி. பிறகு போகிறது. இளைப்பாற நின்று போகிற மாதிரி இருக்கிறது அது. அப்படி நிற்கும் இடத்தில் இசைவாணர்கள் பாடுகிறார்கள். தெய்வப் பாசுரங்களை இசையில் ஊறப்போட்டு, தேன் சொட்டச் சொட்டப் பாடுகிறார்கள். தேனும் பாலும் செவி வழி வார்க்கிற மாதிரி இருக்கிறது பாடல். நாரதர், தும்புரு இருவருமே குற்றால நாதரின் சமஸ்தானப் பாடகர்கள் தான். ஈரேழ் பதினான்கு உலக மக்களையும் உருக்கி விடுகிறது அவர்கள் பாட்டு

**ஒத்த திருச்செவி**
**இருவர் பாடலும்**
**உலகம் ஏழையும்**
**உருக்க வே.**

பாடலின் பொருளை உணர்ச்சியை வாங்கி அதற்குப் பாவ உருவம் கொடுக்கிறார்கள் நடன மங்கையர். தோகையை விரித்து மயிலே முத்திரை பதித்து ஆடுகிற மாதிரி இருக்கிறது நடனம்.

**மத்த ளம்புயல்**
**போல் முழங்கிட**
**மயிலனார் நடம்**

**பெருக்க வே**

இனி ஊர்வலம் என்றால், கூட்டம் என்றால், விழா என்றால் தொண்டர்களின் உத்சாகந்தான் உயிர். அவர்கள் போடும் முழக்கம் 'ஜே' முழக்கந்தான் உயிர். நடனம், இசை எல்லாம் இரண்டாம் பட்சந்தான். இனி தொண்டர்களின் உற்சாகத்தையே தூக்கி அடித்துவிடும் விழாவில் அங்கங்கே குலமங்கையர் போடும் குலவை (குரவை) ஒலி. குற்றாலநாதர் பவனியில் பெண்கள் போடும் குரவை ஒலி கடல் ஒலியையே அமுக்கிவிடுகிறது.

**கொத்து மலர்க்குழல்**
**தெய்வ மங்கையர்**
**குரவை பரவையை**
**நெருக்க வே.**

இத்தனை தடபுடலோடு ஒய்யாரமாய் ஆடி அசைந்து வருகிறது பவனி. கரைபுரண்டோடும் வெள்ளம் போல் ஓடுகிறது உத்சாகம் குற்றாலநாதரையும் பிடித்து ஒரு ஆட்டு ஆட்டுகிறது உத்சாகம். உல்லாசப்படுத்தியே ஆட்டுகிறது உத்சாகம்.

பக்கத்தில் ஒட்டியபடியேதானே இருக்கிறாள் குழல்வாய்மொழிஅம்மை. அம்மையை ஒரு பார்வை பார்த்தார் குற்றாலநாதர். அப்படியே ஒரு புன்முறுவலும் பூத்தார். அம்மைக்கும் சந்தோஷமாகத்தான் இருந்தது.

சந்தோஷத்தில் குற்றாலநாதரைப் பார்த்தார். உதட்டுக்குள்ளேயே ஒரு சிரிப்பும் சிரித்தார். அவ்வளவுதான், ஏனோ வெட்கம் வந்துவிட்டது குழல்வாய்மொழி அம்மைக்கு அப்படியே தலையைக் கவிழ்த்துக் கொண்டார்.

குற்றாலநாதரும் கொஞ்சம் வெட்கப்பட்டுவிட்டார். இத்தனை பெரிய கூட்டத்திற்கு மத்தியில் இப்படி நடந்து கொண்டோமே என்று. ஆனாலும் சமாளித்த படியே கூட்டத்தை பார்த்தார். சுற்று முற்றும் நோட்டம் விட்டே பார்த்தார்.

அப்படிராஜ தோரணையில் ஜே,ஜே என்று நகர்கிறது பவனி.

**சத்தி பயிரவி**

**கௌரி குழல்மொழி**

**தைய லாள் இடம்**

**இருக்க வே**

**பவனி வந்தனரே - மழவிடைப்**

**பவனி வந்தன ரே**

இனிப்பாடலின் முழு உருவம்.

**கொத்து மலர்க்குழல்**

**தெய்வ மங்கையர்**

**குரவை பரவையை**

**நெருக்க வே**

**ஒத்த திருச்செவி**

**இருவர் பாடலும்**

**உலகம் ஏழையும்**

**உருக்க வே,**

**மத்த ளம்புயல்**

**போல்மு ழங்கிட**

**மயில னார்நடம்**

**பெருக்க வே**

**சத்தி பயிரவி**

**கௌரி குழல்மொழி**

**தைய லாள் இடம்**

**இருக்க வே (பவனி) (14)**

---

(9) பரவையை - சமுத்திர சத்தத்தை நெருக்க - அடக்க. புயல் - இடி. இருவர் - நாரதர், தும்புரு. சத்தி - பராசக்தி. பயிரவி - காளி. தையல் - பெண்.

குறிப்பு : பாடிக்கொண்டேஇருக்க வேண்டும் பாடலை பாடப்பாடக் கல்க்கண்டாய் கரையும் பாடல். கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் பாடப் பாட நாம்தான் கரைகிறோம். கரைந்து பாடலோடு பாடலாய் பாடலே ஆகிவிடுகிறோம் என்று தெரியும் அப்படி ஒரு புதுப்பிறவி கொடுத்து புனிதப்படுத்துகிறது பாடல். குறவஞ்சிப்பாடல் தமிழ்ப்பாடல்தான்.

(10) அலங்காரத் தேரேறி அலங்காரமாய்ப் பட்டிணப் பிரவேசம் (பவனி) வருகிறார் குற்றாலநாதர். குழல்வாய்மொழியம்மையோடே வருகிறார் ஆட்டந்தான், பாட்டந்தான், ஒரே கொண்டாட்டந்தான்.

திருவிழா என்றால் இதல்லவா திருவிழா இதைக்காண எங்கெங்கிருந்தெல்லாமோ வந்திருக்கிறார்கள். யார் யாரெல்லாமோ வந்திருக்கிறார்கள். இரண்டு மூன்று நாள் முன் கூட்டியே வந்து டேராப் போட்டு தங்கி இருக்கிறார்கள்.

தேவர்கள் என்ன, மூவர்கள் என்ன, முனிவர்கள் என்ன, சாதாரணமக்கள் என்ன, ஆண்கள், பெண்கள், இளைஞர், முதியவர் என்று பலதரப்பட்டவர்களும் காத்துக் கிடந்தார்கள் பவனிக்கு. எத்தனை பேர் கூடும் கூட்டமானாலும் அத்தனைக்கும் உயிர் பெண்தான். பெண்கள் இல்லை என்றால் வேறு என்ன இருக்கும் விழாவில்.

அவர்கள் ஆவல் தீர பவனி புறப்பட்டது. அசைந்து அசைந்து கோவிலை விட்டு, ரத வீதியைத் தாண்டி ஊருக்குள்ளேயே, குற்றாலம் என்னும் சிவராஜதானிக்கு உள்ளேயே வருகிறது பவனி. மேளச் சத்தம் காதில் விழுந்ததோ இல்லையோ குற்றால நன்னகரப் பெண்கள் அணி அணியாய்த் திரண்டு வந்து விட்டார்கள். மன்மதப்படை என்றுதான் சொல்ல வேண்டும். பட்டாளம் பட்டாளமாய் வந்த நங்கயைர் கூட்டத்தை.

வெள்ளியை உருக்கி வடித்த மாதிரி இருக்கிறது பெருமான் ஏறி அமர்ந்த காளை (விடை). "பாலேறும் விடை" இனி மன்மதனுக்கு வாகனமோ தென்றல் (காற்று)

காலேறும் காமன், மன்மதப்படையாகிய கன்னியர் கூட்டம் புத்தம் புதிய புஷ்பமாய் இருக்கிறது. புஷ்பம்தானே மன்மதனுக்கு ஆயுதம், காதலா் மேல் எய்யும் அம்பு! "காமனுக்கா கையேறும் படைப்பவுஞ்சு".

புஷ்பபாணமாகிய கன்னியர் எப்படி வருகிறார்கள்? கண்களாகிய அம்பை (வாளை)த் தீட்டி, வளைந்த புருவம் என்னும் வில்லில் பூட்டி, விட்டேனா பார் காதலரை என்று ஆரவாரிக்கும் சிலம்பைக் காலில் அணிந்து வருகிறார்கள். வருகிறார்கள் என்று சொல்வதைவிட மொய்த்தார்கள் என்று சொல்வதுதான் பொருத்தம். தேன்வண்டு தேனடையை மொய்ப்பது போல் பவனியை வந்து மொய்த்தார்கள் கன்னியர்.

**பாலேறும் விடையில் வரும்**
**திரிகூடப் பெருமானார்**
**பவனிகா ணக்**
**காலேறும் காமனுக்காக்**
**கையேறும் படைப்பவுஞ்சாய்க்**
**கன்னிமார் கள் ;-**
**சேலேறும் கலகவிழிக்**

**கணைதீட்டிப், புருவநெடும்**

**சிலைகள் கோட் டி**

**மாலேறப் பொருதும் என்று**

**மணிச்சிலம்பு முரசறைய**

**வருகின்றா ரே (15)**

(11) குற்றாலநாதர் பவனிவரும் சப்பரத்தைச் சுற்றி மொய்த்த கன்னியர் குற்றாலநாதரைப் பார்த்தார்களோ இல்லையோ அப்படியே மயங்கிவிட்டார்கள். என்ன அழகு, இப்படியும் ஒரு அழகா என்று திகைத்தே விட்டார்கள். பெருமானுடைய மிடுக்கென்ன, தோரணை என்ன, ஒய்யாரம் என்ன ; ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் உருக்குகிறது கன்னிமார்களை. திகைத்தும், மருண்டும், பயந்தும், கலங்கியும் பார்க்கிறார்கள். ஒருவரா, இருவரா, ஆயிரம் ஆயிரம் கன்னியர். இனி குற்றாலநாதர்கை வசம் இருப்பது ஒரு மான். ஒரே ஒரு மான். அவரைச் சுற்றி மொய்க்கிற மானோ ஆயிரம் ஆயிரம்.லட்சத்தைத் தாண்டி இருக்கும். கோடி இருக்கும் என்றே சொல்லலாம். மான் கூட்டத்தை.

---

(10) சேல் - கெண்டை மீன். கோட்டி - வளைத்து. மாலேறப் பொருதும் என்று - காதலர்க்குப் போதை மயக்கம் ஏற்படும் படி அவர் தம் உறுதியைத் தட்டி நொறுக்குவோம் என்று. மணிச்சிலம்பு - அழகிய கொலுசு, காலில் அணியும் சலங்கை. முரசு அறைய - போர் முரசாய் முழங்க வருகிறார்கள் இளம் நங்கையர்.

அவர்கள் என்ன சொல்கிறார்கள். ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளும் உரையாடல் தான் எப்படி.

இராகம் - புன்னாகவராளி, தாளம் - சாப்பு.

கண்ணிகள்

**ஒரு மானைப் பிடித்து வந்த**
**பெருமானைத் தொடர்ந்து வரும்**
**ஒருகோடி மான்கள்போல்**
**வருகோடி மடவார்;**
**புரிநூலின் மார்பன் இவன்**
**அயன் என்பார், அயனா கில்ப்**
**பொங்கரவம் எது தளிச்**
**சங்கம் ஏ(து) என்பார்!**

"பூணுல் மார்பில்க் கிடக்கிறது. அப்படியானால் பிரம்மன்தான் வருகிறான் பவனியில்" இப்படி ஒன்றிரண்டு பெண்கள் சொன்னார்கள். இதைக் கேட்ட பெண்களில் ஒன்றிரண்டு பேருக்குச் சிரிப்பே வந்துவிட்டது. அதை அடக்கிய படியே கேட்டார்கள், "எந்த லோகத்திலே, எந்தக் காலத்திலே, எந்தப் பிரமன் பாம்பை எடுத்து மாலையாக மார்பில் போட்டுக் கொண்டார்" என்று. அதற்கு மேலும் வேறு ஒன்றிரண்டு பெண்கள் "இவர் காதில் சங்கு வடிவத்தில் தோடு (வளையம்) தொங்குகிறதே. பிரம்மனுக்கு அப்படிச்

சங்குவளையம் உண்டா" என்று.

இப்படி ஒரு பக்கம் சிரிப்பும் கும்மாளமும். இன்னொரு பக்கமோ "பார்த்தால் மகாவிஷ்ணு போலவே தெரிகிறது. அவரேதான் இவர் அவரேதான்"என்று சிலர் சொல்ல. சரியாகப் போச்சு ! மகாவிஷ்ணுக்கு நெற்றியில் ஒரு கண் தனியா உண்டா இல்லை, சடைமுடிதான் உண்டா ? தலைக்கு மேலே தொப்பி (கிரீடம்) வைத்த மாதிரி முடிக்கு மேலே (சடை)முடி யைக் கட்டி வைத்திருக்கிறாரே இவர்? இப்படி ஒரு விஷ்ணுவை எங்குப் பார்த்தீர்கள். என்று மற்றவர் கேட்க அங்கும் அதே கதைதான்.

**விரிகருணை மாலென்பார் ;**

**மாலாகில் விழியின் மேல்**

**விழியுண்டோ, முடியின் மேல்**

**முடியுண்டோ ! என்பார்.**

எங்கு பார்த்தாலும் பெண்கள் கூட்டத்தில் இப்படி விவாதந்தான். விதண்டாவாதந்தான். ஆனாலும் கடைசியில் வயதாகி அனுபவப்பட்ட பெண்கள் சிலர் வந்து விவாதத்துக்கு முடிவு கட்டினார்கள். தீர்ப்பே வழங்கினார்கள். எப்படி வருகிறது தீர்ப்பு.

பவனி வருகிறவருக்கு ஒரு பக்கம் திருமால், மற்றொரு பக்கம் பிரம்மன், இருவரும் மெய்காப்பாளராய் உடன் இருக்கிறார்கள் அப்படியானால் இவர் குற்றாலநாதர் தான். (சிவபெருமான் தான்). திருமாலும் இல்லை, பிரம்மனும் இல்லை பவனிக்கு நாயகர் என்று

அசைக்க முடியுமா தீர்ப்பை

**இருபாலும் நான்முகனும்**

**திருமாலும் வருதலால்**

**ஈசன்இவன் திரிகூட**

**ராசனே என்பார்.**

இனி ஊருக்குள், குற்றால நன்னகர ஊருக்குள்ளேயே வருகிறது பவனி. வீட்டு வேலையில் மூழ்கி இருக்கிறார்கள் பெண்கள் பலர். தோசைக்கு அறைக்கிறவர்கள், துணி துவைக்கிறவர்கள், பாத்திரம் துலக்குகிறவர்கள், பால் காய்ச்சுகிறவர்கள், இரவு உணவு தயாரிக்கிறவர்கள், வீடுவாசல் பெருக்குகிறவர்கள் என்று பலரும் பலபல செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் காதிலும் விழுகிறது வாங்காச் சத்தம், மேளச்சத்தம். அவ்வளவுதான், அப்படி அப்படியே வேலையை விட்டுவிட்டு ஓடிவருகிறார்கள் முற்றத்துக்கு. பவனியல்லவா வருகிறது.

பார்க்க வேண்டாமா அதை ? ஓடிவரும் அவசரத்தில் தம்மையே மறந்துவிடுகிறார்கள். கழற்றிவைத்த வளையலை ஒரு கைக்கு மட்டும் போட்டார்கள். அடுத்த கைக்குப் போட மறந்து விட்டார்கள். மறந்தது கூடத் தெரியவில்லை. ஓடிவந்துவிட்டார்கள் முற்றத்துக்கு. பக்கத்து வீட்டுக்காரி இதைப்பார்த்து விட்டாள். ஒரு மாதிரிச் சிரித்தும் விட்டாள். வெட்கம் வந்துவிட்டது மறந்தவளுக்கு. ஒன்றும் பேசவில்லை அப்படியே

முகத்தைத் தொங்கப் போட்டுவிட்டாள். இவளைப்போல் இன்னும் எத்தனையோ பேர்.

**ஒரு கைவளை பூண்டபெண்கள்**
**ஒருகைவளை பூணமறந்(து)**
**ஓடுவார், நகைப்பவரைக்**
**கண்டுமுகம் கவிழ்வார்!**

பக்கத்து வீட்டுக்காரியும் அப்படித்தான். அவள் கதை அதை விட மோசம். பவனியைக் பார்க்காமல் விட்டு விடக்கூடாதே என்னும் அவசரத்தில் ரவிக்கையை எடுத்து உள்ளாடை என்று கட்ட ஆரம்பித்தாள். ஒத்துவரவில்லை. சீ, என்ன மடப்புத்தி என்று தன்னைத்தானே நொந்து அதை மார்பில் அணிந்து வந்தவள்தான். இவளைப் போலவும் எத்தனையோ பெண்கள்.

**இருதனத்து ரவிக்கைதனை**
**அரையில் உடை தொடுவார், பின்**
**இந்த உடை ரவிக்கை எனச்**
**சந்தமுலைக்(கு) இடுவார்!**

மனம் ஒரு நிலையில் நின்றால் ஞாபகம் பிசகாது. அவசரத்தில் அங்கும் இங்கு ஓட ஆரம்பித்து விட்டால்

எல்லாம் குழப்பமாகி விடும். ஆட்டைத் தூக்கிக் குட்டியில் போடவைக்கும், குட்டியைத் தூக்கி ஆட்டில் போடவே வைத்துவிடும். பொல்லாத குரங்குதான் மனம்.

பவனியை நோக்கி மனம் ஓடியதால் கண் மையைக் கையில் (விரலில்) எடுத்த பெண், அவசரம் அவசரமாக ஒரு கண்ணில் இட்டாள். மறு கண்ணில் இட மறந்து விட்டாள். ஆனால் மறு கண்ணுக்கு இட விரலில் மையை எடுக்கவே செய்தாள்.

அப்படியே ஓடிவருகிறாள் பெண்

**கருதுமனம் புறம்போக,**

**ஒரு கண்ணுக்கு மை எடுத்த**

**கையுமாய், ஒரு கண்ணிட்ட**

**மையுமாய் வருவார்.**

ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டம் என்பது போல் அவசரத்தில் தடுமாறுகிறது புத்தி பெண்களிடம். இது பிறகு தெரியத்தான் செய்கிறது அவர்களுக்கு. தெரிந்து என்ன செய்ய? தங்களைத் தாங்களே நொந்து கொள்ள வேண்டியதுதான்.

பவனிவரும் பெருமான் முடியில் சூடி இருக்கிறார் சந்திரனை பிறைச்சந்திரனை. அதுபோலத் தான் நம் புத்தியும் வெளுத்துப் போய்விட்டது (வெளிறிவிட்டது) என்று நொந்து கொள்கிறார்கள்.

**மெய்வளையும் மறுவுடைய**

**தெய்வநா யகன்முடியின்**

**வெண்மதிபோல் விளங்குதெங்கள்**

**பெண்மதிதான் என்பார்.**

இனி மோக வெறிக்கே ஆளாகிவிடுகிறார்கள் சில பெண்கள். அது உச்சிக்கு ஏற ஏற நிலை குலைந்து விடுகிறார்கள். பெண்ணுக்கே உரிய அடக்கமும் போய் விடுகிறது. வெட்கமும் போய்விடுகிறது.

**இவ்வளைக்கை தோள்அழுந்த**

**இவன்மார்பில் அழுந்தாமல்,**

**என்னமுலை நமக்கெழுந்த**

**வன்னமுலை என்பார்.**

இதற்கும் மேலே மேலே போகிறது மோக வெறி வேறுசில பெண்களிடம்.

"கட்டிய சேலையையே நெகிழ்ந்து உலைய வைத்து விட்டாரே குற்றாலநாதர். அதற்கும் மேலே கையில் அணிந்திருந்த வளையலை ஒவ்வொன்றாய் உருவி எடுத்துக் கொண்டுவிட்டாரே, இதுதான் யோக்யதையா இவருக்கு ! தாடிவளர்த்துச் சடை முடிதரித்து, சந்நியாசி வேஷம் போட்டதெல்லாம்

இதற்குத்தானா ?

இப்படி எல்லாம் பேசவைக்கிறது பெண்களையே மோகவெறி

**மைவளையத் துகில் சோரக்**
**கைவளை கொண் டான் இதென்ன**
**மாயமோ, சடைதரித்த**
**ஞாயமோ என்பார்**

இனி பாடலை முழு உருவத்தில் பார்க்கலாம்.

**1. ஒரு மானைப் பிடித்துவந்த**
**பெருமானைத் தொடர்ந்துவரும்**
**ஒருகோடி மான்கள் போல்**
**வருகோடி மடவார்.**

**2. புரிநூலின் மார்பினிவன்**
**அயன் என்பார் ; அயனாஇல்**
**பொங்கரவம் ஏதுதனிச்**
**சங்கம் ஏ(து) என்பார் !**

**3. விரிகருணை மாலென்பார்,**
**மாலாகில் விழியின் மேல்**

விழியுண்டோ, முடியின் மேல்
முடியுண்டோ என்பார்.

4. இருபாலும் நான்முகனும்
திருமாலும் வருகையால்
ஈசனிவன் திரிகூட
ராசனே என்பார்.

5. ஒருகைவளை பூண்டபெண்கள்
ஒரு கைவளை பூணமறந்(து)
ஓடுவார் ; நகைப்பவரைக்
கண்டுமுகம் கவிழ்வார்.

6. இருதனத்து ரவிக்கைதனை
அரையில் உடை தொடுவார், பின்
இந்த உடை ரவிக்கை எனச்
சந்தமுலைக்(கு) இடுவார் !

7. கருதுமனம் புறம்போக,
ஒரு கண்ணுக்கு மையெடுத்த
கையுமாய், ஒரு கண்ணிட்ட

**மையுமாய் வருவார்!**

**8. மெய்வளையும் மறுவுடைய**

**தெய்வநா யகன்முடித்த**

**வெண்மதிபோல் விளங்குவதெங்கள்**

**பெண்மதிதான் என்பார்.**

**9. இவ்வளைக்கை தோள் அழுந்த**

**இவன் மார்பில் அழுந்தாமல்**

**என்னமுலை, நமக்கெழுந்த**

**வன்னமுலை என்பார்!**

**10. மைவளையத் துகில்சோரக்**

**கைவளைகொண்டான் இதென்ன**

**மாயமோ சடைதரித்த**

**ஞாயமோ என்பார்! (16)**

(12) குற்றாலக்குறவஞ்சி நாடகந்தான் ஆழ்ந்த தியான உணர்விலிருந்து எழுந்த கற்பனை நாடகந்தான். இனி நாடகத்தின் பிரதான பாத்திரம் வசந்தவல்லி தான். வசந்தவல்லிதான் கதாநாயகி.

குற்றாலநாதர் கதாநாயகனாக இருக்கலாம்.

ஆனாலும் வசந்தவல்லிக்குப் பின்னால் நிற்கிறவர்தான் வசந்தவல்லியின் எடுப்பென்ன, தோரணை என்ன, துறுதுறு என்று துடிக்கும் துடிப்பென்ன, பக்கத்தில் வரமுடியுமா குற்றாலநாதரால். பேருக்குத்தான் அவர் கதாநாயகர். கதை பூராவும் பேச்சு, உணர்ச்சி, நாடகம் எல்லாமே வசந்தவல்லியைச் சுற்றித்தான்.

குற்றாலநாதர் வெறும் பொம்மை மாதிரித்தான். அலங்காரப் பொம்மைதான். வசந்தவல்லிதான் உயிர் நாடகத்திற்கு. குறிசொல்லும் குறத்தியை வேண்டுமானால் வசந்தவல்லிக்கு அடுத்து வைக்கலாம்.

(11) ஒருமான் - தட்சன் ஏவிய கொலைமான். மடவார் - பெண்கள். புரிநூல் - பூணூல். பொங்குஅரவம் - படமெடுத்துச் சீறும் பாம்பு. தனிச்சங்கம் - சங்குவடிவில் குழை (காதணி),மால் - திருமால். விழி - கண். இருபால் - வல, இட என்றும் இருபக்கமும். நகைப்பவர் - செருக்கோடு சிரிக்கிறவர். இருதனம் - மார்பகம். கருதுமனம்புறம் போக - ஒரு செயலில் நின்ற மனம் அதை விட்டுவிட்டு வேறு ஒரு காரியத்தை நாடிப்போக. தெய்வ நாயகன் முடித்த - குற்றாலநாதர் தம் முடியோடு சேர்த்துக் கட்டிய. மெய்வளையும் மறுவுடைய வெண்மதி - பிறைச்சந்திரன். வளைந்தும் மறுவோடு கூடியும் உள்ள நிலா. வெண்மதி - பால்நிலா என்று ஒரு பொருள், அதோடு பைத்தியம் பிடித்த என்றும் ஒரு பொருள். பெண்மதி - பெண்புத்தி. மைவளையத் துகில் - வட்ட வட்ட மான் கருங்கோடுகளை உடைய சேலை. இதென்ன மாயமோ - என்ன அநியாயமோ இது.

குறிப்பு : அடக்கத்தின் அவதாரந்தான் பெண். ரகசியத்தை வெளியிட மாட்டார்கள். யாராலும் வாங்க முடியாது ரகசியத்தை அவர்களிடமிருந்து. இனி அவர்களே உள்ளக்கிடக் கைகளைக் கொட்டுவதுண்டு. அப்பொழுது விண்ணுக்கும், மண்ணுக்குமாய் எதிரொலிக்கும் ரகசியம். பரமரகசியமே.

துடிப்பும், மிடுக்கும் மிக்க வசந்தவல்லி சிறு பெண்தான். கொஞ்ச வயசுப்பெண் தான். பாவாடையை விட்டுவிட்டுச் சேலைக்கட்டுக்கு அவள் வந்ததே சமீபத்தில் தான். இப்பொழுது வசந்தவல்லியை மேடை மேல் ஏற்றிக் காட்டுகிறது நாடகம். அவள் வீட்டைவிட்டு வெளியே கிளம்புகிற நேரம்.

குற்றாலநாதர் பவனியைக் காணத்தான் புறப்படுகிறாள் என்று நினைக்கத் தோன்றும், ஆனால் அதற்கல்ல அவள் புறப்படுவது.

தோழிமார்களுடன் சேர்ந்து பந்து விளையாடவே புறப்படுகிறாள். தினந்தோறும் பந்து விளையாடுவது அவள் பழக்கம். கிட்டத்தட்ட எல்லாப் பெண்களுமே அந்தப் பழக்கத்தைப் பின்பற்றி வந்தார்கள்.

ஒரே சிந்தனை. ஒரே நோக்கு. பந்தாட்டம் பற்றிய ஒரே நினைப்பு. அப்படிப் புறப்படுகிறாள் வசந்தவல்லி. குற்றாலநாதர், அவர் பவனி, கூட்டம், ஆரவாரம் இந்த யோசனை எதுவுமே இல்லை அவளிடம். ஆனாலும் அந்த அவசரத்திலும் அலங்காரம் பண்ணிக் கொள்ள மறக்கவில்லை வசந்தவல்லி. எப்படி எல்லாம் பொன்னாலும், பூவாலும் அழகுபடுத்த முடியுமோ அப்படி எல்லாம் தன்னை அழகுபடுத்திக் கொள்கிறாள். ஆர அமரவே அழகுபடுத்திக் கொள்கிறாள்.

அழகுக்கு அழகூட்டுகிற காரியந்தான் அது.

இருந்தாலும் விடமாட்டேன் என்கிறாள் அதை,

இனி வசந்தவல்லி தன் அழகுக்கு அழகூட்டுகிறது எப்படி இருக்கிறது. மன்மதனையே அதட்டி, கைகட்டி, வாய்பொத்த வைக்கிறது வசந்தவல்லியின் அலங்கார தோரணை என்கிறார் கவிஞர்.

இராகம் - கல்யாணி தாளம் - ஆதி

கண்ணிகள்

**வங்காரப்பூஷணம் பூட்டித்**

**திலதம் தீட்டி**

**மாரனைக்கண்ணாலே**

**மருட்டிச்**

**சிங்கார மோகனப்**

**பெண்ணாள் வசந்தவல்லி**

**தெய்வ ரம்பை**

**போலவே வந்தாள்!**

**கையாரச் சூடகம்**

**இட்டுக்; காலாரச்**

**சிலம்பும் இட்டு**

**கண்ணில் ஒரு நாடகமும் இட்டு**

**ஒய்யார மாகநடந்து**

**வசந்தவல்லி**

**ஓவியம் போலவே**

**வந் தாள்! (17)**

(17)வங்காரப்பூஷணம் - தோடு, வளையல், சங்கிலி, பதக்கம் என்னும் பொன்னாபரணம், கல்பதித்த பொன்னாபரணம், திலதம் - நெற்றியிலிடும் பொட்டு. மாரன் - மன்மதன். மருட்டி - நிலைகுலையச் செய்து. சூடகம் - காப்பு. ஓவியம் போலவே வந்தாள் - கத்திரிக்காய் கறிக்குத்தானே உதவும். வேறு என்னத்துக்கு உதவும் கத்திரிக்காய். ஆனால் கத்திரிக்காய் ஓவியத்தில் இருந்தால் வாழ்நாள் முழுதும் ஆனந்தத்தையே கொடுக்கும். அப்படி ஆனந்தத் தேன் சொரிகிறது. கலை, ஓவியக்கலை. அந்த ஓவியமே தலைமுடித்து பூச்சூடி, நகைபூண்டு, சேலைகட்டி, தண்டையும், வளையலும் கலீர், கலீர் என்று ஒலிக்க நடந்து வந்தால் எப்படி இருக்கும் அப்படி இருந்ததாம் வசந்தவல்லி வந்த வரத்து.

# வார்த்தைக்குள் அடங்குமா வசந்தவல்லியின் ஒய்யாரம்!

(1) கருணை என்று ஒரு தத்துவம். கண்ணுக்குப் புலனாவதில்லை கருணை. நீதி என்பது கருணையில் பூக்கும் மலர். நீதிதான் உயிர் கருணைக்கு, உயிரைக் கொடுத்தே பாதுகாக்கும் நீதியைக் கருணை. உண்மையான வீரம் என்றால் நீதியை உயிருக்குயிராகப் பாதுகாக்கும் அற்புதந்தான்.

வீரத்துக்கும், நீதிக்கும் தாயகமாகிய கருணையை எப்படித்தான் பார்ப்பது என்று கேட்கலாம். பார்ப்பதற்கு ஒரே வழி தியாகந்தான். சர்வபரித் தியாகந்தான் கருணையைக் காட்டும் கண்ணாடி. அப்படியானால் கருணையின் வடிவம் தியாகந்தான்.

எத்தனை சோதனைகளைச் சந்தித்திருக்கிறது கருணை, எத்தனை வேதனைகளுக்கு ஆட்பட்டிருக்கிறது கருணை.

ஒரு பெண். அவளுக்கு இரண்டு குழந்தைகள். கணவன் குடிகாரன். நாலு வீடு வேலை பார்த்து அன்றாடம் இவள் வாங்கிவரும் பணத்தை அப்படியே தட்டிப் பறிப்பான். பறித்த பணத்தோடு சாராயக்கடைக்கு ஓடிவிடுவான். குடித்துவிட்டு ஒரே ரகளை பண்ணுவான். அடிப்பான். மிதிப்பான். காது கொடுத்துக் கேட்க முடியாதபடி திட்டுவான்.

பிள்ளைகளும் பட்டினி, இவளும் பட்டினி. தினசரி செத்துச்செத்துப் பிழைப்பது தான் அவள் வாழ்க்கை. இப்படி ஏன் இவனிடம் இருந்து நரக வேதனை பட வேண்டும் இவள் என்று மற்றவர்களுக்குத் தோன்றும். இது சம்பந்தமாக அவளிடம் பேசிப்பார்த்தால் ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிடுவாள். வேறு என்னையா வழி? நமக்கு விதித்தது அவ்வளவுதான்!! என்று. அதற்குள் எத்தனையோ விஷயங்கள் கிடக்கின்றன. அதில் ஒன்று ''புருஷன் என்று பேருக்காவது இருந்து தொலையட்டும். அது இல்லை என்றால் சூறையாடப்பட்டுவிடுமே பெண்மை"

வாழ்க்கையின் மீது, பெண்மையினிடத்து எல்லை இல்லாத பக்தி. ஒவ்வொரு பெண்ணிடத்தும் உண்டு. அந்தப் பக்தி காரணமாகத்தான் நரகவேதனையையே தாங்கிக் கொண்டிருக்கிறாள் பெண்.

இனி, கொல்லாமல் கொல்லும் புருஷனிடமிருந்து விடுதலை பெற ஒரு வழி, அவள் தன் உயிரை விடலாம். அது மிக எளிது. ஆனால் செய்யமாட்டாள். அதை "நிம்மதியாகத் தான் போய் விடலாம். அப்படிப் போய்விட்டால், இந்தப்பிள்ளைகளின் கதி" என்னும் இரக்க உணர்வுதான் காரணம் அதற்கு.

சாதாரண ஏழைப்பெண் எப்படி எல்லாம் கருணையைக் கட்டிகாக்கிறாள். அந்தக் கருணையின் அற்புதம் வார்த்தைக்குள் அடங்குமா?

அதன் பெருமையைத் தாங்க எந்த மொழிக்கும் வலுவில்லை.

இனி அழகு என்பதும் அப்படித்தான். லட்சோபலட்ச வருஷமாய், கோடானு கோடி வஸ்த்துக்களோடு உறவாடி உறவாடி, பழகிப்பழகி வந்திருக்கிறது அழகு. உச்சியிலுள்ள ரோமத்திலிருந்து, கால் விரல், நகம் வரை ஒவ்வொன்றையும் பேணிப்பேணி உபசரித்து வந்திருக்கிறது அழகு.

''அழகு, அழகு'' என்று வார்த்தையில் சொல்லிவிடலாமே தவிர அதன் அற்புதத்தை, பொருளை, ஒளியை வார்த்தையில் வைத்து அடக்க முடியுமா?

மனுஷனுடைய நிழல் அவன் காலடிக்குள் ஒடுங்கிவிடும். நிழல் தான் ஒடுங்குமே தவிர மனுஷன் ஒடுங்குவானா? எப்படி விண்ணுக்கும், மண்ணுக்குமாய் எழுந்து நிற்கிறான் மனிதன். தேவகுமாரனாக அல்லவா எழுந்து நிற்கிறான். அப்படி ஓங்கி உயர்ந்து நிற்கும் மனிதன் எப்படிச் சிக்குவான் வார்த்தைக்குள். அவன் நிழல் தான் வார்த்தைக்குள் சிக்கும். அதாவது அடையாளந்தான் சிக்கும். மனிதனோ சொல்லுக்கு வெளியில் தான் நிற்கிறான்.

வசந்தவல்லியின் அழகும், ஒய்யாரமும் அப்படியே. வார்த்தைகளால் எடுத்துக் காட்ட முடியாதது அவள் அழகு. ஆனாலும் இசை, தாளம், அபிநயம், நாடகயியல் இவைகளை வைத்து எப்படியோ எடுத்துக்காட்டுகிறது கவி. அந்தக்கவிதான் கண்ணாடி

நமக்கு. வசந்தவல்லியைப் பார்க்க வேண்டும். அவளுடைய அழகின் தெய்வீகத்தைக் காண வேண்டும் என்றால் குறவஞ்சிப் பாடல்களைப் பாடத்தான் வேண்டும். வளைத்து வளைத்துப் பாட வேண்டும். இசையோடும், தாளத்தோடும், அபிநயப் பாங்கோடுமே பாட வேண்டும். நாடக இயலை மனசில் வைத்துக் கொண்டே பாட வேண்டும். பாடப்பாட அழகுத் தெய்வம் நம் கண் நின்று காட்சிதரும்.

ஓவியம் போலவும், தெய்வரம்பை போலவும் வருகிறாள் வசந்தவல்லி. போகிறவர், வருகிறவர் எல்லோருமே திகைத்து நின்று பார்க்கிறார்கள் வசந்தவல்லியை. இப்படியும் இருக்கத்தானே செய்கிறது அழகு" என்று.

கவிஞரும் பார்க்கிறார் வசந்தவல்லியை. அப்படியே வியப்புக்கு ஆளாகிறார். நம்கையைப் பிடித்தபடியே, எப்படி இருக்கிறது அழகு பார் பார் என்று நம்மையும் பார்க்க வைக்கிறார் கவிஞர்.

சுருண்டு சுருண்டு கிடக்கிறது வசந்தவல்லியின் கூந்தல். கொண்டை போட்டுக் கட்டிய கூந்தல் தான். குண்டலம் தொங்கும் காது வரை வந்து எட்டிப் பார்க்கிறது. கருவண்டு போன்ற கண். எப்படி ஏறி வந்து பார்க்கிறது கண். வாயிதழோ முருக்கம்பூவின் அரும்புபோல் இளம் சிவப்பு. என்ன போடுபோடுகிறது. அந்த இளம் சிவப்பு. நெற்றியைப்பற்றிச் சொல்ல எங்கே இருக்கிறது சொல். முருக்கேற்றி வளைத்துவிட்ட வில் மாதிரி ஒரு வளைவு. மூன்றாம் பிறைச் சந்திரன் மயக்குவது போல் மயக்கும் ஒரு மந்தகாசம். பார்த்துச் கொண்டே இருக்கலாம் நெற்றியை

இராகம் -பைரவி தாளம் - சாப்பு

**கண்ணிகள்**

**இருண்ட பருவமுகில்**
**சுருண்டு சுழி எறியும்**
**கொண்டை யாள் - குழை**
**ஏறி ஆடிநெஞ்சைச்**
**சூறை ஆடும்விழிக்**
**கெண்டை யாள்,**
**திருந்து பூ முருக்கின்**
**அரும்பு போலிருக்கும்**
**இதழி னாள் - வரிச்**
**சிலையைப் போல் வளைந்து**
**பிறையைப் போல் இலங்கும்**
**நுதலி னாள்**

வானவில் கூட வசந்தவல்லியின் புருவத்தைப் பார்த்துப் பெருமூச்சு விடும். அப்படியே கட்டிப்பிடித்து முத்தம் கொடுக்க வேண்டும் என்று துடிக்கவும் செய்யும் வானவில்.

(1) விழி - கண். கெண்டை - மீன். இதழ் - வாயிதழ். வரிச்சிலை - நாண்பூட்டிய வில். நுதல் - நெற்றி.

என்ன பூரிப்பு, என்ன மதமதப்பு அவள் மேனியில். பொங்கிவழியும் அவள் இளமையோ பார்க்கிறவர் புத்தியைச் சிதற அடித்துவிடும் அப்படிப்பட்டதுஅதன் அட்டகாசம். வாய்திறந்து ஒரு சொல் சொன்னால் போதும் வசந்தவல்லி. போன இளமை திரும்ப வந்துவிடும் கேட்டவர்களுக்கு. அப்படி ஒரு சமய சஞ்சவி அவள் பேச்சில் உள்ள மதுரம் அவள் பல்லிலிருந்து சிந்தும் பால் ஒளியை என்ன சொல்ல ; ஜாதிமுத்துக்களை வைத்துப் போட்ட கோலம் என்றுதான் சொல்ல வேண்டும்.

**அரம்பை தேசவில்லும்**
**விரும்பி ஆசைகொள்ளும்**
**புருவத் தாள் – பிறர்**
**அறிவை மயக்கும் ஒரு**
**கருவம் இருக்கும் மங்கைப்**
**பருவத் தாள்.**
**கரும்பு போல் இனித்து**
**மருந்து போல் வடித்த**

---

அரம்பை தேசவில் - வானவில். மருந்து - அமிர்தம். கத்தும் திரைகொழித்த - ஓ என்று சப்திக்கும் கடல் கொழித்தெடுத்த. முத்து - முற்றி விளைந்த ஜாதி முத்து. ஒரு பெண் எடுப்பான அழகில் மிளிர்கிறாள் என்றால் அந்த அழகே அவளுக்கு ஒரு செருக்கைக் கொடுக்கும். அழகில் மாற்றுக் குறைந்த பெண்ணிடம் அது அலட்சியமாகவே நடந்து கொள்ளும். அறிவை மயக்கும் ஒரு கருவம் இருக்கும் மங்கைப் பருவத்தாள்.

**சொல்லி னாள் - கடல்**

**கத்தும் திரைகொழித்த**

**முத்து திரைபதித்த**

**பல்லி னாள்.**

பளபளக்கும் முத்து மூக்குத்தி போட்டிருக்கிறாள் வசந்தவல்லி. அது என்ன செய்கிறது. அவள் வாயில் இருக்கும் முத்து (பல்) எப்படி என்று நோட்டம் பார்ப்பது போல் மெல்ல எட்டிப்பார்க்கிறது. இனி, பூரண சந்திரன் என்னும் முழுநிலவே அவளைத் தேடிவரும். அவள் முகத்தோடு முகம் வைத்து அழகை அப்படியே பருகிப் பருகிப்பூரிக்கும். அப்படி அல்லவா இருக்கிறது வசந்தவல்லியின் முக ஜொலிப்பு. வசந்தவல்லியின் கழுத்து, அதில் உள்ள வழுவழுப்பு அதைப் பார்த்தால்தான் தெரியும், பூங்கமுகின் வழுவழுப்பு கால் தூசி பெறாது கழுத்துக்கு என்று. அவள் கொப்புளைச் சுற்றி ஒரு கோலம். ஆன்மதத்துவத்தின் தலையெழுத்தே அந்தக் கோல வளையத்தில் (தொய்யில்) தான் அடக்கம்.

**பல்லின் அழகை எட்டிப்**

**பார்க்கும் மூக்கிலொரு**

**முத்தி னாள் - மதி**

**பழகும் வடிவுதங்கி**

**அழகு குடிகொளும்**

**முகத்தி னாள்**

**வில்லுப் பணிபுனைந்து**

**வல்லிக் கமுகை வென்ற**

**கழுத்தி னாள் – சகம்**

**விலைஇட்(டு) எழுதி இன்ப**

**நிலையிட்(டு) எழுது தொய்யில்**

**எழுத்தி னாள்.**

வசந்தவல்லி வலுவான தங்கக் காப்பை அணிந்திருக்கிறாள் கையில். அதில் வைரம், வைடூரியம், பச்சை, சிவப்பு என்று கல்களை வைத்துக் கட்டி இருக்கிறது அவளுடைய மார்பகம் ரவிக்கைக்கு உள்ளேதான். பிறர் கண்ணில் படாவிட்டாலும் உச்சம் கொட்டவைக்கிறது அதன் தித்திப்பு. இனி அவள் உந்திக்கமலம் உண்மையில் தாமரையேதான். அத்தனை பசுமை, அத்தனை குளுமை அதில். ஆனாலும் ஆடவர் மனத்தை - அவர்தம் கல் நெஞ்சையே கரைத்துவிடுகிறது. இனி உந்திக்கமலத்தை ஒட்டிய உரோமப் பந்தியோ ஆடவரை மட்டுமல்ல, ஆண்மை என்னும் வீரதத்துவத்தையே கபளீகரம் செய்துவிடும்.

---

மூக்கில் ஒரு முத்து - மூக்குத்தி. மதி முகத்தினாள் - முழுநிலா. ஆன்மதத்துவத்தின் சன்னிதான மே முகந்தான். அது தெளிவாக இருந்தால்போதும். வில்லுப்பணிபுனைந்து - நவரத்னம் வைத்துக் கட்டிய சங்கிலி சரப்பனி என்று தங்கநகை பூட்டிய கழுத்து. வல்லி - கொடி(போன்ற) -தொய்யில் - அடிவயிற்றில் பெண்கள் தீட்டும் கோலம். ஆடவர் கண்ணில் அது விழுந்துவிட்டால் அவ்வளவு தான். மதுவில் விழுந்த வண்டுதான் ஆடவர் காரியம்.

கல்லும் பதித்த தங்கச்
செல்லக் கடகமிட்ட
செங்கை யாள் - எங்கும்
கச்சுக் கிடக்கினும் தித்
திச்சுக் கிடக்கும் இரு
கொங்கை யாள் !
ஒல்லும் கருத்தர்மனக்
கல்லும் சுழிக்கும் எழில்
உந்தி யாள் - மீதில்
ஒழுங்கு கொண்டுளத்தை
விழுங்கு சிறிய ரோமப்
பந்தி யாள்.

போகிற போக்கைப்பார்த்தால் கவிஞர், குறவஞ்சி ஆசிரியர் தான், பொல்லாத ஆசாமி என்று தெரிகிறது. ஒன்றையும் விட்டுவைக்க மாட்டேன் என்கிறார். அங்கே இங்கே என்று அவ்வளவையும் பார்க்கிறார் துறுதுறு வென்றே பார்க்கிறார்.

---

கச்சு - ரவிக்கை. ஒல்லும் கருத்தர் மனக்கல் - முடிந்த அளவு வைராக்கியத்தை கடைப்பிடிக்கும் கடின சித்தர்களின் மன உறுதி. சுழிக்கும் - அதையே சிதறடிக்கும். எழில் - அழகு.

நம்மையும் அல்லவா பார்க்கவைக்கிறார். ஒன்று விடாமல் அவ்வளவையும் பார்க்க வைக்கிறார். பொல்லாத ஆள்தான், திரிகூடராஜப்பக் கவிராயர்.

இன்னும் என்னென்ன வருமோ, போகப் போகத்தான் தெரியும்.

கண்ணுக்கு நிறைந்த அழகு வசந்தவல்லியின் அழகு. உள்ளத்தையும் நிறைத்துவிடுகிறது அந்த அழகு. பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந்துவிடுகிறது வசந்தவல்லியின் அழகு. ஒரு தடவை பார்த்தால் போதும். ஆயுள் நாள் முழுவதும் கூடவே இருக்கும் அந்த அழகு. காடு, மண், மேடு, பள்ளம் எல்லாமே அதாகத்தானே தெரிகிறது.

இத்தனை அழகும் கொட்டிக்கிடக்கிறது வசந்தவல்லியிடம். ஆனாலும் அவள் இடை இருக்கிறதே ; அது கண்ணுக்கே தெரிவதில்லை. "இடையே இல்லையே பிறகு நடை எப்படி வந்தது இவளிடம் என்று யோசிக்கவே வைக்கிறது. ஒருவர் பாக்கி இல்லை. அவ்வளவு பேருக்கும் யோசனை அப்படி அப்படித்தான்.

ஒரு கைப்பிடிக்குள் அடங்கிவிடும் அவள் இடை உடுக்கையின் நடுப்பகுதி கூடத் தெரியும். இவள் இடை கண்ணுக்குத் தெரியவே தெரியாது.

நூலினும் சிறிய நுண்ணிடைதான். அப்படி நுட்பத்துக்கும் நுட்பமாக இருக்கிறதால் தான் நடையில் ஒரு ஒசிவு, உடையில் ஒரு குழைவு, மொத்தத்தில்

மின்னல்கொடிபோல் பளிச்பளிச்சென்று வளைகிற நெளிவு.

இடையே இப்படி என்றால் தொடையைப் பற்றி என்ன சொல்ல. பாடலே சொல்லட்டும்.

**துடிக்குள் அடங்கி ஒரு**
**பிடிக்குள் அடங்கும் சின்ன**
**இடையி னாள் – காமத்**
**துட்டன் அரண்மனைக்குக்**
**கட்டும் கதலிவாழைத்**
**தொடை யினாள்;**
**அடுக்கு வண்ணச்சேலை**
**எடுத்து நெறிபிடித்த**
**உடையி னாள் – மட**
**அன்ன நடையிலொரு**
**சின்ன நடை பயிலும்**
**நடையி னாள்.**

துடி - உடுக்கை. பிடி - கைப்பிடி. காமத்துட்டன் - பொல்லாத சேட்டைக்காரனாகிய மன்மதன். கதலி வாழை - வாழையின் தண்டு போன்ற. அடுக்குவண்ணச் சேலை - தட்டுத் தட்டாக விட்டுக் கட்டும் சேலை. நெறிபிடித்த - கொய்சகம் வைத்துக்கட்டும் அன்ன - நடை (நெறி) அன்னமே இவளிடம் வந்து நடை பழகுகிறது. அப்படி ஒரு ஆனந்த நடை.

ஆடவர் தனி. பெண்டிர் தனி. அவரவர் மேனியே இந்தத் தனிநிலையை எடுத்துக்காட்டும். பெண்ணின் மேனியிலுள்ள பொலிவும், மினுமினுப்பும் புஷ்பத்தில்தான். அதுவும் அன்று மலர்ந்த புத்தம் புதிய புஷ்பத்தில்தான் உண்டு. எத்தனைகோடி வருஷம் தவம் பண்ணினாலும் பெண்ணின் மேனியிலுள்ள வழவழப்பும், சொகுசும் ஆடவருக்கு வராது. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா.

பொன் வண்ணம் என்றாலும் பூ வண்ணம் என்றாலும் பெண்தான். வசந்தவல்லியோ அதிலும் தனி. தங்கத்தை உருக்கி வார்த்தெடுத்த பொன் விக்ரகம் போல் இல்லை வசந்தவல்லி. தேவாமிர்தத்தையே குழைத்துப் பிசைந்து வார்ப்பில் விட்டெடுத்த அற்புத விக்ரகம் என்றுதான் சொல்ல வேண்டும் வசந்தவல்லியை.

**வெடித்த கடலமுதை**

**எடுத்து வடிவு செய்த**

**மேனி யாள்.**

இனி, காமத்தையே பாலாகக் காய்ச்சி இருக்கிறது. அதுவும் நளபாகத்திலும் சிறந்த வீம பாகத்தில். அப்படிப்பட்ட காமப்பாலுக்குப் போடுகிற சீனிதான் வசந்தவல்லி.

**ஒரு**

**வீமப் பாகம் பெற்ற**

**காமப் பாலுக் கொத்த**

**சீனி யாள்.**

வசந்தவல்லியைப் பார்த்துவிட்டால் பிறகு யாருக்குத்தான் மூளை வேலை செய்யும். சுக்கல் சுக்கலாய் சிதறிவிடும் மூளை.

ஆனாலும் திரிகூடராஜர் இருக்கிறாரே (குற்றாலநாதர்) அவர் ஒரு கல்லுளிமங்கன். எந்தப் பெண்ணுக்கும், எந்த அழகுக்கும் மசிகிறவர் அல்லர் அவர். அழகுத் தத்துவமே காலைத் தொட்டுக் கும்பிடும். கைகட்டிவாய் பொத்தி நிற்கும். யாரிடம் குழல்வாய்மொழி அம்மையிடந்தான். அந்த மாதரசியோ கூடவே இருக்கிறாள். குற்றாலநாதரிடம். அப்படி இருக்க இன்னொரு பெண்ணின் அழகு அவரை எப்படி உருக்கும்.

ஆனால் பார்த்தால் போதும் வசந்தவல்லியை. சக்தி பீடராகிய குற்றாலநாதரே கரைந்து விடுவார். வெயிலில் சிக்கிய பனிபோல உருகிவிடுவார். அப்படிப்பட்ட அழகுத்தேவதை வசந்தவல்லி.

**வெடித்த கடலமுதை**

**எடுத்து வடிவுசெய்த**

**மேனி யாள் - ஒரு**

**வீமப் பாகம் பெற்ற**

**காமப் பாலுக்கொத்த**

**சீனி யாள்.**

**பிடித்த சுகந்தவல்லிக்**

**கொடிபோல் வசந்தவல்லிப்**

**பெருக்க மே – சக்தி**

**பீடர் வாசர்திரி**

**கூட ராசர்சித்தம்**

**உருக்கு மே (18)**

(2) இத்தனை அட்டகாசத்தோடு பந்தாட வருகிறாள் வசந்தவல்லி. ஆடுகளத்துக்கே வந்துவிட்டாள். ஆடவே ஆரம்பித்துவிட்டாள். மின்னல் கொடியே பாய்ந்து பாய்ந்து ஆடுகிற மாதிரி இருக்கிறது பார்க்கிறவர்களுக்கு அவள் ஆட்டம்.

துள்ளிப் பாயும் புள்ளிமான் போல தாவித்தாவி முன்னே வருகிறாள். பந்தைப் பிடிக்கிறதிலும், பிடித்து வீசுகிறதிலும் சிவந்து விட்டன அவள் கரங்கள்.

வெடித்த - சிதறிய. மந்தரமலையைப் போட்டுக் கடையக் கடைய கடல் உடைந்து நொறுங்கிச் சிதறியது. பிடித்த சுகந்ததவல்லிக்கொடி - மனதுக்குப்பிடித்த நறுமணம் கமழும் பூங்கொடி. பெருக்கம் - (வசந்தவல்லியின் அழகின்) அட்டகாசம். சக்தி பீடராகிய திரிகூட நாதரையே ஒரு கலக்குக் கலக்கிவிடும். மற்றவர் கதி பற்றிச் சொல்ல வேண்டுமா என்ன.

தங்கக் கையில் பவளக்கொடி போல் படர்ந்து விட்டது சிவப்பு. நான்கு அடி, மூன்றடி, இரண்டடி இப்படித்தான் குதித்துக் குதித்து முன்னே வருகிறாள். எதிர்த்திசையிலிருந்து பந்து வருகிறதைப் பார்த்துத்தான் முன்னே வர வேண்டும். ஆனாலும் தயங்கித் தயங்கி முன்னே அவள் வருகிறதைப் பார்த்தால் என்ன தோன்றுகிறது பார்க்கிறவர்களுக்கு. உருண்டு திரண்ட பந்து அவள் மார்பகத்துக்குப் போட்டி ஆக இருக்கிறது. அதனால் எரிச்சல் பட்டு எக்கேடும் கெடட்டும் பந்து என்று தயங்கித் தயங்கி வருகிறாளோ வசந்தவல்லி என்று நினைக்கத் தோன்றுகிறது.

உண்மை அப்படி அல்ல. முன்னால் வரும் பந்து அப்படி அப்படிக் குறைந்த அளவு தூரத்தில் வருகிறது. பிறகு எதிரி முழுமூச்சில் வீசி எறிகிற பந்தோபின்னே பத்தடி தூரத்துக்கு அப்பால் போகிறது. அதனால்தான் நாலடிமுன்னே வந்தால் பத்தடி பின்னால் வர வேண்டி இருக்கிறது. அதுதான் தயக்கத்துக்கு காரணம்.

**வித்தகர் திரிகூடத் தில்**

**வெளிவந்த வசந்தவல்லி**

**தத்துறு விளையாட்டாலோ,**

**தடமுலைப் பகையினாலோ,**

**நத்தணி கரங்கள் சேப்ப**

**நாலடி முன்னே ஓங்கிப்**

**பத்தடி பின்னே வாங்கிப்**

**பந்தடி பயில்கின்றாளே! (19)**

(2) வித்தகர் - குற்றாலநாதர். திரிகூடம் - குற்றாலம். தத்துறு - விளையாட்டு, தாவித்தாவி முன்னே வரும் ஆட்டம். பின்னால் வரும் பொழுது தாவி வர முடியாது. ஊர்ந்து வருகிற மாதிரிதான் வர வேண்டும். பகை - போட்டி. அதில் ஏற்பட்ட புகைச்சல். நத்தணிகரம் - முத்துப் பதித்த மோதிரம் அணிந்த கைவிரல். சேப்ப - சிவப்ப. கன்றிச் சிவப்ப. ஓங்கி - பாய்ந்தும். வாங்கி - துரிதமாய் பின்வாங்கியும் பயில்கின்றாள் - ஆடுகின்றாள்.

## ஆடவா செய்கிறாள் வசந்தவல்லி - பார்ப்பவர்களை ஆட்டவே செய்கிறாள்

வசந்தவல்லி பந்தாடும் இடத்தை ஒட்டிக் குற்றாலநாதர் பவனி வருகிறார். கடலே எழுந்து கரை கடந்து வருவதுபோல் கூட்டம். இடிமுழக்கம் சமுத்திர முழக்கம் இரண்டையுமே செவிடு படச் செய்கிறது கூட்டத்தின் ஆரவாரம். ஜே, ஜே என்று அலைமோதி வருகிறது பவனி. ஆனால் ஒன்றையுமே கவனிக்கவில்லை வசந்தவல்லி.

சரேல் சரேல் என்று பாய்ந்துவரும் பந்தை பிடிப்பது, கண்மூடித்திறப்பதற்குள் அதை வேகமாக வீசி எறிவது, இதற்காக முன் பாய்வது, பின் வாங்குவது என்று துரித கதியில் ஆடுகிறாள் வசந்தவல்லி.

குற்றாலநாதரோ, அவர் பவனியோ, கூட்டமோ அவள் கண்ணில் விழவில்லை. அவள் கருத்திலும் படவில்லை. அந்த ஞாபகமே இல்லாமல் ஒரே நோக்கத்தில், வெறியில் என்று கூடச் சொல்லலாம். அப்படிப் பாய்ந்து பாய்ந்து ஆடுகிறாள் வசந்தவல்லி.

இனி வசந்தவல்லியின் ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் கூட்டமும் அப்படித்தான். பவனிச்சத்தம் காதில் விழவில்லை. குற்றாலநாதரோ

கண்ணில் விழவில்லை கூட்டத்துக்கு.

ஆடுகளத்தைச் சுற்றி பெருங்கூட்டம் ஆட்டத்தை ரசித்துப்போடுகிற ஆரவாரமோ அதைவிடப் பெரிது.

எப்படி ஆடுகிறாள் ஆட்டம் வசந்தவல்லி

கையில் அணிந்த வளையல்"கலின் கலின்" என்று சப்தமிடுகின்றன. வெற்றி நமதே, வெற்றி நமதே, என்று ஆரவாரிக்கிற மாதிரி இருக்கிறது வளையல் ஒலி. கைவளையல் போடுகிற சத்தம் இப்படியென்றால் அவள் காலில் அணிந்திருக்கிற நூபுர (சலங்கை)மோ வேறு மாதிரி சத்தம் போடுகிறது."இந்த வேகத்தில் இவள் இந்தச் சுற்றுச் சுற்று ஓடி ஆடினால் இடை தாங்குமா, மெல்லிடை முறிந்து விழுந்துவிட்டால் என்ன செய்வது என்று தண்டை, கொலுசோடு சேர்ந்து புலம்புகிற மாதிரிதான் இருக்கிறது. வளையல், தண்டை இரண்டையும் விலக்கியபடி அவள் மார்பகம் இரண்டும் எழுந்து நின்று குதியாட்டம் போடுகின்றன." பந்தின் திரட்சியை வென்றுவிட்டோம், ஓட ஓட விரட்டிவிட்டோம் என்று.

கண்ணிகள்

இராகம் - பைரவி தாளம் - சாப்பு

**செங்கையின் சங்கு**

**கலின்கலின் என்று**

**செயம் செயம் என்றாட - இடை**

**சங்கதம் என்று**

**சிலம்பு புலம்பொடு**

**தண்டை கலந்தாட - இரு**

**கொங்கை கொடும்பகை**

**வென்றனம் என்று**

**குவிந்து குவிந்தாட - மலர்ப்**

**பைங்கொடி, நங்கை**

**வசந்த சவுந்தரி**

**பந்து பயின்றாளே !**

இடை முறிந்துவிடுமோ என்ற சந்தேகத்தில் தண்டையும் கொலுசும் அலறின. அப்படியே ஆட்டத்தைப் பார்த்து ரசிக்கிற கூட்டமும் பயப்படுகிறது.

---

(1) சங்கு - சங்கை அறுத்துச் செய்யும் வளையல். சங்கதம் - சந்தேகம். முறிந்துவிடுமோ என்னும் பயத்தில் வந்த சந்தேகம். மலர்ப்பைங்கொடி நங்கை - பூங்கொடி போன்ற பெண்.

குறிப்பு : பஜ்ஜிக்கு வாழைக்காய் சீவுவதுபோல் சீவுவார்கள் சங்கை. பிறகு வட்ட வட்டமாக வெட்டி எடுப்பார்கள். கையில் போடும் அளவுக்கு வட்டத்தின் உள் பகுதியை எடுத்துவிடுவார்கள். வளையல் வந்துவிடும். வயதான பெண்ணிலிருந்து குழந்தை வரை எல்லோருக்கும் சீவி எடுத்த சங்கு வளையம் வளையலாகி விடும்.

"மெலிந்த மெல்லிடை ஆயிற்றே, அது இப்படித் துவண்டால், நெளிந்து வளைந்து அப்படியும் இப்படியுமாக ஒசிந்தால் அதன் கதி என்னாவது" என்று.

**இங்கு துவண்டிடை**

**என்படும் என்றயல்**

**நின்றவர் திண்டாட**

கூட்டம்இப்படித் திண்டாடுகிறது.வசந்தவல்லியின் இடைபடும் பாடுபற்றி. இனி அவளுடைய துறுதுறுத்த கண்கள் இரண்டுமே காதளவு நீள்கிறது. அவள் காதில் அணிந்திருக்கும் குண்டலத்திலேயே தாவி ஏறுகின்றன. ஏறி நின்று குண்டலத்தோடு சேர்ந்து குதிக்கின்றன. துள்ளித் துள்ளியே குதிக்கின்றன.

**பொங்கு கனங்குழை**

**மண்டிய கெண்டை**

**புரண்டு புரண்டாட**

வசந்தவல்லியின் கூந்தல் மழை மேகமேதான். கருகருவென்று அடர்ந்து செழித்த அந்தக் கூந்தல் மேகம், ஆட்ட வேகத்தில் கலைகிறது. கொண்டையே அவிழ்கிறது. சொருகிவைத்த மலர்ச் செண்டும் கழன்று நழுவிக் கீழே விழுகிறது. செண்டு கூந்தலிலிருந்து நழுவியதோ இல்லையோ அதைச் சுற்றி மொய்த்துக் கொண்டிருந்த வண்டு குய்யோ முறையோ என்று பதறியடித்து ஓடுகின்றன.

அப்படியாடுகிறாள் வசந்தவல்லி பந்து.

**பொங்கு கனங்குழை**
**மண்டிய கெண்டை**
**புரண்டு புரண்டாட - குழல்**
**மங்குலின் செண்டு**
**கலைந்தது கண்டு**
**மதன்சிலை வண்டோட - இனி**
**இங்கு துவண்டிடை**
**என்படும் என்றயல்**
**நின்றவர் திண்டாட - மலர்ப்**
**பங்கய வல்லி**
**வசந்த சவுந்தரி**
**பந்து பயின்றாளே !**

---

குழை - காதணி. கெண்டை - மீன் போன்ற கண். குழல் மங்குல் - கூந்தல் மேகம். மங்குல் - மேகம். மதன்சிலை - மன்மத வில். கரும்புதான் மன்மத வில். அதன் நாணோ - வண்டு. மலர்ப்பங்கய வல்லி - செந்தாமரைப்பூவில் வீற்றிருக்கும் லட்சுமி. வசந்தவல்லியைப் பார்த்தால் போதும். மகாலட்சுமியைப் பார்க்க வேண்டாம், அவள்தான் இவள். இவள்தான் அவள். வசந்தவல்லியின் லட்சணம், முகலட்சணம் அப்படி.

வாயுவேகம் மனோவேகம் இவற்றை எல்லாம் தள்ளிவிட்டு அதிவேகமாக வருகிறது பந்து; எதிர் திசையிலிருந்து. வசந்தவல்லியோ அது வரும் வேகத்தை மிஞ்சிப் பாய்ந்தோடிப் பிடிக்கிறாள் பந்தை. பந்து வரும் திசையையே எதிர்கொண்டு குறிகட்டி நிற்கிறது அவள் கண். கையோ, எப்படிப் பிடிக்க வேண்டும் பந்தை, பிடித்த உடனே அதை எப்படி வீசி ஏறிய வேண்டும் என்னும் நோக்கிலேயே பரபரவென்று தினவெடுத்திருக்கிறது. அவள் மனதைப் பற்றி என்ன சொல்ல கண்ணையும் தாண்டி, கையையும் தாண்டி, வருகிற பந்தையே குறி வைத்து நிற்கிறது. இந்த நிலையில் வேகம் அதிகம் எதற்கு, கண்ணுக்கா, கைக்கா, மனதுக்கா ? இதற்குத்தான் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. யாராலுமே முடியாது.

**சிந்தை**

**முந்தியதோ கெண்டை**

**முந்தியதோ செங்கை**

**முந்தியதோ தான் என**

பந்தாடுகிறாள் வசந்தவல்லி.

அவள் ஆடுகிறதையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறது கூட்டம். ஒரு சாயலில் மகாலெட்சுமியே வந்து விளையாடுகிற மாதிரி தெரிகிறது. இன்னொரு சாயலில் ரதியே ஆடுகிறாள் என்று சொல்லத் தோன்றுகிறது. வேறோரு சாயலில்

மகாலெட்சுமியும் இல்லை, ரதியும் இல்லை, ஆடுவது மோகினிதான், தெய்வலோகத்து மோகினி தான் என்று சொல்லத் தோன்றுகிறது.

**இந்திரையோ இவள்**

**சுந்தரியோ இவள்**

**மோகினியோ**

அப்படி அழகாய், அழகு கொலுவீற்றிருக்கும் தேவதையாய் ஆடுகிறாள் வசந்தவல்லி. அவள் ரத்தினக்கல் பதித்த தங்க வளையல் போட்டிருக்கிறாள். அது ஆடும் ஆட்டத்துக்கு ஏற்றபடி எல்லாம் டால் அடிக்கிறது.

குற்றாலநாதர் பவனி வருவதும் சங்க வீதியில் தான். வசந்தவல்லி பந்தாடுகிறதும் அதே சங்க வீதியில்தான்.

**இந்திரையோ இவள்**

**சுந்தரியோ தெய்வ**

**மோகினியோ - சிந்தை**

**முந்தியதோ கெண்டை**

**முந்தியதோ செங்கை**

**முந்தியதோ தான் என்ன**

**சந்திர சூடர்**

**குறும்ப லாஈசர்**

**சங்கணி வீதியிலே – மணிப்**

**பைங்கொடி நாரி**

**வசந்த ஒய்யாரி பொன்**

**பந்து கொண்டாடி னாளே**

குற்றாலத்தையே ஒரு கலக்குக் கலக்கிவிட்டாள் வசந்தவல்லி. அழகிய தங்கக்கொடி ஒன்று. மண மலர்களாய்ப் பூத்துச் சொரியும் தங்கப் பூங்கொடிதான் அது. அந்தப் பூங்கொடியே பந்து விளையாடுகிற மாதிரிதான் இருந்தது. வசந்தவல்லி ஆடிய ஆட்டம். வசந்தவல்லியின் பந்தாட்டத்தைப் பார்க்கிறவர்கள் தொடர்ந்து பார்த்துக் கொண்டே இருக்கிறவர்கள், அவள் ஆட்டம் போகப் போகக் கண்ட அனுபவம் இப்படி. இனி வசந்தவல்லி பந்தாடும் களம் வந்ததுமே, எடுத்த எடுப்பில் அவள்ஆடிய ஆட்டம் எப்படி இருந்தது ? தோகை மயில் ஒன்று தோகையை அகல விரித்தபடியே ஒரு நாடகக்கதைக்கு அபிநயம் பிடித்து ஆடுகிற மாதிரியே இருந்தது. வலசாரி, இடசாரி என்று சுற்றிச் சுற்றி வந்து மயில் ஆடும் நாடகமாகவே இருந்தது.

---

இந்திரை - மகாலட்சுமி. சுந்தரி - ரதி (மன்மதன் மனைவி) கெண்டை - கெண்டை மீன் போல துள்ளி விளையாடும் கண். சந்திர சூடர் - பிறைச்சந்திரனை சடையில் சொருகிவைத்திருக்கிறவர் குற்றாலநாதர். சங்கணி வீதி - சங்க வீதி. கோவிலைச் சுற்றி இருக்கிற வீதி. கோவில் சங்குவடிவம். சுற்றிஇருக்கிற வீதியும் அதே வடிவம். பொன்பந்து - அழகிய பந்து.

**நாடகம் ஆடிய**

**தோகை மயில் என**

**நன்னகர் வீதியிலே - அணி**

**ஆடகவல்லி வசந்தஒய்**

**யாரி அடர்ந்து பந்(து)**

**ஆடின ளே. (20)**

(2) வசந்தவல்லி ஆட்டத்தைப் பார்க்கும் கூட்டம் முழுவதும், ஆண், பெண், குழந்தை, முதியோர் அத்தனை கூட்டமுமே உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டது அவளிடம். ஆட்டத்தின் ஒவ்வொரு அணுவிலும் ஒன்றிவிட்டது அவர்கள் மனம். வைத்த பார்வையை எடுக்க முடியவில்லை. அப்படி அழுத்தி ஊன்றி நிற்கிறது கூட்டத்தின் மனம்.

ஆடுகிறவேகத்தில் அவள் கூந்தல் கலைகிறது. கொத்துக் கொத்தாகப் பதித்து வைத்திருக்கிற மலர்கள் கூந்தலிலிருந்து விழுகின்றன. அவள் நெற்றியிலோ முத்து முத்தாக வியர்வை.

---

நன்னகர் - திருக்குற்றாலம். அகஸ்தியர் காலத்துக்கு முன்பிருந்து பண்பட்டு உயர்ந்த மூதூர். சிவராஜதானி குற்றாலம்.

குறிப்பு : பாதகத்தி பந்து கொண்டா ஆடினாள் பார்ப்பவர் உள்ளத்தையே பந்தாக வைத்து வீசி அல்லவா ஆடினாள். என எல்லோரும் வியக்கும்படி ஆடினாள் வசந்தவல்லி.

முன்னே பாய்கிறாள், பின்னே ஓடுகிறாள். இடைப்பட்ட இடத்தை வலசாரி, இடசாரி என்று சுற்றுகிறாள். பம்பரம் சுற்றுவது போல் சுற்றிச் சுற்றி வருகிறாள். கூட்டத்தில் பெண்கள் அதிகம். அவர்கள் பக்கம் அடிக்கடி திரும்புகிறாள். வியர்வையைத் துடைத்துக் கொள்கிறாள். தோழிமார் ஆரவாரிக்கிறார்கள் ஆட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும்.

இவ்வளவையும் பார்த்துச் சொக்கிப் போன கூட்டம் முழுவதுக்குமே யோசனை ஒன்றுதான். ஏக்கமும் ஒன்றுதான். என்ன அது? "குறைந்த பட்சம் ஆயிரம் கண்களையாவது கொடுத்திருக்கக் கூடாதா பிரமன். இரண்டு கண்ணுள் எப்படி அடங்கும் இவள் ஆட்டத்தின் அற்புதம். விபரம் தெரியாதவன் பிரமன்" இதுதான் அத்தனை பேரிடமும் உதிக்கும் ஒரே யோசனை.

**கொந்தடிபூங் குழல்சரியக்,**

**கோடுமதி நுதல்வேர்ப்ப**

**வசந்தவல்லி**

**முந்தடி பிந்தடி இடைபோய்**

**மூன்றடிநான் கடிநடந்து**

**முடுகமா தர்**

**சந்தடியில் திருகிஇட**

**சாரிவல சாரி சுற்றிச்**

**சகிமார் சூழப்**

**பந்தடிக்கும் பாவனையைப்**

**பார்க்கஅயன் ஆயிரங்கண்**

**படைத்திலானே (21)**

அருமையான பாடல். அப்படியே கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது ஆட்டத்தை. வசந்தவல்லியின் பந்தாட்டத்தை.

வாழ்நாள் முழுவதும் நம் மனக்கண்ணை விட்டு அகலாது ஆட்டம். நினைத்தால் போதும். குறவஞ்சிப் பாடலையே நினைத்தால் போதும். அப்படியே கண்முன் வந்து நிற்கும் காட்சி.

நாடக உத்தி என்றால் இப்படி அல்லவா இருக்க வேண்டும். என்றென்றும் மனதில் நிற்கும் படியான இப்படி ஒரு காட்சியை எடுப்பதற்கு ஹாலிவுட் சினிமாகாரர்கள் எத்தனை லட்சம் டாலர்களை கொட்டுகிறார்கள். முக்கால்த்துட்டு செலவில்லாமலே பதிவாகிவிட்டதே வசந்தவல்லியின் ஆட்டம்.

---

(2) கொந்தடி (கொத்தடி)பூ - பூங்கொத்தின் கீழே உள்ள அடிமலர். கோடுமதி - பிறைச்சந்திரன். நுதல் - நெற்றி. முடுக - துள்ளிப்பாய. மாதர் சந்தடி - பெண்கள் கூட்டம். திருகி - திரும்பி. பந்தடிக்கும் பாவனை - வீசுவதுதான் பந்து. அவள் ஆடுவதோ நடனம். உணர்ச்சி பாவத்தை முத்திரை பிடித்து ஆடும் அபிநயந்தான் ஆட்டம். பிரம்மா ஒரு கோமாளி. விபரந்தெரியாத கோமாளி. விபரந்தெரிந்தால் இரண்டு கண்ணுடன்தான் படைப்பானா?

பட்டனைத் தட்டிவிட்டால் போதும் திரையில் விழுவது போல் நம்கண்ணில் விழும் காட்சி. குறவஞ்சிப் பாடலை வாய்க்குள் வைத்து முனங்கினால் போதும். காட்சி, கண் கொள்ளாக் காட்சிதான். பாடல்தான் பட்டன்.

இது சம்பந்தமாக பூர்வமான பாடல் ஒன்று. திருவேங்கடமலையைச் சுற்றி உள்ள பகுதியை காளிம்பன் என்னும் அரசன் ஆண்டு வந்தான்.

புலவர்களுக்கும், கலைஞர்களுக்கும் புகலிடமாக இருந்தான். காளிம்பன் கொடையைப்போலவே வீரமும் அவனிடம் மண்டிக் கிடந்தது.

காளிம்பன் பற்றி எத்தனையோ பாடல்கள், அவனுடைய வேல் பற்றியும், அதன் திறம் பற்றியும் பல பல பாடல்கள். அதில் ஒரு பாடல்.

ஒரு பெண். இளம் பெண். அழகான பெண். கட்டுமொட்டான பெண். காந்தம் போலத் தன் வசம் இழுக்கும் அவள் பார்வை. பார்ப்பவர் யாரானாலும் இழுத்துக் கொள்ளும்.

ஊரின் நடுவே நாற்சந்தி கூடும் இடம். அங்கே உடுக்கையை அடித்தபடியே, காளிம்பன் பற்றிய பாடல்களைப் பண்ணொழுகப் பாடுகிறாள். பாடிக்கொண்டே சுற்றிச் சுற்றி வருகிறாள். பம்பரம் போலவே சுற்றுகிறாள்.

தரையில் நீள் அம்பு(வேலு)ம், குறு அம்பு(வாளு)ம் கிடக்கின்றன. ஒன்றை எடுத்து மேலே

எறிகிறாள். மற்றதையும் எடுத்து எறிகிறாள். இப்படியே மாறி மாறி வில்லையும் வாளையும் எறிகிறாள். பாடிக்கொண்டே எறிகிறாள். உடுக்கையை அடித்துக்கொண்டே எறிகிறாள். சுற்றிச் சுற்றி வருகிறாள். டம்,டம் என்று கேட்கிறது உடுக்கைச் சத்தம். இத்தனைக்கும் மத்தியில் மேலே எறிந்த வில்லும், வாளும் தரையில் விழுவதன் முன் பிடித்துப் பிடித்து மேலே எறிகிறாள்.

அவள் சுற்றும் போது அவள் இடை நச்சுப் பாம்பு (நல்லப்பாம்பு) நெளிகிற மாதிரி நெளிகிறது. அப்பொழுது உடுக்கை என்ன சொல்லி முழங்குகிறது.

"இவள் மார்பகம் கருங்கல். கண்ணோ குவளை மலர், தோளோ பச்சை மூங்கில். ஆம், ஆம் (உண்மை, உண்மை) என்று சொல்லியே முழங்குகிறது".

**விடஞ்சூழ் அரவின் இடைநுடங்க**
**வில்வாள் வீசி விரையார் வேங்**
**கடஞ்சூழ் நாடன் காளிம்பன்**
**கதிர்வேல் பாடும் மாதங்கி**

---

வேங்கடம் சூழ் - வேங்கடமலையை ஒட்டிய பகுதி. மாதங்கி - வேல்வீசி ஆடிப்பாடும் பெண். வடம் - முத்துவடம். மலை - கல். நீலமலர் - குவளைமலர். வேய் - மூங்கில். தண்ணுமை - உடுக்கை. இந்தப்பாடலை வைத்துப் பார்க்கத் தெளிவுபடும் வசந்தவல்லியின் சித்திரம்.

**வடஞ்சூழ் முலைகள் மலைதாம் தாம்,**

**வடிக்கண் நீல மலர்தாம்தாம்,**

**தடந்தோள் இரண்டும் வேய்தாம்தாம்**

**என்னும் தன்கைத் தண்ணுமையே**

(3) பம்பரமாகச் சுழன்று சுழன்று ஆடுகிறாள் வசந்தவல்லி. பந்தைப் பிடிக்க மூன்றடி முன்னே பாய்கிறாள். பிடித்து எறிந்த பந்து மறுபடியும் வேகமாய் இவளைத் தாண்டி வருகிறது. அப்படியே பின்னால் நான்கடி குதித்தோடி வந்து பிடித்து விடுகிறாள் பந்தை. மீண்டும் மீண்டும் வீசி எறிகிறாள். கண்ணை மூடி விழிப்பதற்குள் நடக்கிறது காரியம். அத்தனை துரிதம், அத்தனை வேகம்.

பார்ப்பவர்கள் அப்படியே கிறங்கி விடுகிறார்கள். போதைக் கிறக்கமே வந்துவிடுகிறது பார்ப்பவர்களுக்கு. மன்மதனே இந்தப் போதை கிறக்கத்தை பார்க்கிறவர்களுக்கு ஊட்டுகிறான் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. ஆனால் யார் கண்ணிலும் படவில்லை அவன்.

வசந்தவல்லி பந்தாடத் தொடங்குமுன்பே அங்கு (மைதானத்துக்கு) வந்து விட்டான் மன்மதன்.

★★★★★★★★★★★★

இனி, பூமாலை என்றால் போதும், பார்த்துப் பார்த்து அனுபவிப்பான் மனுசன். அதுதான் மனுச காரியம். தும்பு தும்பாய்ப் பிய்த்து மாலையை எறிய மாட்டான் மனுசன். ஆனால் குரங்கின் காரியம் வேறு. மாலையைப் பிய்த்துப் பிய்த்து எறிந்து சிதறினால்தான் குரங்குக்கு நிம்மதி. அப்பொழுதுதான் குரங்கின் வெறி தணியும். பூமாலை மாதிரிதான் பாட்டும். அதாவது தமிழ் பாட்டும். ஆனால்ஆராய்ச்சியாளர் கையில் சிக்கக் கூடாது பாட்டு. அனுபவிக்கிறவர் கையில்தான் சிக்க வேண்டும் பாட்டு.

குற்றாலக் குறவஞ்சி ஒரு நாடகம். நாடகத்துக்கு வாய்ப்பாய் இசைப்பாடல்களைக் கொண்டே நடத்துகிறார்ஆசிரியர். ஆனாலும் இசைப் பாடலாகவே தொடர்ந்தால் உப்பு உறைப்பு இல்லாது சப்பென்று போய்விடும். நாவுக்கு ருசி தட்டுப்படாது. மனதுக்கும் ருசி தட்டுப்படாது. அதனால் இடை இடையே இப்படி விருத்தங்களைப் பதித்து வைப்பார் கவிஞர்.

★★★★★★★★★★★

பெண்களோடு சேர்ந்து பிறந்தது விளையாட்டு. உல்லாசமும் அப்படியே. கவிஞர் திரிகூட ராசப்பக் கவிராயர் பெண்கள் ஆடும் ஆட்டத்தையும், அவர்கள் பெறும் உல்லாசத்தையும் பார்த்துப் பார்த்து அனுபவித்தவர் ஆனந்தத்தில் திளைத்தவர். அந்த அனுபவத்தையும் ஆனந்தத்தையும் வசந்தவல்லியின் மேல் வைத்துக் காட்டுகிறார்.

வைத்து என்று சொல்லக்கூடாது. கொட்டி என்றுதான் அதாவது ஆனந்தத்தையே கொட்டி என்றுதான் சொல்ல வேண்டும். பாலாபிஷேகம், பன்னீர் அபிஷேகம் பண்ணுகிற ஆனந்தத்தில் தம் அனுபவத்தை வசந்தவல்லியின் பந்தாட்டத்தில் கொட்டிக் காட்டுகிறார் கவிஞர். அவர் கொட்டக் கொட்ட தமிழே தாளம் போடுகிறது. மெட்டு வைத்துப் பாடவே செய்கிறது தமிழ். ராகம் போட்டே பாடுகிறது தமிழ் எப்படி என்று பாருங்கள்.

ராகம் - காம்போதி          தாளம் - ஆதி

பல்லவி

**"பந்த டித்தன ளே வசந்த சுந்தரி**

**விந்தை யாகவே (பந்தடித்த)**

*சரணங்கள்*

**மந்தர முலைகள் ஏசலாட,**

**மகரக் குழைகள் ஊசலாட**

**சுந்தர விழிகள் பூசலாட,**

**தொங்கத் தொங்கத்**

**தொங்கத் தொம்மெனப் (பந்தடித்த)**

**பொன்னின் ஒளியில் வந்து தாவிய**

**மின்னின் ஒளிவு போல**

**சொல் நயத்தினை நாடி நாடி**

**தோழி மாருடன்**

**கூடிக் கூடி (பந்தடித்த)**

**நன்ன கர்த்திரி கூடம் பாடி**

**நகுர்தத் திகுர்தர்த்**

**தகுதர்த் தொம்மெனப் (பந்தடித்த)" (22)**

அபிநயத்துக்கு உகந்த அருமையான இசைப்பாடல் இது.

3. மந்தரம் - மகா மேருமலைபோல் உறுதியான. பொன்னின் --- மின்னின் ஒளிவு - வெளிச்சம் பட்டவுடன் தங்கம் டாலடிக்கும். கண்ணைப் பறிக்கும் அப்பொழுது அதன் ஒளி

# கண்டாள் பவனியை கொண்டாள் காதல்

# கண்டதும் காதல்

(1) வசந்தவல்லியின் ஆட்டத்தைப் பார்த்தவர்கள் எவ்வளவோ கிறங்கி இருப்பார்கள். அதைவிட நூறு பங்குக்கிறக்கம் பாடலைப் பாடப்பாட வந்து விடும் பாடுகிறவர்களுக்கு.

பெண்ணோடு சேர்ந்து உறவாடும் ஆட்டம். விளையாட்டு எத்தனையோ உண்டு. அத்தனையிலும் பந்து விளையாட்டுக்கு ஒரு தனி இடம் உண்டு. பெண்ணோடு பெண்ணாய் ஒட்டி உறவாடும் விளையாட்டு பந்து விளையாட்டு ஒன்றே.

வசந்தவல்லி பந்து ஆடுகிறாள். கூட்டம் முழுவதும் ஆட்டத்தையே பார்க்கிறது. தன்னை மறந்து ஆட்டத்தோடு ஆட்டமாய் ஐக்கியம் ஆகிப் பார்க்கிறது கூட்டம். பெண்கள், குழந்தைகள், ஏன், வயதான பாட்டிமார் கூட; கூட்டம் முழுவதும் அப்படியே சொக்கிப் போய்விட்டது விளையாட்டில்.

போதை வெறியில் கிறங்கிப் போன கூட்டத்தைத் தட்டி எழுப்ப வேண்டும். அதற்காக ஒரு புதிரை, பந்து விளையாட்டிலேயே ஒரு புதிரைப் போடுகிறார் குறவஞ்சி ஆசிரியர்.

ஒரே வெறியில் பந்தாடுகிறாள் வசந்தவல்லி. அப்படி ஆடும் வசந்தவல்லி, குற்றாலநாதரைப் பார்த்தாள். எதிர்பாரா வண்ணம் கண்டாள் என்கிறார் கவிஞர். குற்றாலநாதரைச் சித்தர் (பெரிய மாய வித்தைக்காரர்) என்றே குறிப்பிடுகிறார் கவிஞர். எதிர்பாரா வண்ணம் திடுதிப்பென்று பார்த்ததை "எதிர்கொண்டாள் "என்றும் குறிப்பிடுகிறார்.

**" தெரிகொண்டு வித்தை ஆடும்**

**சித்திரை எதிர்கொண்டாளே"**

என்று ஒரு சொடுக்குப் போட்டு சொல்கிறார் கவிஞர்.

எப்பேர்ப்பட்ட சித்தர் அவர். பிரபஞ்சத்தையே சுருட்டி, மடக்கி ; ஆகாயம், காற்று, தீ, நீர், மண் என்று ஐந்து பூதங்களாகப் பிரித்து,அதை ஒரு உதறு உதறி, பிறகு சுருட்டி, மடக்கி ஒரு சிறிய செப்பில். மாயை என்னும் செப்பில் வைத்து அடக்கிக் காட்டுகிற சித்தர் அவர்.

ஐம்பூதங்களும் ஐந்து பந்துகள் மாதிரிதான். காரணம், ஐந்தும் ஒரே மாதிரிதான். பேருக்குத்தான் வேறு வேறு. குணம் அத்தனைக்கும் ஒன்றுதான்.

ஐந்து பூதங்களையும் ஒரு சிமிழுக்குள் (செப்பினுள்) திணித்து வைப்பது எளிதான காரியமா என்ன ? ஆனாலும் அடக்கி வைத்துவிட்டார் குற்றாலநாதர்.

வசந்தவல்லியும் அப்படித்தான். அவளும் தன்னுள் ஐந்து பந்தை வைத்திருக்கிறாள். அது எப்படி.

**"வருசங்க வீதிதன்னில்**
**வசந்தபூங் கோதைகாலில்**
**இருபந்து குதி கொண்டாட**
**இருபந்து முலை கொண்டாட**
**ஒரு பந்து கை கொண்டாட ;-**
**ஒரு செப்பில் ஐந்து பந்தும்**
**தெரிகொண்டு வித்தை ஆடும்**
**சித்திரை எதிர்கொண்டாளே "** **(23)**

(2) என்ன இருந்தாலும் வசந்தவல்லி பெண்தானே. பெண்ணுக்கே உரிய நாணம், கூச்சம், வெட்கம் எல்லாம் வந்துவிட்டன வசந்தவல்லியிடம். அப்படியே உருகிவிட்டாள் குற்றாலநாதரின் அழகில். ஒளிமயமான பேரழகில்.

---

1. சங்கவீதி - சன்னதியைச் சுற்றி உள்ள ரதவீதி. காலில் இருபந்து - வசந்தவல்லியின் குதிங்கால் இரண்டும் பந்துகள். அப்படியே மார்பகம் இரண்டும் இரண்டு பந்துகள். கையில் பிடித்து ஆடுவதோ ஒரு பந்து. ஆக ஐந்து பந்தையும் தன்னகத்தே வைத்திருக்கிறவள் வசந்தவல்லி. அவள் ஒரு தங்கச் செப்பு(விக்ரகந்தான்) அப்படியே திரிகூட நாதரும் ஒரு செப்பில் ஐம்பெரும் பூதங்களையும் அடக்கி வைத்திருக்கிறவரே. சரியான ஜோடிப் பொருத்தம் இருவரும்.

நிலைகொண்டு நிற்க முடியவில்லை வசந்தவல்லியால். படலம் படலமாக எழுந்து வருகின்றன. ஆசையும், பரவசமும், கலக்கம், மயக்கம், உல்லாசம், சோர்வு எக்களிப்பு எல்லாம் வாய்விட்டுப் பேசுகின்றன வசந்தவல்லியிடம்.

அதை அப்படியே வாங்கி இசையிலும் தாளத்திலும் வைத்துக் கொடுக்கிறது தமிழ்

ராகம் - அடாணா தாளம் - ரூபகம்.

பல்லவி

**"இந்தச் சித்தர் ஆரோ - ஆகா**

**வித்தைக்காரர் ஆக விடையில் ஏறி வந்தார் (இந்த)**

**சரணங்கள்**

**நாகம் புயத்தில் கட்டி**

**நஞ்சு கழுத்தில் கட்டி**

**காகம் அணுகாதெங்கும்**

**காடு கட்டி**

**பாகம் தனிலொரு பெண்**

**பச்சைக் கிளிபோல் வைத்து**

**மோகம் பெற ஒரு பெண்**

**முடியில் வைத்தார் (இந்த)**

**மெய்யில் சிவப்பழகும்**

**கையில் மழுவழகும்**

**மையார் விழியார் கண்டால்**

**மயங்கா ரோ**

**செய்ய சடையின் மேலே**

**திங்கள் கொழுந்திருக்கப்**

**பையை விரிக்குதம்மா**

**பாம்பு சும் மா (இந்த)**

**அருள்க்கண் பார்வையால் என்**

**அங்கம் தங்கம் ஆக**

**உருக்கிப் போட்டார் கண்ட**

**உடனே தான்;-**

---

2. விடை - காளை. நாகம் - பாம்பு. காகம் அணுகாதெங்கும் காடு - குற்றாலத்தில் காடு சூழ்ந்த மலை மிக உயரம். காகம் கூட அதன் உச்சியை அணுகமுடியாது. அத்தனை உயரம். பாகம் - ஒரு பகுதி முழுவதும். பச்சைக்கிளி போல் - கிளிபோல் அழகுக்கு அழகூட்டும். உமை. மோகம் பெற - ஆசைக்காக.ஒரு பெண். இன்னொரு பெண் கங்கை. மையார் விழியார் - இளம் நங்கையார். திங்கள் கொழுந்து - பிறைச்சந்திரன். பை - படம், அங்கம் - கண், காது, மூக்கு, கை, கால் என்னும் உறுப்புகளோடு கூடிய உடம்பு, மேனி. பெருக்கம் - தோரணை. ஒருக்கால் - சில சமயம்.

குறிப்பு : பாடலைப் பாட வேண்டும். ராகம் போட்டு, தாளம் போட்டுப் பாட வேண்டும். வேகமாகப் பாடக்கூடாது. பயப்படவும் கூடாது. ஆனால் ஒன்று, பாட்டுக்கு இணங்க அடக்க ஒடுக்கமாக வர வேண்டும் இசை. பாட்டை விட்டுவிட்டுத் தன்னை விளம்பரப் படுத்த இடம் கொடுக்கக் கூடாது இசைக்கு.

**பெருக்கம் பார்க்கில் எங்கள்**
**திருக்குற்றாலர் போலவே**
**இருக்கு(து) இவர் செய் மாயம்**
**ஒருக்காலே (இந்த) (24)**

நிதானமாகச் சவுக்கத்தில் பாடிப் பாடி அனுபவித்தால் பாடலிலிருந்து அமிர்தம் ஊறுகிறது தெரியும். நாவெல்லாம் இனிக்கும். மனமும் அப்படியே. மொத்தத்தில் ஆனந்தந்தான்.

விடுதலை என்றால் என்ன? வீடுபேறு என்றால் என்ன? என்பது அனுபவப்பூர்வமாக விளங்கிவிடும் அப்பொழுது.

இனி, ஏழு அல்லது எட்டு வயதுப் பையன். அவன் காவடி எடுத்து ஆடுகிறான். இன்றும் பார்க்கிறோம் அதை. காலை ஐந்து மணிக்கெல்லாம் ஆற்றிலோ, குளத்திலோ குளிக்கிறான் பையன். விபூதியைக் குழைத்துப் பூசுகிறான். நாலு முழத்துண்டுதான். அதைத் தார்ப்பாய்ச்சிக் கட்டுகிறான். பொடி உருத்திராட்ச மாலை, அதன் மேல் பூமாலை என்று இரண்டையும் அவன் கழுத்தில் போடுகிறார்கள்.

பையன் முகத்தில் களைகட்டி நிற்கிறது. பால் வழியும் முகம் என்பார்களே அப்படிப் பிரகாசிக்கிறது அவன் முகம்.

உற்றார் உறவினர் என்று பலர். அவனுக்கு முன்னமே குளித்து முழுகினார்கள். கோடி (புது உடை)

உடுத்தி ஆசாரமாய் நிற்கிறார்கள் அவர்களும். அவர்கள் முகத்திலும் தனியான ஒரு ஜொலிப்பு.

பால், பழம், பன்னீர், புஷ்பம் என கமகம என்று மணக்கிறது. எல்லோருடைய மனமும் முருகனையே நோக்கி நிற்கிறது. வேல், மயில், அருள்முகம், அபயம் கொடுக்கும் கரம், வள்ளி, தெய்வானை என்று பார்த்து பார்த்து உருகுகிறார்கள் எல்லோரும்.

காவடியைத் தூக்கிப் பையன் தோள் மேல் வைக்கிறார்கள். பலதரப்பட்ட வாத்தியங்கள் ஒலிக்க, தமிழ், தமிழ்ப் பாடல்தான் எழுந்து வருகிறது. இசையும், தாளமுமாய்ப் பாடல் எழுந்து வர வர நிலை கொண்டு நிற்க முடியவில்லை பையனால் ; எல்லோருக்குந்தான்.

காவடியைத் தோள்மேல் வைத்தபடியே துள்ளுகிறான் பையன். தாளத்துக்கு ஏற்றபடி குதிக்கிறான். எழுச்சிமிக்க ஆவேசம் கொண்டவனாய் ஆடுகிறான். காவடியும் சேர்ந்து ஆடுகிறது.

முரட்டு ஆட்கள்தான். நான்கு பேர், ஐந்து பேர் சேர்ந்து அடக்குகிறார்கள். அடங்கமாட்டேன் என்கிறான் பையன். முருகனே அவனுள் வந்து அவனை ஆட்டுகிறான் என்றுதான் சொல்ல வேண்டும்.

மணிக்கணக்கில், தெருத்தெருவாக ஊர் முழுவதும் கோவில், குளம், தேர், திருவிழா என்று பாய்ந்து பாய்ந்து போகிறான் பையன். ஓட்டமா, நடையா எது என்று தெரியவில்லை. அவன் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியவில்லை மற்றவர்களால். அருள் வந்து ஆடுகிற ஆட்டந்தான் அது.

அந்த அருளைத் தூண்டி விடுகிறது பாட்டு. தமிழ்ப்பாட்டு. இசையோடும், கூத்தோடும் கூடிய பாட்டு.

அந்த பாட்டிலிருந்து தானே ஆட்டம் வருகிறது.

இத்தனைக்கும் அலுப்பே இல்லை பையனிடம். ஆட ஆடச் சுகமாக இருக்கிறது அவனுக்கு. அவன் உடம்புள் இருந்த புண், ரணம் எல்லாம் ஆறிவிட்டன. மனதிலிருந்த புண்ணும் ஆறிவிட்டது. பூரண குணம் இப்பொழுது உள்ளத்துக்கும் உடலுக்கும். அப்படியென்றால் ஆட்டத்துக்கும், பாட்டத்துக்கும் அப்படி ஒரு சக்தி. தெய்வசக்தி. இதைக் கண்டவர்கள் ஞானியர். இறையருள் பெறப்பாடலும் ஆடலுமே சாதனம் என்று கண்டவர்கள் அவர்கள்.

'ரகுபதி ராகவ ராஜாராம்' என்ற பாடலைக் கேட்டால் தாளம் போட்டு ஆடி ஆடி அனுபவிப்பார் மகாத்மா காந்தி.

**"ஆடுவதும், பாடுவதும்,**

**ஆனந்தமாக உன்னைத்**

**தேடுவதும் நின்னடியார்**

**செய்கை பராபரமே"!**

இது தாயுமான சுவாமிகள் கண்ட காட்சி. குற்றாலக் குறவஞ்சிப் பாடல்களைப் பாடப் பாட நமக்கும் வரும் அந்த அற்புதக் காட்சி.

# சித்தர் மட்டுமா, சித்தர் உலகச் சக்கரவர்த்தியுமேதான்

(1) பொன்னை உருக்கிவிட்டது போல் பெண்ணை (வசந்தவல்லியை) உருக்கிவிட்டது ஆசை. அதுதான் காதல்.

உலகமே நொறுங்கிச் சிதறி உதிர்கிறது. அப்பொழுதும் எதுவும் தெரியாது வசந்தவல்லிக்கு, விளையாட்டில் அப்படி ஒன்றி நின்று ஓடி ஓடி ஆடுகிறாள் வசந்தவல்லி. தன்னையே மறந்து விட்டால் வேறு எது பற்றி நினைவு வரும்? அவளை அப்படி மறக்க வைத்துவிட்டது பந்து விளையாட்டு.

உறுதிப்பாடு என்றால் அதுவல்லவா உறுதிப்பாடு. மன ஒற்றுமை என்றால் வேறென்ன, அதுதான்.

கற்கோட்டை, இரும்புக்கோட்டை என்பதெல்லாம் மன ஒருமைக்குப் பின்னால்தான். ஆனாலும் குற்றாலநாதர் பவனி, அவர் தேரேறி வீ தி உலா வந்த பவனி வசந்தவல்லியை நிலை குலைய வைத்துவிட்டது.

வசந்தவல்லியின் உறுதிப்பாடு சுக்கல், சுக்கலாய் நொறுங்கிவிட்டது. பொடிப் பொடியாய் உதிர்ந்தே போனது. பந்து விளையாட்டு அவ்வளவுதான். அப்படியே கண்கொட்டாமல் பார்க்கிறாள். பவனியைப் பார்த்துக் கொண்டே நிற்கிறாள்.

இத்தனைக்கும் மௌனமாகத்தான் வருகிறார் குற்றாலநாதர். குழந்தை போல அமைதியாகத்தான் வருகிறார்.

வசந்தவல்லியைப் பார்த்துக் கண் அடித்தாரா, புன்முறுவல் பூத்தாரா இல்லை. அப்படி இப்படி என்று பார்த்தாரா, திகைத்தாரா, மயங்கினாரா, ஒன்றும் இல்லை. ஆனாலும் வசம் அழிந்து போனாள் வசந்தவல்லி.

அவளால் நிற்கவும் முடியவில்லை, உட்காரவும் முடியவில்லை. தோழிமார் அவள் பக்கம் ஓடி வந்தார்கள் பதறிய படியே ஓடி வந்தார்கள். என்ன என்ன என்று வசந்த வல்லியின் கையைப் பிடித்தார்கள்.

அப்படியே அவர்கள் மார்பின் மேலும்,தோள் மேலும் தலையை வைத்துச் சரிகிறாள் வசந்தவல்லி. தோழிமார் முகத்தையே பார்க்கிறாள். வெறித்தே பார்க்கிறாள். வசந்தவல்லியின் கண்ணுக்குத் தோழிமாரா தெரிகிறார்கள் ? அவர்கள் முகத்தில் குற்றாலநாதரையே பார்க்கிறாள் வசந்தவல்லி !

பார்த்துப் பார்த்து மயங்குகிறாள் வசந்தவல்லி. பெருமூச்சு விடுகிறாள். அனலாய்க் கொதிக்கிறது அவள் விடும் மூச்சுக் காற்று.

என்ன அழகு? என்ன அழகு ? என்று தோழிமாரிடமே சொல்கிறாள் வசந்தவல்லி. 'பொல்லாத ஆசாமியாக அல்லவா இருக்கிறார்' என்று முனகவும் செய்கிறாள். சடையில் 'சந்திரனை அல்லவா சொருகி

இருக்கிறார்' என்கிறாள்.

"இடுப்பிலே ஒரு பெண், தலையிலே ஒரு பெண், பெரிய மாயக்காரர் (சித்தர்) தான்" என்று சொல்லிக் கொண்டே முறுவல் பூக்கிறாள் வசந்தவல்லி. தோழிமார் திகைக்கிறார்கள்.

வசந்தவல்லியோ உற்சாகமாக, உரத்த குரலில்தான் சொல்கிறாள். "பார்த்தால், ஒரு சாயலில் குற்றாலநாதர் போலவே தெரிகிறது. அவர்தான், அவரேதான். வேறு யார் மைனர் வேஷம் போட்டு இப்படி ஆடம்பரமாக வருவார்" என்றே சொல்லி விடுகிறாள் கூசாமல்.

இதுதான் சமயம் என்று தோழிமார் ஒரே குரலில் சொல்கிறார்கள் வசந்தவல்லியிடம் :

"நீ சொல்வது சரிதான் ; குற்றாலநாதரே தான். மலர்க்கண்ணியைக் கூந்தலில் சொருகிய மாதிரி, சடையில் சந்திரனையே சொருகி வைத்திருகிற பெருமான்தான்" என்று தோழிமார் சொல்லும் வார்த்தை ஒவ்வொன்றும் வெறும் வார்த்தையாகவா இருந்தது வசந்தவல்லிக்கு? தேனாய்த் தித்தித்தது. தேனும், பாலும் கலந்து செவி வழி வார்த்தது போலவே இருந்தது.

தேனைச் சப்பிச் சப்பிப் பருகுவது போலத் தலையை ஆட்டி ஆட்டி, மனசையே ஆட்டி ஆட்டி ஆனந்தமாய்க் கேட்டாள் வசந்தவல்லி. அவள் முகம் பூரண சந்திரன் போல் பிரகாசித்தது. கண்ணில் ஆனந்தம் தாண்டவம் ஆடியது. அவ்வளவுதான். குற்றாலநாதர் மேல் வசப்பட்டுவிட்டாள். வசமாகச்

சிக்கிவிட்டாள் வசந்தவல்லி.

விருத்தம்

**"திங்களை முடித்தார் கண்டாய்,**
**திரிகூட ராசர் கண்டாய்,**
**எங்குள சித்துக்கெல்லாம்**
**இறையவர் இவரே என்று**
**நங்கைமார் பலரும் கூற ;-**
**நன்மொழித் தேறல் மாந்தி ;**
**மங்கையாம் வசந்தவல்லி**
**மனம் கொண்டாள் மயல் கொண்டாளே ! (25)**

(2) பாட்டைப் பாட வேண்டும். வசனத்தை வாசிப்பது போல் வாசிக்கக் கூடாது. பாடிப் பார்த்தால் ஒரு தடவை பாடிப் பார்த்தாலே போதும் பிறகு விடாது பாட்டு நம்மை வெளியில் போகும் போதும், உள்ளே வரும் போதும் கோவிலுக்குப் போகும் போதும், கடைக்கு போகும் போதும், ஏன் ரயிலுக்குப் போகும் போதும் கூட பாட்டு நம்மை விடாது. சங்கீதம் ராகம் பற்றி எல்லாம் யோசிக்க வேண்டியதில்லை.

1. திங்கள் - பிறைச்சந்திரன். தேறல் - தேன். மங்கையாம் வசந்தவல்லி, மாதரசி வசந்தவல்லிதான். மயல் - காதல் மயக்கம்.

நிறுத்திப் பாடினால் போதும். தாள இயல் வந்துவிடும். அதில் தானே இருக்கிறது இசை. ஏதாவது ஒரு ராகம் வந்துவிடும். சுதி சுத்தமாகவே வந்துவிடும்.

பாடலை அனுபவித்துப் பாடப் பாட வசந்தவல்லி நிலைக்கே வந்துவிடுவோம் நாம். மனம் பாடலோடு ஒட்டிக் கொள்ளும். மயக்கத்துக்கு, ஆனந்த வெறிக்கே ஆளாகி விடுவோம் நாம். இனி மோக வெறிக்கு ஆளான வசந்தவல்லியைப் பார்ப்போம்.

குற்றாலநாதரைப் பற்றிய ஞாபகம் ஒன்றுதான், ஒன்றே ஒன்றுதான் வசந்தவல்லியிடம். வசந்தவல்லியின் உள்ளத்தை உணர்ச்சியைக் குழைத்துக் குழைத்துப் பிசைகிறது அது. ஒரே ஆனந்த பரவசத்துக்கு ஆளாகி விடுகிறாள் வசந்தவல்லி. என்ன சொல்கிறாள்.

இராகம் - புன்னாகவராளி    தாளம் - ரூபகம்

**"முனிபரவும் இனியானோ - வேத**

**முழுப்பலவின் கனிதானோ,**

**கனியில்வரும் தீந்தேனோ - பெண்கள்**

**கருத்துருக்க வந்தானோ"**

இனி ஆனந்தம் ஊற ஊற அனுபவித்துக் கொண்டிருக்க வேண்டியதுதான். உள்ளுக்குள்ளேயே அனுபவிக்கும் ஆனந்தத்தை அப்படியே வெளியில் எடுத்து வைக்கத் தவிப்பு ஒன்று உண்டாகும்.

அப்பொழுது பெண்களுக்கே உரிய நாணம் இருக்கிறதே அது அந்த தவிப்பை அதட்டி அமர்த்திவிடும். தலை நீட்டவிடாது. அதனால் அப்படியும், இப்படியும் பாவலாப் பண்ணி வெளியே தலை நீட்டும் உள்ளுக்குள் உருவாகிற ஆனந்தமும் அனுபவமும். அது எப்படி என்று பார்க்கலாம்

மேலே காட்டிய இரண்டு அடிகளிலும் வசந்தவல்லியின் ஆசைப் பெருக்கு, ஆனந்தவெறி நெளிந்து வளைந்து பம்மிப் பம்மி வருகிறது.

இனி அடுத்த இரண்டு அடிகள் அப்படி அல்ல. வெட்கத்தை இடித்துத் தள்ளிக் கொண்டு, நேருக்கு நேர் என்று சொல்லும்படி நிமிர்ந்து வருகிறது

**"தினகரன் போல் சிவப்பழகும் – அவன்**
**திருமிடற்றின் கறுப்பழகும்**
**பகைமணி இருகாதும் – கண்டால்**
**பாவையர்தாம் உருகாரோ"!**

வயதுக்கு வந்த எந்த பெண்ணைத்தான் விட்டுவைக்கும் அவர் மிடுக்கும் தோரணையும்என்று வசந்தவல்லியா பேசுகிறாள், காதல் வெறியே வாய் திறந்து பேசுகிறது. அப்படிப் பேச வைக்கிறது தமிழ்.

குற்றாலநாதர்தான் எல்லாம். சகலமும் எனக்கு அவர்தான் என்று பட்டுவிட்டது வசந்தவல்லிக்கு. அப்படி வந்துவிட்டது வசந்தவல்லிக்கு மோகம். அது

வெறியாய் ஏறிவிட்டது. உச்சிக்கே ஏறிவிட்டது வசந்தவல்லியிடம்.

"இப்படி ஓர் அழகைக் கண்டால், அழகனைப் பார்த்தால் எந்தப் பெண்தான் மயங்க மாட்டாள்" என்று ஒரு பெண் சொல்கிறாள் என்றால், அதுவும் வயதுக்கு வந்த பருவப் பெண்ணே சொல்கிறாள் என்றால், அதை நோய் என்று சொல்லாமல் ; காதல் நோய் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்ல.

காதல் வெறியில் ஜன்னி வந்தது போலவே வந்துவிட்டது வசந்தவல்லிக்கு மயக்கம். "ஐயோ, நான் என்ன செய்வேன் தலையைச் சுற்றுகிறதே" என்று கூட அலறுகிறாள் வசந்தவல்லி.

இப்படி எல்லாம் புலம்பும் வசந்தவல்லி தன் உடம்பை கையை, காலை, ஏன் முகத்தை (கன்னத்தை)க் கூடப் பார்க்கிறாள். வட்ட வட்டமாய் தேமல் விழுந்து கிடக்கின்றன அங்கங்கே. தேமலுக்குப் பசலை என்று பெயர். "இது என்ன அநியாயம், எங்கிருந்து வந்தது இந்தச் சனியன், என்ன கொடுமை செய்தேன் இதற்கு. என்னை வந்து சீரழிக்கிறதே இந்தப் பசலை" என்று வருந்துகிறாள்.

"ஆகம் எல்லாம் பசந்தேனே"?

"பந்து விளையாடப் போனால் அதையே நினைத்துக் கொண்டு போ. அக்கம் பக்கம் திரும்பாதே, அது இது என்று ஒன்றையும் பார்க்காதே ; குனிந்த தலை நிமிரக்கூடாது. போய்வா அப்படி" என்று ஒவ்வொரு தடவையும் சொல்லி வழி அனுப்புவாள் தாய். அவள்

சொல்தைக் கேட்க எரிச்சலாக இருந்தது. கசப்பாகவே இருந்தது. அன்னையின் சொல்படி நடந்திருந்தால் இந்த கதி வருமா எனக்கு" என்று சோர்கிறாள் வசந்தவல்லி.

**"பெற்ற அன்னை சொல்லும் கசந்தேனே"**

"எத்தனை பிரியமாய் அடுக்கடுக்காய்ப் போட்டேன், இரண்டு கையிலும் வளையலை. ஒன்றுகூட இல்லையே வளையல்" என்று பதறிப் போய் அங்கும் இங்கும் தேடுகிற பாவனையில் பரக்கப் பரக்கப் பார்க்கிறாள் வசந்தவல்லி.

இனிப்பாடலைப் பார்க்கலாம்.

**"வாகனைக் கண்(டு) உருகுதையோ - ஒரு**
**மயக்கமதாய் வருகுதையோ -**
**மோகம் என்ப(து) இதுதானோ - இதை**
**முன்னமே நான் அறியேன் ஓ!**
**ஆகம் எல்லாம் பசந்தேனே - பெற்ற**
**அன்னை சொல்லும் கசந்தேனே,**
**தாகம் அன்றிப் பூணேனே - கையில்**
**சரிவளையும் காணேனே" (26)**

2. வாகன் - அழகன், பார்ப்பவர் ஒவ்வொருவரையும் நமக்குப் பொருத்தம் இவன்தான் என்று மயங்கவைக்கும் பேரழகன். மோகம் - ஆசை. ஆகம் - மேனி.

# வசந்தவல்லியின் காதல் மயக்கம்

1. காதல் நோய்க்கு ஆளாகி விட்டால் பசி போய்விடும். தூக்கம் போய்விடும். அமைதி, நிம்மதியும் போய்விடும். பிறகு உடம்பு இளைக்காமல் என்ன செய்யும்? சோகை பிடித்த உடம்பில் திட்டுத் திட்டாகத் தேமல் விழத்தான் செய்யும். இறுக்கமாய்ப் போட்ட வளையல் கழன்று நழுவவே செய்யும்.

வசந்தவல்லியிடம் தன் உணர்வு (சுய உணர்வு) இல்லை. அதுபோய் விட்டது. அதற்குப் பதிலாகப் பைத்தியம் பிடித்துவிட்டது. காதல் பைத்தியம்தான்.

குற்றாலநாதர் மேல் வைத்த மோகவெறியில் அவள் கையில் கிடந்த வளையல்(கள்) நழுவி விழுந்ததே தெரியவில்லை அவளுக்கு. அது ஒரு புறம் இருக்கட்டும். பைத்தியம் ஏற ஏற அவள் கட்டியிருந்த ஆடை (சேலை) கட்டவிழ்ந்து கலைந்து உலைகிறது. அது கூடத் தெரியவில்லை. தெரியாதது மட்டுமா? சேலை அவிழ்ந்து கலைவது ஒரு பாதி என்றால், அது அவிழ்ந்து கலைவதைப் பார்த்து "கெக்கக்கே" என்று சிரிக்கிறாள் வசந்தவல்லி. சிரித்தபடியே சேலைக்கட்டின் மறுபாதியை இவளே அவழ்த்து விடுகிறாள். அந்த அளவுக்கு முற்றிவிட்டது காதல் வெறி.

பவனி நகர்ந்து போய்விட்டது. தோழிமார்கைத் தாங்கலாய் வீட்டுக்கே கொண்டு வந்துவிட்டார்கள்

வசந்தவல்லியை. வீட்டுக்கு வந்தும் அடங்கவில்லை வெறி. சிரிக்கிறாள், முறைக்கிறாள். "ஆ" என்கிறாள் "ஓ" என்கிறாள் அலறவே செய்கிறாள்.

குற்றாலநாதர் மட்டும் கண்ணுக்குத் தெரிகிறார். வேறு ஒருவரும் உடன் இருக்கும் தோழிமார் கூடக் கண்ணுக்குத் தெரியவில்லை. குற்றாலநாதரும் ஆடையில்லாமல் திகம்பரமாகத்தானே வீதி உலா வருகிறார். இவளிடமிருந்தும் கலைகிறது, நழுவுகிறது, தரையிலும் விழுகிறது ஆடை. இறுக்கிக் கட்டி இருந்த உடையேதான் . அப்படியே இவளும் குப்புற விழுகிறாள் தரையில் .

இனி திரிபுரத்தை எரிக்கப் புறப்பட்ட போது உலகை (தரையை)த் தானே தேராக் கொண்டு ஊர்ந்தார் குற்றாலநாதர். அவர் வசப்பட்ட வசந்தவல்லியும் அப்படியே ஊர்ந்து செல்கிறது போல் விழுந்து விட்டாள் தரையோடு தரையாக.

என்ன ஒற்றுமை இருவருக்கும். ஆனாலும் தோழியர் பதறிவிட்டார்கள். இதைப் பார்த்து ; பதற்றத்தில் அலறியேவிட்டார்கள். இனிப்பாடல்

ஆறு ஆறு சீர்கொண்ட, நீண்ட அடிகள் நான்கு கொண்ட பூர்வமான விருத்தத்தைச் சேர்ந்தது பாடல்

**"நடை கண்டால் அன்னம் தோற்கும்**

**நன்னகர் வசந்தவல்லி ;**

**விடை கொண்டான் எதிர்போய்ச் சங்க**

**வீதியில்ச் சங்கம் தோற்றாள் ;**

**சடை கொண்டான் உடைதான் கொண்டு**

**தன் உடை கொடுத்தான், ஐயன்**

**உடைகொண்ட வழக்குத்தானோ**

**ஊர்கின்ற தேர் கொண்டாளே "! (27)**

(2) ஆசிரியர் பாடுகிறது நாடக இயலில். அதுவும் மந்தை நாடக இயலில். அதில் வந்து பார்க்கும் மக்களை மனதில் வைத்தே பாடுகிறார் குறவஞ்சி ஆசிரியர்.

அதனால் வித்தியாசமான கூறுகள் அங்கங்கே இருக்கவே செய்யும் பாடல்களில். சடை கொண்டான்.... தேர் கொண்டாள் என்பதில் அது கிடக்கிறது.

வசந்தவல்லியின் நிலை கண்டு நிலைகுலைந்த தோழிமார் புலம்புவதை இனி பார்ப்போம்.

கண்ணிகள்

இராகம் - தோடி தாளம் - சாப்பு

**"ஆசை கொண்டு பாரில் வீழ்ந்தாள்**

**நேசமான் என்பார் - விளை**

1. நன்னகர் - திருக்குற்றாலம். விடைகொண்டான் - காளைவாகன மூர்த்தி, குற்றாலநாதர். சங்கம் தோற்றாள் - வளையலை நழுவ விட்டாள். சடை கொண்டான் உடைதான் கொண்டு - குற்றாலநாதருக்கு உடை ஏது, நிர்வாணந்தான் உடை, அதை இவள் ஏற்றுக் கொண்டாள் குற்றாலநாதர் தன் அழகால் இவளை அப்படி ஒரு கதிக்கு ஆளாக்கிய அநியாயந்தான். ஊர்வழக்கு, உலக வழக்குக்கு விரோதமான அநியாய வழக்குத்தான் அது. அந்த வழக்கைத் தொடுக்கவே தரையில் ஊர்கிறாள்.

**ஆடாள், பாடாள், வாடாமாலை**

**சூடாள் காண் என்பார் ;**

**பேசிடாத மோசம் என்ன**

**மோச மோ என்பார் - காமப்**

**பேயோ என்பார் ;**

**பிச்சோ என்பார் மாயமோ என்பார்"**

உண்மை இருந்தால் போதும். உணர்ச்சி இருந்தால் போதும், கவி வந்துவிடும். இசையோடும், தாளத்தோடும் நாடகம் போட்டுக் கொண்டே வந்துவிடும் கவி.

உணர்ச்சி உண்மையாக இருக்க வேண்டும். பக்தியோ, காதலோ, பொறுமையோ, அன்போ, கொடுமையோ, அழுகையோ, சிரிப்போ எதுவாகவும் இருக்கலாம். ஆனால், உண்மையாக இருக்க வேண்டும்.

உண்மையான உணர்ச்சியை எதிர்பார்த்தபடி இருக்கிறது தமிழ். பார்த்த மாத்திரத்தில் பாய்ந்தோடி வரும் தமிழ். ஆடிக் கொண்டும், பாடிக்கொண்டும் வரும் தமிழ் அப்படியே தன்மயம் ஆக்கிக் கொள்ளும் தமிழ்.

---

2. பாரில் - தரையில். நேசமான் - அன்பான வசந்தவல்லி. மான்போன்ற மிரண்ட சுபாவம் உடையவள்தான் வசந்தவல்லி. பேசிடாத மோசம் - பேச்சே இல்லையே எல்லாம் தாறுமாறாகத் தானே நடக்கிறது. என்ன மாயம் - என்ன கொடுமை இது. பிச்சு - பைத்தியம்.

குறிப்பு : நாடகமே நடக்கிறது நம் கண்முன். நாடகத்தை நடத்துவது தமிழ்தான் தமிழின் விளைச்சலும் பக்குவமுந்தான்.

உருட்டித் திரட்டி, குழைத்துப் பிசைந்து உருவமே கொடுத்துவிடும் உணர்ச்சிக்குத் தமிழ். கலைப் பண்போடு கூடிய கவி உருவமே கொடுத்துவிடும் தமிழ். பிறகு நாமும் கவியாகி விடுவோம். கவியானது நம்மையும் தனதாக்கிக் கொள்ளும்.

கவியில் சிருஷ்டித் தத்துவம் என்றால் அதுதான்.

குறவஞ்சி ஆசிரியர் காலத்துக்குப் பின் இருநூறு வருஷம் கழித்து வாழ்ந்து மறைந்தவர் அண்ணாமலை ரெட்டியார். தெய்வகடாட்சம் என்றுதான் சொல்ல வேண்டும். அண்ணாமலை ரெட்டியாரின் கவியை.

ரெட்டியார் பாடிய காவடிச் சிந்திலிருந்து, அதுவும் ஒரு பாடலிருந்து ஒரு பகுதி :

முருகப் பெருமான் மேல் காதல் கொண்டு விட்டாள் பெண். விடுமா காதல்? நோயாகவே பிடித்து ஆட்டுகிறது காதல் பெண்ணை.

அது எப்படி என்று பார்க்கலாம்.

**" உள்ளம் மெள்ள மெள்ள**

**முருக னைநினைந்(து) உருகு - தே -முத்தம்**

**கருக தே, கண்ணீர் பெருகு - தே,**

**உச்சிக்(கு) ஏறிக் காமப்**

**பித்தம் கிறுகி றென்று**

**வருகு தே"**

காவடிச் சிந்துப்பாடலை மனதில் வைத்துக் கொண்டு குறவஞ்சிப் பாடலைப் பார்க்க வேண்டும். தலையில் சூடிய பூங்கண்ணியையே உருவி எடுத்து அதைத் தும்பு தும்பாகப் பிய்த்து எறிகிறாள் வசந்தவல்லி "என்ன சனியன் இது, தலையில் இருந்து கொண்டு மண்டையை அரிக்கிறது சனியன்" என்று பிய்த்து எறிகிறாள் வசந்தவல்லி.

அந்த அளவுக்குப் பைத்தியம், காதல் பைத்தியம் ஏறிவிட்டது. விஷம் ஏறுவது போலவே ஏறிவிட்டது வசந்தவல்லியிடம்.

"ஆடாள் பாடாள் வாடா மாலை சூடாள்"

இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிற தோழியருக்கு எப்படி இருக்கும். குடலைப் புரட்டத் தானே செய்யும்.

எரிச்சல் (கோபம்) ஒரு பக்கம், பரிவு ஒரு பக்கம், பயம் ஒரு பக்கம், குற்றாலநாதர் இருக்கத்தானே செய்கிறார் என்னும் தைரியம் ஒரு பக்கம். இப்படிப் பலவகைப்பட்ட உணர்ச்சிகள் ஒன்றுகூடி அவர்களைப் புரட்டிப் புரட்டி எடுக்கின்றன. என்ன செய்கிறார்கள் அவர்கள்.

"ஐயோ என்ன

செய்வோம் என்பார்,

தெய்வ மே என்

பார் - களைப்(பு)

ஆச்சோ என்பார்,

மூச்சே(து) என்பார் ;

பேச்சே தோ என்பார்,

கையில் திருநீ(று)

எடுப்பார் ; தைய -

லார் எல் லாம் - சூலக்

கையா, திரி

கூட நாதா!

கண்பா ராய்

என் பார்"! (28)

---

2. மூச்சேதென்பார் பேச்சேதென்பார் - மூச்சுப்பேச்சில்லையே என்ன செய்ய என்று திகைக்கிறார்கள். தையலார் - தோழிமார். தையல் - பெண். திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை என்பது போல திருநீறை எடுத்து வசந்தவல்லியின் மேல் போடுகிறார்கள். குற்றாலநாதா, நீ தான் தஞ்சம் என்கிறார்கள்.

(3) சீருக்கு சீர் அசைக்கு அசை நிறுத்திப் பாட வேண்டும். மனம் வைத்துப் பாட வேண்டும். பாடினால் போதும். ஆசிரியர் குறித்திருக்கிற தோடி ராகம் வந்துவிடும். பாடலுக்கு உள்ளேதானே கிடக்கிறது ராகம். பிறகு வராமல் எங்கு போகும். சாப்பு தாளமும் வந்துவிடும்.

அப்படி இல்லை என்றாலும் ஏதாவது ஒரு ராகம் ஒரு தாளம் வந்து விடவே செய்யும். பயப்பட வேண்டாம். பொருத்தமாய் வந்து பேசும் ராகமும் தாளமும். அவசரப் படக்கூடாது. நிறுத்தி, சாவதானமாகப் பாட வேண்டும். அதுபோதும். ஆனால் தோழிமார் அவசரப்படுகிறார்கள்! என்ன செய்ய என்று ஒன்றும் தெரியாமல் பரபரப்படைகிறார்கள். அவசரத்தில் எதை எதையோ செய்கிறார்கள்.

திகைப்பும், வேகமும், சோர்வும் அப்படி அப்படியே கிடக்கின்றன பாடலில். பாடப்பாட கண்முன் வந்து நிற்கும் அவை. இந்தக் கதிக்கு ஆளாகிவிட்டாளே வசந்தவல்லி என்று உதவிதான் செய்கிறார்கள் தோழிமார். அனுதாபத்தோடு செய்கிற காரியம்தான் அவர்கள் காரியம்.

வசந்தவல்லிக்கோ அவர்கள் செய்யும் உபகாரம் எல்லாம் கொடுமைப்படுத்துவதாகவே இருக்கிறது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிறார்களே சகிமார்கள் என்று தவிக்கிறாள் வசந்தவல்லி.

மாடுகட்டி, கூனை வைத்து, தோட்டத்துக்கு நீர் பாய்ச்சக் கமலைக் கிணறு என்று ஒன்று. அதில் ஒருவன்

கால் தவறி விழுந்துவிட்டான். சரியானபடி நீச்சல் தெரியாதவன் அவன். தட்டுத் தடுமாறி படியை நோக்கி வருகிறான். அப்பொழுது நீரைக் கொட்டிவிட்டு கிணற்றுள் இறங்கும் கூனை அவன் தலையில் மோதி தண்ணீருள் அமிழ்த்துகிறது கூனையின் காரியம் போலவே தெரிகிறது. தோழியர் காரியம் வசந்தவல்லிக்கு.

**"வானவர் திருக்குற்றாலர்**
**மையலால் வசந்தவல்லி**
**தான் உடல் சோர்ந்தாள் என்று,**
**தமனிய மாடம் சேர்த்து,**
**மேனையர் அழகு தோற்ற**
**மின்னனார் – விழுந்த பேரைக்**
**கூனை கொண்(டு) அமிழ்த்துவார் போல்**
**குளிர்ச்சியால் வெதுப்புவாரே!" (29)**

3. தமனிய மாடம் - பொன் கூரை போட்ட பளிங்கு மண்டபம் (பளிக்கறை). மேனையார் அழகு தோற்ற மின்னனார் - தோழிமார். மேனகையின் அழகை வென்ற மின்னல்க் கொடி ஒத்த அழகிய தோழியர். குளிர்ச்சி... வெதுப்புவார் - அவர்கள் தடவுவது சந்தனம். ஆனால் அனலாய்ச் சுடுகிறது வசந்தவல்லிக்கு.

# மருந்தாவது ஒன்றாவது ஆசைநோய்க்கு

(1) எத்தனை உல்லாசமாய் ஆடிக்கொண்டிருந்தாள் வசந்தவல்லி. எப்படித் துள்ளித் துள்ளி ஆடினாள். என்ன வேகம், என்ன பாய்ச்சல், என்ன ஒய்யாரம், என்ன எடுப்பு அவள் ஆட்டத்தில். அத்தனையும் இருந்த இடம் தெரியாத படி பறந்தோடி விட்டன வசந்தவல்லியிடமிருந்து.

பவனியைப் பார்த்த மாத்திரத்திலேயே, குற்றாலநாதரைப் பார்த்த மாத்திரத்திலேயே எல்லாம் போய்விட்டன.

மனுசகாரியம் அப்படி அப்படித்தான். பளிச் பளிச் சென்று மாறும். வானத்தைப் பூமியாகவும், பூமியை வானமாகவும் கணப்பொழுதில் புரட்டிப் போட்டுவிடும் மனம். மனித மனம்.

இது சம்பந்தமாக ஒரு நிகழ்ச்சி. அகத்தியர் போலவும், திருவள்ளுவர் போலவும், கம்பர் போலவும் மகா பெரிய ஞானி ஒருவர். பாடல் ஒன்றை எடுத்துப் பாடி அனுபவிக்கிறார் என்றால் கூட இருப்பவர் எல்லோருமே அவராகிவிடுவார்கள். அவர் அனுபவிக்கிற மாதிரியே அனுபவிப்பார்கள். அவர் எப்படிக் கவியாகிறாரோ அப்படியே மற்றவர்களும்

ஆவார்கள்.

இனி தமிழையும், தமிழ்ப்புலவர்களையும், கலைகளையும் வளர்க்கிற வள்ளல் ஒருவர். அவரைப் பற்றிய கவி ஒன்றை எடுத்து அன்பர்களிடம் பாடி விளக்கிக் கொண்டிருந்தார் மகான். கேட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் ஆவேசம் வந்தவர் போல் கூப்பாடு போட்டுவிட்டார். இந்த ஆள் ஒரு கிரிமினல் ஆயிற்றே ; இவரைப் பற்றியா இப்படி உயர்த்திப்பாடுவது இந்தக் கவிஞர் என்றே கத்திவிட்டார். அவ்வளவு தான் இருளே சூழ்ந்துவிட்டது அங்கு. பச்சைக் குழந்தையின் குரல் வளையை நறுக்கின மாதிரி நறுக்கிவிட்டானே பாவி பாட்டின் கழுத்தை என்று பதறிப்போனார்கள் உடனிருந்து அனுபவித்தவர்கள்.

பாடலை எடுத்து விளக்குகிற பொழுது எப்படி ஆனந்தபரவசத்தில் திளைத்துக் கொண்டிருந்தார் பெரியவர். அவர்முகம் அன்றலர்ந்த செந்தாமரைப் புஷ்பம் போல் பொன்பூத்து ஜொலித்தது. கண்மூடிக் கண் திறப்பதற்குள் இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுவிட்டார் ஒருவர். அவ்வளவுதான் அனலில் விழுந்து சுருண்டு வாடிய சருகாய்ப் போய்விட்டது ஆனந்தமுகம். கண், மூக்கு, கன்னம், நெற்றி எல்லாமே கன்னிச் சிவந்துவிட்டன.

ஒன்றும் ஓடவில்லை பெரியவருக்கு. பாடல் புத்தகத்தை அப்படியே எதிரில் இருந்த பலகையில் தொப்பென்று போட்டு விட்டார். ஆயாசப் பட்டு

விட்டாரே பெரியவர் என்று காபி கொண்டு வந்து கொடுத்தார்கள். தாராளமாய் சீனி போட்ட காபிதான். ஆனாலும் வாயில் வைத்ததும் வேப்பங்காயாய்க் கசந்தது காபி. காபியா கசந்தது. மனமே, உணர்ச்சியே கசந்துபோய் விட்டது. எல்லாம் ஒன்றிரண்டு நிமிடத்துக்குள்தான். அதுதான் மனம். அப்படித்தான் இருக்கும் மனம்.

வசந்தவல்லியின் நிலையும் அப்படித்தான். விளையாட்டு ஒன்றைத் தவிர மற்றது எதுவானாலும் அதை வெறும் தூசி மாத்திரமே என்னும் செருக்கில் இருந்தவள்தான் வசந்தவல்லி.

அந்தச் செருக்கெல்லாம் மாயமாய் மறைந்துவிட்டது. அனலில்ப் பட்ட புழுவாய்த் துடிக்கிறாள் இப்பொழுது. எல்லாம் பவனி பண்ணின கூத்து. குற்றாலநாதர் பண்ணின லீலை. கண நேரத்தில் எப்படிப் புரட்டிப் போட்டுவிட்டது வசந்தவல்லியை? பந்து விளையாட்டையே விட்டுவிட்டாளே.

வசந்தவல்லியின் முகத்தைப் பார்த்தால் போதும். தோழிமார் முகமெல்லாம் மலரும். ஆனந்தம் வந்து தாண்டவமாடும். அது அப்பொழுது. இப்பொழுதோ இருக்கிற தெம்பும் போய்விடுகிறது பார்ப்பவர்கள் முகத்தில். வசந்தவல்லியைப் பார்த்துப் பார்த்து வருந்துகிறார்கள். என்ன செய்ய என்று தெரியாமல் எதேதோ செய்கிறார்கள். பயப்படவே செய்கிறார்கள் தோழிமார்.

தீயாய்ப் பொசுக்குகிறதே வசந்தவல்லியின்

தேகம் என்று சந்தனத்தை அரைத்து குழம்பாக்கிப் பூசுகிறார்கள். வாசனை மிக்க சந்தனந்தான். சூடு தணியும் என்றுதான் பூசுகிறார்கள். ஆனால் மேலும் மேலும் கூடுகிறது கொதிப்பு. கையை வைக்க முடியவில்லை வசந்தவல்லியின் மேல். வாழைத் தண்டை மடல் மடலாய் எடுத்து அடுக்கி அதன் மேல்படுக்க வைக்கிறார்கள். அதுவும் சுடுகிறது. சூடுதாங்க முடியாமல் சுருள்கிறாள் வசந்தவல்லி. எடுக்கிறார்கள், மார்போடு அணைக்கிறார்கள் படுக்க வைக்கிறார்கள் மறுபடியும் தோழிமார்.

என்ன செய்ய என்று தெரியவில்லை தோழிமார்க்கு ஏதேதோ செய்கிறார்கள். ஏறுதே தவிர இறங்கமாட்டேன் என்கிறது சூடு.

இராகம் - கல்யாணி தாளம் - சாப்பு

கண்ணிகள்

**முருகு சந்தனக்**

**குழம்பு பூசுவார் – விரகத்தீயை**

**மூட்டி மூட்டி**

**விசிறி வீசுவார்!**

**கருகுதே உடல்**

**உருகுதே என்பார் – விரித்த பூவும்**

**கரியுதே முத்தம்**

**பொரியுதே என்பார்!**

**அருகில் இருந்து**

**கதைகள் நடத்துவார் – எடுத்து மார்பில்**

**அணைத்து, வாழைக்**

**குருத்தில் கிடத்துவார்.**

**பெருகு நன்னகர்**

**மருந்து போல்வரும் – வசந்தவல்லி**

**பெருநிலா வினோடு**

**கலாவினாள். (30)**

(2) ஆசைநோய் பிடித்து ஆட்டுகிறது வசந்தவல்லியை. தன்நினவே இல்லை என்று சொல்லும்படி தத்தளிக்கிறாள் வசந்தவல்லி. மேலெல்லாம் கொதிப்பு. நாவறட்சி, எரிச்சல், காந்தல், என்ன செய்வாள் பாவம் வசந்தவல்லி.

இத்தனை தொல்லை போதாதென்று பூரணசந்திரன் (முழுநிலா) எழுந்து வருகிறது "வசந்தவல்லி எங்கே, அவளைச் சீரழிக்காமல் விட மாட்டேன்" என்று ஆவேசத்தோடு எழுந்து வருகிறது முழுநிலா. அத்தனை வேகம் அதனிடம்.

1. முருகு - வாசனை. விரகத்தீ - (உணர்ச்சி) ஆசைப்பெருக்கில் தேகம் உலையும். சூடாகிவிடும். ஜன்னிக் கோளாறே வந்துவிடும். விசிறி - விசிறியால். முத்தம் - முத்துமாலை. நடத்துவார் - சொல்வார்கள். நன்னகர் - குற்றாலம். மருந்து - அமிர்தம். பெருநிலாவினோடு - பூர்ணசந்திரனுடன். கலாவினாள் - சண்டையே போட்டாள் வசந்தவல்லி.

குறிப்பு : பெருநிலாவினோடு கலாவினாள் என்று சொல்லக்கூடாது. "பெருநிலாவி னொடுக லாவினாள்" என்று வெட்டி விலக்கிப் பாடவே வேண்டும். நிறுத்தி, சாவதானமாய்ப் பாட வேண்டும்.

அத்தனையும் ஒத்துப்பேசி நம்மை வஞ்சந்தீர்க்கின்றனவே என்று ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது வசந்தவல்லிக்கு. எரிச்சலில் வசவிலேயே இறங்கிவிடுகிறாள் வசந்தவல்லி.

"வெண்ணிலாவே, உனக்குப் பேரா தண் (குளிர்ந்த) நிலா என்று? வெட்கமாக இல்லையா உனக்கு? ஆகாயம் முழுவதையும் தீயைவைத்துக் கொதிப்பைக் கொட்டி வருகிற உனக்கா தணிணிலாஎன்று பெயர் அழகு, அழகு! இப்படிக் கொட்டுகிறாள் ஆத்திரத்தை வசந்தவல்லி.

**விண்ணிலே நெருப்பை வைத்தாய்**

**தண்நிலாக் கொடும்பாவி**

**வெண்ணிலா வே.**

மேலும் எப்படி வருகிறது ஆங்காரம்.

என்னை இந்தக் கதிக்கு ஆளாக்கினாரே புண்ணியவான் குற்றாலநாதர். அவரோ கண்ணில் நெருப்பை வைத்துக் கொண்டு உலகத்தையே பொசுக்குகிறார். அவரும் நீயும் ஒத்துப் பேசியா இந்த ஆட்டம் போடுகிறீர்கள்"

**கண்ணிலே நெருப்பை வைத்துக்**

**காந்துவா ருடன் கூடி**

**காந்திக் காந்தி.**

'விண்ணிலே நெருப்பை வைத்துவிட்டாயே பாவி' என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி ஏசினாள் வசந்தவல்லி.

"விளையாட்டும் கும்மாளமுமாய் எப்படி உல்லாசமாய் இருந்தேன். நானுண்டு என் வேலையுண்டு என்றிருந்த என்னை பைத்தியம் பிடித்து உருள வைத்து விட்டாரே குற்றாலநாதர். கட்டின பெண்ணுக்கு (குழல்வாய்மொழிக்கு) சரி பாதி இடம் கொடுத்தவர், இன்னொரு பெண்ணை இப்படியா போதை ஊட்டி நோக வைப்பது, யோக்கியப் பொறுப்புள்ளவர் செய்கிற செயலா இது. இல்லை, இல்லை புத்திக்கெட்டவர் செயல். அவருக்குள்ள கெட்ட புத்தி உனக்கும் வந்துவிட்டது. அவருக்கேற்ற சரியான கூட்டாளிதான் நீ. உனக்குப் பெயரா நிலா, தண்ணிலா, பேஷ்! பேஷ்!

**பெண்ணிலே குழல்மொழிக்கோர்**
**பங்கு கொடுத் தார், கொடுத்த**
**பிரமையா லே**
**மண்ணிலே மதிமயங்கிக்**
**கிடக்கின்றேன் உனக்கும் மதி**
**மயக்கந்தா னோ?**
**கண்ணிலே நெருப்பை வைத்துக்**
**காந்துவா ருடன் கூடிக்**
**காந்திக் காந்தி**
**விண்ணிலே நெருப்பை வைத்தாய்**

**தண்நிலாக் கொடும் பாவி**

**வெண்ணிலா வே. (31)**

(3) போகப்போக மேலே மேலே ஏறுகிறது வசந்தவல்லியின் கோபம். அதைக்கையில் வைத்துக் காட்டுகிற மாதிரி காட்டுகிறது செய்யுள். இசையும், தாளமும் எதுகை என்றும் மோனை என்றும் எழுந்து எழுந்து காட்டுகின்றன. பாடப் பாட அது தெரியும்.

விருத்தம் வந்தது. கையையும், காலையும் வீசி ஆனந்தத் தாண்டவமே ஆடியது. ஆட்டம் முடிகிறதோ இல்லையோ, இசைப்பாடல் வருகிறது. வந்தே விட்டது இசைப்பா.

---

2. பிரமை - மயக்கம், ஆசைமயக்கம். உனக்கும் மதிமயக்கம் தானோ - என் புத்தியைக் கெடுத்தவர் உன் புத்தியையுமா கெடுத்துவிட்டார். கண் - நெற்றிக்கண். காந்துவார் - சுட்டுப் பொசுக்குகிறவர், குற்றாலநாதர். விண் - ஆகாயம். உனக்கும் பேரா தண்ணிலா "அநியாயம், அநியாயம். வெண்ணிலவே - சரியான பைத்தியமடா நீ. அவர் ஒரு பைத்தியம், நீயும் ஒரு பைத்தியம்.

குறிப்பு : இசைவிழாவில் மூச்சைக்கொடுத்துப் பாடுவார் பாகவதர் அந்த அலுப்புத் தீர இசையை (பிடிலை)யும், தாளத்தை (மிருதங்கத்தை)யும் ஏவிவிடுவார். ரசமாய் இருக்கும் போட்டி.. குறவஞ்சி ஆசிரியரும் அப்படியே விருத்தம் இசைப்பாட்டு என்று இரண்டையும் ஏவிவிடுகிறார். ஒன்றை ஒன்று விஞ்சி மேலே மேலே பாய்கின்றன.

வசந்தவல்லி கேட்கிறாள் நிலாவிடம் "நீ பாற்கடலில் தானே பிறந்தாய். அமிர்தத்தோடுதானே பிறந்தாய். அமிர்தத்துக்கும் அமிர்தமான மாதரசி மகாலட்சுமியுடன் தானே பிறந்தாய். அப்படி இருந்தும் இரக்கமே இல்லையே ஏன் உன்னிடம்?

இராகம் - வராளி  தாளம் - ஆதி

கண்ணிகள்

**தண்ணமு துடன்பிறந்த**

**வெண்ணிலா வே! அந்தத்**

**தண் அளியை ஏன்மறந்தாய்**

**வெண்ணிலா வே!**

**பெண்ணு டன்பி**

**றந்ததுண்டோ வெண்ணிலாவே - என்றன்**

**வெண்மைகண்டும் காயலாமோ**

**வெண்ணிலா வே!  (32)**

(4) சந்தனத்தைத் தடவினால் செந்தட்டியை அள்ளித்தடவின மாதிரி இருக்கும். உள்ளம் குளிர்விக்கும் இசையும் பாடலும் ஆந்தை அலறுகிற மாதிரி காதைக் கடிக்கும். அபிநயமோ பேயாட்டந்தான். தென்றலை எடுத்துக் கொண்டால் கொல்லன் உலை மாதிரி எரிக்கும் .நிலவோ அக்கினியையே மழைபோலக் கொட்டும்.

புத்தி தடுமாறினால் எல்லாம் தடுமாறிவிடும்.

இனி காதல்வயப்பட்ட ஒரு பெண் நிலாவில் துடிக்கிறாள். அவள் துடிக்கிற துடிப்பை

**பெண்ணிலா ஊரில்**
**பிறந்தாரைப் போலவரும்**
**வெண்ணிலா வே இந்த**
**வேகம் உனக்(கு) ஆகாதே"**

என்று நந்திக் கலம்பக ஆசிரியர் சொல்லியதைக் குறவஞ்சி ஆசிரியர் ருசித்து ருசித்து அனுபவித்திருக்கிறார். கவிஞரின் அனுபவமும், ஆனந்தமும் கண கண என்று ஒலிக்கிறது பாடலில்.

சந்திரனே உன்னிடம்இதயம் இருக்கிறதா, புத்தி (இரக்க உணர்வு) இருக்கிறதா என்று ஒரு பிடி பிடித்தாள் வசந்தவல்லி. பதறிப்போனான் சந்திரன். பதற்றத்தில் வெளிறியே போய்விட்டான் சந்திரன். நான் தண்நிலா இல்லை வெண்நிலா என்றே ஓட ஆரம்பித்து விட்டான் சந்திரன்.

---

3. தண்அமுது - தண்ணென்று குளிர்ந்த அமிர்தம். அளி - கருணை, இரக்கம். காயலாமோ - சுட்டுப் பொசுக்கலாமா.

குறிப்பு : காய்ச்சல் வந்தால் போதும் திருப்பதி லட்டே வாயில் போட்டால் கசக்கும். இனி சாதாரணக் காய்ச்சல் இல்லை வசந்தவல்லியின் காய்ச்சல் காதல்(நோய்)காய்ச்சல். கொடுங்காய்ச்சல் அது.

பார்த்தான் மனமதன். ஆகா நம் கையாள் ஒரு பெண்ணிடம் இப்படியா அவமானப்பட்டு ஓடுவது என்று ஆத்திரப்பட்டான். திருமணமாகி, குழந்தை குட்டி பெற்றெடுத்த பெண் திட்டினால்க்கூட ஆண் பிள்ளைக்கு ரோசம் வந்து விடும். இவளோ திருமணம் ஆகாத பருவப்பெண். ஆண்பிள்ளையைப் பார்த்தாலே வெட்கப்பட்டு வீட்டுக்குள் ஓடி ஒளிகிற சின்னஞ்சிறு பசலை. அவள் வாயால் நம் துருப்புச் சீட்டு இப்படி நார் நாராய்க் கிழிபட்டு விட்டதே என்னும் முனைப்பே வந்துவிட்டது மன்மதனுக்கு.

வசந்தவல்லியை, அவள் கொட்டத்தை அடக்காமல் விடுவதில்லை என்னும் வீறாப்போடேயே யுத்த சன்னத்தனாகி விட்டான் மன்மதன்.

தென்றலே போருக்குரிய தேராக ஜோடிக்கப்பட்டது. மீனையே, மகர மீனையே கொடியாகக் கட்டிப் பறக்க விடப்பட்டது. சந்திரனே குடை பிடிக்கிறான் மன்மதனுக்கு. வெண்கொற்றக் குடையாக இருந்து ஒளிபாய்ச்சுகிறான் சந்திரன்.

இத்தனை தட தடபுடலோடு வருகிறான் மன்மதன். அந்த மன்மதனையே பார்த்து பிடிபிடி என்று. இடித்துரைக்கிறாள் வசந்தவல்லி. இருந்திருந்தும் குற்றாலநாதருக்காகவா எடுபிடி ஆளாய் வருகிறாய்? அவர் என்ன ஆள்? குற்றாலம் ஊருக்கு வேண்டுமானால் ராஜாவாக இருக்கலாம் அவர். என்னைப் பொறுத்தவரை அவர் ஒரு ஊமைக்கள்ளன். அவ்வளவுதான் . இப்படிப் போட்டாள் குண்டை வசந்தவல்லி.

**வெண்ணிலாக் குடைப்பிடிக்க**

**மீனகே தனம்எடுத்த**

**வேனிலானே!**

**அண்ணலார் திரிகூட**

**நாதர் என்ப(து) எள்ளளவும்**

**அமைந்திடா தோ**

மன்மதனே திணறிப்போனான் வசந்தவல்லியின் வேகத்தையும், எரிச்சலையும் பார்த்து. எப்படி அலட்சியமாய்த் தூக்கி எறிந்து பேசுகிறாள் என்றே திகைத்துவிட்டான். சிறிது தெளிந்து "ஆம், உண்மைதான்கோபம் வந்துவிட்டால்,"இவ்வளவுதானா இவர் பவுசு"என்று ஒரு ஆணின் மேல் ஒரு பெண்ணுக்கு வேகம் வந்துவிட்டால் அவர் எவ்வளவு பெரிய ஆளாக இருக்கட்டுமே, தூக்கி எறிந்து வீசி விடுவாள் பெண். அது பெண்ணியல்பு" என்று பூரண தெளிவு பெற்றான் மன்மதன்.

ஆனாலும் தொடர்ந்து சொல்கிறாள் வசந்தவல்லி. சொல்லவா செய்கிறாள் ஆத்திரத்தையே, கொதிப்பையே கசப்பையே கொட்டுகிறாள்.

" என்ன ஆண்பிள்ளை இவர் (குற்றாலநாதர்) பழுத்துப் பொன்னிறம் எடுத்துவிட்டது தலைமுடி. சடை விழுந்தும் விட்டது. அதில் சந்திரன் வேறு. அவன் வீசுகிற வீச்சு (குளிர்நிலா) வேறு. இப்படி ஒரு வேஷத்தைப் போட்டுக் கொண்டே, ஊரில் உள்ள பெண்களை எல்லாம் வஞ்சிக்கிறார் இளம்பெண்களின் கள்ளம் கபடம் இல்லாத உள்ளத்தில் காதல் போதையை

மூட்டுகிறார். அதைக்கிளறியும் விடுகிறார். ஊதி ஊதி அனலாய்க் கொதிக்க வைக்கிறார். அமைதியான எத்தனை உள்ளங்கள் அதை இழந்து போராடுகின்றன. ஒரு உள்ளத்தையாவது அமைதிப்படுத்த முடிகிறதா இவரால். என்ன மனிதர் இவர் (குற்றாலநாதர்) உலகிலேயே மிகமிக நல்ல ஊர் திருக்குற்றாலம். அதையே கெடுத்துவிட்டார். மட்டமான போக்கிரி ஊராக்கி விட்டார் இந்தப் புண்ணியவான் குற்றாலத்தை

**தண்நிலா மௌலிதந்த**

**மையல் ஆனதையறிந்தும்**

**தையலார்கள்**

**எண்ணிலாப் பகை எடுத்தார்**

**இந்நகரை நன்னகர் என்(று)**

**யார் சொன்னாரோ!**

**வெண்ணிலாக் குடைப்பிடிக்க,**

**மீனகே தனம் எடுத்த**

**வேனிலானே !**

---

4. தண்நிலா - குளிர்ந்த இதமான நிலவு. மௌலி - சடை. மையல் - காதல் மயக்கம். எண்ணிலாப் பகை எடுத்தார் - ஒருவரா, இருவரா ஏமாந்த பெண்டிர் பலர். அத்தனை பேரும் வயிறெரிகிறார்கள். இந்நகரை - அப்படிப்பட்ட இவ்வூரை, குற்றாலத்தை. கேதனம் - கொடி. வேனிலான் - மன்மதன். எள்ளளவு அமைந்திடாது - என்னைப் பொறுத்தவரை அவர் ஒரு ஜகதல புரட்டர் (பிராடு) தான். நம்பமுடியாது அவரை.

**அண்ணலார் திரிகூட**

**நாதர் எனப(து) எள்ளளவும்**

**அமைந்திடா தோ.** **(33)**

(5) இத்தோடு விட்டாளா வசந்தவல்லி. மன்மதனை எதிரில் கூண்டில் நிறுத்திக் கேட்கிறாள். கேட்கிற ஒவ்வொரு கேள்வியிலும் உரி உரி என்று அவன் தோலை உரிக்கிறாள்.

"ரதியைச் சுற்றிச் சுற்றி வந்து பல்லை இளிக்கிற பயல்தானே நீ. அடே மன்மதா! நான் மட்டும் ஆசை வைக்கக் கூடாதோ குற்றாலநாதர் மேல். தப்பென்று சொல்ல யோக்யதை உண்டா உனக்கு" இப்படி. வம்பாடி வழக்கே தொடுக்கிறாள் வசந்தவல்லி.

"இந்த லட்சணத்தில் அந்தச் சந்திரனுக்கு உதவியாக வருகிறாயாக்கும் நீ! கையில் வில் வேறு, அம்பு வேறு, சரி சரி பார்ப்பதற்குச் சரியான ஆண்பிள்ளைதானடா நீ"

இராகம் - துருவகாம்போதி தாளம் - சாப்பு

கண்ணிகள்

**கைக்கரும்(பு) என்ன**

**கணை என்ன நீ என்ன**

**மன்ம தா - இந்தச்**

**செக்கரும் பாவி**

**நிலா ஒன்று போதாதே॥**

**மன்ம தா!**

**மைக்கரும் கண்ணாள்**

**இரதிக்கு மால்கொண்ட**

**மன்ம தா - விடை**

**வல்லார்க்கு மால்கொண்டால்**

**பொல்லாப் பெண் மேலுண்டோ**

**மன்ம தா.**

இதோடு விட்டாளா மன்மதனை வசந்தவல்லி. "தென்றல் வேறு, குயில் வேறு, அக்காக் குருவி வேறு, இவ்வளவும் போதா என்று பெற்றெடுத்த அம்மாக்காரி வேறு. ஒரு பெண்பிள்ளை மேல் இத்தனையும் கொண்டுவந்து போர் தொடுப்பது வெட்கமாக இல்லை உனக்கு. அடே மன்மதா? எங்கு போயிற்று வெட்கம், மானம், உன்னைவிட்டு?"

**திக்கெல்லாம் தென்றல்**

**புலிவந்து பாயுதே**

**மன்ம தா - குயில்**

**சின்னம் பிடித்த பின்**

**அன்னம் பிடியாதே**

**மன்மதா**

**அக்கா எனும் சகி**

**வெட்காமல் ஏசுவாள்**

**மன்மதா! - அவள்**

**அல்லாமல்த் தாயொரு**

**பொல்லாத நீலிகாண்**

**மன்மதா!**

ஆண்பிள்ளை என்றால் எடுத்ததுக்கெல்லாம் எரிச்சல் படுவான். அப்படி இல்லை. பொறுமைக்கே உறைவிடம் பெண். எளிதில் வராது எரிச்சல். ஆனால் பெண்மையைச் சோதித்துப் பார்க்கிற காரியம் என்றாலோ வந்துவிடும் எரிச்சல். ஆங்காரமாகவே வந்துவிடும் எரிச்சல். பெண்ணியல் அப்படி.

பெண்களுக்கே உரிய ஆங்காரம் அது. அதைத்தடுத்து நிறுத்த முடியாது. தாங்கவும் முடியாது. யாராலும் முடியாது அதை அடக்க.

அப்படிப்பட்ட ஆங்காரம் வந்துவிட்டது மன்மதன்மேல் வசந்தவல்லிக்கு. சொல்கிறாள் அதட்டியே சொல்கிறாள். மன்மதனைப் பார்த்தே சொல்கிறாள்.

**நேரிழை யாரையும்**

**ஊரையும் பாரடா**

**மன்மதா! - கண்ணில்**

**நித்திரை தானொரு**

**சத்துரு வாச்சுதே**

**மன்மதா!**

**பேரிகையே அன்றிப்**

**பூரிகை யேன் பின்னாய்**

**மன்மதா - சிறு**

**பெண்பிள்ளை மேல்ப் பொரு(து)**

**ஆண்பிள்ளை யாவையோ**

**மன்மதா! (34)**

5. கரும்பு - கரும்புவில். கணை - புஷ்பபாணம். செக்கரும் பாவி நிலா - ரத்தத்தில் குளித்து வருகிற மாதிரி வரும் கொடியநிலா. மைக்கரும் கண்ணாள் - மைதீட்டிய கருங்கண்ணுடையாள். மால் - காதல் மயக்கம். விடைவல்லார் - காளை வாகனராகிய குற்றாலநாதர். குயில்சத்தம் காதில் விழுந்தால் போதும். காதலரிடம் உறக்கமும் போய்விடும். பசியும் போய்விடும். அன்னம் - சோறு. அக்கா எனும் சகி - அக்காக்குருவி என்னும் அருமைத்தோழி. வெட்காமல் - தண்ணீர் கூடத் குடிக்காமல் தொடர்ந்து. இவ்வளவு போதாதா அம்மாக்காரிக்கு;- பிய்த்தெடுத்துவிடுவாள். நேரிழையார் - உல்லாசமாய் இருக்கும் ஏனைய பெண்கள். பேரிகை - கடல் முரசு. பூரிகை - ஊது குழல் வாங்கா. பொருது - சண்டை போட்டு

குறிப்பு : சண்டை போடலாம். சண்டையில் வெற்றியும் அடையலாம். சண்டை போட்டு வெற்றி அடைவதிலா இருக்கிறது வீரம். அடே மன்மதா! அருளில் இருகிறதடா வீரம். துன்பப்படுகிறவர்கள் மேல்வருகிற இரக்கத்தில் இருக்கிறதடா வீரம். துன்பத்தை அடித்துவிரட்டி வாழ்வு கொடுக்கிற உதவியில், தியாகத்தில் இருக்கிறதடா வீரம்.

சரியான பைத்தியமடா நீ. உனக்கு விளங்கவா செய்யும் இது. போ, ஒழிந்து போ. மன்மதனே! போய்த்தொலை என்று சீறி எழுகிறது வசந்தவல்லியின் கோபம். அது பாடலில் கிடக்கிறது.

(6) மன்மதனின் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுகிற மாதிரி இருக்கிறது வசந்தவல்லியின் அரட்டல். இது சம்பந்தமாக ஒரு சிறு நிகழ்ச்சி. கேட்பதற்குக் கதைபோல் இருக்கும். ஆனால் கதை அல்ல. உண்மை.

உயர்ந்த அந்தஸ்தான குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண். பருவம் அடைந்த இளம் நங்கை. ரதி தோற்றுப்போவாள் அவளிடம் அப்படி ஒரு அழகு. நிறையப் படித்தவள். பட்டத்துக்கு மேல் பட்டம் பெற்றவள். குலம் கோத்திரம் என்றெல்லாம் பேசக்கூடாது இப்பொழுது. அதுபற்றி நினைக்க நேர்ந்தால் உயர்ந்த மிக உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவள் தான் பெண்.

ஆனாலும் அப்படியே விட்டுவிடுமா விதி யாரைத்தான் விட்டுவைக்கும். மகாலட்சுமி போன்ற சரஸ்வதியையே ஒத்த இந்தப் பெண் கைப்பிடித்த நாயகனோ ஒரு குரங்கன். தோற்றமும் அப்படி குணமும் அப்படி. கல்வி, பண்பாடு, குலம், அந்தஸ்து எல்லாமே மட்டம். மட்டத்திலும் மட்டம்.

பல காரியங்களில் அவர்களிடம் முரண்பாடு உண்டென்றாலும், ஒன்றில் மட்டும் இருந்தது ஒற்றுமை இருவரிடத்திலும்! கவியை தமிழ்க் கவி என்றால் அதைக் கேட்பதிலும், அனுபவிப்பதிலும் அப்படி ஒரு ஒற்றுமை. கூர்ந்து பார்த்தால் அதிலும் நாயகனை விஞ்சியவள் நாயகி என்பது தெரியும். அடுப்பில் இருப்புச் சட்டியை வைத்து அதில் எண்ணெய் ஊற்றுவாள் பெண். தரதரவென்று காயும் எண்ணெய்.

அந்த நேரம் பார்த்து கவி ஒன்று ஞாபகத்துக்கு வந்துவிடும். அப்படியே லயித்துவிடுவாள். எண்ணெய் முருகிவிடும். சட்டியே தீப்பிடிக்க ஆரம்பித்துவிடும். ஆபத்தான காரியந்தான். எப்படியோ தப்பி வந்துவிடுவாள். அவ்வளவு ருசி கவியிலும், தமிழிலும் பெண்ணுக்கு.

ஒரு சமயம் அவளிடம் கேள்வி ஒன்று கேட்க நேர்ந்தது. "நான் சொல்வதைத் தப்பாக எண்ணக் கூடாது" என்று பீடிகை போட்டே கேட்க நேர்ந்தது. தயங்கித் தயங்கித் தான் கேட்க முடிந்தது. கேள்வி இதுதான் "சகல அம்சங்களிலும் மாறுபட்ட ஒரு ஆணை, நாயகனாக எப்படி ஏற்க முடிகிறது பெண்ணால். ஏற்று உண்மையான அன்போடும், ஆதரவோடும் எப்படி உறவாடமுடிகிறது" என்று.

பளிச்சென்று சொன்னாள் பெண் பதில். "என்ன இதைக்கேட்பதற்கா தயக்கம் என்று முதலில் சிரித்தாள் பெண். மனம் விட்டே சிரித்தாள் பெண். சிரித்த படியே சொன்னாள், என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். வேறு குலத்தவர்தான் என் கணவர் என்றாள் முதலில். பிறகு ஆற அமர யோசித்துச் சொன்னாள் "எங்கள் ஜாதியில் ஆண்மகன் இல்லையே மாமா! ஆண் என்று சொல்லிக் கொள்கிறவர் எல்லோருமே பேடிகள். உண்மையான ஆண்பிள்ளை இல்லை. ஒரு பெண் ஆணைத்தானே கல்யாணம் பண்ண முடியும். பொண்ணையனைக் கட்டி அழ முடியுமா வாழ்நாள் முழுக்க" என்றே பொரிந்து தள்ளிவிட்டாள்.

பெண்ணின் பதில் பார்ப்பதற்கு முரட்டுத்

தனமாகத் தோன்றும். மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறவர்களுக்குக் கொஞ்சம் அலௌகீகமாக கூடத் தெரியும். உண்மையில் அப்படி ஒன்றும் இல்லை அதில்.

உண்மையின் ஒளி. படலம், படலமாகக் கிடக்கிறது பெண்ணின் பதிலில். எத்தனையோ சாயல்கள் அந்த ஒளியில். வைரம், வைடூரியம், கமலம், புஷ்பராகம் என்று விதவிதமான அரிய ரத்தினச் சுடர்கள். முதலாவதும், தலையாயதுமான ரத்தின ஒளி இதுதான். பெண் ஒரு அடைக்கலப்பொருள். அதைப் பழுதுபடாமல் காப்பதுதான் ஆண்மை. ஆண்மகனின் கடமை. உயிரைக் கொடுத்தேனும் பாதுகாக்க வேண்டும் ஆண். அப்படிக் காப்பாற்ற வேண்டியவன் பெற்ற தாயும், அக்கா, தங்கைகளும், அண்ணன் மனைவி, தம்பி மனைவி, முதலியவரும், போதாக்குறைக்கு பெற்ற தந்தையுமே ஒத்துப்பேசி தன் மனையாளைக் கொடுமைப் படுத்துகிறார்கள் என்றால் அதைப் பார்த்தும் பார்க்காத மாதிரி நடந்து கொள்கிறான் கணவன் என்றால், அவனை ஆண்மகன் என்று மதிக்க முடியுமா பெண்ணால். அதுவும் போட்ட நகை காணாது, இன்னும் கார் வாங்கித் தரவில்லை உன் தந்தை, பங்களாவும் வாங்கிக் கொடுக்கவில்லை. என்ன ரொக்கம் கொண்டு வந்தாய், எங்கள் அந்தஸ்த்துக்கு இவ்வளவுதானா, சீசீ, பீடை, பீடையைக் கட்டியா அழ வேண்டும். எங்கள் ராஜா என்று வேல் கொண்டு பாய்ச்சுவது போல் பாய்ச்சுகிறார்கள். மாமியார் முதலியவர்கள். அவ்வளவுக்கும் புற்றுமண்ணாய் இருக்கிறான் புருஷக்காரன். சமயத்தில் அவர்களுக்கு

அனுசரணையாகவும் தாளம் போடுகிறான் அப்படி என்றால், அவன் பேடிதானே. மற்றவர்களுக்கு ஆண்பிள்ளை போல் தோன்றினாலும், கட்டின பொண்டாட்டிக்கு அவன் ஒரு பேடி தான்.

பிசாசைக் கட்டி அழுதாலும் அழலாம். பேடியைக் கட்டி அழ முடியுமா பெண்ணால்.

இவ்வளவுக்கும் மேலே இன்னொரு கூத்து. எல்லோரும் கண்ணயர்ந்து தூங்கும் வேளை பார்த்து இவளிடம் வருவான். கெஞ்சுவான், பேச்சிலே குழையக் குழையக் கொஞ்சுவான். கையைப் பிடிப்பான், காலைப் பிடிப்பான். சலாம் போடுவான், என்னை நம்பு என்று . சத்தியம் வேறு பண்ணுவான்.

கேடு கெட்ட கீழான இழிபிறவி என்று தானே எண்ணுவாள் இவனை. அப்படி ஒரு எண்ணம் பெண்ணின் மனதுக்குள் வந்துவிட்டால் அதைப் பிரம்மாவாலும் மாற்ற முடியாது.

சுடச் சுட விடை கூறிய பெண்ணின் பதிலில் இப்படி எத்தனையோ பொருள். தயாளம் இல்லாதவன், நேர்மை இல்லாதவன், இரக்கம், நீதி இரண்டையும் காக்கும் வீரம் இல்லாதவன் மனிதன் இல்லை. ஆண்மகனே இல்லை என்பதுதான் பெண்மையின் அனுபவம். இந்த அனுபவம் ஒவ்வொரு பெண்ணிடமும் உண்டு. சிறுகுழந்தையிலிருந்து வயதான கிழவி வரை அத்தனை பெண்ணிடமும் உண்டு. பெண்ணின் இதயத்தோடு இதயமாய் பிரதிஷ்டை ஆகிவிட்ட உண்மை இது.

இந்த உண்மைதான், பெண்ணின் இரக்க உணர்வுதான் ஆண்வர்க்கத்தை நெடுகிலும் காத்துவருகிறது.

"மன்மதன் பெயருக்குத்தானே ஆணாக இருக்கிறான். ஆணுக்கே உரிய ஆண்மை, அதாவது தயாளம், வீரம் இல்லையே அவனிடம். என்ன பரிதாபம் இது என்று பரிவு படத்தானே செய்கிறது வசந்தவல்லியை. அந்தப் பரிவுணர்ச்சிதான் கோபங்கொள்ள வைக்கிறது. ஓடு, போ! முதலில் அதைப்படி. பரிவையும், வீரத்தையும் தேடு என்று விரட்டுகிறது.

குழந்தைக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது போலல்லவா மன்மதனுக்குப் புத்தி புகட்டுகிறாள் வசந்தவல்லி. " இதைத் தெரிந்துதானே மதனைப் பயிற்றுவிட்டாய்" என்று வசந்தவல்லியைப் பாராட்டுகிறாள் தோழி.

நூற்றுக்கு நூறு உண்மையான பாராட்டு. இன்னும் என்னவெல்லாம் சொல்லிப் பாராட்டுகிறாள் வசந்தவல்லியை தோழி.

**கொடியே, மதுரம்**

**பழுத்தொழுகும் கொம்பே,**

**வம்பு பொருதமுலைப்**

**பிடியே, எமது**

**குடிக்கொரு பெண் பிள்ளாய்**

என்றெல்லாம் உச்சிகுளிர உபசரிக்கிறாள்.

இவ்வளவும் எதற்காக.

ஜன்னிக் கோளாறு கண்டவள்போல் வசந்தவல்லி புலம்பினாள். மன்மதனையே எதிரில் வைத்து விளாசுகிற மாதிரி விளாசினாள். பக்கத்திலிருந்து பார்த்துக் கொண்டுதான் இருந்தாள் தோழி. அவள் கண்ணுக்கு மன்மதனும் இல்லை, அவன் படைபட்டாளமும் படவில்லை.

என்ன பைத்தியம் இப்படிப் புலம்புகிறது என்று திகைத்தாள் தோழி. அந்தத் திகைப்பு நீங்க விவரம் இன்னதென்று தெரிய விசாரிக்க வேண்டுமே. அதற்காகத் தாஜா பண்ணுகிறாள் வசந்தவல்லியை இப்படி.

தோழி பக்கத்திலிருந்ததே தெரியவில்லை வசந்தவல்லிக்கு. காதல் வெறி அப்படி மறைத்துவிட்டது கண்ணை.

இனி, என்ன சொல்லிக் கேட்கிறாள் தோழி. நான் உன்னுடைய உற்ற சிநேகிதி அல்லவா? உயிருக்குயிரான தோழி அல்லவா? மன்மதனுக்கு நடத்தினாயே பாடம்! எதற்காக நடத்தினாய் பாடம் அப்படி? நானும் அதை தெரிந்து கொள்ள வேண்டாமா? கொஞ்சம் எனக்கும் நடத்து அந்தப் பாடம் என்று கெஞ்சுகிற காரியந்தான் கேள்வி.

**படிஏழ் உடையார் திரிகூடப்**

**பதியில் மதனைப்**

**பயிற்றிய சொல்**

**அடியேன் சகியாய்**

**இருக்கையிலே, அது நான்**

**பயின்றால் ஆகாதோ!**

**கொடியே மதுரம்**

**பழுத்தொழுகும் கொம்பே,**

**வம்பு பொருதமுலைப்**

**பிடியே எமது**

**குடிக்கொருபெண் பிள்ளாய்**

**கருத்து வின்னாயே (35)**

(7) தோழி என்பவள் பெண்ணுக்குச் சரிசமம்தான். வேலைக்காரி அல்ல. பெண்ணைவிட சில தோழியர் ஒரு பிடி, இரு பிடி என்று சகல துறையிலும் உயர்ந்திருப்பதும் உண்டு.

---

6. படி ஏழ் உடையார் - ஏழு உலகுக்கும் அரசர் (குற்றாலநாதர்) திரிகூடப்பதியில் - இருந்து அரசாளும் திருக்குற்றாலத்தில், மதனை பயிற்றிய சொல் - மன்மதனுக்கு நீ சொன்ன புத்திமதியை உன் தோழியான நான் தெரிந்து கொள்வதில் என்ன தவறு.கொடியே - கற்பகக் கொடி போன்றவளே. மதுரம் பழுத்துதொழுகும் கொம்பே - கனி பழுத்துத் தேன் சொட்டும் பூங்கொம்பு போன்றவளே. வம்புபொருதமுலை - ரவிக்கையை விலக்கிய படி எழுந்து வரும் மார்பகம் கொண்ட பெண்ணே. பிடியே - யானையின் மத்தகம் போலிருக்கும் மார்பகம். பிடி - யானை. குலத்துக்கு விளக்கம் கொடுக்கவந்த திருவிளக்கே. கருத்து வின்னாய் - விபரத்தைச் சொல்வாயாக.

அன்பு என்று வந்துவிட்டால், உறவு என்று ஏற்பட்டுவிட்டால் உயர்வேது, தாழ் வேது அவளுக்கு இவள் தோழி. இவளுக்கு அவள் தோழி. அப்படித்தான் நடைமுறை.

உத்திக்கு உத்தி என்று சரிநிகர் சமானமாக இருந்தாலும், எவ்வளவு அடக்கமாக, எத்தனை பணிவோடு கேட்கிறாள் தோழி பெண்ணிடம். வரிக்கு வரி, சீருக்குச் சீர் பொறுமையும், மரியாதையுமாய்ப் பூத்து மணக்கிறது கவி. பாற்கடலிலிருந்து பூர்ண சந்திரன் எழுந்து வருவது போல் பாட்டிலிருந்து எழுந்து வரும் தோழியின் (பெண்ணின்) பக்தியும், மரியாதையும், பாடலைப் பாடப் பாடத்தான் தெரியும்.

நாட்டியக் கலை வல்லார் சொல்வார்கள். " தேன் சொட்டும் பத சாகித்யங்களை எத்தனை பாடினாலும் சரி, அபிநயம் பிடித்து ஆடினாலும் சரி, கடைசியில் மனதுக்குப் பூரண அமைதியைக் கொடுப்பது பத்தி என்று சொல்லப்படும் விருத்தப் பாடல் தான்" என்று.

விருத்தப்பாடலுக்குப் பாசுரம் என்றும் ஒரு பெயருண்டு.

காதல் சம்பந்தமாக வருகிற விருத்தப் பாடலுக்கு வரிப்பாட்டென்றும், பக்திமயமாக வருகிற விருத்தத்துக்கு உரு அல்லது உருப்படி என்றும் பெயர்.

இசைப்பாடல்கள் கோவிலில் உள்ள பிரகாரங்கள் மாதிரி. விருத்தம் என்னும் பாசுரமோ இறைவன் எழுந்து அருள் பாலிக்கும் கருவறை, கடவுளையும், மனிதனையும் ஐக்கியப்படுத்துகிற காரியம்

விருத்தத்துக்குத்தான். கவிப் பண்போடு கூடிய விருத்தத்துக்கே உண்டு. படி ஏழ் உடையார் என்னும் பாசுரத்தைப் பாடப் பாட இது தெரியும்.

★★★★★★★★★★★★

(7) யார் வைத்த தீயோ என் கண்மணி இப்படிக் கருகிவிட்டதே என்று வருந்தினாள் தோழி.

வசந்தவல்லியின் ஆற்றாமையையும் புலம்பலையும் வைத்து ஆசாமி யாரென்று தெரிந்துவிட வேண்டியதுதான் எனத் துணிந்தும் விட்டாள் அவள்.

விபரம் தெரிந்தால் தானே மேல் கொண்டு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய முடியும்.

வசந்தவல்லியிடம் கேட்கவும் செய்தாள் தோழி. பக்குவமாகவே கேட்டாள் தோழி. வசந்தவல்லியோ யாரிடம் சொல்லி இந்தப் பாரத்தை, மனப்பாரத்தைத்தான் இறக்கி வைக்க, எப்படிச் சொல்ல என்று தவித்தபடி தான் இருந்தாள்.

ஏற்றுக்கொள்கிறேன் சொல் என்று வலிய வந்து தோழி கேட்கவும் ஒரு புது வேகமே வந்துவிட்டது வசந்தவல்லியிடம். மனதில் உள்ளதை எல்லாம் கொட்டுகிறாள் வசந்தவல்லி.

மறக்கமுடியுமா அவரை (குற்றாலநாதரை) என்றே கொட்டி விடுகிறாள் உண்மையை.

இராகம் - கல்யாணி தாளம் - சாப்பு

கண்ணிகள்

**மெய்யார்க்கு மெய்யர்**
**திரிகூட நாயகர்**
**மீதில் மெத்த**
**மையல் கொண்டேன் அந்தச்**
**செய்தியைக் கேளாய் நீ**
**பாங்கி!**
**செய்ய சடையும்**
**திருக்கொன்றை மாலை அ**
**ழகும் அவர்**
**கையில் மழுவும் என்**
**கண்ணை விட்டே அக**
**லாவே! (36)**

7. மெய்யார்க்கு மெய்யர் - அடியார்க்கு அடியார். அவர்தான் கடவுள். மையல் - ஆசை.

கத்தியும் (மழுவும்) கையுமாகவே இருக்கிறார் குற்றாலநாதர். அப்படி இருந்தும் குற்றாலநாதரின் அழகு சொக்க வைத்து விடுகிறது வசந்தவல்லியை.

இனி சடையில் கொன்றை மாலை மட்டுமா? இளம்பருவ நங்கையாகிய கங்கையையும் சேர்த்தே வைத்திருக்கிறார். பிள்ளை மதி என்னும் பிறைச் சந்திரனும் கூடவே இருக்கிறான் சடையில்.

குற்றாலநாதரின் அழகோ, அழகில் மயங்கிய வசந்தவல்லியின் மயக்கமோ எது என்று தெரியவில்லை. அவளை உருக்குகிறது. திங்கள் கொழுந்து தீக்கொழுந்தாய் எரிக்கிறது வசந்தவல்லியை.

சங்க வீதியில் பவனியில் அவரைப் பார்த்த மாத்திரத்திலேயே, கையில் கிடந்த சங்கு (வளையல்) கழன்றோடிவிட்டன. என்ன விபரீதம் இது!

சொல்லிச் சொல்லி ஆற்றாமைப்படுகிறாள் வசந்தவல்லி.

**கங்கை கொழுந்தணி**

**தெய்வக் கொழுந்தைநான்**

**கண்டு, குளிர்**

**திங்கள், கொழுந்தையும்**

**தீக்கொழுந் தாக்கிக்கொண்**

**டேனே!**

**சங்கக் குழையாரைச்**

**சங்க மறுகினில்**

**கண்டு இரு**

**செங்கைக்குள் சங்கமும்**

**சிந்தி மறுகில்விட்**

**டேனே.** **(36)**

மயக்க வெறி மேலே மேலே ஏறுகிறது வசந்தவல்லிக்கு. மனந்திறந்து பேசப் பேசக் கூடவே செய்யும் அது. வெறியின் உச்சத்தில் பேச்சு தடுமாறுகிறது வசந்தவல்லியிடம். சப் பள சள புள என்று உளறுகிற மாதிரி பேசுகிறாள் வசந்தவல்லி.

"பிள்ளைமதி முடித்தாரைப் பார்த்தேனோ, இல்லையோ, தென்றல் என்னைத் தேடி வந்துவிட்டது. தேள் கொட்டுகிற மாதிரி கொட்டிக் கொண்டே இருக்கிறது". இப்படி ஆரம்பிக்கிறாள் முதலில். பிறகு மகாமேரு மலையை வில்லாக வளைத்து, திரிபுரம் எரிக்கப் போனாரே குற்றாலநாதர் ஒரு காலத்தில். அவர் பவனி வந்தார். முன்னே சென்று பார்த்தேன் பவனியை, உடனே வில்லை வளைத்து விட்டான்

---

தெய்வக்கொழுந்து - குற்றாலநாதர். சங்கக்குழை - சங்குவடிவக் காதணி. சங்க மறுகு - சங்க வீதியில். சங்கமும் - வளையலை எல்லாம். மறுகில் விட்டேன் - வீதியிலேயே, பவனியைப் பார்த்த இடத்திலேயே விட்டுவிட்டேன். நானா விட்டேன்? கழன்றோடி விட்டன வளையல்.

மன்மதன். ஆசைக் கணைகளையே தொடுத்துவிட்டான் என் மேல்" என்று முடிக்கிறாள்.

**மன்றல்க் குழவி**
**மதியம் புனைந்தாரைக்**
**கண்டு, சிறு**
**தென்றல்க் குளவி**
**தினம் கொட்டக் கொட்டநொந்**
**தே னே!**
**குன்றச் சிலையாளர்**
**குற்றாலநாதர் முன்**
**போனேன் - மதன்**
**வென்றிச் சிலைகொடு**
**மெல்ல மெல் லப்பொரு**
**தா னே! (36)**

---

மன்றல் - மணம். சடையில் இருக்கிறதால் பூமணம் சந்திரனுக்கும் வந்துவிட்டது. குழவி மதியம் - பிறைச்சந்திரன். குளவி - கொட்டும் குளவி. குன்றம் - மேருமலை. சிலை - வில். வென்றிச் சிலை - வெற்றி வில். கரும்பு வில். காதலரைத் தோற்கடிக்கும் கரும்புவில். கொடு - கொண்டு. பொருதான் - புஷ்பபாணத்தை என் மேல் தொடுத்தான்.

இன்னும் எங்கெங்கோ இழுத்துக் கொண்டு போகிறது ஆசைமயக்கம் வசந்தவல்லியை. தொடர்கிறாள், கையில் ஒரு மானோடு (மானுக்கு இன்னொரு பெயர் கலை அது சேலையையும் உணர்த்தும்) காட்சி தந்தார். அந்த மானை (கலையை)யே பார்த்தேன். கட்டியிருந்த சேலை (கலை) நெகிழ்ந்து அவிழ்ந்ததைக் கூடப் பார்க்கவில்லை நான்! இனி அவர், பொன்னொளிர் மேனியில் ஒரு சிறு கருப்பு (மரு) அது கழுத்தில் கிடந்தது. அதையும் ரசித்துப் பார்த்தேன். என்ன பரிதாபம் அதைப் பார்க்க பார்க்க என் மேனி முழுதும் கருப்பாகிவிட்டது. உருக்கி மட்டுமா போட்டார் குற்றாலநாதர். கருக்கியே போட்டுவிட்டார் என்னை.

**பெம்மானை நன்னகர்ப்**
**பேர்ராஜ வீதியில்க்**
**கண்டு, அவர்**
**கைம்மானை யும் கண்டு**
**கலையை நெகிழவிட்**
**டேனே!**
**செம்மேனி தன்னில்**
**சிறுகறுப் பாரைநான்**
**கண் டு,**
**அம்மா என் மேனி**

**அடங்கனு மேகறுத்**

**தே னே! (36)**

கடைசியாக மனதில் இருக்கிறதை எல்லாம், மிச்சம் சொச்சம் வைக்காமல் எல்லாவற்றையுமே எடுத்துத் தோழியிடம் கொட்டுகிறாள் வசந்தவல்லி.

வெள்ளை வெளேரென்ற காளை வாகனத்தில் தான் அவர் அமர்ந்திருந்தார். அழகிய அகன்ற மார்பு முழுவதும் பாம்பாபரணம், நவரத்ன கண்டிகை போலப் பாம்பு மாலை, அடிக்கடி பார்த்துப் பழகியதுதான் சந்திரன். அதையும் அணிந்திருந்தார். அதையும் சேர்த்தே பார்த்தேன். என்ன கொடுமை. குளிர்ந்த சந்திரன் தீயாய்க் கொதித்தான். கோடை காலச் சூரியன் போலவே சுட்டுப் பொசுக்கினான்.

இனி, ஊணும் உறக்கமும் இல்லாதவர் தான் அவர். அவரைப் பார்த்த எனக்குமா அந்த நிலை ஏற்பட வேண்டும். பசியும் போய் விட்டது. உறக்கமும் போய்விட்டது.

---

பேர்ராஜ வீதி - பெரிய ராஜ வீதி. கைமான் - கையில் இருக்கிற கலைமான். கலை - உடை. அம்மா - ஐயோ என்ன சொல்ல நான்

**வெள்ளி விடையின் மேல்**

**வியாளம் புனைந்தாரைக்**

**கண்டு, சிந்தை**

**நன்னிய திங்களை**

**ஞாயிறு போலக்கண்**

**டே னே!**

**எள்ளள(வு) ஊ ணும்,**

**உறக்கமும் இல்லாரைக்**

**கண்டு, நானும்**

**ஒள்ளிய ஊ ணும்**

**உறக்கமும் அற்றுவிட்**

**டே னே! (36)**

---

வெள்ளி விடை - உருக்கி விட்ட வெள்ளியில் உண்டானதோ என்று சொல்லும் படியான காளை. வியாளம் - பாம்பு. திங்கள் - சந்திரன். ஞாயிறு - சூரியன். ஒள்ளிய - சுத்தமான. ஞாயிறு, திங்கள், வியாழன், வெள்ளி நான்கும் நான்குபெயர். அதை வைத்து ஒரு விளையாட்டு.

# தோழியின் குறுக்கு விசாரணையும் வசந்தவல்லி மடக்குகிற மடக்கும்

(1) குற்றாலநாதர் அருமை பெருமையை மிக்க ஈடுபாட்டோடு அனுபவித்துச் சொன்னாள் வசந்தவல்லி. அவர் பண்ணின கூத்தை எல்லாம் ருசித்தும், ரசித்தும் உல்லாசமாகவே சொன்னாள். ஆனால் வசந்தவல்லி சொல்லியதை அங்கீகரிக்க வில்லை தோழி."என்ன கர்மம் இது! இப்படி வந்து வாய்த்திருக்கிறதே" என்று எரிச்சல் வந்தது தோழிக்கு முதலில். போகப் போகக் கோபமே வந்துவிட்டது வசந்தவல்லி மேல். பிறகு"இப்படியும் ஒரு பெண்ணா" என்று வெட்கமே வந்துவிட்டது தோழிக்கு.

கசப்பை எப்படிக் கொட்டுகிறாள் தோழி. "இருந்திருந்தும் இந்தக் கிழடுதான் கிடைத்ததா உனக்கு. கர்மம், கர்மம் என்று காதையே பொத்தினாள் தோழி. மலை (வரை) யரசன் மகளாகிய, உமாதேவியை (குழல்வாய்மொழியை) குஷிப்படுத்துவதற்காக, நரைத்துப் போன கிழட்டுக் காளையை வாடகைக்கு அமர்த்திப் பவனி வருகிறவர் குற்றாலநாதர். அவரிடத்து உனக்குக் காதல். அழகு, அழகு! வேண்டியதுதான் காதல்!! என்றாள் தோழி.

**வரைப்பெண்ணுக்(கு) ஆசை பூண்டு**

**வளர்சங்க மறுகினூடே**

**நரைத்தமா(டு) ஏறுவார்க்கோ**

**நங்கை நீ மனம்கொண்டாயே!**

இப்படிப் போட்டாள் ஒருபோடு தோழி. ஆனாலும் வசந்தவல்லியினிடத்து இருக்கிற அருமையும், பெருமையும் நிறைந்துதானே நிற்கிறது மனதில். அதுவும் சேர்ந்தே வருகிறது தோழியிடமிருந்து. எப்படி வருகிறது அந்த அருமைப்பாடும், பெருமிதப் பண்பும்.

**தரைப்பெண்ணுக்(கு) அணிபோல் வந்த**

**தமனியக் கொடியே! மா தர்**

**துரைப்பெண்ணே ; வசந்தவல் லி!**

**சொன்னபே தைமைக்கென் சொல்வேன்,**

**வரைப்பெண்ணுக்(கு) ஆசைபூண்டு**

**வளர்சங்க மறுகினூடே**

**நரைத்தமா டேறுவார்க்கோ**

**நங்கை நீ மனம் கொண்டாயே (37)**

1. தரைப்பெண்ணுக்கு அணியாய் வந்த - பூமாதேவிக்கே அழகூட்ட வந்த. தமனியக்கொடியே - பொன் பூக்கும் கற்பகக் கொடி போன்றவளே. தமனியம் - பொன். அழகின் எல்லையையே கண்டவள் பூமா தேவி. அவளுக்கே அழகு என்பது இப்படியாக்கும் என்று எடுத்துக் காட்ட வந்த பேரழகிதான் வசந்தவல்லி. பேதைமை - பைத்தியம். வரைப்பெண் - பார்வதி. சங்கமறுகு - சங்க வீதி. கோவில் பிரகாரம்.

(2) நாடகம் என்றால் அதற்கென தனித்த சுதந்திரம் உண்டு. ஊருக்கு ராஜாவே, ஏன், நாட்டுக்கே ராஜாவாக இருக்கிறவரே நாடகக் கொட்டகையில் இருப்பார். அவரை வைத்துக் கொண்டே ராஜாவை, ஏன் மகாராணியையே கூடக் கேலியும், கிண்டலும் பண்ணிக் காரசாரமாக வரும் பேச்சு. நாடக பாத்திரங்களின் உரையாடல். குத்தல் இருக்கும் கிண்டலில். பக்கவெட்டும் இருக்கும். கூட்டத்தோடு கூட்டமாய் விழுந்து விழுந்து சிரிப்பாரே தவிர கோபப்பட மாட்டார் ராஜா, ராணி அம்மாவும் அப்படியே.

இலக்கியச் சொற்பொழிவில் அப்படி எல்லாம் முடியுமா என்ன.

நாடகத்துக்கே உரிய தனிச் சுதந்திரம் அது. குற்றாலக்குறவஞ்சியும் நாடகந்தான். இடக்குக்கும், மடக்குக்கும் கேட்கவா வேண்டும்.

"கிழட்டுமாட்டில் சவாரி பண்ணி, கிழவியை (குழல்வாய்மொழி அம்மையை) உற்சாகப்படுத்த நினைக்கும் இந்தக் கிழடுதான் கிடைத்ததா உனக்கு? பைத்தியம், பைத்தியம்" என்று துடுக்காகவே கேட்கிறாள் தோழி, அதற்கு என்ன பதில் சொல்கிறாள் வசந்தவல்லி.

"நான் ஒருத்தியா? என்னைப் போல் ஆயிரக் கணக்கான பேர் அவர் மேல் உயிரையே வைத்திருக்கிறார்கள். இதற்கு நானா பழி".

இப்படிச் சொல்கிறாள் பதில்.

நம்மைப்போல் ஒரு பெண்ணின் (தாயின்) வயிற்றிலிருந்தா வந்தார் அவர். இல்லையே, பலாவில் அதன் பழத்தில், சுளையில், சுளையின் மதுரமான தேனிருக்கிறதே, அந்த ரசத்தில் விளைந்த கல்க் கண்டல்லவா அவர்.

அவர்மேலே ஆசை உண்டாகக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே என்றும் சொல்லிவிட்டாள் வசந்தவல்லி.

**வேரிலே பழம்பழுத்துத்**
**தூரிலே சுளை வெடிக்கவெளி**
**வந்த தீந்தேன்**
**நீரிலே பெருக்கெடுக்கும்**
**பலாவிலே கொலுவிருக்கும்**
**நிமலன்செய் ய**
**பேரிலே பிரமைகொண்ட**
**பெண்களிலே நானும் ஒரு**
**பெண்கண்டா யே! (38)**

பெண்ணென்றால் அவள் கைவசம் எத்தனையோ ஆயுதங்கள். ஆயுதம் என்றால் கத்தி, கப்படாஅல்ல. தூய அன்பு, அசையாத பொறுமை, எல்லையற்ற ஞானம், அதைவிட அதிகமான அடக்கம், அதையும்

2. நீர் - ரசம். பிரமை - ஆசை, காதல்.

விட அதிகமான ஆனந்தம் இப்படி எத்தனையோ ஆயுதங்கள்.

பெண்ணின் மனதில் உள்ளதை யாராலும் எளிதில் கண்டு கொள்ள முடியாது. குறுக்கு விசாரணை எத்தனை உண்டோ அத்தனையையும், சமாளித்துவிடுவாள். சிரிப்பும், மரியாதையும், பிரியமுமாகவே இருப்பாள் பெண். ஆனால் மனதில் உள்ளதை மட்டும் காட்டவே மாட்டாள்.

இயற்கையானது தக்க காரணத்தோடுதான் அப்படி உண்டாக்கி இருக்கிறது பெண்ணை.

எத்தனை பேரை ஒரு பெண், ஒவ்வொரு பெண்ணுமே சமாளிக்க வேண்டி இருக்கிறது. பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்கிற முறையில் அல்லவா உலகையே சமாளிக்க வேண்டி இருக்கிறது பெண்.

இப்படி எல்லாம் ஆயுதம் இல்லை என்றால் முடியுமா பெண்ணால். "பைத்தியக்காரத்தனமாக நான் மட்டும் ஏமாந்து போனேன். என் தலை எழுத்து அப்படி" என்றா சொல்கிறாள் வசந்தவல்லி.

உலகமே அவர் பின்னால்தானே ஓடுகிறது. நான் மட்டும் உலகை விட்டுத் தனியாகவா இருக்கிறேன். என்றல்லவா தோழியின் கன்னத்தில் செல்லமாக ஒரு தட்டுத்தட்டிப் புரிய வைக்கிறாள். இத்தனைக்கும் வசந்தவல்லிக்கு வயது ஒன்றும் அதிகம் இல்லை. பன்னிரண்டு, பதின்மூன்று வயதுதான் இருக்கும்.

ஆனாலும் கல்யாணம் ஆகி குழந்தை குட்டி என்று பெற்று, பேரன் பேத்தியும் எடுத்த வயதான கிழவியை விட அனுபவப்பட்டுப் பேசுகிற மாதிரியே பேசுகிறாள் வசந்தவல்லி.

பெண்ணென்றால் பெண்தான். குழந்தை என்றோ வயதானவள் என்றோ வேறுபாடு கிடையாது பெண்ணிடம்.

இது சம்பந்தமாகப் பழம் பாடல் ஒன்று. பவனி வருகிறான் அரசன். ஆணும், பெண்ணுமாய் ஒரே கூட்டம். அவர்களில் பத்து வயது, எட்டு வயது என்று குழந்தைப் பெண்களும் உண்டு.

அரசனுடைய அழகில் ஈடுபட்டு ஒரு குழந்தைப் பெண் சொக்கிப் போனாள். வளையல் கழன்று விழுந்துவிட்டன. அது கூடத் தெரியாமல் அப்படியே லயித்து நின்றுவிட்டாள் பவனியில்.

வீட்டுக்கு வந்தாள் பெண். கையில் கிடந்த வளையலை எங்கேடி என்று அம்மாக்காரி கேட்டாள். அக்காக்காரியும் கேட்டாள். தோழிமாரும் கேட்டனர்.

"பவனியைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். யாரோ கழற்றிக் கொண்டு போய் விட்டான்" என்றாள் பெண். "மண்ணாங்கட்டி, உன் வளையலுக்கென்று எந்தக் களவானிப் பயல் வருவான். பவனி வந்த அரசன் (மாத்தத்தன்) தான், உன் வளையலைக் கழற்றிக் கொண்டு போயிருக்கிறான். அது கூட உணர்வில்லை உனக்கு, அசடு, அசடு," என்று சொல்லிச் சிரித்தார்கள் தோழிமார், அக்கா, தங்கை, அம்மா எல்லோருமே

சேர்ந்துதான்.

வெட்கமாய் போய்விட்டது பெண்ணுக்கு. பத்து வயதுப் பெண்ணுக்குந்தான். ஆனாலும் சமாளித்து விடுகிறாள். எப்படி வருகிறது பதில் பெண்ணிடமிருந்து.

"அசடு நான் மட்டுமல்ல, என் கூட இருந்த அத்தனை பேருந்தான். வந்தவள், போனவள், நின்றவள் யார் கையிலும் இல்லை வளையல். என் கையிலும் இல்லை. போகும்போது இருந்தது. வரும் போது இல்லை" என்று.

**"இருந்தவளைப் போனவளை**

**என்னை, அவளை**

**பொருந்த வளைபறித்துப்**

**போனாள்.......**

அத்தனை பேர் வளையலையும், ஒருத்தர் வளையலையும் விட்டு வைக்கவில்லை. கழற்றிக் கொண்டு போய்விட்டான். யார்?

கொழுத்துப் பருத்த பெரிய பெரிய தவளைகள் என்ன செய்யும். தடாகத்தில் உள்ள தாமரைப் பூக்களில் தத்தித் தத்திக் குதித்தாடும். உடனே பூக்களில் உள்ள தேன் முழுவதும் சிந்தும். பசுமடியிலிருந்து பால்

சொரிகிற மாதிரியே சொரியும்.

பொன்னிவள (சோழ) நாடு. அத்தனை வளம். அந்த வளமான நாட்டுக்கு வாய்த்த அரசன் (மாத்தத்தன்)தான் இந்தக் காரியம் பண்ணுகிறான்.

இனிப்பாடலின் முழு உருவம்.

**இருந்தவளைப் போனவளை,**

**என்னை, அவளை**

**பொருந்த வளைபறித்துப்**

**போனான் - பெருந்தவளை**

**பூத்தத்தத் தேன் சொரியும்**

**பொன்னிவள நன்னாட்டு**

**மாத்தத்தன் வீதிதனில்**

**வந்து.**

பெண் சொல்லச் சொல்ல ஆனந்த பரவசத்தில் மிதந்தார்கள் கேட்டுக் கொண்டிருந்தவர்கள். பேசி முடித்ததும் ஒரே ஆரவாரத்தோடு கைதட்டிச் சிரித்தார்கள் பெண்ணுக்கும் சிரிப்பு வந்துவிட்டது. கூடவே சிரித்தாள்.

---

குறிப்பு :வளை வளை என்று காது குளிரக் கேட்கிறது வளையல் சத்தம்.

பெண்ணின் சாட்சியத்தை வைத்துக் கொண்டு வசந்தவல்லியின் வாக்கு மூலத்தைப் பார்க்க வேண்டும்.

**நீரிலே பெருக்கெடுக்கும்**

**பலாவிலே கொலுவிருக்கும்**

**நிமலன்செய்ய**

**பேரிலே பிரமைகொண்ட**

**பெண்களிலே நானும் ஒரு**

**பெண்கண்டாயே**

பெண் வர்க்கத்தின் இதயபாவமே கிடக்கிறது பாடலில். வெள்ளெழுத்துக் கூட மறைக்காது. விலகிவிடும். கண்ணாடி போட்டுப் பார்க்கிற மாதிரி சுத்தமாகத் தெரியும் பெண்ணின் உள்ளக்கிடக்கை.

# கேட்கிறாள் பாங்கி, சொல்கிறாள் வசந்தவல்லி.

(1) எத்தனையோ பெண்கள் அவர்மேல் ஆசை வைத்தவர்கள். அவர்களில் ஒருத்திதான் நான் என்று கன்னத்தில் அடித்த மாதிரி சொன்னாள் வசந்தவல்லி. கேட்டுக் கொண்டிருந்த தோழிக்கோ சிரிப்பு ஒரு புறம், கசப்பு ஒரு புறம், வெட்கமே இல்லாமல் இப்படியா பேசுவாள் பெண் என்று வெட்கப்பட்டாள் தோழி. அதோடு கேட்கிறாள் வசந்தவல்லியிடம்.

"நீ ஆசை வைத்தது இருக்கட்டும். அவருக்கு உன் மேல் ஆசை உண்டா? அப்படி உன் மேல் ஆசை கொள்ள என்ன அவசியம் அவருக்கு? உன் உடம்பையே பார் நீ, பூசணம் பூத்த மாதிரி பசலை படர்ந்து வெளுத்துவிட்டதே. அது கூடத் தெரியாமல் தானே அவஸ்தைப் படுகிறாய். வீணாகக் கற்பனை பண்ணிக் கொண்டு ஏமாறாதே"

இப்படி வெட்டொன்று துண்டிரண்டு என்று விழும்படி கேட்டுவிட்டாள் தோழி.

**வசந்தஒய் யாரவல்லி**

**வல்லிக்கு வல்லிபே சி**

**பசந்ததோர் பசப்புங்கண்டாய்,**

**பரமர்மேல் ஆசைகொண் டாய் ;-**

**நிசந்தரும் திருக்குற்றால**

**நிரந்தர மூர்த்தி உன் பால்**

**இசைந்திடக் கருமம்ஏ தோ**

**இசைய நீ இசைத்திடா யே (39)**

(2) வசந்தவல்லி சொல்கிறாள். கண்ணைக் கட்டி காதைக்கட்டின மாதிரித் தான் பேசுகிறாள். நேரான முறையில் இல்லை பதில். தோழி கேட்டதும் வசந்தவல்லி ஒரு பெருமூச்சு விட்டாள். மூச்சோடு மூச்சாய் வருகிறது பதில்.

"யார் யாருக்கோ செய்கிறார். என்னவெல்லாமோ செய்கிறார். ஆனால் உண்மையிலேயே ஆசை வைத்த என்னைப் பற்றி நினைப்பே இல்லை அவருக்கு".

"கொடிய அரக்கர்களின் குடியிருப்பு முப்புரம். அதைத் தீ வைத்து எரித்தவரே இவர் (குற்றாலநாதர்) தான். அந்த அரக்கர்களில் மூன்று பேர் இவருக்கு வேண்டியவர்கள். ஞாபகமாக அந்தத் தீயிலிருந்து அவர்களைக் காக்கத் தானே செய்தார். ஆனால் என்னைப் பற்றிய ஞாபகம்........?"

1. வல்லிக்கு வல்லி - கரும்புக்கே வெட்கம் வரும்படி பேசுகிறவள் வசந்தவல்லி. இக்கு - கரும்பு. இரண்டொரு சொல் சொன்னாலே போதும். இனிப்பான கரும்பையே வென்றுவிடும் அவள் பேச்சு. தித்திக்கத் தித்திக்க அத்தனை மதுரம் அவள் சொல்லில். பேசிப் பேசி. (என்னத்தைக் கண்டாய், மேனி முழுதும் வெளுத்துப் போன பசலையைத் தவிர) நிசம் தரும் - நிலைபெற்ற. நிரந்தர மூர்த்தி - சத்திய மூர்த்தி, குற்றாலநாதர். கருமம் - அவசியம். இசைய நீ இசைத்திடாய் - விளங்கும்படி தெளிவாகச் சொல். சுருங்கச் சொல்லி விளங்க வை.

இராகம் - நாதநாமக்கிரியை தாளம் - ஆதி

கண்ணிகள்

**புரத்து நெருப்பை**

**மூவர்க்(கு) அவித்தவர் ;-**

**மையல் கொண்ட என்**

**ஒருத்தி காம**

**நெருப்பை அவிக்கிலார்!**

இனி பாற்கடலைக் கடையக் கடைய அமுதம் வந்தது, நஞ்சும் கூடவே வந்தது எழுந்து. நஞ்சை இவரே உண்டார். அமுதத்தை எல்லோருக்கும் வழங்கினார். அருளாளர்தான் ஆனால் என் விஷயத்தில்.

**நஞ்சு பருகி**

**அமுதம் கொடுத்தவர் ;-**

**எனது வாள்விழி**

**நஞ்சு பருகி**

**அமுதம் கொடுக்கிலார்.**

ஆர அமர என்னை ஒரு தடவை அவர் பார்த்தால் போதுமே, அதுக்குக் கூட நான் கொடுத்து வைக்கவில்லையே என்று தவிக்கிறாள் வசந்தவல்லி. தவிக்கிற தவிப்பில் அழுகையே வந்துவிடுகிறது.

2. வாள்விழி - பிரகாசமான கண். ஆசையோடு பார்க்கும் கூர்மையான பார்வை.

கண்ணீரோடும், கம்பலையோடும் எப்படி வருகிறது ஏக்கம்.

**தேவர் துரைதன்**
**சாபம் தீர்த்தவர் ;-**
**வன்ன மாங்குயில்**
**சின்னத் துரைதன்**
**சாபம் தீர்க்கலார்**
**ஏவ ரும்புகழ்**
**திருக்குற் றாலர்தாம்,**
**சகல பேர்க்கும்**
**இரங்கு வார் எனக்(கு)**
**இரங்கிலார் பெண்ணே! (40)**

(3) வசந்தவல்லி தவிக்கத் தவிக்க தோழியிடமிருந்து கோபம் கொஞ்சம் கொஞ்சமாய் குறைந்து விட்டது. போயே விட்டது கோபம். அதுபோனதால் பரிவே உண்டாகி விட்டது தோழிக்கு. என்ன இருந்தாலும் பெண்ணல்லவா. மற்றவர் படுகிற துயரத்தை எப்படி

தேவர் துரை - இந்திரன். வண்ணம் - குயில், கருப்புத்தான் அந்தக் கருப்பில் ஒரு அழகு குயிலுக்கு. வன்னம் நீல நிறக்குயில் தான். இனி மாமரம் குயிலுக்கு பிடித்த மரம் (மாங்குயில்) சின்னத்துரை தன் சாபம் - குயிலின் சன்ன ஒலி எழுப்பும் தொல்லை. எவரும் - மூவேழ் உலகில் உள்ள அத்தனை பேரும். இரங்கார் - இரக்கமே இல்லை என்னிடம் அவருக்கு. என் தலையெழுத்து அப்படி!

சகிக்க முடியும் பெண்ணால். அவளுக்கும் கலங்கித்தான் விட்டது கண்.

வசந்தவல்லியின் தோளைப் பிடித்த படியே அணைத்தபடியே " இப்பொழுது உனக்கு என்ன செய்ய வேண்டும்" என்று இரக்கத்தோடு கேட்டாள் தோழி.

அவ்வளவு போதாதா பெண்ணுக்கு. துள்ளி எழுந்து விட்டாள் வசந்தவல்லி.

நான் சொல்வதை நிச்சயமாகச் செய்வாயா என்றாள் வசந்தவல்லி. சத்தியமாகச் செய்வேன் என்று கையடித்தே கொடுத்தாள் தோழி.

உற்சாகம் வந்துவிட்டது வசந்தவல்லிக்கு. "இப்பொழுதே போ, அவரிடம் போ, பயப்படாதே. அது இது என்று யோசனை பண்ணி நேரத்தைப் போக்காதே. புறப்படு, புறப்படு" என்று சடுதி பண்ணுகிறாள் தோழியை. எல்லாம் தூது போகத்தான்.

இராகம் - காம்போதி தாளம் - ஆதி

பல்லவி

**தூதுநீ சொல்லிவா ராய் - பெண்ணே !**

**குற் றாலர் முன்போய்**

**தூதுநீ சொல்லிவாராய் (தூதுநீ)**

அனுபல்லவி

**ஆதி நான் சுந்தரர்க்குத்**

தூதுபோ னவர் முன்போய்த் (தூது நீ)

சரணம்

உறங்க உறக்கமும் வாராது ;-
மாயம் செய் தாரை
மறந்தால் மறக்கவும்
கூடாது, பெண் ஜென்மம் என்று
பிறந்திடல் ஆகாது - ஆனாலும்
பெண்ணோடே பிறந்த றி
யார்மேல் பேராசை
ஆகாது, ஆகாது இப்பொழுதே (தூது நீ)

நேற்றைக் கெல்லாம் மதி
குளிர்ந்து காட்டி இன்று
கொதிக்கு தே!
நித்திரா பாவிக்கென்ன
போட்டி! நடுவே,
இந் தக்
காற்றுக்கு வந்ததொரு
கோட்டி ;- விரக

நோய்க்கு
மாற்று மருந்து
முக்கண் மருந்தென்று
பரஞ்சாட்டி ;- (தூது நீ)
வந்தால்இந் நேரம்வரச்
சொல்லு ;- வாரா(து)
இருந் தால்
சந்தேகம் பிழைப்பென்று
சொல்லு, உற்(று) ஆ
தரித் து
தந்தால் மாலையைத்
தரச்சொல் லு,
தாராதிருந் தால்
தானுண்ட நஞ்சை
யேனும் தரச் சொல்லு ;-
தாமதியா தே (தூது நீ )(41)

மதி - சந்திரன். விரகநோய் - காதல் பைத்தியம். முக்கண் மருந்து - நெற்றியில் கண்ணுடையரான குற்றாலநாதரின் அரவணைப்பு ஒன்றே மருந்து என்பதை. பரஞ்சாட்டி - விளங்க எடுத்துச் சொல்லி உற்று ஆதரித்து - வரவேற்று உபசரித்து.

எப்படிப் பிறந்தது கவி என்று கவிஞருக்கே தெரியாது. அப்படி வந்து விடுகிறது அது. சிருஷ்டி தத்துவம் என்றால் அதுதான். தெய்வ கடாட்சமே தான்.

"தூது நீ சொல்லிவாராய் என்னும் சாகித்யம், பதசாகித்யம்" அப்படி வந்த பாடல். ஆனால் அச்சிட்ட குற்றாலக் குறவஞ்சிப் புத்தகத்தைப் பிரித்து மேற்படி பாடலைப் பார்த்தால் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி இருக்கும். பாடல் முழுவதும் ஒரே பிழை. மனமே பம்பரம்போலச் சுற்ற ஆரம்பித்துவிடும் பாடலைப் பார்க்கிறவர்களுக்கு.

பொருள் இருக்காது, உணர்ச்சி இருக்காது, இலக்கண அமைதி உண்டா என்றால் அதுவும் இல்லை. சித்ரவதைக்கு உள்ளான பாடல் படிக்கிறவர்களையும் சித்ரவதை பண்ணுகிறது.

---

குறிப்பு : கவி என்றால் அதற்கென்று விஷயம் ஒன்று வேண்டுமே. உணர்ச்சிதான் கவிக்குரிய விஷயம். எது பற்றியும் இருக்கலாம் உணர்ச்சி. அன்போ, பொறுமையோ, கோபமோ, பொறாமையோ, இன்பமோ, துன்பமோ எதாகவும் இருக்கலாம் உணர்ச்சி. ஆனால் எதானாலும் உண்மை இருக்க வேண்டும் உணர்ச்சியில். உண்மை இருந்தால் போதும் உணர்ச்சியில். பூரிப்பு உண்டாகிவிடும். காய்ச்சி ஆற வைத்த பாலில் இரண்டு சொட்டு மோரை விடுகிறோம். பூரிப்பு உண்டாகிவிடுகிறது பாலில். தயிராக விளைகிறது. நெய் (வெண்ணெ)யாகவும் விளைகிறது. மோராகவும் விளைகிறது. மோர்த்துளி மாதிரி தான் மொழி(பாஷை) இசைப்பண்பு, தாளப்பண்பு, நடனப் பண்பு இவ்வளவையும் சேர்த்துக் கொண்டு தமிழே உணர்ச்சிக்கு பாவ உருவம் கொடுக்கிறது. செய்யுளுருவமே கொடுக்கிறது. கவியே பிறந்து விடுகிறது.

பாட்டைப் பாட்டென்று பார்க்கிற பார்வை (புத்தி) பொதுவாக இல்லை. என்ன விஷயம் இருக்கிறது அதில். பார்ப்போம் அதை என்னும் போக்கில்தான் பார்க்கிறதே வழக்கமாகி விட்டது. அதனால் எந்த ஒரு பிழையும் கண்ணில் விழுவதில்லை. கண்ணில் விழுந்தாலும் புத்தியில் விழுவதில்லை. தமிழகம் முழுவதுமே, ஏன் உலகமே இப்படி ஒரு இருட்டில் குருட்டுத்தனத்தில் தான் இருந்தது. பல நூறு ஆண்டாகப் போகவில்லை இருட்டு, குருடு.

ரசிகமணி டி.கே.சி தான் இருட்டை விலக்கினார். கண் திறந்து பார்த்தார். பிழையைப் பிழை என்று கண்டார். பிழையை அகற்றினார். உண்மை வந்து ஒட்டிக் கொண்டது. எவ்வளவு பெரிய காரியத்தை எவ்வளவு எளிதாகச் செய்துவிட்டார் டி.கே.சி.

இனி திருக்குற்றாலம் கோவில் நிர்வாகிகள் திருக்குற்றாலக்குறவஞ்சி நூலை அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். அவகாசம் உள்ளவர்கள் அதில் உள்ள தூது நீ எனத் தொடங்கும் பாடலைப் பார்க்க வேண்டும். இங்கு கொடுத்திருக்கும் பாடலையும் பார்க்க வேண்டும் பார்க்கிறவர்கள் உணர்ச்சிக்குப்படும். "அடடா, பிழை என்பது நஞ்சு, அதைத் திருத்துவது தேவாமிர்தம். உயிரும் உணர்வும் கொடுக்கும் அமிர்தம்" என்னும் உண்மை.

பிழைப்பட்ட பாடலைக் கட்டி அழுகிறது சேற்றில் விழுந்து புரள்கிற காரியம். பிழை நீக்கிய

திருத்தமான பாடலைப் படிக்கிறது குற்றாலம் அருவியில் குளிக்கிற குளியல்தான். உச்சிமுதல் உள்ளங்கால் வரை இதம் தரும் அருவிக்குளியில்தான் பிழைகளைந்த திருத்தம்.

தூது நீ சொல்லிவாராய் என்னும் பாடலை, திருத்தப் பாடலை பாடவேண்டும். மனதுக்குள்ளேனும் பாடிப் பாடி அனுபவிக்க வேண்டும். எப்படி இருக்கும் சுகம்.

அம்மனும் சாமியும் சப்பரத்தில் ஏறி அமர்ந்து ரத வீதியில் உலா வருகிறார்கள். அலங்காரம் என்ன, அபிஷேகம் என்ன, ஆண், பெண், குழந்தை என்று கூட்டம் என்ன, பாட்டென்ன, ஆட்டமென்ன, மேளக் கச்சேரி என்ன ஒரே கொண்டாட்டம்.

இனி, பங்குனி சித்திரை மாதத்து நிலா ஒளி என்ன, தலையில் சுமந்து வரும் பெட்ரோமாக்ஸ் விளக்கின் அட்டகாசமான வெளிச்சம் என்ன, கண்ணைப் பறிக்கிறது ஒவ்வொன்றும்.

ஒரு இடத்தில் பவனி இளைப்பாறுகிறது (நிற்கிறது) தூது நீ சொல்லிவாராய் என்று பாடலை கோவில் (சமஸ்தான) வித்வான் பாடுகிறார். பாடலை வாங்கி நாயனக்காரர் தேனாபிஷேகம் போல ஆனந்தமாய்க் கொட்டுகிறார். பாடலோடு பாடலாய்க் கலந்து ஒன்றாகிறது கூட்டம். சப்பரம் நிற்கத்தான் செய்கிறது. ஆனாலும் அது ஊஞ்சலாடுகிறதாகவே தெரியும். விண்ணுக்கும், மண்ணுக்குமே ஊஞ்சலாடுகிற மாதிரி தெரியும்.

உண்மையில் சப்பரம் ஆடவில்லை. ஆனந்த வெறியில் (எல்லோர்) மனமும் ஆடுகிறது. அதுதான் அப்படித் தெரிகிறது.

அப்படி வெறியையே ஊட்டும் பாடல் குறவஞ்சிப் பாடல்.

**"வார நிலத்தை வாங்குபு வாங்கி**

**ஈர நிலத்தின் எழுத்தெழுத்தாக**

**வழுவின் (று) இசைக்கும் குழலோள் தானும்"**

(4) "எனக்காகக் குற்றாலநாதரிடம் போய் என் நிலையை அவர் மனதில் படும்படி எடுத்துச் சொல்ல வேண்டும். இடித்துரைத்தே விளக்க வேண்டும்" என்று கெஞ்சி, கெஞ்சியே சொன்னாள் வசந்தவல்லி. தோழியும், சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டாள். இதோ, இப்பொழுதே போய் அவரை ஒருவழிக்குக் கொண்டுவருகிறேன் என்று புறப்பட்டாள் தோழியும்.

அப்பொழுது தான் ஞாபகத்துக்கு வந்தது வசந்தவல்லிக்கு. "எப்பொழுதும் அபிஷேகத்திலும், ஆராதனையிலும் மூழ்கிக் கிடக்கிற வராயிற்றே அவர் (குற்றாலநாதர்) தேவர்கள் என்ன, மூவர்கள்தான் என்ன, மூவேழ் இருபத்தொரு உலகினும் உள்ள பக்தர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், மன்னர்கள், மகரிஷிகள் என்று அவரை மொய்த்தபடி இருப்பார்களே.

வாரநிலம் - பாடல். வாங்குபு வாங்கி - சுதி சுத்தமாக எடுத்து. ஈரநிலம் - தேன் சொட்டும் இசை. எழுத்து எழுத்தாக - அசைக்கு அசை. வழுவின்று - சுதி பேதம் இல்லாமல்.

விபரம் தெரியாமல் இவள் போய் தலையை நீட்டி விடக்கூடாதே அதனால் ஒரு மாதிரி சந்தேகம் வந்து விடக்கூடாதே மற்றவர்களுக்கு", ஒன்று நடக்க மற்றொன்று நடந்து விட்டால் என்னாவது என்று பதறிப் போனாள் வசந்தவல்லி. பதற்றத்தில் வேர்த்து விறு விறுத்து விட்டது வசந்தவல்லிக்கு.

முகத்தைத் துடைத்தபடியே, தோழியின் தோளில் கை போட்டு, அணைத்தபடியே வேண்டுகிறாள் வசந்தவல்லி.

"விடிந்தா, அடைந்தா சதா எப்பொழுதும் அங்கு கூட்டம் கூட்டமாகத்தான் இருக்கும் அவரைச் சுற்றி. பொறுமைதான் முக்கியம். காரியம் ஆக வேண்டும் என்றால் பொறுத்துத்தான் ஆகணும்.

"உனக்குத் தெரியாதா என்ன, அவசரப்படாமல் நேரம் பார்த்து, காலம் பார்த்து விபரத்தைத் தெரிவித்தால் போதும், சொல்லாலே பாதி. கண்ணாலே (பார்வையாலேயே) பாதி என்று தெரியப்படுத்த வேண்டும். அவசரமே வேண்டாம்".

இராகம் - பியாவிடை தாளம் - ஆதி

கண்ணிகள்

**சித்தர்கணம், தேவர்கணம்**

**தடைசெய்யச் சிவகணந்தான்**

**திருவாசல்ப் படிநிற்கும்**

**சிலவாய்ச் சகியே!**

அத்தலையைக் கடந்தவர்கள்
நந்திபிரம்(பு) அடிக்கொதுங்கி,
ஆள்க்கொண்டார் குறட்டில் நிற்பர்
சிலர் தான் சகி யே!
மைக்கருங்கண் மாதர்விட்ட
வண்டுகளும், கிள்ளைகளும்
வாசல் தொறும் காத்திருக்கும்
கண்டாய் சகி யே!
நாலுமறைப் பழம்பாட்டும்,
நால்வர் சொன்ன திருப்பாட்டும்,
நாலுகவிப் புலவர் புதுப்
பாட்டும் சகியே ;-
நீலகண்டர் குற்றாலர்
கொண்டருளும் நிறை கொலுவில்
நீக்கம் இலை எல்லோர்க்கும்
பொதுக் காண்சகி யே!
கொப்பழகுக் குழை மடந்தை
பள்ளியறை தனிலிருந்து
கோயில்புகும் ஏகாந்த
சமயம்சகி யே!

**மைப்பழகு விழியால்என்**

**பெருமாலை நீ சொல்லி**

**மருமாலை வாங்கியே**

**வாராய்சகி யே! (42)**

---

4.தேவர்களும், மூவர்களும் மாத்திரமா என்னைப் போல் எத்தனையோ பெண்கள் ஆசை கொண்டு தவிக்கிறார்கள். உன்னைப் போல் உற்ற தோழி அவர்களில் பலருக்கு ஏது. அதனால் வண்டு, கிளி என்று தூதுவிடுவார்கள். நீ யார் என்று அவை மோப்பம் பிடிக்கலாம். எதற்கும் உஷாராய்இரு. குழை - காதணி. மைப்பழகும் விழியால் - மையிட்ட கண்ணால் தானே, பார்வையால்தானே. பெருமாலை - என் ஆசைப் பெருக்கை. மருமாலை - மார்பில் அணைந்த மணங்கமழ் மாலையை என்ன இருந்தாலும் வெட்கத்தோடும், நாணத்தோடும் சேர்ந்து பிறந்தவள் தான் பெண். தன் கதை தன்னொத்தவர்களுக்குக் கூட தெரிந்து விடக் கூடாது என்பதில் எவ்வளவு உஷாராய் இருக்கிறாள் பெண். வசந்தவல்லி என்னும் பெண். 'பாம்பின் கால் பாம்பறியும்'

குறிப்பு:ஒரு பெண்ணிடம் ஆசை இருக்கலாம். அளவுக்கு அதிகமாகவே இருக்கலாம் ஆசை. வெறி கொண்ட மாதிரி வேகமே வரலாம் ஆசையில். வேகம் மட்டுமா ஆவேசம் என்ன, ஆத்திரம் என்ன அத்தனையும் சேர்ந்தே வரலாம் ஆசையில். ஆனாலும் உஷாராகவே இருப்பாள் பெண். உஷாராக இருக்க வேண்டியதில் உஷாராகவே இருப்பாள். இம்மி அளவு கூட விட்டுக் கொடுக்க மாட்டாள் அதை.

வெட்கம் என்றும், கூச்சம் என்றும், நாணம் என்றும் புதுப்புதுப் பெயரோடு மின் வெட்டுப்போல், பளிச்சென்று ஜொலிக்கும் பெண்மை. அதுதான் அவளுக்கு உயிர். உயிருக்குயிர். எத்தனை பயபக்தியோடு பேணிக் காக்கிறாள் பெண்மையைப் பெண்.

அதுதானே பெண் வர்க்கத்தையே காக்கிறது. ஏன், உலகையே அதுதான் காக்கிறது என்றாலும் மிகையாகாது.

★★★★★★★★★★★★★★★

பாண்டிய மன்னன் மேல் ஒரு பெண்ணுக்கு ஆசை. அவன்தான் தனக்கு நாயகன் என்கிற அளவுக்கு முற்றிவிட்டது ஆசை. ஆனால் இது ஒன்றும் அவனுக்கு விளங்கிய பாடாக இல்லை. என்ன செய்வாள் அப்பாவிப் பெண். துடிக்கிறாள், துடியாய்த் துடிக்கிறது உள்ளம்.

தோழியிடம் கெஞ்சிக் கூத்தாடித் தூது விடுகிறாள் பாண்டியனிடம் பெண். தோழியும் சம்மதித்து விட்டாள். தூதுக்குப் புறப்பட்டும் விட்டாள்.

தோழியின் தோள் மேல் கை போட்டு அவள் மார்பில் சாய்ந்தபடியே உருகிக் கரைந்து சொல்கிறாள் பெண்.

"என் நிலையை ஒன்று விடாமல் எடுத்துச் சொல் பாண்டியனிடம். ஒன்றையும் மறைக்க வேண்டாம். மனதில் பதியும்படியாக அவ்வளவையும்

சொல். விபரமாகவே சொல். ஆனால் பெண்மைக்கு எள்ளளவு பழுதும் ஏற்படக்கூடாது. அதுதான் முக்கியம். ஆத்திரத்தில் மறந்துவிடாதே அதை.

"பாண்டியன் மேல் நான் வைத்திருக்கும் ஆசையைச் சொல். ஆனால் என் பெயரைச் சொல்லக் கூடாது. என் விலாசத்தைச் சொல்லி விடக் கூடாது. தெருப்பெயர், வீட்டு எண் எது பற்றிக் கேட்டாலும் சொல்லாதே. இன்னார் மகள் இன்னார் என்று மறந்தும் சொல்லிவிடாதே!

அபூர்வமான நூல் முத்தொள்ளாயிரம் அதிலுள்ள பாடல்தான் ; அதில் விளைந்த ஜோதிமணிதான் வருகிறது பாடலாய்.

**என்னை உரையல், என்**

**பேர் உரையல், ஊர் உரையல்,**

**அன்னையும் இன்னள்**

**என உரையல் ;- பின்னையும்**

**தண் மைபடா மாலை**

**தமிழ்நர் பெருமாற்கென்**

**பெண்மைபடா ஆறே**

**உரை**

---

உரையல் - சொல்லாதே. சொல்லிவிடாதே. விருப்பத்துக்குத் தானே அங்கீகாரம். விலாசத்துக்காகவா அங்கீகாரம்!

முத்தொள்ளாயிரப் பாடலை எப்படிப் பார்க்கிறார் கவிஞர். எப்படி மதிக்கிறார் பாடலை. கடவுளையே கண்கொண்டு பார்த்துப் பார்த்து அனுபவிக்கிற மாதிரியே அனுபவிக்கிறார் குறவஞ்சி ஆசிரியர்.

"பள்ளியறையை விட்டு கோவிலுக்கு வரும் வேளைதான் தக்க நேரம். அது வரை பொறுமையைக் கடைப்பிடி. அப்பொழுதும் பேச்சை வளர்க்காதே. கண் ஜாடையிலேயே விஷயத்தைத் தெரியப்படுத்து. அங்கீகரித்தால் மாலையைக் கொடுத்தனுப்புவார் வாங்கி வா. பிறகு பார்த்துக் கொள்ளலாம் மற்றதை" அப்படி அல்லவா கூசிப் கூசிப் பம்முகிறாள் வசந்தவல்லி. ஆசைப்பெருக்கை அப்படி எல்லாம் கையமர்த்தி வைக்கும் பெண்மை. அதுதான் பெண்ணைக் காக்கும் செம்மை. வசந்தவல்லி சொன்னதை எல்லாம் கவனமாகக் கேட்டாள் தோழி. மனதில் வாங்கிக் கொள்ளவும் செய்தாள். குற்றாலநாதரிடம் தூது போகவும் செய்தாள்.

தூதுபோவதற்காகத் தோழி நடையை விட்டுக் கீழே இறங்குகிறவரை தெம்பாக இருந்தாள் வசந்தவல்லி. சிறிது தூரம் போகிறதையே பார்த்துக் கொண்டிருந்தாள். தலைமறைகிற வரை பார்த்துக் கொண்டிருந்த வசந்தவல்லி உள்ளே வந்தாள். கூடவே பயமும் வந்துவிட்டது. பயம் காரணமாக எங்கெங்கோ இழுத்துக் கொண்டு போனது வசந்தவல்லியை யோசனை.

"இப்பொழுது எங்கு போய்க் கொண்டிருப்பாள்.

வழியில் யாராவது தெரிந்தவர் எதிர்ப்படுவாரா? எங்கு போகிறாய் என்று கேட்பாரோ? என்ன காரியமாகப் போகிறாய் என்று விசாரிப்பாரோ? என்ன சொல்வாளோ பதில். ஏறுக்கு மாறாக ஏதாவது உளறிவிடக் கூடாதே தோழி என்றெல்லாம் பயம் வந்தது வசந்தவல்லியிடம்.

"குற்றாலநாதரிடம் எப்படிப் பார்க்கப் போகிறாளோ, பொறுமை காப்பாளா, அவசரப்பட்டு விடக்கூடாதே. என்ன சொல்வாளோ, எப்படிச் சொல்வாளோ? இவள் சொல்வதை அவர் காது கொடுத்துக் கேட்பாரா ? என்னாகுமோ, ஏதாகுமோ, காயோ, பழமோ என்றெல்லாம் யோசனை" ஒரு நிலையில் நிற்க விடவில்லை யோசனை. தத்தளிக்கிறாள், தடுமாறுகிறாள். பயப்படவே செய்கிறாள்.

ஆள்காட்டி விரலை வைத்து தரையில் வட்டம் போடுகிறாள். அதற்காகக் கொஞ்சம் மணலையும் கொண்டுவந்து போட்டுக் கொண்டாள்.

★★★★★★★★★★★★★

## கூடுமா கூடல்

(1) இனி, குடிதண்ணீருக்கு சிறு கிணறு தோண்டுவார்கள். வட்ட வடிவில் தோண்டுவார்கள். நீர்ச்சுரப்பான இடம் என்றால் நான்கு ஐந்தடி ஆழத்திலேயே தண்ணீர் வந்துவிடும். பொது பொது என்று வரும் தண்ணீர்.

அப்படியே வட்ட வடிவிலான உறையை, தவிடு, உமி, வைக்கோல், களிமண் கொண்டு செய்த தடித்த உறையை, கிணற்றின் அளவுக்கு ஏற்ப அமைத்து இறக்கி விடுவார்கள்.

உறைகிணறு என்று பெயர். உறையின் வட்டம் போலவே தரையில் வட்டம் போடுகிறாள் வசந்தவல்லி. அந்த வட்டத்துக்குக் கூடல், கூடலிழைத்தல் என்று பெயர்.

**உண்ணீரில் கூடல்**

**உரைக்கிணறு செய்வாளே.**

ஆசை என்ன பாடு படுத்துகிறது ஒரு ஆளை. ஆணோ பெண்ணோ யாராக இருந்தால் என்ன. அதன்பிடியில் சிக்கிவிட்டால் கதி இதுதான். ஆடிக்காற்றில் இலவம் பஞ்சுபடுகிற பாடுதான்.

பயம் காரணமாகக் கலங்குகிறாள் வசந்தவல்லி. கண்ணீர் வருகிறது உள்ளுக்குள்ளே அப்படிப் பொருமுகிறது கலக்கம்.

அவள் கண்ணிலிருந்து முத்து முத்தாக உதிரும் கண்ணீர்தான் உண்ணீர். கூடலிழைக்கும் அவள் கையின் வளையல்தான் கிணற்றுக்கு உறை.

**கண்ணீர் நறும்புனலாக்**

**கைவளையே செய் கரையா**

**உண்ணீரில் கூடல்**

**உரைக்கிணறு செய்வாளே.**

எல்லாம் குற்றாலநாதர் மேல் கொண்ட மோகத்தின் வினை. அதன் பலன்தான். இனி அருவிக் கரையில் அமர்ந்து அருவியையே தீர்த்தவாரியாகக் கொண்டவர் குற்றாலநாதர். அதுபோதாதென்று ஆகாய கங்கையையே சடையில் பொதிந்து முடிச்சுப் போட்டவர். அவர் மேல் அல்லவா வைத்துவிட்டாள் மோகம்.

கொச்சகம் (கலிவிருத்தம்)

**தெண்ணீர் வட அருவித்**

**தீர்த்தத்தார், செஞ்சடைமேல்**

**விண்நீர் புனைந்தார்**

**விரகவெம்மைக்(கு) ஆற்றாமல்,**

**கண்ணீர் நறும்புனலாக்**

**கைவளையே செய்கரையா,**

**உண்நீரில்க் கூடல்**

## உறைக்கிணறு செய்வாளே (43)

(2) அன்பு வைப்பது நல்லது. அது வாழ்க்கையைப் புனிதப்படுத்தும். மனிதரையும் புனிதப்படுத்தும். மனமே புனிதமாகிவிடும் அன்பால். இனி ஆசையை எடுத்துக் கொண்டால் அது அன்புக்கு நேர்மாறு. மனதைக் தொந்தரவுப்படுத்தும் ஆசை. மனுசனை விட்டுவைக்குமா என்ன? பேயாக, பிசாசாக, நாயாக, நரியாகச் சீரழித்து விடும், மனிதப்பிராணியை ஆசை. வாழ்க்கையே கசந்துவிடும் ஆசை காரணமாக.

எப்பொழுதும் ஒன்றை எதிர்பார்த்து நிற்கிறதிலேயே வைத்துவிடும் ஆசை. நிம்மதியே இருக்காது. அமைதிக்கும், ஆசைக்கும் சம்பந்தமே இல்லை. ஒன்றின் முகத்தில் இன்னொன்று விழிக்கவே செய்யாது. காதலோ, பக்தியோ வாழ்க்கையில் எதானாலும் அன்பு ஒன்றே எழுந்து நிமிர்ந்து நிற்க வேண்டும். ஆசை ஒதுங்கியே கிடக்க வேண்டும். இன்பம் அதில்தான். மாறுபட்டால் சிக்கல்தான் பயந்தான். நோய்தான் தொல்லைதான்.

வசந்தவல்லி குற்றாலநாதர்மேல் ஆசை கொண்டுவிட்டாள். அளவுக்கு மீறி ஆசை கொண்டு விட்டாள். பேராசையே கொண்டுவிட்டாள்

1.தெண்ணீர் - தெளிந்த நீர். வட அருவி - கோவிலை ஒட்டி இருக்கிற பெரிய (பிரதான) அருவி. விண்நீர் - வான்ஆறு (ஆகாய கங்கை) விரக வெம்மை - ஆசைநோய். உலைப்பானை கொதிக்கிற மாதிரி கொதிக்கும் அதன் சூடு. செய்கரை - கரை கட்டின மாதிரி. வட்டம் போட்டாள்.

தூது போன தோழி என்ன சேதி கொண்டு வருவாளோ என்று பயப்படுகிறாள். அவள் கொண்டு வரும் செய்திை ய எதிர்பார்த்து நிற்கிறாள் வசந்தவல்லி.

★★★★★★★★

இனி, பாண்டியன் மேல் ஆசை கொண்டாள் ஒரு பெண். ஆசையைச் சொல்லிப் பாண்டியனிடம் தூதே அனுப்பிவிட்டாள் தோழியை.

தூதனுப்பி விட்டு கடற்கரையில் நிற்கிறாள் பெண். அலைவந்து கரையைக் கட்டிப் பிடிக்கிறது. முத்தமிடுகிறது. நுங்கும், நுரையுமாகச் சிதறிப் பின்வாங்கிப் போகவும் செய்கிறது.

கரையை ஒட்டி அலைவரும் வழியில் நிற்கிறாள் பெண். திரும்பிப் போகும் அலை பெண்ணின் காலடியில் உள்ள மணலை மெதுவாக அரித்துக் கொண்டு போகிறது. அப்பொழுது ஒரு கூச்சம். சுகமான கூச்சம். வருகிறது இவள் காலடியில்.

உருவாய் நிலம் என்று பெயர் அதற்கு.

சின்னச் சின்ன அலைகளாய் வந்து போய்க் கொண்டிருந்த வேளையில் ஒரு முரட்டு அலை மூர்க்கமாக வந்தது. கரையையே அடித்து நொறுக்குவது போல் மோதியது. அது கொண்டு வந்த சங்கு ஒன்று நிறைமாத கர்ப்பிணி, அந்தச் சங்கு. அலையானது வீசி எறிந்த வேகத்தில் பிரசவமாகி விட்டது சங்கு. வெள்ளை வெளேரென்று முத்து ஒன்றைப் பெற்றெடுத்தது. முத்தொரு பக்கம், சங்கொரு பக்கம் கிடக்க முரட்டு அலை பின் வாங்கி ஓடிவிட்டது.

பிரசவம் ஆன சங்குக்கு ஒரே ஆசை, ஏக்கம்.

"அப்படி ஒரு அலை இனி எப்போது வரும். தன்னைக் கடலுக்குள் கொண்டு போய் விட" என்று சங்கு தவிக்கிறது. முத்தீன்ற சங்கந்தான் தவிக்கிறது பெற்ற பிள்ளையைப் போட்டுவிட்டுப் போகத்தான் தவியாய்த் தவிக்கிறது சங்கம்.

சங்கம் மட்டுமா தவிக்கிறது. தூதுவிட்ட பெண்ணும் தவிக்கிறாள். "என்ன சேதி கொண்டு வருவாளோ தோழி என்று".

**உருவாய் நிலத்த**

**உயர்கரைமேல் ஏறி,**

**நகுவாய்முத்(து) ஈன்றசைந்த**

**சங்கம் - புகுவான்**

**திரைவரவு பார்த்திருக்கும் ;-**

**தென்கொற்கைக் கோமான்**

**உரைவரவு பார்த்திருக்கும்**

**நெஞ்சு.**

---

உருவாய் நிலம் - கரைந்து கரைந்து நீரோடு கலந்து மணல் போகும் இடம். (ஈரமான இடம். கடல் முற்றம்) நகுவாய் முத்து - பல்லெல்லாம் காட்டிச் சிரிக்கிற மாதிரிபால் ஒளி வீசும் முத்து. சங்கம் - சங்கு, சிப்பி. புகுவாள் - திரும்பவும் கடலுக்குள் போக. திரை வரவு பார்த்திருக்கிறது - அலை ஒன்றை எதிர்பார்த்து காத்திருக்கிறது. தென் கொற்கைக் கோமான் - பாண்டியனுடைய. உரை வரவு பார்த்திருக்கும். நெஞ்சு. நல்ல சேதியை எதிர்பார்த்திருக்கிறது மனம். சங்கும் தவிக்கிறது. பெண்ணும் தவிக்கிறாள். தவிக்கிறது பெண்தான். ஆனால் நெஞ்சு தவிப்பதாக நினைக்கிறாள். அவள் வசம் இல்லை தானே மனம்.

பாண்டியனிடம் தூதுவிட்ட பெண் மாதிரிதான் வசந்தவல்லியும் தவிக்கிறாள். வருகிற சேதி என்னவாக இருக்குமோ? என்று தவிக்கிறாள்.

இனி கண்ணை திறந்தபடி வட்டம் போடுவதில் என்ன இருக்கிறது. கண்ணை மூடிக்கொண்டுதான் போடவேண்டும் வட்டத்தை என்று தீர்மானிக்கிறாள் வசந்தவல்லி. வட்டம்பொருந்தினால் சேதி நன்றாக இருக்கும். இல்லை என்றால் ... அதை நினைக்கவே பயப்படுகிறாள். எப்படியோ திடப்படுத்திக்கொண்டாள்.

மனதையும், கண்ணையும் மூடிக்கொண்டாள். மணலில் சுட்டு விரலால் கோடு இழுத்தாள். வட்டம் போடத்தான். வட்டம் பாதிகூட வந்திருக்காது. பயம் வந்துவிட்டது. இது பொருந்தவில்லை என்றால்... என்னும் பயமே வந்து விட்டது. நிறுத்திவிட்டாள் வட்டத்தை. கண்ணீர் பெருகுகிறது. அரைகுறையாக போட்டதையும் அது கரைக்கிறது. கூடவேண்டும், கூடவேண்டும் என்று இழுத்தாள் கோட்டை. ஆனாலும் பொறுமை இல்லையே. பயப்படவல்லவா செய்கிறாள். பிறகு எப்படிக் கூடும் கூடல்.

சிந்து

இராகம் - பந்தவராளி தாளம் - திரிபுடை

கண்ணிகள்

**பாடிய மறை**

**தேடிய நாயகர்**

**பன்ன கர்பணி**

**நன்நகர் நாயகர்**

பா வலர் மனுக்
  காவலர் நாயகர்,
பதஞ்ச லிபணி
  தா ளர் ;
கோடி யமதி
  சூடிய நாயகர்,
குறும்ப லாவினில்க்
  கூடுவ ராம் எனில்
கூட லே நீ
  கூ டாய் ;-
குஞ்சரம் அன்று
  பூசித்த நாயகர்,
குறுமு னிதமிழ்
  நேசித்த நாயகர்,
குறும்ப லாவினில்க்
  கூடுவ ராம்எனில்க்
கூட லேநீ
  கூ டாய் (44)

2. பாடிய மறை - பாடலாய் உருவெடுத்த தத்துவம். பன்னகர் - உலகில் உள்ள பல நகர்களும் . நன்னகர் - குற்றாலம். பாவலர் - கவிஞர். காவலர் - அரசர். கோடிய மதி - பிறைமதி. கூடவே நீ கூடாய் - வட்டமே பொருந்தி நில். குஞ்சரம் -யானை. குறுமுனி - அகஸ்தியர். தமிழ் நேசித்த - பாடலைஅனுபவித்த.

# வருகிறாள் குறவஞ்சி

(1) ஒன்றின் அழகில் கரைந்து விடுவதுதான் அன்பு. கரைந்து அதனோடு கலந்துவிடுவதுதான் அன்பு. தன்னைத் தத்தம் செய்வதில் இருக்கிறது அன்பு. இனி ஆசையை எடுத்துக்கொண்டால் அப்படி இல்லை. விரும்பியதைத் தன் வசப்படுத்தவே முனையும் ஆசை. தனக்கு உடைமை ஆக்கிக் கொள்ளவே துடிக்கும் ஆசை.

ஆசை உயர உயர அன்பு வெட்கப்படும். முகம் கவிழ்ந்து. தலையைத் தொங்கப் போட்டுக் கொள்ளும் அன்பு. பிறகு பயம் ஒன்று தானே மிஞ்சும். எடுத்த காரியம் ஒன்றும் உருப்படாது. எல்லாம் அரைகுறையாகவே நிற்கும்.

கூடல் இழைக்கும் வசந்தவல்லியும் அப்படியே நின்றுவிடுகிறாள். வட்டம் பொருந்தும் முன்பே நிறுத்திவிடுகிறாள். கோணல் மாணலாய் நிற்கிறது கோடு. அரைகுறையாய்க் கிடக்கிறது வட்டம்.

தொலைந்த பொருளைத் தேடுகிறவர் சிலசமயம் முயற்சியை அரைகுறையில் விட்டு விடுவார். அதற்கென்று ஒரு அடையாளமும் போடுவார். அப்படிப் போட்ட அடையாளமாய் விட்டது அவள் போடும் வட்டம்.

இப்படிச் செயலற்று வசந்தவல்லி திகைத்திருக்கும் நேரம் பார்த்து வருகிறாள் ஒருத்தி.

கண்ணாடி, வளையல் கை நிறைய கலகலவென்று ஒலிக்க மாத்திரைக் கோல் வலது கையிலும், இடுப்பில் வைத்த பிரம்புக் கூடை இடது கையிலுமாக ஒய்யார நடை நடந்து வருகிறாள் குறத்தி.

**கூடல்வளைக் கரம் அசைய**

**மாத்திரைக்கோல் ஏந்திமணிக்**

**கூடைதாங்கி**

**மாட(ம்) மறு கூடுதிரி**

**கூடமலைக் குறவஞ்சி**

**வருகின்றா ளே.**

கைவளையை கழல விட்டது குற்றாலநாதர் பவனியில். கோவிலை சுற்றியுள்ள சங்க வீதியில் தான் அடடா வளையலை காணோமே என்று பார்த்தது வீட்டிற்கு வந்த பின்தான். அதுவும் வீட்டின் உள்ளே அடுக்களையை ஒட்டிய அரங்கிற்குள் (கூடத்துள்) வந்து நின்ற பின்தான்.

வளையலை எங்கே? வளையலை எங்கே? என்று அங்கு (அரங்கு வீட்டில்) தேடுகிறாள் வசந்தவல்லி. கிடைக்கவா செய்யும் வளையல்? மேற்கொண்டும் தேட வேண்டும் என்பதற்கு அடையாளமாக தேட வேண்டிய பகுதியில் சுண்ணாம்புக் குறி போடுகிறாள் வசந்தவல்லி.

அப்படி போடுகிற குறியால் பலன் உண்டா? அப்படித்தான் பிரயோஜனப்படாமலேயே

போய்விட்டது வசந்தவல்லி போட்ட வட்டம். (கூடல் இழைத்தல்)

அந்த வேளை பார்த்தல்லவா வந்து விடுகிறாள் குறத்தி.

தெய்வ சங்கல்பந்தான். வேறென்ன சொல்ல.

**ஆடல்வளை வீதியிலே**
**அங்கணர்முன் போட்ட சங்கம்**
**அரங்கு வீட்டில்**
**தேடல் வளைக்கும் குறிபோல்**
**கூடல் வளையத் (து) இருந்து வல்லி**
**தியங்கும்போ தில்**
**கூடல் வளைகரம் அசைய**
**மாத்திரைக்கோல் ஏந்தி மணிக்**
**கூடைத்தாங்கி**
**மாட(ம்) மறு கூடுதிரி**
**கூடமலைக் குறவஞ்சி**
**வருகின்றாளே (45)**

1. ஆடல் வளை வீதி - எப்பொழுதும் ஆடலும் பாடலுமாய் உள்ள சங்க வீதியில். அங்கணா் - குற்றாலநாதா். சங்கம் - சங்கு வளையல். தேடல் வளைக்கும். குறி - இன்னும் தேட வேண்டுமென்பதற்கு அடையாளமாக இட்ட குறி. (சுழி கோடு) வல்லி - வசந்தவல்லி. கூடலை அரைகுறையில் விட்ட வசந்தவல்லி. தியங்கும் போது - தவிக்கும் நேரம் பார்த்து (வந்தாள் குறத்தி) கூடல் வளை - நெருக்கமாய் போட்ட வளையல். மாடம் மறுகு - மாடகூடம் நிறைந்த தெரு. திரிகூட மலை - குற்றால மலை

(2) சைவ வழிபாட்டில் ஊறி திளைக்கிறவள் குறத்தி. குளித்து முழுகி அவள் நெற்றியில் இடுகிற திருநீறே எடுத்துச் சொல்லும் சைவ பண்பாடோடு கூடிய அவள் வழிபாட்டின் உறுதியை.

விபூதி பூச்சுக்கும் மேலே ஒரு சந்தன பொட்டு. சந்தனம் காய்வதற்குள் அதன் மேல் இடும் செந்தூர திலகம். இவை போதாதா? வழிபாட்டிலும் பக்தியிலும் தோய்ந்து கிடக்கும் அவள் தெளிவையும், உறுதியையும் எடுத்துக் காட்ட.

சாதரண குறத்தியாகவா வருகிறாள் மிடுக்கோடும், செருக்கோடும் வரும் பேரரசியாகவே வருகிறாள் குறவஞ்சிக்குறத்தி.

அவள் இல்லை என்றால் நாடகம் ஏது? அரைகுறையில் வசந்தவல்லி விட்ட கூடல் வட்டம் போல் நாடகமும் நின்றுவிடும். முன்போகவும் முடியாது. பின் வாங்கவும் முடியாது. அந்தரத்தில் தொங்குகிற மாதிரி நின்று விடும் நாடகம்.

இனி சைவத்திற்கு அடையாளம் சூலம். திரிசூலம். அதை வானில் நிறுத்திய மாதிரி இருக்கிறது குற்றால மலையில் சிகரங்கள். ஒன்றைஒன்று தொட்டுபபிடிக்கிற மாதிரி அடுத்ததுத்து நிற்கின்றன சிகரங்கள் மூன்றும். அது காரணமாகவே திரிகூடம். (திரிகூட மலை) என்று பெயர். குற்றாலநாதருக்கும் திரிகூடநாதர் என்று பெயர். அந்தக் குற்றால மலைச்சாரலிலிருந்து இறங்கி வருகிறாள் குறவஞ்சி.

ஆசிரியப்பா

**சைவமுத் திரையை**

**வானின் மேல் தரிக்கும்**

**தெய்வம்முத் தலைசேர்**

**திரிகூட மலையான்**

திரிகூடநாதர் கழுத்தில் போட்டு அவர் மார்பில் அசைவது கொன்றை மலர் மாலை. சொக்கத்தங்கமாய் ஜொலிக்கும் கொன்றை மலர். அன்னை குழல்வாய்மொழி அம்மையோ வைத்த கண் வாங்காமல் அசைந்தாடும் மாலையை பார்த்துக் கொண்டே இருக்கிறாள். தேன் உண்ண வந்த கருவண்டு பூவில் விழுந்து கிடக்கிற மாதிரி கிடக்கிறது மாலையில் அம்மையின் கண்.

**வாலைசுந் தரிகுழல்**

**வாய்மொழி அருள் கண்**

**கோல வண்(டு) இணங்கும்**

**கொன்றைமா லிகையான்.**

குற்றாலநாதர் என்றால் பேரண்டத்திற்கே அதிபதி. திரிகூட மலைக்கும் (குற்றாலத்திற்கும்) அதிலுள்ள காடுகள், செண்பகக் காடுகள் போன்ற காடுகளுக்கு மட்டுமல்ல அதிபதி. ஏதோ அவருடைய கோடை வாசஸ்தலம் (கோடை வீடு) போலத்தான் குற்றாலம்.

தேவாதிதேவனாகிய திருக்குற்றால

நாதரைப்பற்றி எத்தனையோ பாடல்கள். அவற்றில் ஒன்றிரண்டை பக்தி பரவசத்தோடு பாடியபடியே நடந்து வருகிறாள் குறவஞ்சி.

மந்திர உச்சாடனம் போல் வாய்க்குள்ளே முனங்கிய படி அசைந்து அசைந்து ஒயிலாக வருகிறாள் குறவஞ்சி.

**பூவளர் செண்பகக்**

**காவலர் தம்பிரான்**

**தேவர்கள் தம்பிரான்**

**திருவருள் பாடி**

**இலகு நீ(று) அணிந்து**

**திலகமும் எழுதி**

**குலமணிப் பாசியும்**

**குன்றியும் புனைந்து**

**சலவைசேர் மருங்கில்ச்**

**சாத்திய கூடையும்**

பாசிமணி மாலை அதில் இடை இடையே குன்றிமணி. இடுப்பில் வெளுத்து தேய்த்த சேலைக்கட்டு. அதில் பிரம்புக் கூடை சகிதமாக வருகிறாள் குறவஞ்சி.

கட்டி வைரம்போல, அதை அடுக்கி வைத்த பெட்டி போல நல்ல வாளிப்பான உடம்பு ; இயல்பாகவே

அமைந்த அழகு. அதில் இத்தனை ஜொலிப்போடு வருகிறாள் குறவஞ்சி என்றால் அவளை ஒரு மாதிரியாக சிலர் பார்க்கிறது உண்டுதான். குறி கேட்கிறவர்களிலும் ஒன்றிரண்டு பேருக்கு அப்படி ஒரு சபலபுத்தி வந்துவிடும்.

பளிச்சென்று கண்டுகொள்வாள் பிறரின் திருட்டுப் பார்வையை. அவ்வளவுதான். அவள் பார்க்கும் பார்வையிலேயே மிரண்டு போவான் ஆசாமி. அதற்கும் மசியாத கல்லுளி மங்கன் என்றால் என்ன செய்வாள். இடிமுழக்கம் போல் ஒலி எழ அடிப்பாள் உடுக்கையை. சக்கமா தேவி என்று ஒரு அதட்டு அதட்டிக் கூப்பிடுகிற பாவனையில் முழக்கம் கொடுத்து டபடப என்று கொட்டி முழக்குவாள் உடுக்கையை. வழிக்கு வந்துவிடுவான் வல்லாள கண்டனும்.

**கமளிக்கும் எவரும்**
**கடைக்கணால் அடங்க**
**கொட்டிய உடுக்குக்கோ**
**டாங்கிக் குறிமுதல்**
**மட்டிலா குறிகளும்**
**கட்டினால் அடங்க**

எப்படியெல்லாமோ சமாளித்து வருகிறாள் குறவஞ்சி. அப்படி ஒரு திறம் இல்லை என்றால் பொதிகை மலை எங்கே? இமயமலை எங்கே? இங்கே இருந்து அங்கே வரையுள்ள அத்தனை நாடுகளுக்கும் ஒரு பெண்ணால் போய் வர முடியுமா? அத்தனை

நாட்டாரையும் ஒரு கலக்கு கலக்கி எப்படி மீண்டுவர முடியும் ஒரு பெண்ணால்.

எந்தெந்த நாட்டிற்கு போய் குறி சொல்கிறாள். குறி சொல்லி அவர்களை எல்லாம் அங்கங்கே உள்ள கொம்பன்களை எல்லாம் பெட்டிப்பாம்பாய் கட்டிப் போட்டு வந்திருக்கிறாள் என்று பாருங்கள்.

அவள் சென்று வந்த நாடுகளில் சிலதான் பட்டியலில் வந்துள்ளன.

**கொங்கணம், ஆரியம்,**
**குச்சலர் தேசமும்**
**செங்கைமாத் திரைக்கோல்**
**செங்கோல் நடாத்திக்**
**கன்னடம், தெலுங்கு**
**கலிங்க ராஜ்ஜியமும்**
**தென்னவர் தமிழால்**
**செயத்தம்பம் நாட்டி**

வருகின்றாள் குறத்தி. அங்கங்கே அவள் குறி சொல்லும் பாங்கே பாங்கு.

**மன்னவர் தமக்கு**
**வலதுகை நோக்கியும்**
**இன்னகை மடவார்க்(கு)**
**இடதுகை பார்த்தும்**

**காலம்முன் போங்குறி**

**கைப்பலன் ஆம்குறி**

**மேலினி வருங்குறி**

**வேண்டுவார் மனக்குறி**

**மெய்க்குறி கைக்குறி**

**விழிக்குறி மொழிக்குறி**

**எக்குறி ஆயினும்**

**இமைப்பினில் உரைக்கும்**

**மைக்குறி விழிக்குற**

**வஞ்சிவந் தனளே.**

மேளதாள முழக்கத்தோடு ஜாம், ஜாம் என்றுதான் வருகிறாள் குறத்தி. எங்கெங்கோ சுற்றிவிட்டு தாய் வீட்டுக்கு வரும் பிள்ளைபோல், குற்றாலத்துக்கே வந்துவிட்டாள் குறத்தி. கூடல் இழைக்கிற மாதிரி இழைத்தும், இழைக்காமலே விட்டும் ஏங்கித் தவிக்கும் வசந்தவல்லியின் எதிரிலேயே வருகிறாள் குறத்தி.

அவள் நடையில்தான் எத்தனை ஒய்யாரம். கண்ணில்தான் எத்தனை விதமான பார்வை. அத்தனையிலும் விதவிதமான பகட்டு. அந்தப் பகட்டில் எத்தனை எத்தனையோ மினுக்கு. உச்சிமுதல் உள்ளங்கால் வரை அவள் அங்கம் ஒவ்வொன்றையும் தங்கமாக்கி, தங்க விக்கிரகமே ஆக்கி உயிர் பெற்றெழச் செய்கின்றன அவள் பகட்டும் மினுக்கும்.

உள்ளம் குளிர்விக்கும் அழகிலுமா இப்படி ஒரு அதிகாரதோரணை என்று திகைக்கவே வைக்கிறது அவள் மிடுக்கு.

இனிப்பாடல் முழுவதையும் சேர்த்துப் பார்க்கலாம்.

**சைவமுத் திரையை**
**வானின்மேல் தரிக்கும்**
**தெய்வமுத் தலைசேர்**
**திரிகூட மலையான்**
**வாலைசுந் தரிகுழல்**
**வாய்மொழி அருள்கண்**
**கோலவண்(டு) இணங்கும்**
**கொன்றைமா லிகையான்,**
**பூவளர் செண்பகக்**
**காவளர் தம்பிரான்,**
**தேவர்கள் தம்பிரான்**
**திருவருள் பாடி,**
**இலகுநீ(று) அணிந்து**
**திலகமும் எழுதி,**
**குலமணிப் பாசியும்**
**குன்றியும் புனைந்து,**

சலவைசேர் மருங்கில்ச்
சாத்திய கூடையும்,
கமளிக்கும் எவரும்
கடைக்கணால் அடங்க
கொட்டிய உடுக்குக்கோ
டாங்கிக் குறிமுதல்
மட்டிலாக் குறிகளும்
கட்டினால் அடக்கி
கொங்கணம், ஆரியம்
குச்சலர் தேசமும்
செங்கைமாத் திரைக்கோல்
செங்கோல் நடாத்திக்
கன்னடம், தெலுங்கு,
கலிங்க ராஜ்ஜியமும்
தென்னவர் தமிழால்
செயத்தம்பம் நாட்டி
மன்னவர் தமக்கு
வலதுகை நோக்கியும்
இன்னகை மடவார்க்(கு)
இடதுகை பார்த்தும்

**காலம்முன் போங்குறி**

**கைப்பலன் ஆம்குறி**

**மேலினி வருங்குறி**

**வேண்டுவார் மனக்குறி**

**மெய்க்குறி கைக்குறி**

**விழிக்குறி மொழிக்குறி**

**எக்குறி ஆயினும்**

**இமைப்பினில் உரைக்கும்**

**மைக்குறி விழிக்குற**

**வஞ்சிவந் தனளே.** **(46)**

உடல் நிலையை வைத்து கைரேகைக்கு பலன் சொல்லும் சாமர்த்தியம் குறத்தியிடம் உண்டு.

2. சைவ முத்திரை - சூலம். தெய்வமுத்தலை - அற்புதம் அற்புதமான மூன்று சிகரங்கள். திரிகூட மலையான் - குற்றாலநாதர். வாலசுந்தரி - இளமையும் அழகும் நிறைந்தவள். கண் கோல வண்டு - கண்ணாகிய கருவண்டு. மாலிகை - மாலை. இலகு நீறு - திருநீறு. சலவை - வெளுத்த உடை. கமனிக்கும் - உற்றுபார்க்கும். மட்டிலா - அளவில்லாத. கட்டு - கட்டுப்பாடு. மன்னவர் தமக்கு - ஆண் மக்களுக்கு. இன்நகை மடவார் - உள்ளம் குளிர்விக்கும் புன்முறுவல். கன்னத்திலும், அதரத்திலும் பூத்து ஒளிரும் பெண்டிர். காலம்முன்குறி - கடந்த கால சமாச்சாரம். கைப்பலன் ஆம் குறி - நிகழ்கால பலன். மேல் இனி வரும்குறி - இனி நிகழ இருப்பவை. மனக்குறி - குறி கேட்பவர் மனநிலை.

(3) அழகு மட்டும் இருந்தால் போதாது. அழகுக்கு ஏற்றபடி சாமர்த்தியமும் வேண்டும் பெண்ணிடம். அழகுக்குக் காவலாக சாமர்த்தியம். சாமர்த்தியத்திற்கு உதவியாக அழகு. இப்படி ஒன்றுக்கொன்று அனுசரணையாக இரண்டும் வேண்டும் பெண்ணிடம்.

சிங்கி என்பது குறத்தி பெயர். அவளிடம் அழகுக்கும் பஞ்சமில்லை. சாமர்த்தியத்திற்கும் பஞ்சமில்லை. அதனால் யாரும் வாலாட்ட முடியவில்லை அவளிடம்.

★★★★★★★★★★★

கொஞ்சிக் கொஞ்சி வருவதுபோல் வருகிறாள் குறவஞ்சி. (குறத்தி) கண்கொள்ளா கொள்ளை அழகு. இவ்வளவு அழகையும் பாடலில் பிரதிஷ்டை பண்ணுகிறது தமிழ். முக்கால் துட்டு செலவில்லாமல் பார்க்கிறோம். கண்குளிரவே பார்க்கிறோம். மனமும் குளிரத் தானே செய்கிறது.

ஆனால் இத்தனை அழகும் சும்மாவா வந்தது அவளிடம். கடைந்தெடுத்த சிற்பம் போல் அவள் உடல்வாகு. இயல்பான அழகு அதில் இருக்கவே செய்கிறது. இருந்தாலும் அந்த அழகுக்கு அழகல்லவா ஊட்டுகிறது அவள் தோரணை.

---

பார்க்கிற பார்வையிலேயே பேசுகிற பேச்சிலிருந்தே குறி கேட்பவரின் மனநிலையை கண்டு கொள்வாள் குறத்தி. இமைப்பினில் - உடனுக்குடன். மைக்குறிவிழி - மைதீட்டிய கண் அளந்து பார்க்கும் மனநிலையை.

பெற்ற குழந்தைக்கு பாலூட்டுகிற மாதிரி அல்லவா அழகுக்கு அழகூட்டுகிறாள் சிங்கி.

ஒரு இடத்திற்கு புறப்படுகிறாள் என்றால் புறப்படுவதற்கு இரண்டு மூன்று நாழிகையாகவே என்ன பாடுபடுகிறாள் சிங்கி. மேனி முழுவதும் மெருகேற்ற என்ன பாடுபடுகிறாள். நேரம், காலம் பற்றி எல்லாம் அலட்டிக் கொள்வதில்லை அவள். அழகுக்கு அமுதூட்டி பசி நீக்குவதுதான் அவளுக்கு குறி. பஸ் போய் விடுமே, ரயில் போய்விடுமே, (சினிமா) படத்தை போட்டு விடுவார்களே, முகூர்த்தம் நடக்கிற நேரமாயிற்றே என்றெல்லாம் ஆண் (கணவன்) தான் பரபரப்பான். ஆனால் அசையமாட்டாள் பெண் அலங்காரத்தை விட்டு.

ஆற அமர அலங்காரம் செய்து கொண்டிருப்பாள் பெண். ஈரத் தலையை துவட்டி கூந்தலை முறுக்கி பிழிந்து உலரப் போட்டது முதல் அதை அள்ளி எடுத்து முடித்து அதில் மலர்மாலை சூட்டுவது வரை ஒவ்வொன்றையும் பொறுமையோடுதான் செய்வாள் பெண்.

அலங்காரம் முழுவதும் முடிந்து நிதானமாக வருவாள் பெண். ரயிலும் போய் இருக்காது. பஸ்-ஸும் போய் இருக்காது. இன்னும் ஐந்து நிமிடம் கழித்தேதான் வரும்.

அவளுக்குத் தெரியும் நேரம், காலம் இவற்றின் அத்துபடி. ஆணுக்குத் தெரியாது. அவசரம் ஒன்றுதான் தெரியும் ஆணுக்கு.

இனி சிங்கி அலங்காரம் பண்ணிமுடித்து புறப்படுகிற தோரணையை பார்க்கலாம். குளித்து முழுகினாள். ஈரத்தலையை நன்றாக அரக்கித் தேய்த்து துவட்டினாள். உலர விட்டாள் கூந்தலை. கண்ணாடி முன் வந்தாள். மஞ்சள் பூசிய முகம் ஜொலித்தது. வில் போல் வளைந்த நெற்றியை துடைத்துவிட்டாள். கஸ்தூரியை விரலால் எடுத்து நிறுத்தி நிதானமாக இடம் பார்த்து வைத்தாள் பொட்டை. அப்படியே கண்ணுக்கு அஞ்சனம் (மை) தீட்டினாள். ஈரத்துணியை களைந்து வெளுத்து தேய்த்த சேலையை உடுத்தினாள். தட்டுதட்டாக விட்டு கொய்சகம் வைத்து வரிந்து வரிந்து கட்டினாள் சேலையை. அந்த சேலைக் கட்டில் தானே இருக்கிறாள் பெண். பெண்மை கொலுவிருப்பதே அதில் தான். உடை அழகு மட்டுமா? அவள் சேலைக் கட்டில் நடை அழகும் அதில் தான். நடக்க நடக்க ஒசிந்து மிளிரும் இடையழகும் அதில் தான்.

கட்டிமுடித்து முந்தானையை மார்பில் போட்டாள். உலர்ந்த கூந்தலில் பூச்சரத்தை அள்ளி சொருகினாள். மாத்திரைக் கோலைப் பிடித்தாள். கூடையை இடுப்பில் வைத்தாள். புறப்பட்டாள். புறப்படும் போது மறுபடியும் கண்ணாடியைப் பார்த்தாள். என்னவோ ஒரு குறைபட்டது அவள் மனதுக்கு. அவ்வளவுதான். கூடையையும், மந்திரக்கோலையும் கீழே வைத்தாள். மாரப்புச் சேலையை விலக்கினாள். உள்ளே கிடந்த குன்றி மணி மாலையைத் தூக்கி மாராப்பு சேலைக்கு மேலே

போட்டாள். மறுபடியும் பார்த்தாள் கண்ணாடியை. என்ன அழகு. தகதகவென்று ஜொலித்தது அழகு. கண்ணாடியை விட்டுவர மனமே இல்லை சிங்கிக்கு. அப்படி ஒரு அழகு. அதில் ஒரு சொகுசு. எப்படியோ புறப்பட்டாள். கூடையும், கம்பும் எடுத்து புறப்பட்டாள்.

அழகுக்கு அழகூட்டியது சேலைகட்டு. அதற்கே அழகூட்டி விட்டது. உள்ளே கிடந்த மணி மாலை வெளியே சேலை மேல் அமர்ந்து ஆட்டம் ஆடியது அது.

**கலைதிகழக் குன்றிமணி**

**வடம் பூண்டு**

(கலை என்றால் சேலை. திகழ என்றால் அதன் கட்டுமான அழகு தொனிக்க)

எத்தனை தவம் செய்து ஆராதிக்கிறாள் அழகை பெண். ஒவ்வொரு பெண்ணுமே இப்படியெல்லாம் தவம் செய்து தவம் செய்து பேணி உபசரித்ததின் பயன்தான் அழகு. அந்த அழகை அப்படியே கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறது தமிழ்.

மலையிலிருந்து இறங்கிவருகிறாள் குறவஞ்சி. அழகுத் தெய்வமே அசைந்து அசைந்து வருகிறது என்று தான் சொல்ல வேண்டும்.

விருத்தம்

**சிலை நுதலில் கஸ்தூரித்**

**திலகமிட்டு நறுகுழலிலச்**

**செச்சை சூடி**

**கொலைமதர்க்கண் மைஎழுதி**
**மாத்திரைக்கோல் வாங்கி மணிக்**
**கூடை தாங்கி**
**கலைதிகழக் குன்றிமணி**
**வடம்பூண்டு, திரிகூட**
**முதல்வர்காக் கும்**
**மலைதனில்ப்பொன் வஞ்சி குற**
**வஞ்சி, அப ரஞ்சி கொஞ்சி**
**வருகின்றாளே! (47)**

தங்கக்கொடிபோல உருக்கி விட்ட ஆயிரம் மாற்று பொன் போல வருகிறாள் குறவஞ்சி. அவள் சும்மா வந்தாலும் கொஞ்சி விளையாண்டு கொண்டே வருகிற மாதிரிதான் இருக்கிறது.

ஒவ்வொரு பெண்ணும் அப்படித்தான் வருவாள். வானத்து தேவதையே வழிதவறி பூமிக்கு வந்தது போலத்தான் வருவாள்.

---

3. சிலை நுதல் - வளைந்த வில்லை ஒத்த நெற்றி. சிலை - வில். செச்சை - வெட்சிப்பூ. கொலைமதர்க்கண் - ஆசையோடு பெண் பார்க்கிறாள் என்றால் அந்த பார்வையும் கண்ணும் சூராதிசூரனையும் ஒய்த்துக் கட்டிவிடும். குன்றிமணி வடம் - பவளம் போல் சிவப்புக்கல் மாலை. அபரஞ்சி - தங்கவிக்ரகம்

**பொன்வஞ்சி குறவஞ்சி**

**அபரஞ்சி கொஞ்சி**

**வருகின் றாளே**

இசையும் தாளமும் மேலே மேலே தூக்கிக் கொண்டு போகிறது உணர்ச்சியை

(4) குறவஞ்சி ஆசிரியர் முந்நூறு வருடத்திற்கு முந்தியவர். அவர் காலத்தில் பண்ணையார்கள், ஜமீன்தார்கள், பிரபுக்கள் என்று பலர் ஊர்ஊருக்கு இருப்பார்கள். ஒன்றிரண்டு பேராவது ஊருக்குள் இருப்பார்கள். பண்ணை சிறிதோ, பெரிதோ. தோரணை பெரிதாக, மிகமிகப் பெரிதாகவே இருக்கும் இராஜ தோரணைதான்.

இனி அறுபது, எழுபது வருடத்திற்கு முன் ஒன்றிரண்டு பேர் இந்தியாவிலிருந்து அமெரிக்கா போய் வருவதுண்டு. அவர்களிடம் கேட்பார்கள். அமெரிக்கர்கள் உங்கள் நாட்டில் நல்ல பாம்புகள் அதிகமாமே, அதைவிட அதிகமாமே மகா ராஜாக்கள் என்று. பண்ணையார்களின் அதிகாரமும், அட்டூழியமும் எட்டு திசையிலும் அல்லவா முட்டி மோதி இருக்கிறது.

பண்ணையார்கள் பெரும்பாலும் மயக்கத்தில் இருப்பார்கள் என்று சொல்வதை விட மிதப்பார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். எதை எடுத்தாலும் அதை வக்கிரபுத்தியோடுதான் பார்ப்பார்கள். இயல்பாகவும், நேராகவும், ஒழுங்காகவும் இருந்தால் அதை ஏற்கமாட்டார்கள். காரசாரமாக இருக்க வேண்டும்.

நெடிவாசம் வீச வேண்டும். அது வீச வீசத்தான் இவர்களுக்கு உச்சி குளிரும். அநாகரீகமாகவோ, காட்டுமிராண்டித்தனமாகவோ இருந்தால் அதுதான் அவர்களுக்கு மிகவும் பிடிக்கும். விடமாட்டார்கள் அதை.

குறவஞ்சி ஆசிரியர் காலத்திலேயே குற்றாலக் குறவஞ்சி நாடகமாக நடிக்கப்பட்டிருக்கிறது. நடனக் கச்சேரிகளும் குறவஞ்சியை வைத்து நடந்திருக்கின்றன. ஜமீன்தார் போன்றவர்கள் வரத்தானே செய்வார்கள் அதற்கு. இயல்பான வர்ணனைக்கோ, பாத்திரம் பேச்சு, உணர்ச்சி பாவம், இவற்றின் நயங்களுக்கோ அசைய மாட்டார்கள் இவர்கள்.

மெத்தையில் கந்தல் துணியையும் சேர்த்து வைத்து அடைத்துத் தைக்கிற மாதிரி கோரமான வர்ணனையையும் கூடவே (பொடி வைத்து ஊதி பற்ற) வைத்துவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்து விட்டார் கவிஞர். அதன் பலன் தான் அடுத்துவரும் பாட்டு.

குறவஞ்சியின் மார்பகத்தை வைத்து அப்படியொரு வர்ணனை. அலௌகீகமான வர்ணனை தான். ஆனாலும் கவியாய் வந்துவிட்டது வர்ணனை.

தங்கக்குடம் இரண்டு போல் பருத்த, வலுத்த மார்பகம். மேலும் பருத்தால் முறிந்துவிடும் இடுப்பு என்று அப்படியே நின்றுவிட்டதாம் மார்பகம்.

**முன்னம் கிரிவளைத்த**
**முக்கணர்குற் றாலர்வெற்பின்**
**கன்னங் கரிய குழல்க்**
**காமவஞ்சி தன் மார்பில்**
**பொன்னின் குடம்போல்**
**புடைத்தெழுந்த பாரமுலை**
**இன்னம் பருத்தால்**
**இடை பொறுக்க மாட்டாதே! (48)**

4. முன்னம்கிரிவளைத்த முக்கண்ணர் - குற்றாலநாதர். மேருமலையை வில்லாக வளைத்தவர் முன்னொரு காலத்தில். கிரி - மலை. காமவஞ்சி - குறவஞ்சி. நெற்றிக் கண்ணோடு சேர்த்து மூன்று கண் குற்றாலநாதருக்கு. புடைத்தெழுந்த - விம்மி எழுந்த.

# தேவதூதாக வருகிறாள் குறவஞ்சி

(1) பெண்ணை இப்படிக் கொடூரமாக வருணித்தால் மட்டும் போதாது. வருணனையைத் தத்ரூபமாகக் காட்ட வேண்டும். மேடையில் ஏற்றியே ஆட விட்டே காட்ட வேண்டும். அதற்கேற்ற ஒரு பெண்ணை.

வருணனைக்கு ஏற்ற ஆடையோடு, அதாவது ஆடை அற்ற கோலத்தோடு (கால்வாசி உடை, முக்கால்வாசி உடை இன்மை) காட்ட வேண்டும். பத்துப்பதினைந்து ஆடவர் சுற்றிச் சுற்றி வந்து அவள் (அலங்)கோலத்தைப் பாடிப் பாடிக் குதிக்க, இவளும் அதற்கேற்ற வகையில் ஆட வேண்டும்.

அப்படி எல்லாம் பச்சை பச்சையாகக் காட்டினால் தான் போதைக் கிறக்கத்திலேயே இருக்கிற பிரபுக்கள் கண் விழித்துப் பார்ப்பார்கள். ரசிப்பார்கள், நாடகத்தை.

மன்னன் எவ்வழி, மாநிலம் அவ்வழி என்னும் கணக்கில் கொட்டகையில் குழுமி இருக்கும் மகா ஜனங்கள் என்னும் மந்தையும், அப்பொழுது தான் எழுந்து நிமிர்ந்து விசிலடித்து ஆரவாரிக்கும்.

குறவஞ்சி ஆசிரியர் இதை எல்லாம் கண்டு தெளிந்தவர். அனுபவத்திலேயே கண்டு தெளிந்தவர். அங்கங்கே ஒன்றிரண்டு பாடலை இந்தப் போக்கில் பாடி வைத்திருப்பார். நேரம் காலத்துக்கு ஏற்ப நாடக மேடையில் அரங்கேற்றுவார். ஆட்ட பாட்டத் தோடேயே

அரங்கேற்றி விடுவார்.

அப்படிப்பட்ட பாடல்களும் ஒன்றிரண்டு அங்கங்கே இடம் பிடித்திருக்கின்றன குறவஞ்சி நூலில்.

வர்ணனையில் தான் நெடியே ஒழிய தமிழில் நாடக இயலில், கவி உருவத்தில் எல்லாம் கன கச்சிதந்தான். பயம் இல்லாமல் படிக்கலாம். அனுபவிக்கலாம். பாட்டைப் பாட்டாகப் பார்த்து அனுபவிப்பதில் குற்றம் ஏது, குறை ஏது.

★★★★★★★★★★★★★★★★

குறவஞ்சி ஆசிரியர் இப்பொழுது குறத்தியை மேடை ஏற்றுகிறார். அவளை ஆடவைக்கிறார். பாடவைக்கிறார். வசந்தவல்லியைத் தேடி அவள் வருகிற பாவனையில் ஆடிப் பாடிய படியே அழைத்து வருகிறார் குறத்தியை.

மழைவிட்டும் தூவானம் விட வில்லை என்னும் பாவனையில் அதே வர்ணனையை குறத்தியை கொண்டும் வெளிப்படுத்துகிறார் ஆசிரியர். எப்படி என்று பார்க்கலாம்.

ராகம் : தோடி தாளம் : ஆதி

பல்லவி

**வஞ்சிவந் தாள் குற**

**வஞ்சிவந் தாள்**

அனுபல்லவி

**வஞ்சி வந்தாள் திரிகூட**

ரஞ்சித மோகினி முன்னே
விஞ்சிய விரக நோய்க்குச்
சஞ்சீவி மருந்து போலே (வஞ்சி)

சரணங்கள்

மும்மை உல(கு) எங்கும் வெல்ல
கொம்மை முலையார்க்கு நல்ல
செம்மையாக் குறிகள் சொல்வ
அம்மே அம் மேஎன்று செல்வ (வஞ்சி)

சோலையில் வசந்த காலம்
வால கோகிலம் வந்தாற்போல்
கோலமலை வில்லியார்குற்
றால மலை வாழும் குற (வஞ்சி)

மாத்திரைக்கோ லதுதுள்ள
சாத்திரக்கண் பார்வை பள்ளத்
தோத்திர வடிவம்மின்ன
பூத்தமலர் கொடியென்ன (வஞ்சி) (49)

(49) திரிகூடரஞ்சித மோகினி - வசந்தவல்லி. விஞ்சிய விரக நோய் - எந்த பக்குவத்திற்கும் கட்டுப்படாத காதல் நோய். சஞ்சீவி மருந்து - உயிர் காக்கும் மருந்து.

(2) "தன்னையே தேடி வருகிறாள். யாராக இருப்பாள் இவள்" என்று யோசித்தாள் வசந்தவல்லி. அவள் தன் கண்ணை மூடி யோசிக்கிற பொழுதே வந்துவிட்டாள் குறத்தி. சும்மாவா வந்தாள் குறத்தி. குற்றாலநாதர் அருமையையும் பெருமையையும் அனுபவித்து ஆனந்தமாய் வாய்விட்டு பாடியே வந்தாள் குறத்தி.

சத்தம் கேட்டு கண்ணைத் திறந்து பார்த்தால் எதிரே நிற்கிறாள் குறத்தி. இளமையும், அழகும் துள்ளி ஆடும் உல்லாசமே பெண் உரு எடுத்து வந்து நிற்கிறது போல இருக்கிறது ஒருவகையில். இன்னொரு வகையில் பார்த்தாலோ பக்தியும் பழுத்த ஞானமுமே பெண்ணுரு எடுத்து வந்தது போல் தெரிகிறது. ஒன்றும் ஓட வில்லை வசந்த வல்லிக்கு. அதிசயம் என்றால் அப்படி ஒரு அதிசயம் அவளிடம். குழந்தை மாதிரி கொஞ்சிக் கொஞ்சிக் கேட்கிறாள் குறத்தியிடம் வசந்த வல்லி. " நீ யார்? எங்கிருந்து வந்திருக்கிறாய்" என்று.

---

செல்வ வஞ்சி - எங்கும் கிடைக்காத அழகு நிரம்பிய குறத்தி. குறி கேட்கலையா? அம்மா குறி என்று கூவி வருகிறாள் குறத்தி. வாலகோகிலம் - பருவம் வந்த குயில். கோலமலை வில்லியார் - மேருமலையை வில்லாக வளைத்த குற்றாலநாதர். மாத்திரைக்கோல் - மூங்கில் பிரம்பு. துள்ள - மினுமினுக்க. சாத்திரக்கண் - குறிசொல்லும் பார்வை. பள்ள - பேச. குறிப்பால் பேச. தோத்திர வடிவம் - பக்தியே வடிவெடுத்து வருகிற மாதிரி வந்தாள் குறத்தி. பூத்த மலர் கொடியென்ன - புஷ்பங்கள் பூத்து குலுங்கும் பூங்கொடிதான் குறத்தி. மேனியும் அங்கங்களும் பொருந்தி அமைந்த பாங்கு அப்படி. அது வருகிற மாதிரி அல்லவா வருகிறாள் குறத்தி.

விருத்தம்

**அந்தர துந் துபிமுழங்கும்**
**நன்னகர்க்குற் றாலலிங்கர்**
**அருளைப்பாடி**
**வந்த குறவஞ்சி தனை**
**வசந்தவல்லி கண்டு மனம்**
**மகிழ்ச்சி கொண்டு**
**சந்த முலை துவளும் இடை**
**தவள நகை பவள இதழ்**
**தையலே! உன்**
**சொந்த மலை எந்தமலை?**
**அந்த மலை வளம் எனக்குச்**
**சொல்லென்றாளே (50)**

---

2. அந்தரத்துந்துபி முழங்க - குறத்தி பாடுகிறாள் என்றால் குற்றாலநாதர் மேல் மனமுருகி பாடுகிறாள் என்றால் மண்ணகம் மட்டுமா? வானகமும் மயங்கும். கின்னரர் முதலிய தேவலோக வித்வான்கள் வீணை முதலிய கருவிகள் கொண்டு சேர்ந்து பாடுவார்கள். அப்படி ஒரு பாட்டு. குறத்தி பாடும் பாட்டு. துவளும் இடை - ஒசியும் இடை. தவள நகை - முத்தொளி வீசும் பற்களே சிரிக்கிற மாதிரி இருக்கும் அப்படி ஒரு சிரிப்பு. தையலே - அம்மா தாயே எங்கிருந்து வருகிறாய். அதைச் சொல் முதலில் என்று அரித்தாள் வசந்தவல்லி; குறத்தி பெண்ணைத் தான்.

ரத்தின கம்பளம் விரித்து சக்கரவர்த்தியை ராஜாவே வந்து வரவேற்று பெருமிதம் கொள்வது போன்று இருக்கிறது வசந்தவல்லியின் உபசரிப்பு. குறத்தியை குறி சொல்லும் சாதாரண குறத்தியைத்தான் வசந்தவல்லி அப்படி உபசரிக்கிறாள். வரவேற்கிறாள். கொஞ்சுகிறாள். குலாவுகிறாள்.

**சந்தமுலை துவளும் இடைத்**

**தவளநகைப் பவளஇதழ்**

**தையலே உன்**

**சொந்த மலை எந்தமலை**

**அந்தமலை வளம் எனக்குச்**

**சொல்லென்றாளே**

நம்மையும் அல்லவா அப்படி வரவேற்று உபசரிக்க வைக்கிறது குறத்தியை. சொல் சொல் என்று பரண்டவே வைக்கிறது நம்மையும்.

அன்பின் வேகம் அப்படி. அதற்கு தடை போட யாராலும் முடியாது.

மடை திறந்து அப்படியெல்லாம் பாயச் செய்கிறது அன்பை தமிழ். தமிழ்க் கவியே தான்.

★★★★★★★★★

(3) வசந்தவல்லியின் நெருக்கத்திலும் பழக்கத்திலும் கிறுகிறுத்துப் போனாள் குறவஞ்சி. தலைகால் புரியவில்லை. ஒரே கொண்டாட்டம்

குறத்திக்கு. பொட்டணத்தை, பெரிய மூட்டை முடிச்சைத்தான் அவிழ்த்து துணிமணிகளை எடுத்து ஒவ்வொன்றாய் உதறி உதறிக் காட்டுவதுபோல் குற்றால மலை வளத்தை எடுத்து எடுத்துக் காட்டுகிறாள் குறத்தி. இழை இழையாகவே, அம்சம் அம்சமாகவே, உதறி உதறிக் காட்டுகிறாள் குறத்தி. என்ன அனுபவம். என்ன நிச்சயம். என்ன தீர்க்கம். குறத்தியிடம். அவள் வாழும் பிரதேசம் பற்றியும் சமூகம் பற்றியும் பழக்க வழக்கம் பற்றியும் பிட்டுப்பிட்டு வைக்கிறாள் குறத்தி. எங்கு போய் கற்றாள் இதை. எப்படிக்கண்டாள் இதை என்று. இப்பொழுது கூடத்திகைக்கிறோம்.கல்லூரிகள் என்ன? பல்கலைகழகங்கள் என்ன? ஆராய்ச்சிமன்றங்கள், சொற்பொழிவுகள் என்ன? டன்டன் ஆக நூல் வெளியீடுகள் என்ன? இவ்வளவையும் பார்த்த பிறகும் திகைப்பு விடமாட்டேன் என்கிறது நம்மைவிட்டு.

அப்படி எல்லாம் இனிதாய் அநாயாசமாய் அள்ளி அள்ளி கொட்டுக்கிறாள் காட்சிகளை. எப்படி என்று பார்க்கலாம்.

"திரிகூடம் என்று சொல்லப்படுகிற குற்றாலம் மட்டுமல்ல. குற்றால மலையை சேர்ந்த காடுகள் சந்தனத் தோப்பிலிருந்து செண்பகவனக்காடுகள் வரை எத்தனையோ காடுகள், அருவிகள், பள்ளத்தாக்குகள், சிகரங்கள், யானை, புலி முதலிய மிருகங்கள் மயில், குயில், முதலிய பட்சி பறவைகள் நாங்கள்(வேடர்கள் ஆகிய நாங்கள்) எங்கள் பிள்ளைக்குட்டிகள் எல்லோருமே குற்றாலநாதர் சொத்துதான். அவருடைய

ராஜதானி (எஸ்டேட்) தான். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை அதற்கப்பாலுந்தான்." என்று பீடிகை போடுகிறாள் குறவஞ்சி.

குற்றாலநாதர் எஸ்டேட்டை சேர்ந்தவர்கள் நாங்கள். எங்கள் மலை குற்றால (நாதர்) மலை. எங்களவர் தான் அவர் குற்றாலநாதர் என்பதில் எத்தனை பெருமிதம் குறத்திக்கு. பேச்சுக்கு பேச்சு விட மாட்டாள் அதை.

**கூனல் இளம் பிறை முடித்த**

**வேணி அலங்காரர்**

**குற்றால திரிகூட**

**மலை எங்கள் மலையே**

அவர் தான் நாங்கள். நாங்கள் தான் அவர் என்பதில் கிடைக்கிற ஆனந்தம் தனி. கோடி ரூபாய் கொடுத்தாலும் கிடைக்குமா அது போல ஒரு ஆனந்தம்.

எட்டாத உயரத்திலிருந்து வானமே கங்கையை கொட்டுகிறது போல் இருக்கிறது குற்றாலத்து அருவிகள் தேனருவி, செண்பகாதேவி அருவி, வடவருவி, ஐந்தருவி, புலியருவி, சிற்றருவி என எங்கு பார்த்தாலும் திரிகூட மலை எல்லாம் அருவிதான்.

பொங்கிப்பரந்து அருவி அடிக்கிற அடியில் அணு அணுவாய் சிதறுகிறது நீர். துளித்துளியாக (ஸ்பிரே) சிதறுகின்றது அருவி. ஒவ்வொரு துளியிலும் ஒளி சூரிய ஒளி விழுகிறது. ஒளியால் ஊடுருவ முடியவில்லை நீரை. அதனால் பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள் என்று

விதவிதமான வண்ணங்களாய் சிதறுகிறது ஒளி. அத்தனை ஒளியும் எப்படி இருக்கிறது பார்க்க ஒன்றைஒன்று கட்டிதழுவுகின்றன. மேகத்தில் விழுந்தெழுந்த வானவில் போலவே தெரிகிறது

இந்த அனுபவத்தை எப்படி எடுத்துச் சொல்கிறாள் குறத்தி.

சூரியனே தேரோடும் ஏழு குதிரைகளோடும் அருவியில் வழுக்கி விழுந்துவிட்டான் என்றுதான் சொல்லத் தோன்றும் அப்படி மாயாஜாலம் காட்டுகின்றன குற்றால அருவி என்றே சொல்கிறாள்

**தேனருவி திரையெழும்பி**
**வானின் வழி ஒழுகும்;-**
**செங்கதிரோன் தேர்க்காலும்**
**பரிக்காலும் வழுகும்**

மேலும் சொல்கிறாள் குறத்தி. எங்கள் ஆட்கள் கொஞ்சம் முரட்டு ஆட்கள் தான். அவர்கள் மேலே ஏறிட்டு ஒரு பார்வை பார்த்தால் போதும். தேவர்களே மேல் துண்டை எடுத்து அரையில் கட்டியவர்களாய் வாய் பொத்தி கைகட்டி நிற்பார்கள். "என்ன வேண்டும்" என்று கேட்பார்கள்.

கட்டுவிடாமல் உடம்பு இருக்க ஒரு லேகியம் வேண்டும் என்பார்கள். இவ்வளவு தானே என்று காயகல்பமே செய்து கொடுத்துவிட்டு போவார்கள்

தேவர்கள்.

முரட்டுத்தனமும் உண்டு. அப்படியே இளகிய மனமும் உண்டு எங்களிடம். அன்பில் அப்படியே உருகி கரைந்து விடுவோம். எங்கள் ஊர் குரங்குகளை பார்த்தாலே தெரியும் அன்பின் பெருக்கு எப்படி என்று.

முரட்டு ஆண் குரங்குகள் மா, பலா முதலிய கனிகளை பறிக்கும். பெண் குரங்குக்கு கொடுக்கும். அதற்கு கொடுக்காமல் சாப்பிடாது ஆண் குரங்கு. பெண் குரங்கு அதை வாங்கி சாப்பிடும். அப்படியே ஆண் குரங்கு அணைத்து முத்தமிடும் பெண் குரங்கை.

மறுபடி மறுபடி தழுவ அசை வரும் ஆண் குரங்கிற்கு. அதற்காக பெண் குரங்கிடம் எனக்கில்லையா கனி என்று கொஞ்சி கேட்கும். அது கொடுக்கும் போதும் தழுவும். பிறகு கீழே உதிர்ந்து விழுந்த துண்டுகளை காட்டி இதை எடுத்துக் கொள்கிறேன் என்று பெண்ணிடம் வேண்டும். சரி என்று தலையசைக்கும் பெண். அப்பொழுதும் கட்டி அணைக்கும் ஆண் குரங்கு. மனிதர் மாதிரிதான் குரங்கும் என்கிறாள் குறத்தி. இனி பாடலின் முழு உருவம்.

ராகம் : புன்னாகவராளி தாளம் : ஆதி

கண்ணிகள்

**வானரங்கள் கனி கொடுத்து**

**மந்தியொடு கொஞ்சும்**

**மந்திசிந்து கனிகளுக்கு**
**வானரங்கள் கெஞ்சும்**
**கானவர்கள் விழிஎறிந்து**
**வானவரை அழைப்பார்**
**கவனசித்தர் வந்து வந்து**
**காயசித்தி விழைப்பார்**
**தேனருவி திரை எழும்பி**
**வானின் வழி ஒழுகும்**
**செங்கதிரோன் பரிக்காலும்**
**தேர்க்காலும் வழுகும்**
**கூனலிளம் பிறைமுடித்த**
**வேணி அலங்காரர்**
**குற்றால திரிகூட மலை**
**எங்கள் மலையே (51)**

---

வானரம் - ஆண்குரங்கு. மந்தி - பெண் குரங்கு. கானவர் - வேடர். விழிஎறிந்து - பார்க்கிற பார்வையிலேயே கட்டளையிட்டு. கவன சித்தர் - தேவலோகத்து சித்த மருத்துவர். காயசித்து - உடல்கட்டு. திரை எழும்பி - பொங்கிப்பூரித்து. செங்கதிரோன் - சூரியன். பரிக்கால் - குதிரைக்கால். கூனலிளம் பிறை - பிறைச்சந்திரன். வேணி அலங்காரர் - சடையலங்காரர், சடையப்பன்.

(4) குரங்குகளுக்கு பத்து மடங்கு ஏன் நூறு மடங்கு, ஆயிரம் மடங்கு என்றே சொல்லலாம் எங்கள் நாட்டு அருவியின் குறும்பை அட்டகாசத்தை. நான்கு பெண்கள் சேர்ந்து வட்டம் போட்டு அம்மானை ஆடுகிற மாதிரியே இருக்கும். திம், திம் என்று அருவி குதிப்பதும் ஆர்ப்பரித்து தண்ணீர் சிதறுவதும், அதாவது போகட்டும்; பாவம் எங்கள் குழந்தைகள். சின்னஞ்சிறு பசலைகள் எத்தனை பிரியமாக முற்றத்தில் சிறு வீடு கட்டி விளையாடுவார்கள். அதையே குறி வைத்து அடித்துக் கொண்டு போகும் இந்த அருவி. குய்யோ, முறையோ என்று குழந்தைகள் பின்னாலேயே ஓடும். ஆனாலும் துள்ளி, குதித்து ஒரே பாய்ச்சலில் ஓடிவிடும் அருவி.

இனி உங்கள் மாதிரி நெல், சோளம், கம்பு என்று வெள்ளாமை இல்லை எங்களிடம். தோண்டி எடுக்கிற கிழங்குதான் உணவு. துணைக்கு தேனை வைத்துக் கொள்வோம். தினையை காயப் போட்டு இடித்து மாவாக்கி வைத்திருப்போம். அதுவும் பயன்படும் சில வேளை.

பழங்கள் தான் பந்து குரங்குகள் விளையாட. பூக்களுக்கும் மணத்திற்கும் பஞ்சமே இல்லை எங்கள் நாட்டில். செண்பகப்பூ பூத்தால் போதும் தேவர்களின் மூக்கையே துளைக்கும் வாசனை.

வேறு என்ன வேண்டும் எங்களுக்கு. மகராஜ பிரபு குற்றாலநாதர் இருக்கவே இருக்கிறார். என்ன குறை எங்களுக்கு.

முழுங்குதிரைப் புனலருவி
கழங்கெனமுத் தாடும்
முற்றமெங்கும் பரந்துபெண்கள்
சிற்றிலைக்கொண் டோடும் ;
கிழங்கு கிள்ளித் தேனெடுத்து
வனம்பாடி நடிப்போம்,
கிம்புரியின் கொம்பொடித்து
வெம்புதினை இடிப்போம் ;
செழுங்குரங்கு தேமாவின்
பழங்களைபந் தடிக்கும் ;
தேனலர்சண் பகவாசம்
வானுலகில் வெடிக்கும் ;-
வழங்குகொடை மகராஜர்
குறும்பலவின் ஈசர்
வளம்பெருகும் திரிகூட
மலை எங்கள் மலையே (51)

4. கிம்புரி - யானை. வெம்புதினை - காயப் போட்டெடுத்த தினை. தேனலர் - தேன் கசியும் இதழோடு கூடிய. வெடிக்கும் - மணக்கும்.

(5) குறத்தியின் நாட்டுவளம் மேலே மேலே மேலே போகிறது. எட்டாத தூரத்துக்கே போகிறது. சூடு பிடிக்கிறது வளமான அந்த வர்ணனையில்.

எப்படி என்று பார்க்கலாம்.

"எங்கு பார்த்தாலும் நாகரத்தினங்களாய்ச் சிந்திக்கிடக்கும் காடு முழுதும்" என்கிறாள் குறத்தி. "ஒவ்வொரு ரத்தினமும் கோடி சூரியப் பிரகாசமாய் ஜொலிக்கும்" என்றும் சொல்கிறாள்.

பூரண சந்திரன் உதயமாகி மேலே வரவர எங்கள் ஊர் யானைகள் அதைப் பற்றி இழுக்கக் கையை நீட்டும். பொங்கி இறக்கிய பச்சரிசி சாதத்தின் கட்டிதான். பட்டைச் சோறு (கவளம்)தான் என்று நினைத்து மேலே போக விடாது மறிக்கும் சந்திரனை யானை. இனி, தினை விதைக்கக் காடு களைவெட்டி அழிப்பார்கள்- வேடுவர்கள். அகில் மணம் என்ன, சந்தன மணம் என்ன எல்லாம் சேர்ந்து 'கம்' என்று மணக்கும். மலைக்கு மலை, சிகரத்துக்குச் சிகரம் வரையாடு தாவிப் பறக்கும் அப்பொழுது. மந்தைமந்தையாய் மேகம் வந்து படுத்துப்புரளும் எங்கள் மலையில்! என்ன உயரம் அந்த மலை உச்சி.

**ஆடு அர(வு) ஈனும் மணி**

**கோடி வெயில் எறிக்கும்**

**அம்புலியைக் கவளம் என்று**

**தும்பிவழி மறிக்கும் ;-**

**வேடுவர்கள் தினைவிதைக்கச்**

**சாடுபுனம் தோறும்**

**பிந்தைஅகில் குங்குமமும்**

**சந்தனமும் நாறும் ;-**

**காடுதொறும் ஓடிவரை**

**ஆடுகுதி பாயும்,**

**காகம் அணு காமலையில்**

**மேகம் நிரை சாயும் ;-**

**நீடுபல(வு) ஈசர் கயி**

**லாயகிரி வாசர்**

**நிலைதங்கும் திரிகூட**

**மலை எங்கள் மலையே (51)**

(6) உள்ளுணர்வைப் பொறுத்தவரை திரிகூடமலையின் உச்சியில் நின்றே பேசுகிறாள் குறத்தி. வசந்தவல்லியின் எதிரில் இல்லை.

எங்கெங்கோ பார்க்கிறாள். வானத்தையே

5. ஆடுஅரவு - படம் எடுத்தாடும் பாம்பு. அம்புலி - நிலா. தும்பி - யானை. சாடுபுனம் - மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டு அழிபட நிற்கும் காடு. வரையாடு - மலையாடு. விந்தைஅகில் - ஒரு புத்தம் புதிய மணம் அகில் கட்டையில் உண்டு. நீடுபல(வு) - உயர்ந்த பலாமரம். நிலைதாங்கும் - எங்கெங்கு சுற்றினாலும் இங்கு வந்துவிடுவார். அப்படி ஒரு நிலையான பிடிப்பு குற்றாலத்திடத்து குற்றாலநாதருக்கு.

ஏறிட்டுப் பார்க்கிறாள் குறத்தி. அப்படியே உலகம் முழுவதையும் பார்க்கிறாள். அங்கங்கே சிந்திச் சிதறிக் கிடக்கும் மலைகள் ஒவ்வொன்றையும் பார்க்கிறாள். அளந்து காட்ட முடியுமா பொதிகைமலை வளத்தை. ஆனாலும் இமயமலைபோன்ற வேறு மலைகளை வைத்து அளந்து காட்ட முயற்சிக்கிறாள் குறத்தி. அவள் அளக்கிற முறை எப்படி.

**கயிலை எனும் வடமலைக்குத்**

**தெற்கு மலை அம்மே!**

**கனகமகா மேருவென**

**நிற்கும் மலை அம்மே!**

**சயிலமலை தென்மலைக்கு**

**வடக்கு மலை அம்மே!**

**சக மலையும் தனக்குள்**

**அடக்கும் மலை அம்மே!**

**வயிரமுடன் மாணிக்கம்**

**விளையும் மலை அம்மே!**

**வானிரவி முழைகள் தொறும்**

**நுழையும் மலை அம்மே!**

**துயிலும் அவர் விழிப்பாகி**

**அகிலம் எங்கும் தேடும்**

**தூங்கத்திரி கூட மலை**

**எங்கள் மலை அம்மே! (51)**

(7) இமயமலை, மகா மேரு மலை என்று பிரமாண்டமான பல மலைகளும் பழக்கப்பட்டவைதான் குறவஞ்சிக்கு. ஆனாலும் அவள் உள்ளத்தோடு உள்ளமாய் உணர்வோடு உணர்வாய் கலந்து தேனூற வைப்பது பொதிகை மலைதான். எப்பொழுதும் அவள் மனதோடு இருக்கிறதும் தித்திப்பைக் கொடுக்கிறதும் பொதிகை மலையேதான்.

கல்க்கண்டாய் கரைந்து எப்படி ரசமாய் ஊறுகிறது குறவஞ்சியின் நாவில் திரிகூட மலை என்று பாருங்கள்.

**செல்லினங்கள் முழவு கொட்ட**

**மயிலினங்கள் ஆடும்**

**திரிகூட மலை எங்கள்**

**செல்வமலை அம்மே.**

---

6. கனகமகா மேரு - பொன்மயமான மேருமலை. சயில மலை - சிவசைல மலை. தென்மலை - குற்றாலத்திற்கு நேர் தெற்கில் உள்ள மலை. வாள்இரவி - ஜோதிமயமான சூரியன். முழைகள் தொறும் - பொந்துபுடை ஒவ்வொன்றிலும். தேடும் - கையைவிட்டு தேடுவான். இரத்தினங்கள் விளைந்து கிடக்கின்றனவா என்று. துயிலும் அவர் - பாற்கடலில் யோகநித்திரை புரியும் மகா விஷ்ணு. விழிப்பாகி - தூக்கம் கலைந்து. உலகம் முழுவதும் அண்டபிண்ட சராசரம் அவ்வளவிலும் தேடி பார்க்கிறார். குற்றாலநாதர் எங்கே என்று! கையில் வெண்ணெய் வைத்துக் கொண்டு நெய்க்கு அலைகிற காரியம் தான் திருமாலின் காரியம். குற்றாலநாதர்தான் இருக்கிறாரே. அவரை ஏன் அங்கே இங்கே என்று தேட வேண்டும். பார்வை போய்விட்டது என்று தானே பொருள் அதற்கு.

மத்தளம் வாசிக்கிறது மேகம். ஒன்றோடொன்று போட்டிப் போட்டுக் கொண்டே வாசிக்கிறது மேகம். அந்தத் தாள இயலில் சங்கீதமே பேசுகிறது. ஆடு, ஆடு என்று நடனமாடவே வைக்கிறது. உற்சாக வெறியோடு தாள இயல் தப்பாமல் நடனமாடுகிறது மயில்.

பொதிகை மலை முழுவதும் காணலாம் இந்த காட்சியை. குறவஞ்சியின் கண்ணைவிட்டு அகலுமா இது, மனதை விட்டுத்தான் அகலுமா?

இனி பொதிகையின் உச்சியில் நின்று பார்க்கிறாள். உலக மலை எல்லாம் புடைசூழ நடுநாயகமாக கொலுவீற்றிருந்த தோரணையை திரிகூட மலையின் தோரணையைதான் அனுபவித்தாள் குறத்தி. அதை வசந்தவல்லியிடம் சொல்லவும் செய்தாள். அதோடு விட்டாளா " எங்கள் திரிகூட மலைக்கு மந்திரி பிரதானிகளாய் ஏன் சேவகர்களாகக் கூட புடை சூழ்ந்திருக்கும் மற்ற மலைகள். அவை எங்கள் மலையிலிருந்து உண்டானவைதான். எங்கள் உற்றார் - உறவினர்களுக்கு நாங்கள் கொடுத்த சீதனம் தான் அவை" என்கிறாள் குறவஞ்சி.

**கொல்லிமலை எனக்கிளைய**

**செல்லிமலை அம்மே!**

**கொழுநனுக்கு காணி மலை**

**பழனி மலை அம்மே!**

**எல்உலவும் விந்தை மலை**

**எந்தை மலை அம்மே!**

**இமயமலை என்னுடைய**

**தமையன் மலை அம்மே!**

**சொல்லரிய சாமி மலை**

**மாமி மலை அம்மே!**

**தோழி மலை நாஞ்சி(ல்) நாட்டு**

**வேள்வி மலை அம்மே;-**

**செல்லினங்கள் முழவு கொட்ட**

**மயிலினங்கள் ஆடும்**

**திரிகூட மலை எங்கள்**

**செல்வ மலை அம்மே! (51)**

(8) குற்றால மலை வளத்தை அது தானே குறத்திக்கு நாட்டுவளம்; அதை எடுத்து தெளிவாகச் சொன்னாள் குறவஞ்சி. வசந்த வல்லிக்கு செவி மாத்திரமா? நாவும் உடம்பு பூராவுமே உணர்ச்சி முழுவதுமே தேனாய் கசிகிறது. கேட்க கேட்க அப்படி இருக்கிறது குறவஞ்சி சொல்வது.

7. கொல்லிமலை - வடக்கே சேலம், நாமக்கல் மாவட்டத்தில் உள்ளது. செல்லி - தங்கை. என் தங்கையை அங்குதான் கட்டி கொடுத்திருக்கிறது. கொழுநன் - கணவன். காணி - பிறந்த இடத்து சொத்து. பழனியை விட்டு இங்கு வந்தவன் என்னை கட்டிக் கொண்டான். எல் - பிரகாசம் பொன்னொளி. எந்தை - தந்தை என் தந்தையும் பிறந்த இடமாகிய விந்திய மலையை விட்டு இங்கு வந்து குடியிருக்கிறார். குடித்தனமே நடத்துகிறார்.

கடைசியாக நெறிமுறை பிறழாத குலஆச்சாரம் பற்றி குறவர் சமூகம் பற்றி சொல்லி முடிக்கிறாள் குறவஞ்சி.

நாடு என்றால் மலையும், கடலும், வயலும், தோப்பும் மட்டுமா? அவையெல்லாம் பேருக்குத்தான் நாடு. உண்மையில் மக்கள்தான் நாடு. மக்களின் வாழ்க்கைதான் நாடு. அவர்களுடைய பண்பாடும், நெறிமுறைகளும்தான் நாடு.

மக்களுக்காகத்தான் வயலும், தோப்பும், வணிகமும் அப்படியே. அரசாங்கம், நிர்வாகம் எல்லாம் மக்களுக்காகத்தான். இப்படி நினைக்கிறாள் குறவஞ்சி.

தன் குலத்தின் மேலும் அது கடைபிடித்துவரும் ஆச்சாரத்தின் மீதும் குறத்திக்கு அழுத்தமான பிடிப்பு. அதை உயர்வாக மதிக்கிறாள். அதையே மதிக்கிறாள் உயர்வாக.

எப்படி என்று பார்க்கலாம்.

" எல்லா இனத்தாரோடும் நாங்கள் பழகுவோம். அன்பாகவே பழகுவோம். தாயாய், பிள்ளையாகவே பழகுவோம். பழகிப் பழகி உறவாடவே செய்வோம். ஆனால் பெண் கொடுக்கிறது, பெண் எடுக்கிறது எல்லாம் எங்களுக்குள் தான்.

---

என் கூடப் பிறந்த அண்ணனோ இமய மலையில் குடித்தனம் நடத்துகிறான். சாமிமலை - கும்பகோணத்தை ஒட்டியிருப்பது என் தோழிக்குக் கிடைத்தது - நாஞ்சில் வேள்வி மலை. இவ்வளவையும் கட்டி ஆள்வது எங்கள் திரிகூட மலைதான்.

வேறு எந்த இனத்தாருடனும் வைத்துக் கொள்ள மாட்டோம் அதை.

எங்கள் பழக்கவழக்கத்தையும் ஒழுங்கையும் காப்பாற்ற வேண்டும் நாங்கள். அதற்குறிய வழி அது தான்.

**ஒரு குலத்தில்ப் பெண்கள் கொடோம்**

**ஒரு குலத்தில் கொள்ளோம்**

**உறவு பிடித்தாலும் விடோம்**

**குறவர் குலம் நாங்கள்**

குலப்பெருமையை உற்சாகமாகத்தான் எடுத்துச் சொல்கிறாள் குறத்தி. ஆனால் பளிச் சென்று திகைப்பு வருகிறது. கொஞ்சம் தடைபடுகிறது பேச்சு. ஒரு சில வினாடிகள் தான் தடைபட்டது பேச்சு. பழையபடி வருகிறது பேச்சு. எப்படி வருகிறது குறத்தியிடம் இருந்து.

" எங்கள் மரபிற்கு மாறாக ஒரே ஒரு சம்பவம். முருகப்பெருமான் பிறப்பால் வேறுதான். ஆனாலும் எங்கள் குலப் பெண் வள்ளியை அவருக்கு மணம் முடித்து வைத்தோம்."

" பயங்கரமான காடு. அதில் ஒரு தினைப்புனம். அதை காவல் காத்து வந்தாள் வள்ளி. ஒரு நாள் ஒரு முரட்டு யானை மதம் கொண்டு வள்ளி மேல் பாய்ந்து வந்தது. மூர்க்கமாகவே வந்தது. நல்ல வேளை தற்செயலாக வந்த முருகன் பார்த்து யானையை விரட்டி

அடித்தார். அது மட்டுமா? யானையை விரட்டி முடுக்குவதற்குள் வெயில் உச்சிக்கு வந்து விட்டது. வேர்த்து விறுவிறுத்துப் போனாள் வள்ளி. வெயிலில் இருந்து வள்ளியை காப்பாற்ற அவர் (முருகர்) என்ன பாடுபட்டார் தெரியுமா? வேங்கை மரமாக வடிவெடுத்து வெயிலை மறைத்தார் என்றுதான் சொல்ல வேண்டும்"

"யார் செய்வார்கள் இப்படி ஒரு உபகாரம். முன்பின் தெரியாத ஆள் ஒருவர் இப்படி வந்து நம் குலத்திற்கு உதவினாரே என்று அவருடைய அருளை மெச்சி அவருக்கே எங்கள் வள்ளியை கல்யாணம் பண்ணி வைத்துவிட்டோம்"

"அன்றிலிருந்து அவரும் எங்களவர் ஆகிவிட்டார். அதற்காகவே எங்களிடம் ராஜாங்க சொத்தாக இருந்த திருப்பரங்குன்றம், பழனி, திருத்தணிகை முதலிய மலைகளை எல்லாம் அவருக்கு சீதனம் ஆக கொடுத்து விட்டோம்."

**வெருவவரும் தினைபுனத்தில்**

**பெருமிருகம் விலக்கி**

**வேங்கையாய் வெயில் மறைத்த**

**பாங்கதனை நினைந்தே**

**அருளிலஞ்சி வேலவற்கு**

**ஒரு பெண்ணை கொடுத்தோம்;**

**ஆதீனத்து மலைகளெல்லாம்**

**சீதனமாக் கொடுத்தோம்.**

ஒரு தடவைதான் ஊழி ஊழி காலத்திலும் அந்த ஒரே ஒரு தடவைதான் இப்படி நடந்து முடிந்தது என்று நாட்டு வளத்துக்கு முடிசூட்டுகிறாள் (முத்தாய்ப்பு வைக்கிறாள்) குறவஞ்சி.

**ஒரு குலத்தில்ப் பெண்கள் கொடோம்**
**ஒரு குலத்தில் கொள்ளோம்**
**உறவு பிடித்தாலும் விடோம்**
**குறவர் குலம் நாங்கள்**
**வெருவவரும் தினைபுனத்தில்**
**பெருமிருகம் விலக்கி**
**வேங்கையாய் வெயில் மறைத்த**
**பாங்கதனை நினைந்தே**
**அருளிலஞ்சி வேலவற்கு**
**ஒரு பெண்ணை கொடுத்தோம்;**
**ஆதீனத்து மலைகளெல்லாம்**
**சீதனமாக் கொடுத்தோம்;**
**பரிதிமதி சூழ்மலையை**
**திருகிவில்லாய் எடுத்த**

**பரமர்திரி கூடமலை**

**குறவர்மலை அம்மே (51)**

8. ஒருகுலத்தில் வேறொரு குலத்தில் உறவு பிடித்தாலும் விடோம் - அன்பு வைத்துவிட்டோம் ஒருவர் மேல் என்றால் உயிரை வேண்டுமானாலும் கொடுப்போம் அவருக்காக. வெருவவரும் திணைப்புனம் - பயங்கர மிருகங்கள் உலாவும் மலையின் உள்பகுதி. அதைப்பார்த்தாலே யாருக்கும் பயம் வரும். அங்கு ஒரு இடத்தில் தினை விதைத்திருந்தது. பெருமிருகம் - யானை. வேலவன் - வேலும் கையுமாய் திரியும் முருகப்பெருமான் (முருகன்) சீதனம் - திருமணப்பரிசு. பரிதி மதி சூழ் மலை - சூரிய சந்திரர் மாறி, மாறி சுற்றிவரும் மகா மேரு மலை. திருகி வில்லாய் எடுத்த பரமர் - குற்றாலநாதர். அசுரர்களை அழிக்க மகாமேரு மலையையே ஒரு திருகு திருகி பிடுங்கினார். பிடுங்கிய மலையையே வில்லாக்கிக் கொண்டார். அவர்தானே குற்றாலநாதர். அவருடைய திரிகூட மலை எங்கள் சொந்த மலை.

# நாட்டுவளம்

(1) குறத்தி சொல்கிறதை கேட்க கேட்க ஆசையாக இருந்தது வசந்தவல்லிக்கு. குற்றாலநாதரே கொஞ்சி விளையாடுகிற மாதிரி இருந்தது கேட்க, கேட்க! மலைவளம் இப்படி என்று குறத்தி நிறுத்தினாள் அவ்வளவுதான். எதையோ பறிகொடுத்த மாதிரி ஆகிவிட்டது வசந்தவல்லிக்கு. சரி, சரி. உன் நாட்டின் மலைவளம் தானே சொல்லியிருக்கிறாய். மற்ற வளம் எப்படி என்று சொல்லவில்லையே. அதையும் சொல்லக்கூடாதா? சொல். கேட்கிறேன் என்றாள் வசந்தவல்லி. குறத்தி சொல்கிறாள்.

ராகம் : கேதார கௌளனம் தாளம் : சாப்பு

கண்ணிகள்

**மாதம் மூன்று**

**மழை உள்ள நாடு**

**வருஷம் மூன்று**

**விளைவு உள்ள நாடு**

**வேதம் ஊன்றும்**

1. பலாமரம், பலாபழம், பலா சுளைகள் அதன் தேன், மணம், இவைகளை கொஞ்சம் பார்க்க வேண்டும். கொஞ்சம் நிதானமாகவே பார்க்க வேண்டும். பார்க்கிறவர்களுக்குத் தெரியும். விஞ்ஞானமே தவம் செய்து தவம் செய்து கண்டுபிடிக்கிறது பலாவை என்னும் உண்மையே தெரியும். வேதம் - சயின்ஸ். ஊன்றும் - நடும்.

**பலா உள்ள நாடு**

**விசேடம் மூன்றும்**

**குலாவுள்ள நாடு (52)**

(2) நிலவளமும் நீர்வளமும் இப்படியிருந்தால் எந்த நாடுமே உல்லாசத்தில் மிதக்கத்தானே செய்யும். கோவில், குளம், தேர், திருவிழா என்று ஆண்களும் பெண்களும் ஆனந்தத்தில் திளைக்கத்தானே செய்வார்கள்.

இளைஞர், பருவமங்கையர் இவர்களின் ஆடல் பாடல்களுக்கும் விளையாட்டிற்கும், கும்மாளிக்கும் கேட்கவே வேண்டாம். காதலுக்கு ஒரு தெய்வம் இருக்கத் தானே செய்கிறது. மன்மதன் என்ற பெயரில். அந்த தெய்வத்திற்கும் பூஜை, புனஸ்காரம், திருவிழா என நடந்து கொண்டே இருக்கும் அங்கு.

மன்மதனே தேரேறி வீதிஉலா வருகிறான் என்று தான் சொல்ல வேண்டும். எப்படி வருகிறது அலங்கார சப்பரத்தில் மன்மத பவனி.

**சூர மாங்குயில்ச்**

**சின்னங்கள் காமத்**

**துரைவந் தான்வந்**

**தானென்(று) ஊத**

**ஆர மாமுலை**

**மின்னார் அவரவர்**

**அல்குல் தேர்கள்**
**அலங்காரம் செய்ய,**
**பார மாமதி**
**வெண்குடை மிஞ்சப்**
**பறக்கும் கிள்ளைப்**
**பரிகள் முன் கொஞ்சத்;**
**தேரின் மாரன்**
**வசந்தன் உலாவும்**
**திருக்குற்றாலர்தென்**
**ஆரிய நாடே (52)**

(3) மழை என்று ஒரு தத்துவம். மேகம் என்ற உருவில் அது நடமாடுகிறது. அதன் நிறம் கருப்புத்தான். அந்தக் கருப்பில் ஒரு தனி அழகு.

---

2. சூரமாங்குயில் சின்னம் - குயிலின் சத்தம். எதையோ நினைத்து ஏக்கத்தோடு அதைக் கூப்பிடுவது போல் இருக்கும் குயிலின் தொனி. காமத்துரை - மன்மதராஜா. ஆரம் - முத்துமாலை. அல்குல்தேரை அலங்காரம் - பெண்கள் அணியும் ஒட்டியாணம். அவர்கள் உடைக்கும் நடைக்கும் தனி அழகு கொடுக்கும். வெண்கொற்றக்குடை சந்திரன், கிளிகள் தான் - தேரை இழுக்கும் குதிரைகள். கிள்ளை - கிளி. பரி - குதிரை.

ஆனாலும் பெண்ணின் கூந்தல் முடி அழகுக்கு உறைப் போடக் காணாது அதன் அழகு. அது காரணமாக வெட்கம் வந்துவிட்டது மேகத்துக்கு. அப்படியே கடலுக்குள் பாய்ந்து மூழ்கியது. கடலின் கருப்பும் ஒட்டிக் கொண்டது மேகத்தில். அங்கிருந்து ஒரே பாய்ச்சலில் பாய்ந்தது மலைமேல். அதன் உச்சிக்கே தாவியது. இந்திர தனுசு (வானவில்) என்னும் வில் கிடைத்தது அதற்கு. பெண்ணின் நெற்றிபோல் நேர்த்தியாய் வளைந்தவில். கடலில் மொண்டு வந்த நீரெல்லாம் தாரை தாரையாய் அம்பாகி விட்டன. வில், அம்பு சகிதமாக மழைக்காலம் (மழைக்காற்று) என்னும் தேரேறி வந்தது மேகம். சூரியன் ஏறிவரும் தேரையே மறித்து மூடிவிட்டது மேகம்.

கொட்டு கொட்டென்று மழையை கொட்டியும் விட்டது. இவ்வளவிற்கும் எங்கிருந்து வந்தது அதற்கு ஊக்கம். பெண்களின் கூந்தலுக்கு முன் நின்று எப்படியும் அதன் அழகை ஜெயித்துக்காட்ட வேண்டும் என்னும் முனைப்பிலிருந்து வந்ததுதான் அந்த ஊக்கம்.

**கானாச் சேர்ந்த**

**குழலார்க்கு நாணி**

**கடலைச் சேர்ந்து**

**கருப்பான மேகம்**

**வானாச் சேர்ந்த**

**முலைக்கிணையாகும்**

**மலையைச் சேர்ந்து**

**சிலை ஒன்று வாங்கி**
**நீரைச் சேர்ந்த**
**மழைத்தானா அம்பொடு**
**நீளக் கொண்டல் அம்**
**தேரேறி, வெய்யவன்**
**தேரைச் சூழ்ந்திட**
**கார்காலம் வெல்லும்**
**திருகுற்றாலர் தென்**
**ஆரிய நாடே. (52)**

(4) மழை மேகத்துக்கு மட்டுமா இப்படி ஒரு வீறாப்பு பெண்களிடம். குற்றாலத்துக் கரும்புக்குக் கூட அப்படி ஒரு வீறாப்புத்தான்.

---

3. கானாச் சேர்ந்த குழலார் - கன்னங்கரேலென்று கருத்த கூந்தல். அதைச்சீவி முடித்த பெண்கள். வானாச் சேர்ந்த - கச்சு(ரவிக்கை)க்குள் இருக்கும் மார்பகம். அதற்கு இணை கருங்கல்தான், பாறைகள் தான் மலையே தான். சிலை - வில், கொண்டல் - மழைக்காற்று, பம்பரத்தை வரிந்து வரிந்து கயிறு கொண்டு சுற்றுவது எதற்காக? வர்ணணையில் அதை வேகமாகச் சுழல வைக்கத்தான். வர்ணனையிலும் அப்படியொரு சுற்று விழுந்து கிடக்கிறது. ரசத்தில் எத்தனையோ விதம். அதில் ஒரு விதம் இந்தச் சுற்று.

கரும்பு இனிப்பானது தான். தின்னத்தின்ன இனிக்கும் கரும்பு. ஆனாலும் பெண்ணின் மதுரமான அமுதமொழிக்கு முன் எடுபடுமா கரும்பின் தித்திப்பு. தோற்றுவிடுகிறது கரும்பு. வெல்ல வழியில்லை கரும்புக்கு; அதனால் அவமானம். அதை ஒட்டிக் கோபம் வந்து விடுகிறது கரும்புக்கு. கோபத்தில் பெண்களை மரியாதை கொடுக்காமலே பேசிவிடுகிறது கரும்பு. எதையும் பொறுத்துக் கொள்வார்கள் ஆடவர்கள். பெண்ணை மதிக்கவில்லை என்றால் அதைப் பொறுக்கவே மாட்டார்கள். பொறுக்க முடியாது அவர்களால். கோபத்தில் என்ன செய்தார்கள். குழி தோண்டினார்கள். கரும்பைக் கண்டம் துண்டமாக வெட்டித் தரித்தார்கள். தரித்த துண்டுகளை ஒன்றுவிடாமல் உள்ளே போட்டு கொட்டி மூடியே விட்டார்கள்.

**அந்தலார் மொழி**

**தன்னைப் பழித்ததென்(று)**

**ஆடவர் மண்ணில்**

**மூடும் கரும்பு**

குழிக்குள் தள்ளி மூடினாலும் சும்மா கிடக்கிறதா கரும்பு. மண்ணைக் கிளைத்து ஒதுக்கியபடியே தலையை நீட்டுகிறது. தோகையும் கணுவுமாக எழுந்து வருகிறது. மளமளவென வளர்ந்து பருவப்பெண் போலவே பூத்துக் குலுங்குகிறது கரும்பு.

"சும்மா விடமாட்டேன் பெண்ணை. அவர்கள்

கை அழகை, கையில் உள்ள பளபளப்பை என் தோட்டால் தோற்கடிப்பேன். கணுவால் வென்று காட்டுவேன். ரசமாக ஊறுவேன். அதிலிருந்து முத்தாக (கல்கண்டு) விளைவேன். பெண்களின் மூரலையும், பல்லின் பளபளப்பையும் சிரிப்பையுமே அடக்குவேன். கடைசிவரையும் சும்மா விட மாட்டேன், பெண்களை, மன்மதன் கைவில்லாக அமர்ந்தும் அவர்களை ஒரு கை பார்க்காமல் விட மாட்டேன்" என்று பொரிந்து தள்ளுகிறது கரும்பு.

ஆனாலும் பெண்களிடம் கரும்பின் பாச்சா பலிக்கவில்லை. நங்கையரை வெல்ல யாரால் முடியும். அதுவும் திருக்குற்றாலத்து நங்கையரை.

**அந்நலார் மொழி**
**தன்னைப் பழித்ததென்(று)**
**ஆடவர் மண்ணில்**
**மூடும் கரும்பு**
**துன்னி மீள**
**வளர்ந்து மடந்தையர்**
**தோளை வென்று**
**சுடர் முத்தம் ஈன்று**
**பின்னும் ஆங்கவர்**
**மூரலை வென்று**

**பிரியும் காலத்து**

**பெண்மையை வெல்லக்**

**கன்னல் வேளுக்கு**

**வில்லாக ஓங்கும்**

**கடவுள் ஆரியர்**

**நாடெங்கள் நாடே (52)**

அப்படி வளமாக இருக்கும் நாட்டில் வாட்டம், கலக்கம், மயக்கம் என்பவை தலைகாட்டவா செய்யும். ஏக்கம், ஏக்கத்தில் வருகிற புலம்பல் இவற்றுக்கெல்லாம் இடம் ஏது குற்றாலத்தில்.

---

4. அம் ந(ல்)லார் - அழகிய பெண்கள். அறநெறி வழுவாத பண்பாளருக்கு நல்லார் என்று பெயர். கவிஞர், ஞானியருக்கும் அதே பெயர் தான். அந்தப் பெயர் தான் பெண்ணுக்கும். துள்ளி - துள்ளி எழுந்து, தோள் -கை, முத்தம் - முத்து விளைகிற மாதிரி விளையும் கல்கண்டு. மூரல் - பல். பிரியும் காலம் - காரிய நிமித்தமாக கணவர் வேறிடம் செல்ல தனித்திருக்கும் காலம். பெண்மையை வெல்ல - பெண்ணுக்கு உரிய அடக்கத்தை தகர்க்க. கன்னல்வேளுக்கு - மன்மதனுக்கு. வில்லாக ஓங்கும் - வலுத்த ஆயுதமாகப் பயன்படுகிறது கரும்பு.

குறிப்பு :- ஆங்காரம் என்னபாடுபடுத்துகிறது. ஒன்றையும் நிம்மதியாக விட்டு வைக்கிறதில்லை ஆங்காரம். கரும்பையுந்தான் என்று சொல்ல வேண்டி இருக்கிறது. அப்படிச் சொல்வதுதான் சரி.

நாடு என்று இருந்தால், ஜீவராசிக்கூட்டம் என்றிருந்தால் தொல்லையும் இருக்கத்தானே செய்யும். எங்காவது ஒரு மூலையிலாவது, ஏதோ சிறிதளவாவது ஏக்கமும், கலக்கமும் இருக்கத்தானேசெய்யும் என்று தேடிப்பார்த்தால் வியப்பாக இருக்கும். காரணம் ஏங்கி, ஒலிக்கிற காரியமும் இருக்கவே செய்கிறது. ஊர் ஊருக்கு தெருத்தெருவிற்கு, வீட்டிற்குவீடு இருக்கத்தான் செய்கிறது. ஆனால் வீணைஒலி, பாட்டொலி, மேளதாள முழக்கம், அபிநயச்சலங்கை ஒலி, முரசொலி இவற்றில் எல்லாந்தான் அந்தநாதம் தொனிக்கிறது. காதலுக்காகவும், பக்திக்காகவும் ஏங்கும் ஒலிதான் அப்படிக் கேட்கிறது.

**ஏங்கக் காண்பதி**

**மங்கல பேரிகை.**

கரும்பும் நெல்லும் சேர்ந்து குலாவுகிறதும், பழங்கள் கொத்தாயிரம் குலை ஆயிரம் என்று காய்த்துத் தொங்குகிறதும், தயிர்கடையும் மத்து வீட்டு, வீட்டுக்குச் சுழல்கிறதும், புஷ்பங்கள் விரிந்து மணம் பரப்புவதையுமே பார்த்தால் பார்க்கிறவர்களிடம் கவலை எப்படி இருக்கும். மனதில் பாரம் எப்படி இருக்கும். மனசே சுத்தமாகிவிடும். மனிதன் சுத்தமாவது பற்றிக் கேட்கவா வேண்டும்.

**நீங்கக் காண்பது**

**சேர்ந்தவர் பாவம்**

**நெருங்கக் காண்பது**

கன்னலில்ச் செந்நெல்
தூங்கக் காண்பது
மாம்பழக் கொத்து,
சுழலக் காண்பது
தீந்தயிர் மத்து.
வீங்கக் காண்பது
மங்கையர் கொங்கை
வெடிக்கக் காண்பது
கொல்லையில் முல்லை,
ரங்கக் காண்பது
மங்கல பேரி,
ஈசர் ஆரிய
நாடெங்கள் நாடே. (52)

(6) குற்றாலம் என்றால் மலையும், மலைச்சாரலும் அடர்ந்த காடுகளும் நிறைந்தது தான். அடிக்கடி மழை பெய்யும். தூறலும் விழுந்து கொண்டிருக்கும். அருவியும் கொட்டிக் கொண்டுதான் இருக்கும்.

ஆனாலும் தேங்கி நிற்காது தண்ணீர் ஓடிக்கொண்டே இருக்கும். குளம், வாய்க்கால், ஆறு என்று ஓடிக்கொண்டே இருக்கும் தண்ணீர்.

5. கன்னல் - கரும்பு. தூங்க - தொங்க. வீங்க - புடைக்க வெடிக்க - கட்டவிழ.

**ஓடக் காண்பது**

**பூம்புனல் வெள்ளம்.**

இனி, எத்தனையோ தொல்லைகளை மூட்டை கட்டி மனதில் சுமந்து கொண்டுதான் வருவார்கள் மனிதர்கள். குற்றாலம் எல்லைக்கு வந்த மாத்திரத்திலேயே பஞ்சாய்ப் பறந்துவிடும் அத்தனை தொல்லைகளும். மனம் அமைதி பெற்றுவிடும். பளிங்கு போலச் சுத்தமாகி விடும் மனம். உண்மையை, அடிப்படையான உண்மையையே அந்த வெளிச்சத்தில் தெளிவாகப் பார்க்க முடியும். அப்படியே பார்ப்பார்கள் வருகிறவர்கள்.

தியான நிலையில் ஒன்றி நிற்கிறது என்றால் வேறென்ன, அதுதான்

**ஒடுங்கக் காண்பது**

**யோகியர் உள்ளம்.**

சாதாரண மனிதர்களே யோகியர் (ஞானியர்) ஆகிவிடுகிறார்கள் குற்றாலத்தில். தலமகிமையா, தீர்த்தமகிமையா, இல்லை மூர்த்தியின் மகிமைதானா ; எது என்று சொல்ல முடியவில்லை. மொத்தத்தில் குற்றால மகிமைதான். எதைப் பார்த்தாலும், கண்கொண்டு பார்த்தாலும் சரி, யோசித்துப் பார்த்தாலும் சரி, அதில் அதிலெல்லாம் அறப்பண்பே நிறைந்திருக்கும். அருளுணர்வே நிறைந்திருக்கும். தர்மநெறி அதாவது மனோதர்மம் இல்லாமல் எதுவும் இல்லை குற்றாலத்தில்.

**தேடக் காண்பது**

**நல்லறம் கீர்த்தி**

பூரிப்பு என்பதும் பொலிவு என்பதும் இதுதான். இப்படிப்பட்ட இடத்தில் எது தேயும், எது தான் வாடும் தவிப்போ, புலம்பலோ இல்லை அங்கு. ஆனாலும் ஒன்றிரண்டு அப்படி எல்லாம் தோன்றும் அதிலும் ஒரு நன்மைதான். அழகுதான்.

அது எது, எங்கு என்பதைப் பாடலில் பார்க்கலாம்.

**ஓடக் காண்பது**
**பூம்புனல் வெள்ளம்**
**ஒடுங்கக் காண்பது**
**யோகியர் உள்ளம்.**
**வாடக் காண்பது**
**மின்னார் மருங்கு,**
**வருந்தக் காண்பது**
**சூலுளைச் சங்கு.**
**போடக் காண்பது**
**பூமியில் வித்து,**
**புலம்பக் காண்பது**
**கிண்கிணிக் கொத்து.**
**தேடக் காண்பது**

**நல்லறம் கீர்த்தி**

**திருக்குற்றாலர் தென்**

**ஆரியர் நாடே (52)**

6. ஒடுங்கக் காண்பது - தன்னை மறந்து. இழந்தே - இன்னொன்றில் ஒன்றிக் கலப்பது. மின்னார் மருங்கு - பெண்ணின் இடை. மின்னல்க்கொடி போல் ஒளிர்வாள் பெண். (மின்னார்) மருங்கு - இடை. சூல்உளைச்சங்கு - பிரசவத்தில் திணறும் சிப்பி (இப்பி) வித்து - விதை. நெல் முதலிய விதை. குற்றாலத்தில் எல்லாம் தர்மநெறியோடும், ஒழுக்க நெறியோடுமே இருக்கும். வேறு ஒன்றும் இல்லையா என்று துருவித் துருவித்தேடினாலும் கிடைப்பது அதுதான். "தேடக்காண்பது நல்அறம் கீர்த்தி"

குறிப்பு : மனைவி, மக்கள், உற்றார், உறவினர் என்று சந்தோஷமாய்க் குடும்பம் நடத்துகிற வாழ்வுதான் வாழ்க்கை. தன்னைப் போலவே ஊரார், நாட்டார், உலகில் உள்ள எல்லோருமே சந்தோஷமாய் வாழ வேண்டும் என்று நினைக்க வேண்டும். உழைக்க வேண்டும். அதுதான் ஆனந்தம். வாழ்க்கையில் ஆனந்தம் என்றால் அதுதான். அதற்குப் பெயர் போகம். இனி ஆனந்தமாய் வாழ்ந்து கொண்டே எல்லாம் இறைவன் அருள். அவன் செயல்" என்று மெய்ப்பொருள் உணர்வோடு வாழ்வது யோக வாழ்க்கை. போகமும், யோகமும், பெண்ணும் மாப்பிளையும் போல் சேர்ந்திருக்க வேண்டும் வாழ்க்கையில்.

ராமனும், சீதையும் மணவறையில் சேர்ந்திருந்தது எப்படி என்றால் போகமும் யோகமும் சேர்ந்தது போல் என்கிறார் கம்பர்.

**மன்றலின் வந்து**

**மணத்தலி சேறி ;-**

**வென்றி நெடுந்தகை**

**வீரனும், ஆர்வத்(து)**

(7) கடைசியாகச் சொல்கிறாள் குறவஞ்சி. எப்படிச் சொல்லி முடிக்கிறாள் என்று பார்க்கலாம். சிருஷ்டி என்று ஒரு தத்துவம். அதுதான் பிரபஞ்சம். அணுவிலிருந்து அண்டம், பேரண்டம் முடிய எல்லாம் சிருஷ்டிதான்

இனி, அந்த சிருஷ்டித்தத்துவமே முளைத்தது குற்றாலத்தில்தான். செடியாகி, மரமாகி, பூத்து, காய்த்து கனிந்து அது செயல்படுவதும் குற்றாலத்தில் தான். கஞ்சயோனி என்னும் பிரம்மனே அங்குதான் தோன்றினான். குற்றாலத்தில் தான் தோன்றினான்.

சயின்ஸ் முதலிய கலைகள் எல்லாமே சிருஷ்டியின் அற்புதத்தைத்தானே சதா போற்றியும், பாராட்டியும், வாழ்த்தியும், வணங்கியும் வழிபாடு செய்கின்றன.

அன்னை, கலைமகளே கை கூப்பித் தொழுத வண்ணம் இருக்கிறாள் குற்றால நாட்டு அருளை எண்ணி.

---

**இன்துணை அன்னமும்**

**எய்தி இருந்தார் ;-**

**ஒன்றிய போகமும்**

**யோகமும் ஒத்தே**

கமபரையும் அவர் பாடலையும் எப்படி மதிக்கிறார் கவிஞர். கண்ணுக்குக் கண்ணாய் அல்லவா மதிக்கிறார்.

மன்றல் - திருமணம். வீரன் - ராமன். அன்னம் - சீதை எய்தி இருந்தார் - நெருங்கிச் சேர்ந்திருந்தனர்.

அப்படிப் பார்த்தால் எத்தனை கோடி யுகங்களைக் கண்டிருக்க வேண்டும் குற்றாலம்!

**அஞ்சு நூறு**
**மகம்கண்ட நாடு,**
**அநேக கோடி**
**யுகம்கண்ட நாடு.**
**கஞ்ச யோனி**
**உதிக்கின்ற நாடு,**
**கமல வாணி**
**துதிக்கின்ற நாடு. (52)**

(8) சும்மா சொல்லக் கூடாது குறவஞ்சியை. ஒன்றைப் பற்றிச் சொல்ல நேர்ந்தால் அதை அவள் ஆரம்பிக்கிறதே ஒரு தினுசு. சாகித்யத்தில் பல்லவி மாதிரித்தான் அவள் ஆரம்பிக்கிற பாங்கு. மாதம் மூன்று மழையுள்ள நாடு, வருஷம் மூன்று விளைவுள்ள காடு என்று ஆரம்பிக்கிறாள். இனி அதை முடிக்கிற தோரணை இருக்கிறதே அதுவும் ஒரு தனிப் போக்குத்தான். நாடகத்தின் காட்சி ஒன்று முடிகிற பொழுது படுதா விழுகிற மாதிரிதான் அது. கஞ்சயோனி உதிக்கின்ற நாடு, கமலவாணி துதிக்கின்ற நாடு என்று மங்களம் பாடிய படியே அல்லவா விழுந்து நிற்கிறது படுதா. என்ன எடுப்பு, என்ன முடிப்பு. படுதா

விழுந்தாலும் விடமாட்டேன் என்கிறாள் குறத்தி. நாட்டுவளம் இப்படி என்றால் அதன் தலவளம் எப்படி என்று தெரிய வேண்டாமா, கேள், சொல்கிறேன் என்று ஆரம்பிக்கிறாள் குறத்தி.

"குற்றால நாட்டுக்குத்தலம் (ராஜதானிப் பட்டிணம்) குற்றாலந்தான். இதே குற்றாலந்தான். இத்திருக்குற்றாலத்தைச் சுற்றி ஒரே காடு, இருண்ட காடு. மலைச்சாரல் எங்கும் பச்சைப் பசேல் என்ற பசுங்காடு தான். ஆண் யானையும், பெண் யானையும் ஜோடி, ஜோடியாய்த் திரியும் காட்டில். மந்தை மந்தையாகவே திரியும் யானைக் கூட்டம், வில்லும் கையுமாய் வேடர்களும் சுற்றி அலைவார்கள் காட்டில்.

ஒரு வேடன். அவனுக்கு திருக்கயிலாய மலையைப் பார்த்து விட வேண்டும் என்று ஒரே ஆசை. முடியவில்லை, தவியாய்த் தவித்தான். உதவ யாரும் இல்லையே என்று தவித்த வேளையில் "என் பின்னே வா, நான் காட்டுகிறேன் கைலையங்கிரியை" என்று வேடனை அழைத்துப் போனது நரி. கண் குளிர அவன் கண்டு தரிசிக்கவும் உதவியது.

---

7. பல்லாயிரம் வருஷம் கண்டது யுகம். பல்லாயிரம் யுகத்தையே கண்டது மகம். குற்றாலத்தை எடுத்துக் கொண்டால் மகங்களையே பல கண்டது. கஞ்சயோனி - பிரம்மன். தாமரையில் பிறந்தவன் பிரம்மன். கஞ்சம் - தாமரை. யோனி - பிறந்தவன். கமலவாணி - சரஸ்வதி. சகல கலைகளுக்கும் தெய்வம். அவள் இருப்பதும் தாமரையில்தான். கமலம் - தாமரை. வெள்ளைத் தாமரையில் வீற்றிருந்த படியே வீணை வாசிக்கிறாள், பாடுகிறாள், பாடிக்கொண்டே இருக்கிறாள். வாணி - கமலவாணி.

அத்தனை மகிமை குற்றாலத்துக்கு. பிரம்மா என்ன, மகாவிஷ்ணு என்ன, வேதங்கள் (சயின்ஸ் சம்பந்தமான சாஸ்திரங்கள்) தான் என்ன, கூவிக் கூவி அலைகின்றன. ஆனாலும் காண முடியாது பெருமானை. அப்படி அரியதில் அரியவன் குற்றாலநாதன். அவன் அமர்ந்து பக்தர்களைப் பரவசப்படுத்தும் ஆனந்த பவனம் அல்லவா குற்றாலம். அதன் சிறப்பை யார் சொல்ல.

விருத்தம்

**அரியோடு அயனோடு**
**மறையுந்தான் தினந்தேட**
**அரிதாய் நின்ற**
**திரிகூடப்பதிஇருக்கும்**
**திருநாட்டு வளம் உரைக்கத்**
**தெவிட்டாதம் மே!**
**கரிகூடப் பிடிதிரியும்**
**சாரலிலே ஒரு வேடன்**
**கைவில் ஏந்தி**
**நரிகூடக் கயிலைசென்ற**
**திரிகூடத் தல மகிமை**
**நவிலக்கே ளே.** **(53)**

8. அரி - மகாவிஷ்ணு. அயன் - பிரம்மன். மறை - துதிப்பாடல். விஞ்ஞான உணர்வோடு துதிக்கும் பாடல். கரி - ஆண் யானை. பிடி - பெண்யானை. நவிலக்கேள் - சொல்கிறேன் கேட்க வேண்டும் நீ.

(9) குற்றாலத்தில் கோவிலை ஒட்டி விழுகிறதே அருவி, வடவருவி. அது ஒன்று போதும். குற்றாலத்தின் மகிமையை எடுத்துக்காட்ட. பால்க்கடலே பொங்கி எழுந்து ஆகாயத்திலிருந்து பூமியில் கொட்டுகிற மாதிரி அல்லவா இருக்கிறது. ஆகாய கங்கை என்றே சொல்ல வேண்டும். அதுதான் அருவியாக விழுகிறது.

அது விழுகிற பாங்கில்தானே, ஏழு வண்ணங்களோடு படுத்துக்கிடக்கிறது வானவில் அதில் ஒரு தடவை குளித்தால் போதும். அது அடிக்கிற அடியில் பறந்தோடிவிடும் பிடித்த பீடை. கழுவி விட்ட கழுநீர் ஓடுகிற மாதிரி ஓடிவிடும் பாவம்.

இராகம் - பிகாரி தாளம் - ஜம்பை.

கண்ணிகள்

**கங்கைஎனும் வடஅருவி**
**தங்கும்இந்த்ர சாபம்**
**கலந்தாடில்க் கழுநீராய்த்**
**தொலைந்தோடும் பாவம்** **(54)**

இனி, கோவிலில், கோவிலை ஒட்டி மண்டபம், அவைகளில் முரசுகள், அதை ஒட்டி மேளதாளங்கள் முழங்கிய வண்ணமாக இருக்கும். தேவகானமாய்ச் செவியில் விழும் அந்த ஒலி. பழமைக்கும், பழமையானது கோவில்.

9. வடஅருவி - குற்றாலநாதர் கோவிலை ஒட்டிவிழும் அருவி. பெரிய அருவி. பிரதான அருவி என்றும் சொல்வதுண்டு. கலந்து ஆடில் - அருவி விழும் இடம் போய் நின்றால் போதும். அருவியோடு நாம் ஆடுவோம். நம்மோடு அருவியும் ஆடும். ஒரே விளையாட்டுத்தான்.

ஊரும் அப்படியே. நாலு யுகமும் அதற்கு ஒரு நாள் மாதிரி தான். எத்தனையோ யுகங்களைக் கண்ட நாடு. கோவிலுங்கூடத்தான்.

**மன்றுதனில் தெய்வமுர(சு)**
**என்றுமேல் முழங்கும்.**
**வளமைபெறும் சதுரயுகம்**
**கிழமைபோல் வழங்கும். (54)**

(10) 'சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல்' என்று ஒரு உத்தி. பேச்சுக்கும் அதுதான் அழகு, எழுத்துக்கும் அதுதான் அழகு. கலை என்றே சொல்லலாம் அதை. கலைப்பண்பு அதில் நிறைந்திருக்கிறது.

குறவஞ்சியின் பேச்சில் அந்தக் கலைப் பண்பை அப்படியே பார்க்கிறோம். அவள் பேசுகிறாள் என்றால் விஷயம், உணர்ச்சி பாத்திரம், நாடகம் எல்லாம் அப்படி அப்படியே நேரில் வந்து நிற்கின்றன. காதில் விழுகிற ஒவ்வொன்றும் கண்ணில் படுகின்றன. குறவஞ்சி பேசுகிறதைக் கேட்டால் போதும். பெரிய பேச்சாளராகி விடலாம். எழுத்தாளராகி விடலாம். அதற்காகப் பள்ளிக்கூடம், கல்லூரி என்றெல்லாம் போக வேண்டாம். பல்கலைக்கழகம் போய் ஆராய்ச்சிப் பிரிவில் சேர்ந்து பயில வேண்டாம்.

---

மேல் முழங்கும் - எக்காளமிட்டு மேலே மேலே முழங்கும். சதுரயுகம் - நான்கு யுகமும் சேர்ந்து கிழமை போல். வழங்கும் - இருபத்து நான்கு மணி நேர நாள் மாதிரி ஓடிவிடும் நூறு யுகமும்.

அங்கே இங்கே என்று போவது வெறும் விருதாக் காரியம். குளிக்கப் போய் சேற்றில் விழுந்து புரள்கிற காரியம். குறத்தி பேச்சில் இருக்கிறது தமிழ், விஷயம், உணர்ச்சி, வேகம், நயம்.

சாதாரண மக்கள் பேசுகிற பேச்சில்தான் மொழி (பாஷை) யின் வளம் வரும். மற்றைய மேதைகள் என்று ஒருவர் வாயைத் திறந்தால் என்ன வரும். கோமாளித் தனம் வரும். பாஷை (தமிழ்) வராது. அதன் பதம் பட்ட நயமோ நகாசோ வரவே வராது.

நறுக்குத் தெறித்த மாதிரி இரண்டே கீற்று, ஒன்றில் அருவி, இன்னொன்றில் கோவில். அவ்வளவுதான், குற்றாலம் என்னும் தலத்தையே அதில் மிதக்கவிட்டு விட்டாள் குறவஞ்சி. பிரமாண்டமான கப்பல் சமுத்திரத்தில் மிதக்கிற மாதிரி மிதக்கிறது குற்றாலம். குறத்தியின் இயல்பான பேச்சில்.

அப்படிச் சமுத்திரமாய் விரிந்து விட்டது இரண்டு கீற்றும். இனி கோவில் இருக்கிறது, அருவி இருக்கிறது, குற்றாலம் இருக்கிறது. வேறென்ன வேண்டும். இவை ஒன்றும் வேண்டாம் என்று உதறிவிட்டு, குற்றாலமா, குத்தாலாமா? குறுகிய ஆலமரமா அல்லது இத்திச் செடியா? அத்திமரமா? இல்லை பலாக்கன்று தானா என்று வார்த்தைகளை வைத்து ஆராய்ச்சியைக் கட்டி அழுதால் என்ன வரும் அதில். அறியாமை வரும், இருட்டு வரும் ஆணவம் வரும்.

தமிழ் வரவா செய்யும் அதில். நல்ல வேளை

அங்கே, இங்கே என்று ஓடவில்லை குறவஞ்சி. பிழைத்தது தமிழ்.

நகர்வளத்தைச் சொல்லி முடித்த கையோடு குற்றாலநாதர் உற்றார் உறவினர் பற்றிய கிளை வளத்தையும் சொல்கிறாள் குறவஞ்சி. பிரியமாகக் கேட்கிறாள் வசந்தவல்லி.

தாய் தந்தை இல்லைதான் குற்றாலநாதருக்கு. ஆனால் பெண் கொடுத்த மாமன் உண்டு. மைத்துனரும் உண்டு அவருக்கு.

இராகம் - முகாரி தாளம் - ஏகதாளம்

**குற்றாலர் கிளைவளத்தைக்**
**கூறக்கேள் அம்மே,**
**குலம்பார்க்கில் தேவரினும்**
**பெரிய குலம் அம்மே ;-**
**பெற்றதாய் தந்தைதனை**
**உற்று நீ கேட்கின்,**
**பெண் கொடுத்த மலையரசன்**
**தனைக்கேட்க வேண்டும்**
**வெற்றியொடு பாற்கடலில்**
**சுற்றரவில் உறங்கும்**

**வித்தகர்க்குக் கண்ணான**

**மைத்துனர்காண் அம்மே. (55)**

மாமன், மைத்துனன் இருக்கட்டும், குழந்தை குட்டிகள் அல்லவா முக்கியம். குடும்பஸ்தனுக்கு. எல்லாருமே அவர் பிள்ளைகள்தான். ஆனாலும் நான்கு தலை நிமிர்ந்த மக்கள் (பிள்ளைகள்) அவர்கள் யார் யார் ?

மூத்த பிள்ளையார் (விநாயகர்) முருகப்பெருமான், சண்டேசுவரர், திருஞானசம்பந்தர் இவர்கள் நான்கு பேருக்கும் தந்தை முறையில் இருக்கிறார் குற்றாலநாதர். அவ்வளவுதானா, தெய்வானை, வள்ளி, பிரம்மா, மன்மதன் ஆக நால்வருக்கும் மாமனாராகவும் இருக்கிறார்.

**ஆனைவா கனத்தானை**

**வானுலகில் இருத்தும்**

**ஆகுவா கனத்தார்க்கும்**

**தோகைவா னவர்க்கும்**

10. மலைஅரசன் - இமயமலை. இமயமலையின் புதல்வி பார்வதி. மலையரசன் மாமன்தான். வெற்றியொடு - உலகை அளந்த வெற்றிக்களிப்பில். சுற்றரவு - ஆதிசேஷன் எனும் பாம்பு. கண்ணான மைத்துனர் - கண்ணுக்குக் கண்ணான மைத்துனர் திருமால்.

**தானையால் தந்தைதாள்**
**எறிந்தமக னார்க்கும்**
**தருகாழி மகனார்க்கும்**
**தகப்பனார் கண்டாய்!**
**சேனைமக பதிவாசல்**
**ஆனைபெறும் பிடிக்கும்**
**தேனீன்ற மலைச்சாரல்**
**மானீன்ற கொடிக்கும்**
**கானமலர் மேலிருக்கும்**
**மோனஅய னார்க்கும்**
**காமனார் தமக்கும் இவர்**
**மாமனார் கண்டாய்.**

'தகப்பனார்ஸ்தானம், மாமனார்ஸ்தானம் எல்லாம் சொல்லியாகிவிட்டது குற்றாலநாதருக்கு. இனி தமையனார்ஸ்தானம் ஒன்றிருக்கிறதே. அதையும் சொல்லிமுடிக்கிறாள் குறத்தி.

---

55) ஆனைவாகனன் - இந்திரன். ஆகுவாகனன் - பெருச்சாளியை வாகனமாகக் கொண்ட பிள்ளையார். தோகை வாகனர் - முருகன். தானையால் - மழுவாயுதத் தால். தந்தை தாள் எறிந்த மகன் - தகப்பனார் காலை வெட்டிய சண்டேசுவரர். காழிமகன் - சீர்காழியில் அவதரித்த ஞானசம்பந்தர் இனி இந்திரனுக்கு இந்திரலோக பதவி கொடுத்தது முருகனும் மூத்த பிள்ளையாருந்தான்.ஆனை பெறும் பிடி - தெய்வானை. மானீன்ற கொடி - வள்ளியம்மை. அயன் - பிரம்மன். காமன் - மன்மதன்.இவர்கள் நால்வரும் குற்றாலநாதர் மருமக்கள்மார்.

அன்னமாய் வடிவெடுத்த பிரம்மா என்ன, பன்றியாய் வடிவெடுத்த விஷ்ணு என்ன இவர்களுக்கெல்லாம் மூலநாயகன் யாரென்றால் அது குற்றாலநாதர்தான். அப்படியானால் எல்லோருக்குமே மூத்தவர் குற்றாலநாதர். அண்ணன்தான், அண்ணாச்சியே தான் சகலமான பேர்க்கும்.

**பொன்னுலகத் தேவருக்கும்,**
**மண்ணுலகத் தவர்க்கும்,**
**பூதலத்தின் முனிவருக்கும்**
**பாதளத் துள்ளார்க்கும்,**
**அன்னவடி வெடுத்தவர்க்கும்**
**ஏனவடிவார்க்கும்**
**முன்னுதித்து வந்தவரைத்**
**தமையனென உரைப்பார் ;-**
**மொழிந்தாலும் மொழியலாம்**
**பழுதிலை காண் அம்மே!**
**நன்னகரில்க் குற்றால**
**நாதர்கினை வளத்தை**
**நான்உரைப்ப(து) அரிதுலகம்**
**தானுரைக்க வேண்டும்.** (55)

பிரபஞ்சத்தையை ஒரு கலக்குக் கலக்குகிறாள் குறவஞ்சி. எல்லா வகையிலும் குற்றாலநாதர் தான். அவரில்லாமல் யாருமில்லை. சொந்தம் என்றால் அவர்தான். அவர் ஒருவரேதான். அவரைவிட்டால் வேறு என்ன இருக்கிறது. யாருக்குமே இல்லை. எதுவுமே இல்லை அவரைத் தவிர்த்து.

தாயும் அவர்தான், தந்தையும் அவர்தான். மாமனும் அவர்தான், மாமியும் அவர்தான். அண்ணன் தம்பி எல்லாம் அவர்தான். அக்காள், தங்கையுங் கூடத்தான். வேறு யார் இருக்கிறார்கள் சொந்தம் பாராட்ட. நாமும் அவர்தான். அவர்தான் எல்லாம். அவரைத் தவிர எதுவும் இல்லை.

**மாதாவாய் வந்து**

**அமிர்தம் தந்தாள் - மனை**

**யாட்டியாய் வந்து**

**சுகம் கொடுத்தாள்**

**ஆதர(வு) ஆகிய**

---

அன்னவடிவானவர் - பிரம்மா. ஏனம் -பன்றி. மகாவிஷ்ணு எடுத்த வடிவம் அது. ஆகாயத்துக்கும் பூமிக்குமாய் ஓங்கி உயர்ந்து நின்றார் சிவபெருமான். அன்னப்பட்சியாய் மேலே மேலே பறந்து போனான் பிரம்மன். பெருமான் திருமுடியை பார்க்கத்தான் முடியவில்லை. திருமாலும் பன்றியாய் மண்ணை தோண்டித் தோண்டி பாதாளம் முட்டத் தோண்டிப் போயும் திருவடியைப் பார்க்க முடியவில்லை. இருவரும் தோற்றனர்.

**தங்கை ஆனாள் - எனக்(கு)**

**ஆசைக் கொழுந்தியும்**

**ஆனா ளே!** (சித்தர் பாடல்)

அத்தனையும் பெண்தான். ஒரு பெண்ணே இத்தனை ஆகிறாள் என்றால், எல்லாம் வல்ல இறைவனைப் பற்றி என்ன சொல்ல.

அதனால்தான் சொல்கிறாள் குறத்தி " எனக்கு என்னம்மா தெரியும். என்னால் எல்லாவற்றையும் சொல்ல முடியுமா? உலகம் சொல்லும் அம்மா அவர் பற்றி. வேறு யார் சொல்ல அவர் பற்றி" என்று

**"நான் உரைப்ப(து) - அரிதுலகம்**

**தானுரைக்கும் அம்மே"**

★★★★★★★★★

# குறி சொல்கிறது உண்டா? என்றாள் வசந்தவல்லி

(1) பேச்சைப் போல் எரிச்சல் ஊட்டுவது வேறு ஒன்றும் இல்லை. பேச்சு மாதிரி சுகம் கொடுப்பதும் வேறொன்று இல்லை. பேச்சில் ரசம் இருந்தால் கேட்கக கேட்க சுகந்தான். ரசம் இல்லை என்றால் இம்சைதான பேச்சு. குறத்தியின் பேச்சில் ரசம் ஊறியது. ஊறிக் கொண்டே இருந்தது. நேரம் போனதே தெரியவில்லை வசந்தவல்லிக்கு. குறத்தி பேசப் பேசக் கேட்டுக் கொண்டே இருக்கலாம் போல் தோன்றியது வசந்தவல்லிக்கு. அதைக் கேட்காமலிருக்க முடியவில்லை.

மனசில் உள்ளதைக் குறிபார்த்துச் சொல்ல முடியுமா என்று குறத்தியிடமே கேட்டுவிட்டாள் வசந்தவல்லி. விடுவாளா குறத்தி.

எப்பொழுது கேட்பாள் குறி என்று உள்ளூறத் தவித்துக் கொண்டிருந்தாள் குறவஞ்சி. அவள் நெஞ்சில் பால் ஊற்றின மாதிரி இருந்தது வசந்தவல்லி சொன்னது.

ஒரே சந்தோஷம் குறத்திக்கு. கிடைத்தது வேட்டை, அதுவும் கிடாய் வேட்டையாய்க் கிடைத்து விட்டது என்று எக்காளமே வந்து விட்டது குறத்திக்கு.

'குறி என்றால் நான் சொல்கிறது தான்' என்கிற எக்களிப்பில்

**வித்தாரம் என்குறி அம்மே – மணி**

**முத்தாரம் பூணும் முகிழ்முலைப் பெண்ணே !**

**வித்தாரம் என்குறி அம்மே.**

என்று குதிக்கவே ஆரம்பித்துவிட்டாள் குறத்தி.

"நாங்கள் போகாத இடம் உண்டா, நாடு உண்டா இந்தப் பூமியில் ? எங்களிடம் குறி கேட்காதவர்தான் உண்டா? தென்காசிக் கோவில் கட்டின பாண்டிய மன்னனே நான் சொன்ன குறிவாக்கை வைத்து அதன்படி தான் கட்டி முடித்தான். இனி சிவராஜதானி என்று போற்றப்படும் மதுரையில் தானே சொக்கலிங்க மூர்த்திக்கும், மீனாட்சி அம்மனுக்கும் நடந்தது கல்யாணம். மீனாட்சி அம்மையே அதற்குக் குறி கேட்டது எங்களிடம்தான். சங்கப் புலவர்களுக்கும் தெரியும் அது. அவர்களை விடவா சாட்சி வேறு வேண்டும். நாங்கள் சொன்ன குறி கேட்டு அதன்படி திருமணத்தை நடத்தினதால் தான் பாண்டிநாட்டுக்கும், கோவிலுக்கும், மக்களுக்கும் அடித்தது யோகம். ஒரே யோகந்தான் போ ! இப்படி எல்லாம் அளந்து கொட்டினாள் குறவஞ்சி.

இராகம் - தோடி தாளம் - ஆதி

பல்லவி

**வித்தாரம் என்குறி அம்மே! மணி**

முத்தாரம் பூணும்
முகிழ்முலைப் பெண்ணே! (வித்தாரம்)

சரணங்கள்

வஞ்சி மலைநாடு,
கொச்சி கொங்கு,
மக்க மராடம்,
துலுக்காணம் மெச்சி
செஞ்சி, வடகாசி,
நீளம், சீனம்,
சிங்களம், ஈழம்,
கொழும்புவங் காளம்,
தஞ்சை, சிராப்பள்ளிக்
கோட்டை, தமிழ்ச்
சங்க மதுரைதென்
மங்கலப் பேட்டை
மிஞ்சு குறிசொல்லிப்
பேராய்த் திசை
வென்றுநான் பெற்ற
விருதுகள் பாராய்!
அன்பாய் வரகுண

பாலில் கொல்லத்(து)
ஆண்டொரு நானூற்று
இருபத்து நாலில்
தென்காசி ஆலயம்
ஓங்கக் குறி
செண்பக மாறற்குச்
சொன்னபேர் நாங்கள் ;-
நன் பாண்டி ராஜ்ஜியம்
உய்யச் சொக்க
நாயகர் வந்து
மணக்கோலம் செய்ய,
இன்பா மதுரை,
மீனாட்சி குறி
எங்களைக் கேட்டதும்
சங்கத்தார் சாட்சி. (56)

---

1. வித்தாரம் - விஸ்தாரமானது, தெளிவானது. மிக மிகத் தெளிவானது நான் சொல்லும் குறி. வஞ்சி, கொச்சி, கொங்கு, மலையாளம், மராட்டியம், இவை எல்லாம் வெறும் நாட்டுப் பெயர்கள். தீப்பெட்டியை அடுக்குவது போல் பெயர்களை அடுக்கி வைத்தால் மட்டும் கவி ஆகிவிடாது. பெயர்களை சொல்லியபடியே; "அங்கெல்லாம் ஜயத்தம்பம் நாட்டினவளாக்கும் நான். அதில் பெற்ற விருதுகளாக்கும், பரிசுகளாக்கும் இவை. பார், பார் நன்றாகப் பார் என்று உணர்ச்சியானது ஒரு சுழிப்புச் சுழித்து வேகங் காட்டுகிறபொழுதுதான் எழுந்து வரும் கவி.

(2) " மன்னாதி மன்னர்களையே ஒரு கலக்குக் கலக்கித் தெளிய வைக்கும் நான் சொல்லும் குறி. அது பெற்ற விருதுகளைப் பார். அன்னை மீனாட்சியே எங்களை நம்பி கையை நீட்டுகிறாள். நாங்கள் சொல்வதை வேத வாக்காக ஏற்கிறாள். அதன்படி நடக்கிறாள். இதற்கெல்லாம் சங்கப் புலவர்களே சாட்சி. இதை எல்லாம் பார்த்தால்தான் எங்கள் குறியின் பெருமை, எங்கள் அருள்வாக்கின் மகத்துவம் புரியும்" என்று பீடிகை போட்டாள் குறவஞ்சி.

குறவஞ்சியின் பேச்சில் உள்ள வசியத்திலும், பிடிப்பிலும், கிறுகிறுத்துப் போனாள் வசந்தவல்லி சொல்கிறாள் குறத்தியிடம். 'உன் பார்வை ஒன்று போதுமே, மன்மதனே கிறங்கிவிடுவான் நீ பார்க்கிற பார்வையில். உன் பரம்பரையே குறி சொல்கிற பரம்பரை என்கிறாய்.

---

**"காவிரி தென்பெண்ணை பாலாறு – தமிழ்**

**கண்டதோர் வையை பொருநை நதி"**

இப்படி வெறுமனே ஆறுகளைப் பட்டியலிட்டுக் காட்டுவதில் ரசம் வரவா செய்யும். பட்டியலிட்ட படியே மேவிய ஆறு பல ஓடத்- திருமேனி செழித்த தமிழ்நாடு என்று உயிர் கொடுக்கிறபொழுதே கவி உருவம் பெறுகிறது. நதியே கவியாகிவிடுகிறது. அப்படி வந்து கை கொடுக்கிறது தமிழ்! மண்ணைப் பொன்னாக்குகிறதே நீர், நதி நீர் என்று அதிசயம் வருகிற பொழுது அதற்கு உருவம், பாவரூபம் கிடைத்து விடுகிறது. அதுதான் கவி உருவம்.

உன் வாயால் பலன் இன்னது என்று சொல்ல வேண்டும் நீ. உன் வாயிதழ் காட்டும் சிவப்பைப் பற்றிச் சொல்லவா, இல்லை, வாள்போல் அப்படியும் இப்படியும் வீசும் உன் கண்களின் குளுமை நிறைந்த கருமையைப் பற்றிச் சொல்லவா? பார்த்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான் உன்னை. நீ சொல்லச் சொல்லக் கேட்டுக் கொண்டே இருக்கவே வேண்டியதுதான். வேறு என்ன செய்ய முடியும் என்னால். பலவுக்குள் கனியாய் வந்த பரமர் போலத்தான் நீயும். அதிசயம் என்றால் நீதான் அதிசயம். சொல்லம்மா சொல் என்றாள் வசந்தவல்லி.

விருத்தம்

**கலவிக்கு விழிவாள் கொண்டு**
**காமனைச் சிங்கிகொள் வாய்**
**குலவித்தை குறியே ஆனால்**
**குறவஞ்சி குறைவைப்பா யோ?**
**பலவுக்குள் கனியாய் நின்ற**
**பரமர்குற் றாலர் நாட்டில்**
**இலவுக்கும் சிவந்த வாயால்**
**எனக்கொரு குறிசொல்லாயே. (57)**

2. விழிவாள் வீசி - கண் வீச்சையே வாள் வீச்சாக வீசி. காமனைக் கொள்வாய் சிங்கி - மன்மதனையே வெற்றி கொள்ளும் சிங்கியே.

(3) குறி சொல் என்று நயந்துதான் கேட்டாள் வசந்தவல்லி. உடனே " உன் மனசுக்குள் இருக்கிறதை அப்படியே பிட்டுப் பிட்டு வைக்கிறேன்" என்றாள் குறத்தி. சௌடால்தனமாக இப்படி ஆரம்பித்தவள், உடனே குறத்திக்கே உரிய முறையில் குழைகிறாள், நெளிகிறாள், பாவலாவே பண்ணுகிறாள் பேச்சில்.

'பசி கிள்ளுகிறது வயிற்றை. கொஞ்சம் கூழ் கொண்டு வா, ஒரு மண்டு மண்டுறேன் கூழை. கூடவே இரண்டு சருகு (வெற்றிலை) ஒரு சிறு பச்சைப் பாக்குத் துண்டு (சிறு பிளவு) இத்துனூண்டு புகையிலை, அதில் ஒரு நறுக்குப்போதும். கொண்டு வா, போட்டுக் கொள்கிறேன். வேகமாகக் கொண்டு வா, நெருக்குகிறது என்னைக் குறளி - குறி சொல்ல! சகுனம் எல்லாம் ஏத்தபடி பொருத்தமாக வருகிறது குறிக்கு. ஓடு,ஓடு எடுத்துக் கொண்டு வா என்கிறாள் குறத்தி.

இராகம் - அடாணா தாளம் - ஆதி

கண்ணிகள்

**என்னகுறி ஆகிலும் நான்**

**சொல்லுவேன் அம்மே - சதுர்**

**ஏறுவேன் எதிர்த்த பேரை**

**வெல்லுவேன் அம் மே!**

**மன்னவர்கள் மெச்சுகுறி**

**வஞ்சிநானம் மே - என்றன்**

**வயிற்றுக்கித் தனைபோதும்**
**கஞ்சிவாரம் மே**
**பின்னம் இன்றிக் கூழ் எனினும்**
**கொண்டு வா அம்மே - வந்தால்**
**பெரிய குடுக்கை முட்ட**
**மண்டுவேனம் மே!**
**தின்ன இலை யும் பிளவும்**
**அள்ளித்தா அம் மே - கப்பல்**
**சீனச்சரக் குத்துக்கிணி**
**கிள்ளித்தா அம்மே!**
**அம்மே அம்மே சொல்ல**
**வாராய்வெள் ளச்சி அம்மே - உனக்(கு)**
**ஆக்கம் வருகுது பார்**
**வெள்ளச்சி அம்மே!**
**விம்முமுலைக் கன்னிசொன்ன**
**பேச்சுநன் றம்மே - நேரே**
**மேல்புறத்தில் ஆந்தையிட்ட**

---

3. இவ்வளவு போதும் கூழ் என்று கையால் காட்டுகிறாள் குறத்தி. பின்னம் இன்றி - சளித்துப் புளிக்காமலிருந்தால் போதும் கஞ்சி. மூச்சு முட்ட ஒரு பிடி பிடிப்பேன் கஞ்சியை. வயிற்றைக் கிள்ளுகிறது பசி என்கிறாள்.

**வீச்சும்நன் றம்மே ;**

**தும்மலும்கா கமும் இடம்**

**சொல்லுதே அம்மே - சரம்**

**சூட்சுமுமாப் பூரணத்தை**

**வெல்லுதே அம்மே,**

**செம்மை இது நன்நிமித்தம்**

**கண்டுபா ரம்மே - திரி**

**கூடமலைத் தெய்வம் உனக்(கு)**

**உண்டு காணம் மே! (58)**

(4) வசந்தவல்லி மறைத்து மறைத்துக் குற்றாலநாதர் பேச்செடுப்பது பரக்கப் பரக்க விழிப்பது, பெருமூச்சு விடுவது, குற்றாலநாதரை எண்ணி ஏங்குவது, அவர் பேச்சை எடுத்தால் உள்ளுக்குள்ளே சிரிப்பது, வெளியே முகத்தைத் தொங்கப் போட்டுக் காட்டுவது இவ்வளவையும் குறி வைத்துப் பார்த்துவிட்டாள் குறத்தி. ஆனால் பளிச்சென்று வெளிப்படையாகச் சொல்ல முடியவில்லை. குறத்தியாலேயே முடியவில்லை.

இலை - வெற்றிலை. பிளவு - பச்சைப்பாக்கு. கப்பல் சீனச் சரக்கு - கப்பல் மூலம் கொண்டுவந்த புகையிலை. யாழ்ப்பாணம் புகையிலை போல சீனத்துப் புகையிலை. துக்கிணி - துளி அளவு. வெள்ளச்சி - வசந்தவல்லி. அரைத்துவைத்த மஞ்சள் போல் சந்தனமே போல் தள தள என்றிருக்கிறாள் வசந்தவல்லி. கன்னி - தெருவில் போகும் சிறு பெண். சொன்ன - தற்செயலாகச் சொன்ன. வீச்சு - பளிச் சென்று வந்த சத்தம். சரம் - மூச்சு. சூட்சுமுமாய் - கண்ணுக்குத் தெரிவதில்லைதான். ஆனாலும் காலத்தை வென்று நிற்பது அதுதான் 'பரிபூரணத்தை வெல்வது மாதிரி.

எந்தப் பெண்ணால்தான் உனக்கு அவன்மேல் ஆசை என்று நேருக்கு நேர் நின்று சொல்ல முடியும்? அது காரணமாகவே பம்மிப் பம்மிப் பேசுகிறாள் குறத்தி.

"திரிகூட மலையான் அருள், பரிபூரணமாக உண்டு உனக்கு. நீ யோகக்காரி. வேறு யாருக்குக் கிடைக்கும் இந்த யோகம் குற்றாலநாதரே வலிய வந்து அருள் பாலிக்கப் போகிற புண்ணியம்" என்று சொல்லிக் கொண்டே வசந்தவல்லியின் முகத்தைப் பார்த்தாள் குறத்தி, கண்ணையும் பார்த்தாள். ஏதோ தற்செயலாகப் பார்க்கிற மாதிரியே பார்த்தாள் குறத்தி. பிடிபட்டுவிட்டது வசந்தவல்லியின் மனம். அதனால் இன்னும் ஒருபடி மேலே போய் "உனக்கு வருகிற மாப்பிள்ளை இந்தக் குற்றாலத்து ஆசாமிதான்" என்று அங்கங்கே பொடி வைத்து ஊதினாள் குறத்தி. அதோடு விட்டாளா குறத்தி.

"பல்லிச் சத்தத்தைக் கேட்டாயா, அது எப்படிக் காட்டுது "குறத்தி சொல்வது தான்" சரி என்று" இப்படி ஒரு போடு, செம்போடாகவே போட்டாள் குறத்தி.

**பல்லியும் பலபலென்னப்**

**பகருது, திரிகூடத்தில்**

**கல்விமான், சிவப்பின்மிக் கான்,**

**கழுத்தின் மேல்க் கறுப்பும் உள்ளான்**

**நல்லமேல்க் குலத்தான், இந்த**

**நல்நகர்த் தலத்தானா க;-**

**வல்லியே! உனக்கு நல்ல**

**மாப்பிள்ளை வருவானம் மே! (59)**

(5) குறத்தி சொல்லச் சொல்ல வசந்தவல்லியின் முகம் சிவந்தது. அப்பொழுது பூத்த செந்தாமரைப் புஷ்பம் போலவே குளிர்ந்தும், பசந்தும், சிவந்தும், பூத்தது முகம். தாங்க முடியவில்லை ஆனந்தத்தை. வெட்கப்பட்டாள் வசந்தவல்லி. அப்படியே தரையை, பூமா தேவியைப் பார்த்துக் குனிந்து கொண்டது முகம். தரை எல்லாம் பொன்னொளி வீசிப் பூரிக்கிறது வசந்தவல்லியின் சந்தோஷத்தில்.

இவ்வளவு போதாதா குறத்திக்கு.

"அம்மா தாயே, கண்ணுக்குத் தோன்றிய அறிகுறிகளை ஒரு மாதிரி சொன்னேன். தெளிவாகச் சொல்ல வேண்டும் என்றால், உன் மனக்குறியைப் பார்த்துச் சொல்ல வேண்டும் என்றால் உன் கையைக் காட்டு. கைரேகையில் தான் தெரியும் மனம்"

இப்படி ஒரு பசப்புப் பசப்பினாள் குறிகாரி.

கட்டளைத் கலித்துறை

---

4. பல்லியும் பல பல என்னப் பகருது - கீச் கீச் என்று கீச்சிடுகிறது பல்லி. வல்லியே - வசந்தவல்லியே கேள். உனக்கு வாய்க்கப் போகிறவன் இந்த ஊர் ஆள்தான். நான் சொல்வதை நம்பு. இந்த ஊர் ஆசாமிதான். நிச்சயம் நிச்சயம். முக்காலும் நிச்சயம்.

ஆனேறும் செல்வர்
திரிகூட நாதர்
அணிநகர் வாழ்
மானே, வசந்தப்
பசுங்கொடி யே! வந்த
வேளை நன் றே,
தானே இருந்த
தலமும்நன் றேசெழும்
தாமரை போல்
கானேறும் கைம்மலர்
காட்டாய் மனக்குறி
காட்டுதற் கே! (60)

★★★★★★★★★★★★★

---

5. ஆன்ஏறும்செல்வர் - காளை வாகனத்தில் அமர்ந்து அலங்காரமாய்ப் பவனி வரும் குற்றாலநாதர். ஆன் - காளை. வந்தவேளை நன்று - சரியான நேரத்தில்தான் வந்திருக்கிறேன். தானே இருந்ததலமும் - நீ உட்கார்ந்த இடம் குறி கேட்பதற்கு மிகமிக பொருத்தமான இடம். கான் ஏறும் கைமலர் - மணம் வீசும் கையை தாமரை மலர் போன்ற கையை. காட்டாய் - இப்படி நீட்டு. மனக்குறி காட்டுதற்கு. உன் மனதில் இருப்பது அப்படியே தெரியும் கண்ணுக்கு.

# கையை நீட்டினாள் வசந்தவல்லி

(1) வசந்தவல்லி காட்டினாள் கையை. ஆசை பாதி, வெட்கம் பாதி, என்று நீட்டினாள் கையை.

"அம்மா வசந்தவல்லி! லேசுப்பட்ட கையா உன்கை. வளையல் அணிந்த கை, மோதிரம் போட்ட கை ;- வளையலில்தான் எத்தனை எத்தனை தினுசு. மோதிரத்தில் தான் எத்தனை எத்தனை தினுசு. அத்தனையும் ஒன்றாய் இருந்து கலகலவென்று கொஞ்சிக் குலாவும் கையல்லவா? உன் கையைப் பார்த்தால் தாமரைத் தளிரே வெட்கப்படும். தலைகவிழும். என்ன குளுமை, என்ன செழுமை ! உன் கையில் கிடப்பது புள்ளி புள்ளியாய் வைத்து இழுத்து விட்ட சாதாரணக் கோடா? இல்லை, இல்லை ; தெய்வ கடாட்சம் என்னும் ஒளி அல்லவா ரேகை ரேகையாய் விழுந்து கிடக்கிறது. செங்கமலமே தான் உன்கை. செங்கமல நாச்சியாரே குடி இருப்பது உன் கையில் தான்.

"நீ வசந்தப் பைங்கொடி அல்ல. சஞ்சீவிப் பைங்கொடி" இப்படிச் சொல்லிய படியேவசந்தவல்லியின் கையைப் பிடிக்க நீட்டினாள் குறத்தி தன் கையை.

இராகம் - கல்யாணி          தாளம் - சாப்பு

**கண்ணிகள்**

**முத்திரைமோ திரம் இட்ட**

கையைக்காட் டாய் அம்மே!

முன்கைமு தாரியிட்ட

கையைக்காட் டாய்,

அத்தகட கம்புனைந்த

கையைக் காட்டாய் - பொன்னின்

அலங்கார நெளியிட்ட

கையைக் காட்டாய்,

சித்திரசூ டகம் இட்ட

கையைக் காட்டாய் -பசும்

செங்கமலச் சங்கரேகைக்

கையைக் காட்டாய்,

சத்திபீ டத்திறைவர்

நன்நகர்க் குள்ளே - வந்த

சஞ்சீவி யேஉனது

கையைக் காட் டாய். (61)

---

1. முத்திரை மோதிரம் - சித்திரம் பொறித்த டாலர் மோதிரம். முதாரி - ஆள்க்காட்டி விரலில் அணியும் வளைவு. அத்த கடகம், நெளிவு, சூடகம் எல்லாம் மோதிரந்தான் விரலுக்குக்கேற்ற விதவிதமான மோதிரங்கள்

2) குறத்தியிடம் கையைக் காட்டினாள் வசந்தவல்லி. தன் இடதுகையால் வசந்தவல்லியின் கையைப் பிடித்தாள். வலதுகையால் தடவிக் கொடுத்தாள் ரேகையை. அப்படியே மயங்கி விட்டாள் குறத்தி. உண்மையிலேயே மயங்கி விட்டாள். தொட்டால் தானே சுகம் தெரியும். வயிறார உண்ட கஞ்சி மயக்கம், கை மயக்கம் எல்லாம் சேர்ந்து வருகிறது குறியில்.

கொச்சகக் கலிப்பா

**ஏழைபங்கர் செங்கைமழு**
**ஏற்றவர்குற் றாலர்வெற்பில்**
**வாழிகொண்ட மோக**
**வசந்தவல்லி கைபார்த்து**
**வீழிகொண்ட செங்கனிவாய்**
**மிக்க குறவஞ்சிபழங்**
**கூழு கொண்ட வாயால்**
**குறியை விண்டு சொல்வாளே. (62)**

(3) குறவஞ்சியிடம் வசந்தவல்லி கையை நீட்டினாள். ஒவ்வொரு ரேகையாக உற்று நோக்கினாள் குறவஞ்சி. தாங்க முடியவில்லை அதிசயத்தைக் குறவஞ்சியால் சொல்கிறாள் குறத்தி.

2. ஏழைபங்கர் - உமை ஒரு பாகர். செங்கை மழு ஏற்றவர் - மழுவாயுதத்தை ஏந்திய கையர். வாழி கொண்ட மோகவல்லி - அசைக்கமுடியாத உறுதியான ஆசைக்கு ஆளான வசந்தவல்லி. வீழி-கோவைப்பழம். அதையும் மிஞ்சிய சிவப்பு குறத்தியின் இதழ் அப்படி இருக்கிறது. அந்தச் செவ்விதழேதான் குறி சொல்லும் அவள் வாய்.

"இந்த உலகத்தில் உன்னைத் தவிர வேறு யாருக்கும் இந்த யோகம் வாய்க்கவில்லை தாயே! நீ ஒரு தெய்வப்பிறவி. உன் கை பற்ற வருகிற கண்ணாளனும் உன்னைப் போல் ஒரு தெய்வ புருஷனாகத்தான் இருப்பான். தானே தோன்றிய முழு முதல் கடவுள்தான் உனக்காகவே இங்கு வந்து காத்திருப்பான். இந்த நாட்டையே காக்க வந்த மகராசி நீ. "இதை உன்கை சொல்கிறது. ரேகை சொல்கிறது.

**பேறாக நன்நகரம்**

**காக்கும் இந்தக் கையே,**

**பிறவாத நெறியார்க்கே**

**ஏற்கும் இந்தக் கையே ;-**

அது மட்டுமா? வாய்க்கு ருசியாக வயிறாரச் சாப்பிட வழி இன்றித் தவிக்கும் அத்தனை பேருடைய பசியையும் போக்கி எல்லோரையும் காக்கிற கை இது. தெய்வப் பெண்டுகள் கூடகும்பிட்டு ஒதுங்கி வழிவிடுவார்கள் உனக்கு. அந்தப் போடு போடுகிறது உன் கை. அதிலுள்ள ரேகை.

**ஆறாத ஜனங்கள் பசி**

**ஆற்றும் இந்தக் கையே**

**அணங்கனையார் வணங்கிநித்தம்**

**போற்றும் இந்தக் கையே ;- (63)**

பாற்கடலில் அமுதம் விளைகிற மாதிரி சகல பாக்கியமும் உன் கையிலிருந்தே உண்டாகும். பாலையும்

சாதத்தையும் அளைந்த வண்ணமாகவே இருக்கும் உன்கை. பசித்தவர் பசி போக்கத்தான்.

**வீறாக நவநிதியம்**
**விளையும்இந்தக் கையே,**
**மேன்மேலும் பாலமுதம்**
**அனையும் இந்தக் கையே ;-**

அன்னதானம், சொர்ணதானம், அன்பு, கருணை முதலியவை மட்டுமா விளைகின்றன உன் கையில். இந்த உலகையே, மனுச வர்க்கத்தையே, வாழ்க்கையையே, கல்வி, கலை, பண்பாடு எல்லாவற்றையுமே பாலூட்டிச் சீராட்டி வளர்க்கிறதே உன் கை தானம்மா.

**மாறாமல் இருநிலத்தில்**
**அறம்வளர்க்கும் கையே,**
**மனை அறத்தால் அறம் பெருக்கித்**
**திறம்வளர்க்கும் கையே (63)**

பொறுமை பிறக்கிறதும் உன்னிடந்தான். கருணை பிறக்கிறதும் உன்னிடந்தான். அடக்கம், பணிவு, தியாகம் எல்லாவற்றுக்கும் தாயகமே நீ தான், உன் கைதான். கணவன், குழந்தை குட்டிகள், உற்றார், உறவினர் இவர்களை மட்டுமா வைத்து நடத்தப் போகிறாய் குடும்பம்.

3. மாறாமல் - தொடர்ந்து. மனைஅறம் - குடும்பம். வீறாக - செழிப்பாக. அனங்கு அணையார் - தெய்வம் போன்ற பெண்கள்.

பாசத்தை, பரிவை ; பொறுமையை, தியாகத்தை, கலையை, பண்பாட்டை, தூய்மையை, எளிமையை, பக்தியை, அவ்வளவையும் குடும்பமாக வைத்தல்லவா அறப்பயிரை வளர்க்க இருக்கிறாய். அவ்வளவையும் செயல்படுத்துகிற கை உன் கை. உன் கையே தான்.

**மாறாமல் இருநிலத்தில்**
**அறம்வளர்க்கும் கையே**
**மனை அறத்தால் அறம்பெருக்கித்**
**திறம்வளர்க்கும் கையே,**
**வீறாக நவநிதியும்**
**விளையும் இந்தக் கையே,**
**மேன்மேலும் பாலமுதம்**
**அனையும் இந்தக் கையே,**
**ஆறாத ஜனங்கள் பசி**
**ஆற்றும் இந்தக் கையே,**
**அணங்கனையார் வணங்கிநித்தம்**
**போற்றும் இந்தக் கையே.**

பேறு - பாக்கியம். மனிதவர்க்கம் பெற்ற பாக்கியந்தான் பெண். பிறவாத நெறியார் - இறைவன். குற்றாலநாதர். யார் வயிற்றில் தங்கி இருந்து பிறந்தார் குற்றாலநாதர்? ஒருவர் வயிற்றிலும் இல்லை. தானே தோன்றியதனிப் பெருங்கருணைதான் குற்றாலநாதர்.

குறிப்பு : கடவுளைக் கொஞ்சம் பார்த்தால் போதும். கருணையையும் நீதியையும் கொஞ்சம் யோசனை பண்ணினால் போதும். பெண்தான் கண்ணுக்குத் தெரிவாள். தாய்மையாய்ப் பூத்துக் குலுங்குகிறது தெய்வீகம். தெய்வமாய்ப் பூத்து மணக்கிறது தாய்மை. பெண்மையுந்தான்

**பேறாக நன்னகரம்**

**காக்கும் இந்தக் கையே**

**பிறவாத நெறியார்க்கே**

**வாய்க்கும் இந்தக் கையே (63)**

இனி வேளா வேளைக்குக் குழந்தைகளுக்கு உரிய ஆகாரத்தை ஆக்குகிறதும், பக்குவமாய் அதைக் குழந்தைகளுக்கு ஊட்டுகிறதும் அற்புதம். அப்படியே நாயகனுக்குப் பிடித்தமான வகைகளைக் கவனமாகப் பண்ணி, அன்போடு ஊட்டுகிறாள் பெண். வயதானவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான உணவு வகையை மருத்துவர் சொல்லி விட்டுப் போய்விடுவார். அவ்வளவையும் அப்படி அப்படியே தயாரிக்கிறாள் பெண். காலம் தவறாமல், நேரம் பிசகாமல் அவரவர்களுக்குக் கொடுத்து உபசரிக்கிறாள். எவ்வளவு ஆர்வத்தோடும், அக்கறையோடும், காப்பாற்றி வருகிறாள் பெண். அவள் இல்லை என்றால் குடும்பம் ஏது, மனுச வர்க்கம் ஏது, அன்னபூரணி என்றால் பெண்தான். அன்னபூரணன் என்று யாரும் இல்லையே ஆடவரில்.

விலைமதிக்க முடியுமா உயிரை? அரிதினும் அரிது மனித உயிர். எத்தனை கோடி வருஷமாய் தவம் செய்து தவம் செய்து அந்த உயிர் மனுச வர்க்கம் ஆகி இருக்கிறது

எத்தனை அரும்பெரும் செயல்களைச் செய்திருக்கிறது அந்த உயிர். இன்னும் எத்தனையோ

அரும்பெரும் காரியங்களை அல்லவா செய்ய இருக்கிறது அந்த மானுட உயிர். அந்த வர்க்கம் முழுவதையும் அல்லவா காப்பாற்றுகிறாள் பெண். எவ்வளவு பொறுமை வேண்டும் அதற்கு. எத்தனை தியாகம் செய்ய வேண்டும் அதற்கு. அவ்வளவையும் அடக்கமாக, ஒழுங்காக, மரியாதையாக, பக்தியாகவே, பரவச உணர்ச்சியோடேயே செய்து காக்கிறாள் பெண். இத்தனைக்கும் அவளுக்கு எங்கிருந்துதான் வந்ததோ பொறுமை.

சரஸ்வதி இருப்பதும் பெண்ணிடந்தான். லட்சுமி இருப்பதும் பெண்ணிடந்தான். சக்திதேவி இருப்பதும் அவளிடந்தான். இவர்கள் எல்லோருமே சேர்ந்திருக்கும் குடும்பந்தான் பூமாதேவி. அந்தப் பூமாதேவி தான் பெண். ஒவ்வொரு பெண்ணும் அவளேதான்.

"மாறாமல் இருநிலத்தில் அறம் வளர்க்கும் கையே மனை அறத்தால் அறம்பெருக்கித்திறம் வளர்க்கும் கையே". என்று சொல்லச் சொல்ல விளங்கும் அது.

★★★★★★★★★★★★★

# அழைக்கிறாள் உடுக்கையைக் குறவஞ்சி

(1) வசந்தவல்லியின் கையைப் பார்த்து குறவஞ்சி "கையாம்மா இது" கற்பகப் பூந்தளிர், காமதேனுவின் அமுதகலசம் என்றாள். கலைமகளும், திருமகளும் ஏன் உலகத்தைப் படைக்கும் பிரம்மனே கொலுவிருக்கும் தாமரை மலரேதான்." உன் கை என்றும் தேனூற வாயூறச் சொன்னாள் குறவஞ்சி. வெற்றுரையோ, பகட்டோ இல்லை.

தன்னை மறந்து ஆனந்த பரவசத்தோடு சொல்லும் குறவஞ்சி தன் காரியத்திலும் கண்ணாகத் தான் இருந்தாள். மாத்திரைக் கோலை வசந்தவல்லியின் கைரேகையில் வைத்து உருட்டிய படியே தெய்வங்களைக் கூப்பிட ஆரம்பித்து விட்டாள்.

"பிள்ளையாரப்பா, முருகையா, வள்ளி நாச்சியாரே, சக்கம்மாதேவியே, மாடசாமியே, கருப்பசாமியே என்று உரக்கக் கூவியே அழைக்கிறாள் குறவஞ்சி.

ஆசிரியப்பா

**குழல்மொழி இடத்தார்**
**குறும்பலா உடையார்**
**அழகுசந் நிதிவாழ்**
**அம்பல விநாயகா!**

**செந்தில் வாழ் முருகா,**

**செங்கண்மால் மருகா!**

**கந்தனே இலஞ்சிக்**

**கடவுளே சரணம் ;**

**புள்ளிமான் ஈன்ற**

**பூவையே குறக்குல**

**வள்ளி நாயகியே**

**வந்தெனக்(கு) உதவாய் ;-**

**அப்பனே மேலை**

**வாசலில் அரசே,**

**செப்பரும் மலைமேல்**

**தெய்வகன் னியர்கான் ; (64)**

மேலும் தொடர்கிறாள் குறவஞ்சி.

---

1. குழல்மொழி இடத்தார் - குழல்வாய்மொழி அம்மையோடு சேர்ந்திருக்கிறவர். குற்றாலநாதர். செந்தில் - திருச்செந்தூர். செங்கண்மால் மருகா - திருமாலின் அருமை மருமகனே. புள்ளிமான் ஈன்ற பூவை - வள்ளியம்மை. வந்து எனக்கு உதவாய் - சொல்லும் குறி பலிக்க வேண்டும். உங்கள் அருள் வேண்டும் அதற்கு என்று பிரார்த்திக்கிறாள் குறவஞ்சி.

ஆரியங் காவா
　அருள்ச்சொரி முத்தே.
நேரிய குளத்தூர்
　நின்றசே வகனே!
கோலமா காளி
　குற்றால நங்காய்
காலவைரவா
　கனதுடிக் கறுப்பா,
முன்னடி முருகா,
　வன்னிய ராயா
மன்னிய புலிபோல்
　வரும்பன்றி மாடா,
எக்கலா தேவி,
　துர்க்கை பிடாரி
மிக்கதோர் குறிக்கா(க)
　வேண்டினேன் உங்களை ;-
வந்துமுன் இருந்து
　வசந்தமோ கினிப்பெண்
சிந்தையில் நினைந்தது
　சீவனோ தாதுவோ,

**சலவையோ, பட்டோ,**

**தவசதா னியமோ,**

**கலவையோ புழுகோ,**

**களபகஸ் தூரியோ**

**வட்டிலோ, செம்போ,**

**வயிரமோ, முத்தோ**

**கட்டிலோ மெத்தையோ**

**கட்டிவ ராகனோ,**

**வைப்பொடு செப்போ**

**வரத்தொடு செலவோ** **(64)**

ஏதாவது பொன்னைப் பொருளை ஏமாந்துவிட்டு விட்டாளா, இல்லை, களவு போய்விட்டதா, என்று

1. ஆரியங்கா, குளத்தூர் இவை குற்றாலமலையை ஒட்டிய மலைப்பகுதிகள். ஐயனார், சாஸ்தா முதலிய தெய்வங்களின் குடி இருப்புகள். சொரிமுத்தையன், கருப்பன், மாடன், என்று பூர்வமான தெய்வங்கள். குலதெய்வம் போல் மக்களின் மனத்தை விட்டு அகலாத தேவதைகள் இத்தெய்வங்களிடம் வசந்தவல்லியின் ஆசை (நினைப்பு) இன்னதென்றுசொல்ல வேண்டும் என வேண்டுகிறாள் குறமகள். சீவனோ - ஆண்மேல் ஆசையா, தாது - பொன் மேலோ சலவை - சேலை. கலவை - சந்தனம். புழுகு - புனுகு. வராகன் - பவுண். வைப்பு - புதையல். வரவிலோ, செலவிலோ எது பற்றியோ சிந்திக்கிறாள் வசந்தவல்லி. காட்டுங்கள் அதை, தேவதைகளே காட்டுங்கள் அதை எனக்கு.

மேலும் கேட்கிறாள் குறவஞ்சி. வாய்க்குள்ளும், மனசுக்குள்ளும் முனங்கியபடியே கேட்கிறாள் குறவஞ்சி.

யார் மேலாவது ஆசை வைத்து அலை மோதுகிறாளா, திரிகூடநாதர்தான் விளையாட்டுக் காட்டுகிறாரா? என்ன? என்ன? என்று உரக்கவே கூவவும் செய்கிறாள் குறத்தி.

**கைப்படு திரவியம்**
**களவுபோ னதுவோ,**
**மறுவிலாப் பெண்மையின்**
**வரும்திட்டி தோஷமோ,**
**திரிகண்ண ரானவர்**
**செய்தகை மயக்கமோ,**
**மன்னர்தாம் இவள்மேல்**
**மயல்சொலி விட்டதுவோ,**
**கன்னிதான் ஒருவர்மேல்**
**காமித்த குறியோ,**
**சேலையும் வளையும்**
**சிந்திய தியக்கமோ,**
**மாலையும் மணமும்**
**வரப்பெறும் குறியோ,**
**இத்தனை குறிகளில்**

**இவள்குறி எதுவோ?**

**வைத்ததோர் குறியை**

**வகுத்தருள் வீரே! (64)**

(2) குறத்தியின் வேண்டுகோள் தெய்வங்களின் காதில் விழாமலா போகும். விழவே செய்தது. குறியும் இன்னதென்று சொல்லிவிட்டது ( காட்டிவிட்டது தெய்வம்) அதை வசந்தவல்லியிடம் சொல்கிறாள் குறவஞ்சி.

வசந்தவல்லியின் மயக்கத்துக்கும், சோர்வுக்கும் காரணம் இன்னதுதான் என்று தெய்வமே குறத்திக்கு எழுதிக் காட்டினது போலவும், அதைக் கண்ணாரக் கண்டதுபோலவும் ஒரு துள்ளு துள்ளுகிறாள் குறத்தி.

'ஆ' என்கிறாள். 'ஊ' என்கிறாள். 'ஏ' எக்கலாதேவி, சக்கம்மா என்று எழுகிறாள். பிறகு உட்காருகிறாள். வந்துவிட்டது குறி, வந்துவிட்டது குறி என்று கூப்பாடு போடுகிறாள்.

சொல்லு, சொல்லு, என்று என்னை நெருக்குகிறது. கேள், கேள் என்று வசந்தவல்லியை உசுப்புகிறாள்.

---

1. கைப்படுதிரவியம் - கைவசம் இருந்தபொருள். மறுவிலாப்பெண்மையின் - தூய்மை என்று ஒன்று உண்டென்றால் அது பெண்மைதான். பெண்ணின் அன்பும் பரிவுந்தான். திட்டிதோஷம் - பொல்லாதவர்களின் பொல்லாத பார்வையில் வரும் கோளாறு. திரிகண்ணர் - நெற்றிக்கண்ணோடு சேர்த்து மூன்று கண்ணுடையவரான சிவபெருமான், திருக்குற்றாலநாதர், கைமயக்கம் - குறும்பு. மயக்கம் - சோர்வு.

ஒருவரத்தா வருகிறாள் குறத்தி.

விருத்தம்

**கடித்திடும் அரவம் பூண்ட**

**கர்த்தர்குற் றாலர்நேசம்**

**பிடிக்குது, கருத்தும்நன் றாய்ப்**

**பேசுது, சக்க தே வி;-**

**துடிக்குதென் உதடும் நாவும்**

**சொல்லுசொல் லெனவே வாயில்**

**இடிக்குது குறளி அம்மே!**

**இனிக்குறி சொல்லக்கே ளாய் . (65)**

(3) "சக்கமாதேவி அரசல்புரசலாகக் காட்டுகிறாள். குற்றாலநாதர் மேல்கொண்ட அன்பு நன்றாக வேர்ப் போட்டுவிட்டது என்று, இது பற்றிய விபரம் முழுவதையும் நான் காட்டுகிறபடியே சொல் வசந்தவல்லியிடம் என்று குறளிப் பிசாசு பிரண்டுகிறது என்னை! கன்னத்தில் ஒரு குத்துவிட்டு இடிக்கவே செய்கிறது குறளி. நாக்கும் துடிக்கிறது. உதடும் துடிக்கிறது" என்றாள் குறத்தி அதன் பிறகு.

2. கடித்திடும் அரவம் பூண்ட கர்த்தர் குற்றாலர் - படமெடுத்துக் கொத்தும் சர்ப்பத்தை ஆபரணமாக அணிந்த திருக்குற்றாலநாதர். அவர் மேல்வைத்த அன்புதான் இறுகப் பற்றிக் கொண்டது என்று சக்கம்மா சொல்கிறாள். தெளிவாய் விழுகிறது காதில் அவள் சொல்வது. இனி குறளிப்பிசாசோ உன்னிடம் இதைச் சொல், என்று நெருக்குகிறது. அடக்கமுடியவில்லை அதை.

விபரமாகச் சொல்கிறேன். பொறுமையாகக் கேள் இப்படியும் போட்டாள் குறவஞ்சி அஸ்திவாரத்தை. இனி அதன்மேல் அவள் எழுப்புகிற கட்டிடம் எப்படி என்று பார்க்கலாம்.

"நீ பந்து ஆடும்போது பவனி வருகிறார் குற்றாலநாதர் பவனியிலும் பவனியின் தோரணையிலும் மனசைப் பறிகொடுத்து விட்டாய் நீ. எல்லாம் அதில் வந்த கோளாறுதான்" இப்படிக் கட்டுகிறாள் கட்டிடத்தைக் குறவஞ்சி.

இராகம் - பிலகரி - தாளம் - சாப்பு

கண்ணிகள்

**சொல்லக்கே ளாய்குறி**
**சொல்லக்கே ளாய் அம்மே!**
**தோகையர்க்(கு) அரசேகுறி**
**சொல்லக்கே ளாய்!**
**முல்லைப்பூங் குழலாளே,**
**நன்னகரில் வாழ்முத்து**
**மோகனப் பசுங்கிளியே,**
**சொல்லக்கே ளாய்!**
**பல்லக்கே றுந்தெருவில்**
**ஆனைநடத்தி,**
**பணிஆப ரணம் பூண்ட**

**பார்த்திபன் வந்தான்**

**செல்லப்பூங் கோதையே நீ**

**பந்தடிக்கை யில் - அவன்**

**சேனை கண்ட வெருட்சிபோல்க்**

**காணுதே அம்மே! (66)**

(4) ஆகா, விஷயம் தெரிந்துவிட்டதே குறத்திக்கு என்று திகைப்பு வந்தது வசந்தவல்லியிடம். அதை ஒட்டி வெட்கமும் வந்தது வெட்கத்தோடு வெட்கமாய்க் கோபமே வந்துவிட்டது. வசந்தவல்லிக்கே வந்துவிட்டது கோபம். கோபம் பொய்க்கோபந்தான். பெண்களுக்கே உரிய ஊடல் சம்பந்தப்பட்ட கோபந்தான். ஆனால் அது நிஜமான ஆத்திரத்தோடு வருவதுபோல் வருகிறது.

"என்ன நினைத்துக் கொண்டாய்? ஊரில், உள்ள பெண்களில் யாராவது காது கொடுத்துக் கேட்பார்களா உன் பேச்சை; குறியா சொல்கிறாய் நீ.

குறி சொல்கிறதை விட்டுவிட்டு வேறு எங்கெங்கே போகிறாயே ஏன்" என்று கொஞ்சம் அதட்டலாகவே கேட்டாள் வசந்தவல்லி.

3. தோகையர் - பெண்கள். தோகைவிரித்தாடும் மயிலை ஒத்த சாயலோடு கூடிய பெண்கள். தோகை - மயில். பார்த்திபன் - அரசன். ராஜாதிராஜனாகிய குற்றாலநாதர். வெருட்சி - ஆசையும் வெட்கமும் சேர்ந்த பயம், காதல் பயம்.

கண்ணிகள்

**நன்றுநன்று குறவஞ்சி**
**நாடகக் காரி - இந்த**
**நாட்டானபேர்க் கானவார்த்தை**
**நானறியே னோ?**
**ஒன்றுபோ டாமல்க்குறி**
**சொல்லியேவந்தாய் - பின்னை**
**உழப்பிப்போ ட்டாய் குறியைக்**
**குழப்பிப் போட்டாய் (67)**

" என்ன போக்கிரித்தனம் உன் பேச்சில். ஒரு கூட்டத்தைக் கண்டால் பயம் வந்து விடுமா என்ன, பயத்தில் காதல் வேறு வருமோ, கிறுகிறுப்பும் வருமோ? எங்கே படித்தாய் இதெல்லாம் என்று ஒரு விரட்டு விரட்டினாள் வசந்தவல்லி.

**மன்றல்வரும் சேனைதனைக்**
**கண்டுபயந் தால் - இந்த**
**மையலும் கிறுகிறுப்பும்**
**தையலர்க் குண்டோ ;**
**இன்றுவரை மேல்குளிரும்**

4. ஒன்றுபோடாமல் குறிசொல்லி வந்தாய் - ஏறுக்கு மாறாய் ஒரு வார்த்தைக் கூடப் போடாமல் ஒழுங்காகத் தானே சொன்னாய். பின்னை - ஆனால் இப்பொழுதோ உழப்புகிறாய், குழப்புகிறாய் ஏன் இப்படி என்று அதட்டினாள்.

**காய்ச்சலும் உண்டோ - பின்னை**

**எந்தவகை என்றுகுறி**

**கண்டுசொல் லடி.** **(67)**

(5) இந்த விரட்டுக்கெல்லாம் அசருவாளா குறத்தி. எத்தனை பேரைக் கண்டவள் அவள். எத்தனை பேரை எப்படி எப்படி எல்லாம் சமாளித்தவள் அவள். "பனங்காட்டு நரி சலசலப்புக்குப் பயப்படுமா என்ன" பாதிசிரிப்பும், பாதி நெளிப்புமாய்க் கேட்கிறாள் ; வசந்தவல்லியைப் பார்த்தே குறத்தி." என்னம்மா சொல்லி விட்டேன் அப்படி உன்னை நான்;- உலகத்தில் இல்லாத ஒன்றை உன் தலையில் வைத்துச் சொல்லி விட்டேனா? இல்லையே! எங்கும் நடக்கிற நடப்புத்தான். அந்த மகாராஜன் பவனியைக் கண்டு ஊரே மயங்கியது. அதிலே நீயும் ஒருத்தி, நீ மயங்கின மயக்கம் தெரியாதா என்ன? அதைப் பின்னால் சொல்கிறேன்.

"காய்ச்சல் என்றால் குளிர்காய்ச்சலா? இல்லை இல்லை" என்று சிரித்தாள் குறத்தி. கடகடவென்றே சிரித்தாள் குறத்தி.

கண்ணிகள்

**வாகனத்தில் ஏறிவரும்**

**யோக புருடன் அவன்**

---

திடுதிப்பென்று யானை, குதிரையைப் பவனியில் பார்த்தால் பயம் வரலாம். ஆனால் காதல் எப்படி வரும் என்று மேலும் ஒரு போடு போட்டாள் வசந்தவல்லி.

**வங்காரப் பவனி ஆசைப்**
**பெண்களுக் குள்ளே**
**தோகை நீ அவனைக்கண்டு**
**மோகித்தாய் அம்மே - அது**
**சொல்லப் பயந்திருந்தேன்**
**சொல்லுவேன் பின்னே ;**
**காகம் அணு காததிரி**
**கூடமலைக்கே - உன்மேல்**
**காய்ச்சல் அல்ல காய்ச்சல் அல்ல**
**காமக்காய்ச்சல் காண்**
**மோகினியே உன்னுடைய**
**கிறுகிறுப்பெல் லாம் - அவன்**
**மோகக் கிறுகிறுப்பே**
**மோகனக் கன்னி! (68)**

---

5.வாகனத்தில் - காளை வாகனத்தில். யோக புருடன் - குற்றாலநாதர். அவர் பவனியைப் பார்த்து எல்லாப் பெண்களுமே ஆசைப்பட்டார்கள். ஆனால் உன் ஆசை தனி. திரிகூடமலைக்கு - திரிகூடமலைக்கு அதிபரான அவர் மேல்கொண்ட ஆசையால் வந்தது இந்தக் காய்ச்சல். இதற்குக் காமக்காய்ச்சல் என்று பெயர். குற்றாலநாதரால் வந்த காய்ச்சல் குற்றாலநாதராலேயே விலகும் கவலைப்படாதே.

(6) நெற்றுத் தேங்காயை உடைப்பதுபோல் "பட்பட்டென்று உடைத்துவிட்டாள் குறத்தி. சப்தநாடியும் ஒடுங்கிவிட்டது" வசந்தவல்லிக்கு. எளிதில் போகுமா பொய்க்கோபம். மேலும் கொஞ்சம் தலையை, வாலை ஆட்டவே செய்கிறது.

"சாடை மாடையாக அவர் இவர் என்றுதானே சொல்கிறாய். தெரிந்தவள் என்றால் அவர் பெயர் என்ன, ஊரென்ன, விபரமாகச் சொல்ல வேண்டியதுதானே. சொல் பார்க்கலாம்" என்கிறாள் வசந்தவல்லி.

கண்ணிகள்.

**கன்னி என்று நானிருக்க**

**ஈன்நகர்க் குள்ளே - என்னைக்**

**காமி என்றாய் குறவஞ்சி**

**வாய்மதியா மல் ;-**

**சன்னையாகச் சொன்னகுறி**

**சாதிப்பாயா னால் - அவன்**

**தாரும் சொல்லிப் பேரும் சொல்லி**

**ஊரும் சொல் லடி ! (69)**

---

6. கன்னி - புத்தம் புதிய புஷ்பம். வாடாமலர். குழந்தைப் பெண். காமிஎன்றாய் - என்னைப் பார்த்தா இப்படி சொல்கிறாய். சன்னையாக - உள்ளர்த்தம் வைத்து. தார் - அடையாளமாலை.

(7) "ஊரும் பேரும் சொல்வது குறிக்கு அடுக்காது. அந்தப் பழக்கம் எங்கும் இல்லை. மேலும் உன் காதலன் பற்றிய விபரம் உனக்குத் தெரியும். உனக்குத்தான் தெரியும்.

மற்றவர்கள் தெரிய என்ன அவசியம் அதில். ஆனாலும் உனக்காக விபரம் ஒன்று மட்டும் சொல்கிறேன். அவன் முகராசிக்கு மயங்காத பெண்ணே இல்லை. அதில் அவன் பொல்லாத ஆள்" இப்படி போட்டாள் வெடிக்குண்டைத் தூக்கிக் குறத்தி.

**உன்னைப்போல் எனக்கவன்**

**அறிமுக மோ அம்மே**

**ஊரும்பேரும் சொல்லுவதும்**

**குறிமுக மோ**

**பின்னையுந்தான் உனக்காகச்**

**சொல்லுவேன் அம்மே - அவன்**

**பெண்சேர வல்லவன் காண்**

**பெண்கட்(கு) அரசே. (70)**

(8) இப்படிச் சொல்கிறாள் குறத்தி என்றால் அதைத் தாங்க முடியுமா ஒரு பெண்ணால். அதுவும் கன்னி கழியாத பெண்ணால். பொய்க்கோபம் போய் மெய்யாகவே வந்துவிட்டது கோபம் வசந்தவல்லிக்கு.

7. பெண்கட்கு அரசே - பெண்வர்க்கத்துக்கே அரிய ரத்தினமாகத் திகழும் ராஜாத்தியே.

"பசப்பை எல்லாம் விட்டுவிடு. கொழுப்பைக் கொஞ்சம் அடக்கிப் பேசு. நீயும் ஒரு பெண்ணா? இப்படித்தான் பேசுவாயா பெண்களிடம்" என்று பொரிந்து தள்ளுகிறாள் வசந்தவல்லி.

கண்ணிகள்

**வண்மையோ வாய்மதமோ**
**வித்தை மதமோ - என்முன்**
**மதியாமல்ப் பெண்சேர**
**வல்லவன் என்றாய்த்**
**கண்மயக்கால் மயக்காதே**
**உண்மை சொல்லடி - பெருங்**
**கானமலைக் குறவஞ்சி**
**கள்ளிமயிலி. (71)**

(9) அதற்கென்ன சொல்கிறேன் என்று ஆரம்பித்தாள் குறத்தி.தோசையைப் புரட்டிப் போடுகிற மாதிரி புரட்டிப்போடுகிறாள் குறத்தி. சொல்புரட்டு எப்படி என்று பார்க்கலாம்.

8. வண்மையோ - குறி சொல்வதில் சம்பாதித்த திமிரா, வாய்மதமோ - வாய்க்கொழுப்பா? என்ன பேச்சுப் பேசுகிறாய்? அவன் பெயர் என்ன என்று கேட்டால் பெண்களை வசியம் பண்ணுவதில் வல்லவன் என்கிறாயே, நீ ஒரு மனுசியா, உருட்டுப் பிரட்டை விடு. கேட்டதுக்கு நேர்பதில் சொல். உன் நீலித்தனம் தேவையில்லை.

**பெண்ணரசே, பெண்ணென்றால்**

**திரியும் ஒக் கும் ; ஒரு**

**பெண் ணுடனே சேர என்றால்**

**கூடவும் ஒக்கும்**

**திண்ணமாக வல்லவனும்**

**நாதனும் ஒக்கும்**

**திரிகூட நாதன் என்று**

**செப்பலாம் அம்மே (72)**

(10) எந்த ஒரு பெண்ணாக இருந்தாலும் அவளுக்கு வர இருக்கிற நாயகன் பற்றிச் சொல்கிற பொழுது நல்லவன், பண்பானவன், அன்பானவன் என்று தான் சொல்ல வேண்டும். நீ யோகக்காரி என்றுதான் சொல்ல வேண்டும். அப்படித்தான் சொல்வார்கள். அதைக் கேட்கக் கேட்க உச்சிகுளிரும் பெண்ணுக்கு.

அதைவிட்டு விட்டு உனக்கு மாப்பிள்ளையாய் வருகிறவன் பெரிய போக்கிரி, குடிகாரன், சூதாட்டக்காரன், குணங்கெட்டவன் என்றெல்லாம் சொல்லலாமா? பெண்ணிடம். அதைக் கேட்டுத் துடியாய்த் துடிக்கத்தானே செய்வாள் பெண்.

9. பெண் என்றால் (ஸ்)திரி. சேர என்றால் - கூட. வல்லவன் என்றால் நாதன். மூன்றையும் சேர்த்துப்பார். திரிகூட நாதன் என்று வருகிறதா இல்லையா அதுதான் நான் சொன்னது. அது புரியாமல் இப்படி மேலும் கீழும் குதிக்கிறாயே ஏன் என்கிறாள் குறத்தி. பொல்லாத நீலிதான் குறத்தி.

இனி அதற்கும் மேலே உனக்கு வாய்த்த மாப்பிள்ளை, பிற பெண்களை வசியப்படுத்துவதிலும், கைக்குள் போட்டுக் கொள்வதிலும், பெரிய கில்லாடி என்று சொன்னால் பெண்ணின் உச்சந்தலையில் இடி விழுந்த மாதிரி தானே இருக்கும்.

பொறுக்கி, பொட்டை பொறுக்கி என்பது தானே பொருள் பெண் சேரவல்லான் என்பதற்கு. இதை எப்படிப் பொறுப்பாள் பெண். எந்தப் பெண்தான் பொறுப்பாள். இதயமே பிளந்து சுக்கல் சுக்கலாய் நொறுங்கிவிட்டது போல் ஆனாள் வசந்தவல்லி.

"வாயைமூடு, பேச்சா பேசுகிறாய், பல்லைப் பல்லைக் காட்டாதே" என்று கொதித்துவிட்டாள் வசந்தவல்லி; குறத்தியிடந்தான்.

ஆனாலும் சிரிப்பை விடவில்லை குறத்தி. "ஏனம்மா அர்த்தம் புரியாமல் கோபித்துக் கொள்கிறாய் பெண் சேரவல்லான் என்றால் திரிகூடநாதன் (குற்றாலநாதன்) என்றுதான் அர்த்தம் அம்மா. உனக்கு வாய்த்த உத்தமன் உலகத்தையே உத்தமப்படுத்தும் குற்றாலநாதன்தான். இதற்கு ஏன் வருத்தம்".

தேடி வருகிறது உனக்கு யோகம். ராசாத்தி, மகராசி நீ. உன் யோகம் வேறு யாருக்கு வரும் என்று சிரிப்போடு சிரிப்பாய்ச் சொன்னாள் குறத்தி. அவ்வளவுதான் போன உயிரே திரும்பிவந்துவிட்டது வசந்தவல்லிக்கு. வெட்கமும் வந்தது. என்ன செய்தது அந்த வெட்கம்.

கண்ணிகள்

**மன்னர்திரி கூடநாதர்**

**என்னும் போதிலே - முகம்**

**மாணிக்க வசந்தவல்லி**

**நாணிக்கவிழ்ந் தாள்.**

குனிந்த தலை நிமிரவில்லை வசந்தவல்லி. அதை எப்படி நிமிர வைக்கிறாள் குறத்தி.

**நன்நகரில் ஈசர் உன்னை**

**மேவவருவார் - இந்த**

**நாணம் எல்லாம் நாளை நானும்**

**காணவே போ றேன்!**

**கைந்நொடியில்ப் பொன்னிதழி**

**மாலைவரும் காண் - இனிக்**

**கக்கத்தில் இடுக்குவையோ**

**வெட்கத்தை அம்மே!**

**என்னுமொரு குறவஞ்சி**

**தன்னை அழைத்தே - அவள்(கு)**

**ஈட்டுசரு வாபரணம்**

## பூட்டினாளே! (73)

10.கைந்நொடியில் - நொடிப்பொழுதில். பொன்னிதழி மாலை - கொன்றை மாலை. குற்றாலநாதர் அனுப்பி வைக்கும் தங்கமயமான மாலை, இனி குறத்தியை அழைத்துப் போனாள் வசந்தவல்லி. போய் என்ன செய்தாள். குறத்தியின் உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒவ்வொரு அங்கத்துக்கும் தலைக்கு நெற்றிச்சுட்டி, கழுத்துக்கு ரத்ன கண்டி, கைக்குவளையல் விரலுக்கு மோதிரம், இடுப்புக்கு ஒட்டியாணம், காலுக்கு கொலுசு என்று பொன்னாலும், மணியாலும் ஆன நகைகளை (சர்வ ஆபரணம்) பூட்டினாள். கட்டி அணைத்துக் குறத்தியை முத்தமிடவே நினைத்தாள். ஏனோ, அது செய்யவில்லை. ஆனாலும் நகையோடு ஜொலிக்கும் குறத்தியையே பார்த்துப் பார்த்து மயங்கினாள் வசந்தவல்லி.

குறிப்பு : நன்றி உணர்வு என்றால் அதன் பொருள் பெண்தான். பெண்ணுக்குத் தேவை துணைதான். ஒத்த உணர்ச்சியுடைய துணைதான். பேச்சுத் துணையே போதும் பெண்ணுக்கு. இனி உண்மையான பேச்சுத் துணை அபூர்வமாகத் தான் கிடைக்கும் பெண்ணுக்கு. அது கிடைத்து விட்டால் போதும். நன்றி உணர்வு பெருக்கெடுக்கும் பெண்ணிடம் உபசரிப்பு. எப்படி எல்லாமோ வரும் பெண்ணிடமிருந்து. தன்னிடம் உள்ளதை எல்லாம் கொடுப்பாள் பெண். தன்னையே கொடுப்பாள் பெண். காரியம் சரியா, தவறா என்றெல்லாம் எண்ணிப் பார்க்க இடம் கொடாது பெண்ணுள்ளம். தனக்கொருதுணை கிடைத்துவிட்டது என்னும் எக்களிப்பே மேலோங்கி நிற்கும் பெண்ணிடம்.

இனி, குடும்பப் பொறுப்பையும், நெறிமுறைகளையும் உயிருக்கு உயிராகவே மதிக்கிறவள் கைகேயி. நாளை ராமனுக்குப் பட்டாபிஷேகம். தன் மகனுக்கு நடக்கிற பட்டா பிஷேகம் போலவே அனுபவிக்கிறாள் கைகேயி அதை.

அப்பொழுது அவளுடைய உற்ற தோழி கூனி வந்தாள். "பரதன் நிலை, என்னாவது, உன் நிலைதான் என்னாவது யோசித்தாயா" என்று பாசாங்கு பண்ணினாள் கூனி. கோபம் வந்தது கைகேயிக்கு. "இந்தக் குடும்பத்தையே நாசமாக்கப் பார்க்கிறாயா பாதகத்தி. எதிரில் நில்லாதே. ஓடு என்று அதட்டினாள் கைகேயி". விடுவாளா கூனி, பொருத்தமான அம்சங்களை எடுத்து, திருத்தமாக அழுத்தம் கொடுத்தே கைகேயி உள்ளத்தில் ஏற்றிவிட்டாள் கூனி. அவ்வளவு தான். பரதனைச் சக்கரவர்த்தியாகவே வைத்துப் பார்க்கிறாள் கைகேயி. அவன் பக்கத்தில் கூனியை வைத்தே பார்க்கிறாள் நீதான் பரதனுக்கு (சக்கரவர்த்திக்கு) உற்ற தாய் என்கிறாள். அதோடு விட்டாளா கைகேயி பரதனுக்குப் பட்டம் கட்ட வேண்டுமென்றால் அதற்கு நான் என்ன செய்ய வேண்டும். அதற்குரிய உபாயம் என்ன என்று கூனியிடமே கெஞ்சியும் கொஞ்சியும் கேட்கவே செய்கிறாள் கைகேயி.

கூனியும் சொல்கிறாள். "ஏற்கனவே உனக்கு இரண்டு வரம் தர வேண்டி இருக்கிறதல்லவா தசரதன். அதில் ஒன்று பரதனுக்குப் பட்டம் கட்ட வேண்டும். இன்னொன்று பதினான்கு வருஷம் ராமன் வனவாசம் செய்ய வேண்டும் என்று கேள். கேட்டபடி கிடைக்கும்" என்றாள் கூனி. தெய்வத்தின் குரலாகவே பட்டது

கைகேயிக்கு. பாற்கடலில் அமுதம் பொங்கியதுபோல் ஆனந்தம் பொங்கியது கைகேயிக்கு. பொன்னும் பொருளும் அள்ளிக் கொடுத்தாள் கூனிக்குக் கைகேயி.

**உரைத்த ஊனியை**
**உவந்தனள் உயிருறத்**
**தழுவி**
**நிரைத்த மாமணி**
**ஆரமும் நிதியமும்**
**நீட்டி**
**இரைத்த வேலைசூழ்**
**உலகம் என் ஒருமகற்(கு)**
**ஈந்தாய்**
**தரைக்கு நாயகன்**
**தாய்இனி நீ எனத்**
**தணியா**

நீ தான் சக்கரவர்த்தியின் (பரதனின்) தாய் என்று கூனியைத் தழுவினாள், பொன்னும் பொருளுமாய் வாரி வாரி வழங்கினாள் கூனிக்கு கைகேயி.

கம்பர் பாடல் கவிராயர் உள்ளத்தைக் குழைத்துப் பிசைந்திருக்கிறது.

**என்னும் ஒரு குறவஞ்சி**

**தன்னை அழைத்தே - அவட்(கு)**

**ஈட்டு சரு வாபரணம்**

**பூட்டினாளே**

என்று எப்படிக் குதிபோட்டு வருகிறது கவிராயரிடமிருந்து அது.

★★★★★★★★★★★★★★★

## சிங்கியைத் தேடி வருகிறான் சிங்கன்

(1) குறத்தியும், வசந்தவல்லியும் ஒருவரை ஒருவர் விஞ்சி இன்ப உணர்ச்சியில் திளைக்கிறார்கள். இந்தநேரம் பார்த்து நாடக மேடையில் படுதா விழுகிறது. மேடையின் தரைத்தளத்தையே தொட்டு இறங்கி விட்டது படுதா.

சிறிது நேரத்தில் மேலே ஏறுகிறது படுதா அப்பொழுது முறுக்கிய மீசையோடு சிங்கன், அவன்தான் குறத்தியின் கணவன், கம்பீரமாக நிற்கிறான். சுற்றுமுற்றும் பார்க்கிறான்.

வசந்தவல்லி கொடுத்த நகையை அணிந்து குற்றாலம் முழுவதையும் தெருத்தெருவாகச் சுற்றிப் பார்த்தபடி நடந்து வருகிறாள் சிங்கி (குறத்தி) மேடையில் அவன் நின்று பார்க்கிறது ஒரு பக்கம். கூடையும் கையுமாய் இவள் நடக்கிறது ஒரு பக்கம். காட்சியை விட்டுவிட்டு அப்படி எல்லாம் காட்டுகிறது நாடகம்.

விருத்தம்

**பாமாலைத் திரிகூடப்**

**பரமர் அருள் பெறும் வசந்தப்**

**பாவை கூந்தல்**

**பூமாலை இதழிபெறப்**
**பொன்மாலை மணிமாலை**
**பொலிவாய்ப் பூண்டு**
**நாமாலைக் குறவஞ்சி**
**நன்நகர்ப்ப ட்டணம் முழுதும்**
**நடக்கும்நா ளில்**
**மாமாலை பூண்டசிங்கன்**
**வங்கணச் சிங் கியைத் தேடி**
**வருகின்றா னே. (74)**

---

1. பாமாலைத் திரிகூடர் - குற்றாலர். பக்தர், ஞானியர், இவர்கள் உள்ளம் உருகிப் போற்றும் பாக்கள், அதாவது பாசுரங்கள் தான் குற்றாலநாதருக்கு அலங்காரம் செய்யும் மாலை. பாமாலைதான் பூமாலை. அருள்பெறும் வசந்தப்பாவை - வசந்தவல்லி. குற்றாலநாதரின் அருளுக்கு உரியவள்தான் வசந்தவல்லி. கூந்தல் பூமாலை இதழி பெற - அவர் அனுப்பும் மாலையைக் கூந்தலில் சூடவும் மரியாதையைப் பெறவும் குறி சொன்னதால், பொன்னாபரணம், ரத்ன கண்டி எல்லாம் கிடைத்தது குறத்திக்கு. அவற்றைப் பூண்டபடியே. நாமாலைக் குறத்தி - நாவால் அதாவது வார்த்தையால் மாலை கட்டுவது போல் விஷயத்தைத் தொடுத்துக் கட்டுகிறவள் குறவஞ்சி. குற்றாலம் முழுவதும் சுற்றிப் பார்க்கிறாள். நடந்துவருகிறாள். அப்பொழுது அவள் கணவன் சிங்கன் அவளைத் தேடி வருகிறான். அவனும் ஒரு சுற்றுச் சுற்றுகிறான் குற்றாலத்தை. மாமாலை பூண்ட சிங்கன் - கட்டுக் கடங்காத காதல் வெறியையே மாலையாக அணிந்து வருகிற சிங்கன். வங்கணச் சிங்கியை - தளுக்கும், மினிக்குமாய் வரும். சிங்கியை - குறத்தியை. தேடித்தான் வருகிறான் சிங்கன்.

(2) எப்படி வருகிறான் சிங்கன்.

இராகம் - அடாணா தாளம் - சாப்பு

கண்ணி

**கொக்கிறகு சூடிக்கொண்டு,**

**குருவி வேட்டை**

**ஆடிக்கொண் டு,**

**வக்காமணி மாட்டிக் கொண்டு,**

**மடவார் கண்போல்**

**ஈட்டி கொண்டு,**

**தொக்காக் கச்சை**

**இறுக்கிக் கொண்டு**

**துள்ளும் மீசை முறுக்கிக்கொண்டு,**

**திக்கடங்காக் குளுவச்சிங்கன்**

**திரிகூடச் சிங்கன்**

**வந் தான். (75)**

---

2. வக்காமணி - பாசிமணி. தொக்கா - இளக்கமாக. மிக இறுக்கம் இல்லாமல். திக்கடங்காக்குளுவன் - திசை எட்டும் முட்ட வேட்டையாடி அதற்கு அப்பாலும் சென்று வேட்டை ஆடும் சூரன்

(3) பொழுதுவிடிந்தால், பொழுது அடைந்தால் சிங்கனுக்கு வேலை வேட்டையாடுதல் தான். குற்றாலக் காட்டில் நஞ்சை, புஞ்சை எங்குமே அவன் கால்படாத இடமே இல்லை. வேட்டையில் இறங்கிவிட்டால் பாய்ச்சலில் சிங்கம்தான். ஒன்றைப் பற்றிப் பிடிக்கிறதுக்கு அவன் பம்முகிற பம்மலில் பூனைதான். நாய் கெட்டது கேடு மோப்பம் பிடிப்பதில். பதுங்கிப் பாய்வதிலும் நரியை மிஞ்சியவன் சிங்கன். இவ்வளவையும் அவனே சொல்கிறான் சொல்லிக் கொள்கிறான்.

விருத்தம்

**ஆளிபோல்ப் பாய்ந்து சுரும்(பு)**
**இசைகேட்கும் குற்றாலத்(து)**
**அமலர்காட் டில்**
**வேளைதொறும் புகுந்து, திரு**
**விளையாட்டம் கண்ணிகுத்தி**
**வேட்டையா டி,**
**ஞாளிபோல் சுவடெடுத்து**
**பூனைபோல் ஒளிபோட்டு-**
**நரிபோல்ப்பம் மி,**

3. ஆளி - சிங்கம். கரும்பு - வண்டு. வேளைதொறும் - எந்த நேரமும். விளையாட்டம் - தோப்பு, விளை, பயிர்க்கால் எங்கும் கண்ணி வைத்து. ஞாளி - நாய். சுவடு -தடம். ஒளிபோட்டு - பதியம் போட்டு. கண்ணியில் சிக்கினால் போதும் பேயறை அறைந்து தீர்த்துவிடுவான் சிங்கன். கூளி - பேய்.

**கூனிபோல்த் தொடர்ந்தடிக்கும்**

**திரிகூடச் சிங்கன் எனும்**

**குளுவன் நானே (76)**

(4) தன் வீரதீரப் பிரதாபத்தை மேலே மேலே விளக்குகிறான் சிங்கன். எப்படி விளக்குகிறான் சிங்கன்.

"சமய ஆச்சாரம், வழிபாட்டின்பம் இவற்றை மதியாதவர் நரம்பை எடுப்பேன். தோலை உரிப்பேன். என் வேட்டைக்குப் பயன்படும்"

இராகம் - தன்யாசி தாளம் - ஆதி

கண்ணிகள்

**காதல் அஞ் செழுத்தார்**

**போதநீ றணியார்**

**கைநரம் பெடுத்துக்**

**கின்னரம் தொடுத்தப்**

**பாதகர் தோலால்**

**பலதவில் அடித்துப்**

**பறவைகள் படுக்கும்**

**குறவனும் நானே. (77)**

4. அஞ்செழுத்தர் - குற்றாலநாதர். நமசிவாய என்னும் மந்திரத்துக்கு நாயகர் அவரை நினைத்தாலே போதும். காதல் (பக்தி) வந்துவிடும். போதநீறு அணியார் - திருநீறு அணியாதவரின். கின்னரம் - சிறுவீணை.

நரம்பும், தோலுந்தானா? அந்தப் பாவிகளின் குடுமியையும் விட மாட்டேன். வெட்டிக் கண்ணி கண்ணியாகக் கட்டி விடுவேன்.

**தலைதனில்ப் பிறையார்**
**பலவினில் உறைவார்**
**தகையினை வணங்கார்**
**சிகையினைப் பிடித்தே,**
**பலமயிர் நறுக்கிச்**
**சிலகண்ணி முறுக்கிப்**
**பறவைகள் படுக்கும்**
**குளுவனும் நானே** **(77)**

(5) சிங்கி (குறத்தி)க்கு ஏற்ற, நூற்றுக்கு நூறு பொருத்தமானவன்தான் சிங்கன். எத்தனை தடபுடலோடு வந்தாளோ சிங்கி அத்தனை தடபுடலோடு வருகிறான் சிங்கன்.

சிங்கனுக்கு நூவன் என்றொரு தோழன். ஈப்புலி என்று ஒரு பிராணி. அதுவும் நூவனும் ஒன்றுதான்.

---

பிறையார் - பிறைச்சந்திரனை அணிந்தவர். தகையினை வணங்கார் - கடவுளின் மகிமையில் ஈடுபட்டுக் கரைவது இயல்பு. அந்த இயல்பை விட்டவனுடைய. சிகை - குடுமி.

குறிப்பு : நாத்திகர்களும் பயன்படவேசெய்கிறார்கள். அவர்கள் நரம்பு, தோல், ரோமம், ஒவ்வொன்றும் பிரயோசனப்படுகிறது.

கையில் ஈட்டி; சள சள என்ற பேச்சு. வளைக் குள்ளிலிருந்து எந்தப் பிராணி தலைநீட்டுகிறது என்று அதிலேயே குறிவைத்த பார்வை. இப்படியாக நூவன் பின்னே வர சிங்கன் வருகிறான் முன்னே. பராக் போட்டு வருகிற சேவகன் போல் வருகிறான் நூவன். மகாராஜா மாதிரி வருகிறான் சிங்கன்.

குற்றாலத்துப் புலி - மதப்புலிதான் சிங்கன்.

விருத்தம்

**புலியொடு புலியைத் தாக் கிப்**
**போர்மத யானை சாய்க்கும்**
**வலியவர் திரிகூடத்தில்**
**மதப்புலிச் சிங்கன் முன்னே ;-**
**கலிகளும் கதையும் பேசிக்**
**கையினில் ஈட்டி வாங்கி,**
**எலிகளைத் துரத்தும் வீர**
**ஈப்புலி நூவன்வந் தான்** **(78)**

5. புலியொடு புலியைத் தாக்கிப் போர் மத யானை சாய்க்கும். வலியவர் - குற்றாலநாதர். தாருகா வனத்து ரிஷிகள் ஏவி விட்ட புலி. தட்சன் வேள்வியில் வந்த (அம்)புலி இரண்டையும் தாக்கி அழித்தவர். தட்சன் ஏவின யானையையும் அழித்தவர். கலி - கலகலப்பான நொடிகள்.

(6) நிழல்போலச் சிங்கன் கூடவே வருகிறான் நூவன். பார்த்தாலே சிரிப்பு வந்துவிடும். அப்படி ஒரு உருவம் நூவனுக்கு. நாமும் கொஞ்சம் பார்க்கலாம். சிரிக்கவும் செய்யலாம். அந்த உருவத்தைப் பார்த்துத்தான்.

இராகம் - அடாணா தாளம் - சாப்பு

**கொட்டகைத் தூண்போலும்**
**கால் இலங்க**
**ஒட்டகம் போலவே**
**வந்தானே**
**ஊர்க்கு ருவிக்குக்**
**கண்ணியும் கொண்டு,**
**உள்ளானும் வலியானும்**
**எண்ணிக் கொண்டு,**
**மார்க்கமெல்லாம் பல**
**பண்ணிக் கொண்டு**
**கோட்கார நூவனும்**
**வந்தா னே!**
**கரிக்கு ருவிக்குக்**
**கண்ணியும் கொண்டு**
**கானாம் கோழிக்குப்**

பொரியும் கொண்டு, (79)

வரிச்சிலைக் குளுவரில்க்

கவுண்டன்மல் லன்

வாய்ப்பான நூரவனும்

வந்தா னே!

ஏகளை நாகனைக்

கூவிக்கொண்டு

எலியனைப் புலியனை

ஏவிக்கொண்டு

வாகான சிங்கனை

மேவிக் கொண்டு

வங்கார நூரவனும்

வந்தா னே. (79)

---

6. மார்க்கம் - வழி. கண்ணில் பட்ட பட்சிகளைச் சுருட்டி மடக்கும் வழி. கோட்கார நூரவன் - கொள்ளைக் கார நூரவன். பொரி - நெல்பொரி. வரிச்சிலை - வரிவரியாக நார்வைத்துக் கட்டி முறுக்கிய வில். வங்காரம் - சொன்னபடி நடக்கும் ஒரே மதி.

(7) அணிஅணியாய்த் திரண்டு வருகின்றன பறவைகள். வானிலிருந்து பூமிக்கு ஒரு மாதிரி சாய்வில் விமானங்கள் இறங்கி வருகிற மாதிரியே பறந்து வருகின்றன.

எலியைக் கண்ட பூனைக்கு நாவில் தேனூறுவது போல சிங்கனுக்கு வாயெல்லாம் நீரூறியது. தேனாய் ஊறியது உமிழ்நீர்.

விருத்தம்

**மூவகை மதிலும்சாய**
**மூரலால் வீரம்செய்த**
**சேவகர், திருக்குற்றாலர்**
**திருவிளை யாட்டம் தன்னில்**
**பாவக மாக நூவன்**
**பறவைபோல் பறவை கூவ**
**மாவின்மேல் ஏறிச் சிங்கன்**
**வரும்பட்சி பார்க்கின்றானே.** **(80)**

7. மூவகை மதில் - பொன், இரும்பு செம்பு எனும் மூன்று உலோகங்களால் கட்டிய அசுரர்களின் கோட்டை மூன்றையும். சாய- வெந்து நீறாகும்படி. மூரலால் வீரம் செய்த சேவகர் திருக்குற்றாலர் - புன்முறுவலினாலேயே எரித்துச் சாம்பலாக்கினார் குற்றாலநாதர். திருவிளையாட்டம் தன்னில் - குற்றாலநாதரின் நஞ்சை, புன்செய் என்று விளைச்சல் காடுகளில். பாவகமாக - பாவனையில். பறவை போல் பறவை கூவி - பெண் பட்சி ஆண் பட்சியை அழைக்கிற மாதிரியே கூவி.

(8) எத்தனையோ பட்சிகள். விதவிதமான பட்சிகள், கப்பல் கப்பலாய் சிறகடித்துப் பறந்து வருகின்றன ஆகாயம் முழுவதும். அவற்றில் வெள்ளை வெளேரென்ற கொக்கு, (குருவி) கூட்டம், கூட்டமாய்ச் சிறகடித்தபடி வருகின்றன. அந்திசாயும் நேரம். வானம் முழுவதும் தங்க முலாம் பூசின மாதிரி மஞ்சள் வெயில் அடிக்கிறது. பொன்னிறம் பூத்துச் சொரியும் வெள்ளிபோல கொக்குக் கூட்டம்.

கங்கா தேவியைத் தலையில் வைத்திருக்கிறவர் தான் பெருமான். அவருக்கு ஒரு ஆசை. எப்படியாவது பர்வதராஜன் புதல்வி பார்வதியையும் கட்டிக் கொள்ள வேண்டும் என்று. மலையரசனும், சம்மதித்தான். தங்கம், வெள்ளி என்று சீர்வரிசையையும் அனுப்பி வைத்தான். வான கங்கையே தாயாக வந்தாள்.

திருமணமாகி வரப்போகும் மகள், சமையல பண்ணும் அடுக்களை எப்படி இருக்கிறது என்று பார்க்கவே வந்தாள் கங்கைத் தாய். அப்பொழுது சாதம் வெந்து கொண்டிருக்கிறது அடுப்பில். மதமத வென்று எரிகிறது தீ. கொழுந்து விட்டே எரிகிறது தீ. அடுக்களை முழுவதும் பொன்வண்ணம். அதனுள் வந்த வானகங்கையோ தூய வெண்ணிறம். அதுவும் பொன் பூத்த வெள்ளி மாதிரி தானே ஜொலிக்கும்.

அப்படி இருந்தது அந்தி நேரமும் சாய்ந்து வரும் கொக்குக் கூட்டத்தின் வெண்ணிறமும்.

இராகம் - கல்யாணி தாளம் - ஆதி

சரணங்கள்

**சென்னியி லேபுனல்க்**
**கங்கையை வைத்த**
**திரிகூட நாதர்**
**கிரிமாது வேட்கையின் ;**
**மன்னன் இமவான்**
**வரிசைஇட் டான், நங்கை**
**மங்கைக்கு நானே**
**வரிசை செய் வேனென்று,**
**அன்னை தயையுடை**
**ஆகாச கங்கை**
**அடுக்களை புறப்பட்ட**
**நேர்த்தி போல்,**
**பொன்னிற வானெங்கும்**
**தன்நிறமா கப்**
**புரிந்து புவனம்**
**திரிந்து குருகினம் ; (81)**

---

8. சென்னி - தலை. கிரிமாது - மலைமகள். பார்வதி. கிரி - மலை வான் - இமயமலை, பனிமயமான இமயமலை, இமயமலைதான் உலகில் உள்ள மலைகளுக்கெல்லாம் சக்கரவர்த்தி. இமவான் - பனிமலை அரசன். ஏடுஎதிர் ஏற்றிய சம்பந்தர். திருஞானசம்பந்தர். சமணரை வாதில் வெல்ல திருமறை ஏடு ஒன்றிரண்டை ஆற்றில் விட அது எதிர்த்து வந்தது. பந்தர் - பந்தல்.

இன்னும் எப்படி வருகிறது அந்தக் கொக்குக் கூட்டம். திருஞான சம்பந்தரை மதுரையில் வரவேற்கப் போட்ட முத்துப் பந்தல் போலவே வந்தது.

**ஏடெதிர் ஏற்றிய**

**சம்பந்த மூர்த்திக்கன்(று)**

**இட்ட திருமுத்தில்**

**பந்தர் வந் தாற்போல**

படைஎடுத்து வந்தது போல வந்தது கொக்குக் கூட்டம். வானவெளியையே மறைத்து வெள்ளை வெளேரென்று முத்துப் பந்தல் போட்டது போல இருந்தது கொக்குக் கூட்டம். பின்புலத்தில் மாலை நேரத்து மஞ்சள் வெயில், முன்னே கொக்கின் படை எடுப்பு, தங்கமும் வெள்ளியும் போட்டி போட்டு ஜொலிக்கிற மாதிரி தான் காட்சி.

இது ஒரு புறமிருக்க இன்னொரு திசையிலிருந்து பலவகைப் பறவைகள் வருகின்றன. கூட்டம் கூட்டமாகவே வருகின்றன. எத்தனை வகை உண்டோ உலகில் அத்தனை வகைப் பறவைகளும் வருகின்றன. ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு நிறம். பச்சை, சிவப்பு, நீலம், கருப்பு, மஞ்சள் என்று விதவிதமான நிறம்.

ஒவ்வொரு நிறத்திலுந்தான் எத்தனை தினுசு. அத்தனை நிறப் பறவைகளும் அணிவகுத்து பறந்துவரும் அழகைப் பார்த்தால் வானமே விதவிதமான நிறங்களில் ஜொலிக்கிற மாதிரி இருக்கிறது.

குழல்வாய்மொழி அம்மை கட்டியிருக்கும் பஞ்சவர்ணப் பட்டுச்சேலை மாதிரியே விதவிதமாக நிறம் காட்டுகிறது வானம்.

குழல்வாய்மொழி அம்மையைத் தொட வேண்டும் என்று ஒரே ஆசை குற்றாலநாதருக்கு பளிச் சென்று தொடவெட்கம். அதனால் சேலையைத் தொட்டுப் பார்க்கிற சாக்கில் அம்மையின் மேல் கை வைத்துப் பார்க்கிறார் அப்பன்.

**துள்ளாடும் சூல**
**கபாலர் பிராட்டியார்**
**தொட்டாடும் ஐவண்ணப்**
**பட்டாடை போலவே (81)**

பட்டாடை பறந்துவருகிற மாதிரி இருக்கிறது பறவைகளின் வரத்து.

**வெள்ளைப் புறாவும்**
**சகோரமும், ஆந்தையும்**
**மீன்கொத்திப் புள்ளும்**
**மரம் கொத்திப் பட்சியும்**
**கிள்ளையும், பஞ்சவர்**
**ணக் கிளிக் கூட்டமும்,**
**கேகயப் பட்சியும்**
**நாகண வாய்ச்சியும்**

**உள்ளானும் சிட்டும்**
**வலியானும் அன்றிலும்**
**ஓலம் செய் தே கூடி**
**நாலஞ்சு பேதமாய்**
**துள்ளாடும் சூல**
**கபாலர் ;- பிராட்டியார்**
**தொட்டாடும் ஐவண்ணப்**
**பட்டாடை போலவே (81)**

(9) திருமாலுக்கு முகம் ஆயிரம். அப்படியானால் கை இரண்டாயிரம் இருக்கத்தானே செய்யும். அந்த இரண்டாயிரம் கைகளிலும் பாஞ்சசன்யம் என்னும் சங்கை எடுத்து வாயில் வைத்து ஊதி, பாடிய படியே போற்றுகிறார் திருமால்! யாரை, குற்றாலநாதரைத்தான்.

ஐந்து சுரங்கள் நிறைந்து பேசும் மந்திரங்களையே துதிப்பாடல்களாக வைத்துப் பாடிப்பாடிப் போற்றுகிறார் திருமால். சங்க நாதத்தில் வைத்து முழங்கிய படிதான். இனி, பூர்வமான துதிப்பாடல்கள், கடவுள்த் தத்துவத்தை விஞ்ஞான பூர்வமாக உணர்ந்து அனுபவித்து ஆனந்தத்தைக்

கேகயம் - மயில். நாகண வாய்ச்சி - நாகண வாய்ப்புள். சிட்டு - சிட்டுக்குருவி. ஓலம் செய்து - கீச் கீச் சென்று ஒலி எழுப்பிய படியே நாலஞ்சு பேதமாய் - விதவிதமாய். துள்ளாடும் சூலம். சும்மா இருந்தாலும் துள்ளிக் குதிக்கிற மாதிரி தோன்றும் பெருமான் கையில் உள்ள சூலம். கபாலம் - திருவோடு பிரம்மன் மண்டைதான் சிவன் கையில் திருவோடாய் இருப்பது.

கொட்டும் பாடல்கள் அவைதாம் வேதப்பாடல்கள். அந்தப் பாடல்களும் சங்க நாதத்தின் சுதியை ஒட்டி இசை கூட்டிப் பாடி பரவுகின்றன.

இப்படி எல்லாம் இசையும் பாடலும், சேர்ந்து முழங்கினால் ஆடல் வரத்தானே செய்யும். இசைக்கும், பாடலுக்கும் ஏற்ப நடனமாடிக் கொண்டே இருக்கிறார். குற்றாலநாதர். அவரது குற்றால மலையில்தான் பறவைகள் இப்படி நிரை நிரையாச் சாய்ந்து வருகின்றன.

கொச்சகக் கலிப்பா

**ஈராயிரம் கரத்தான்**

**ஏற்றசங்கும், நான்மறையும்**

**சீராய் இரங்கநடம்**

**செய்தவர் குற்றாலவெற்பில்** **(82)**

(10) இராகம் - கல்யாணி தாளம் - ஆதி

பல்லவி

**சாயினும் ஐயே - பறவைகள்**

**சாயினும் ஐயே.**

அனுபல்லவி

**சாயினும் ஐயே**

**பாயும் பறவைகள்**

**சந்தனக் காட்டுக்கும்**

**செண்பகத் தோப்புக்கும்,**

**கோயில்க் குழல்வாய்**

**மொழிமங்கை பத்துக்கும்**

**குற்றால நாயகர்**

**சிற்றாற்று வெள்ளம்போல் (சாயினும்) (83)**

(11) பறவைகள் நிரை சாய்ந்து அங்கங்கே இறங்குகின்றன. இரை பொறுக்குகின்றன. சிங்கனும், நூவனும் அவற்றையே குறிவைத்து அங்கங்கே வருகிறார்கள். கண்ணி வைக்கிறார்கள். இப்படியாகச் சுற்றாத இடமெல்லாம் சுற்றி அலைகிறார்கள். எல்லாம் குற்றாலத்தைச் சுற்றியுள்ள பகுதிகள்தான்.

சேர, சோழ, பாண்டியர் கால முதல் பண்படுத்திப் பண்பண்படுத்தி பேணி வந்த நன்செய்ப் பகுதியும் உண்டு. புன்செய்ப் பகுதியும் உண்டு. தோப்பு, விளங்காடு என்னும் பகுதிகளும் உண்டு. அத்தனை இடங்களுக்கும் போனார்கள் இருவரும்.

அத்தனை இடத்தையும் பட்டியலிட்டுச் சொல்ல வேண்டியதில்லைதான். வெறும் நாமா வழியில் என்ன இருக்கும். இது விபரம் நன்றாகத் தெரியும் குறவஞ்சி ஆசிரியருக்கு. கலைத் தெய்வத்தின் நாடி நரம்புகளை எல்லாம் தொட்டுப் பிடித்து அவற்றின் துடிப்பென்ன, பேச்சென்ன, மூச்சென்ன என்று துல்லியமாகக்

9. சீராய் இரங்க - தாளத்தோடு இசைக்க

10. சாய்தல் - நிரை சாய்தல் கண்டறிவராயிற்றே கவிஞர்!

அவருக்கா தெரியாது விபரம்.

ஆனாலும் குறவஞ்சி ஒரு நாடகம். மந்தையில் போட்டு நடிக்கும் நாடகம். கண் கொட்டாமல் விழித்திருந்து பார்க்கிறார்கள் மக்கள். அப்படிப் பார்க்கிறவர்கள் கேட்க மாட்டார்களா என்ன? சிங்கனும், நூவனும் எந்தெந்த விளைக்குப் போனார்கள், அதை எல்லாம் சொல்ல வேண்டாமா, ஏன் சொல்லவில்லை என்று கேட்க மாட்டார்களா? கேட்பார்கள். உரக்கவே கேட்பார்கள். ஐந்துக்கு இரண்டையாவது சொல்லித் தான் ஆக வேண்டும். சொல்லிக் காட்டித்தான் ஆக வேண்டும். இல்லை என்றால் மேலே ஓடாது நாடகம்.

அதனால்தான் பட்டியல், சிறுபட்டியல் தான் போடுகிறார் கவிஞர். வெறும் நாமாவளிதான் பட்டியல்.

மந்தையில் அமர்ந்து பார்க்கவில்லையே நாம். அதனால் ஒரு சில இடங்களை மட்டும் ஆசிரியர் பாடல் மூலம் பார்ப்போம்.

சரணம்

**காராரும் செங்குளம்**

**மேலப் பாட் டப்பத்து,**

**காடுவெட் டிப்பத்து**

**நீடுகண் டைப் பத்து**

**சீராடும் பெட்டைக்**

**குளமுடைக் காங்கேயன்**

ஸ்ரீ கிருஷ்ணன் மேடு,

முனிக்குரு கன்பேரி

ஏரிவாய் சீவலப்

பேரி வடகால்

இராசகுல ராமன்

கண்டுகொண் டான், மேலை

மாரிப் பற்றும், கீழை

மாரி பற்றும் சன்ன

நேரிப்பற் றும் சரத்த

ணேரி பற்றும் சுற்றி

# பறவையா கண்ணில் படுகிறது? சிங்கி அல்லவா

(1) அங்கே இங்கே என்று காடுமேடெங்கும் அலைந்தார்கள் சிங்கனும் நூவனும்

பொழுது சாய்ந்தது. மேய்ந்த பறவைகள் எல்லாம் கூடு நோக்கிப் போய்விட்டன. சிறகடித்துப் பறந்தோடி விட்டன.

நேரம் ஆக ஆக, இருள் கவியக் கவிய சிங்கியின் நினைப்பு வந்துவிட்டது சிங்கனுக்கு.

பறவையாவது, வேட்டையாவது, காடாவது ஒரே பாய்ச்சலில் பாய்ந்து ஓடி வந்து விட்டான் குற்றாலம். ஊருக்குள்ளேயே சிங்கன். முன்னொரு நாள் சில வருஷங்களுக்கு முன் இப்படித் தற்செயலாக குற்றாலத்துக்கு வந்தான் சிங்கன். அப்பொழுதுதான் முதன் முதல் சிங்கியைப் பார்த்தான். பார்த்த மாத்திரத்திலேயே கிறுகிறுத்துப் போனான். அந்தக் காட்சி இப்பொழுது அப்படியே கண்முன் வந்து நிற்கிறது சிங்கனுக்கு.

குற்றாலநாதர் கோவிலில் நடராஜமூர்த்திக்கு அபிஷேகம், ஆராதனை ஜாம், ஜாம் என்று நடக்கின்றன. மேளதாள முழக்கத்தோடு நடராஜப் பெருமானே தாண்டவம் ஆடுகிறார் ஆட்டத்தைக் கண்டு களிக்கிறார்கள் பக்தர்கள்.

மணி ஓசை, மேளச்சத்தம் எல்லாம் விழுகிறது காதில். பாய்ந்து பாய்ந்து வருகிறான் சிங்கன். என்ன அதிசயம், சிங்கியும் வருகிறாள். கோலமயில் போல ஆடி அசைந்து உல்லாச நடை நடந்து வருகிறாள் சிங்கி. என்ன தோரணை, என்ன எடுப்பு, கண் கொள்ளாக் காட்சியாய் இருக்கிறாள் சிங்கி.

பரவசத்தில் என்ன பாடுபடுகிறான் சிங்கன். எல்லாம் பகல் கனவில்தான்.

கொச்சகக் கலிப்பா

**கொட்டழகுக் கூத்துடையார்**
**குற்றால நாதர் வெற்பில்**
**நெட்டழகு வாள்விழியும்**
**நெற்றியின் மேல் கஸ்தூரிப்**
**பொட்டழகும், காதில் குழைப்**
**பொன்னழகு மாய்ப்பொலிந்த**
**கட்டழகி தன்னழகென்**
**கண்ணளவு கொள்ளாதே! (84)**

(2)என்னமோ பண்ணி விட்டது சிங்கனை. சிங்கியின் ஒய்யாரம். சொகுசும் சேர்ந்துதான்.

---

வாள்விழி - வாள் வீச்சுப் போல் அப்படியும் இப்படியும் ஓடியாடி ஒளி வீசும் கண். விழி - கண். காதில் குழைப் பொன் - வயிரத்தோடு மாதிரி பளபளக்கும் பொன் குண்டலம், காதணி.

எத்தனை வருஷம் ஆனால் என்ன, மனசை விட்டுப் போகுமா அனுபவம். அப்போதைக்கப்போது எழுந்து வரும் அது ஆவேசத்தோடே எழுந்து வரும்.

பழைய ஞாபகம் எப்படி எழுந்து வருகிறது சிங்கனிடமிருந்து

கொச்சகக் கலிப்பா

**செட்டிக்(கு) இரங்கிவினை**
**தீர்த்தவர்குற் றாலவெற்பில்**
**சுட்டிக்கு இணங்கும் நுதல்**
**சுந்தரியாள் கொங்கையின் மேல்**
**முட்டிக் கிடந்து கொஞ்சி,**
**முத்தாடிக் கூடி நன்றாய்க்**
**கட்டிக் கிடக்கமுலைக்**
**கச்சாய்க் கிடந்திலனே! (85)**

---

2. செட்டிக்கு இரங்கி வினை தீர்த்தவர் - வியாபாரி ஒருவன். அத்தை மகளைக் கடத்தி வந்தான். இரவுநேரம் ஒரு ஊரில் சத்திரத்தில் படுத்திருந்தார்கள் பாம்பு தீண்டி விட்டது வியாபாரியை. காதலி அழுதுபுலம்பினாள். விஷத்தை முறித்து செட்டியைப் பிழைக்க வைத்தார் பெருமான். சுட்டி - நெற்றிச்சுட்டி. கச்சு - ரவிக்கை. ரத்தினக்கல் பதித்த நெற்றிச் சுட்டியை பார்த்தால் சிங்கியின் நெற்றி அப்படியே கண்முன் வந்துநிற்கும். அத்தனை பொருத்தம் சுட்டிக்கும் அவள் நெற்றிக்கும். சுட்டிக்கு இணங்கும் நுதல்.

(3) பக்திப் பரவசத்தில் மெய்யடியார்கள் இறைவனிடம் வேண்டிக் கதறுவார்கள், உன் சந்நிதானத்தில் படிக்கல்லாகக் கிடக்கும் பாக்கியம் பெறவில்லையே நான், உன் தீர்த்த வாரியில் (தெப்பக்குளத்தில்) மீனாகக் கூடப் பிறக்கவில்லையே நான் என்று. காதல் வெறியில் சிங்கனும் அதே வேகத்தில் சொல்கிறான். சிங்கிக்கு ஒரு ரவிக்கையாகக் கூட இருக்க முடியவில்லையே என்னால். அது ஒன்று போதுமே ஜன்ம சாபல்யத்துக்கு (பிறவிப் பிணி அகல) என்று.

காதல், பக்தி எல்லாம் ஒன்றுதான். வேகம் ஏற ஏற அதுவும் பைத்தியந்தான். இதுவும் பைத்தியந்தான்.

பைத்தியம் வந்தால் ஒரு நிலையில் நிற்க விடாது. மேலே தூக்கிக் கொண்டு போகும். கீழே போடும். எழுந்து நிற்கும். உட்காரும். முற்றத்துக்கு ஓடிவரும் உள்ளே போகும். எப்படி எல்லாமோ வம்பு பண்ணும் பைத்தியம். சிங்கனும் அதில் சிக்கிவிட்டான். ரவிக்கையாய் இருக்கப் புண்ணியம் செய்யாத பாவி என்று நொந்து கொண்டவன், ஒரு கிளியாய் பிறந்திருந்தால் அவள் தோளில் ஏறி உட்காரலாமே, உட்கார்ந்து அவள் பேசும் பேச்சை எல்லாம் கேட்கலாமே எப்படி அவள் கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவாள், அந்தப் பேச்சில் கிடைக்காத சுகமா? என்று மயங்குகிறான் சிங்கன்.

**கள்ளுலவும் கொன்றையந்தார்**

**கர்த்தர்திரி கூடவெற்பில்**

**பிள்ளைமதி வான் நுதலாள்**

**பேசாத வீறடங்க ;-**

**துள்ளாடி மேலிருந்து**

**தோளின்மேல் ஏறி அவள்**

**கிள்ளைமொழி கேட்க ஒரு**

**கிள்ளையா னேன் இலையே (86)**

(4) கள்வெறி போலத்தான் காமவெறியும். அது ஏற ஏற ஒன்றும் தெரியாது. உற்ற நண்பனிடம் பேசுகிற மாதிரியே கட்ட மண்ணிடமும் வரும் பேச்சு. வித்தியாசம் தெரியாது தானே.

சிங்கனுக்கு வெறி ஏறுகிறது சிங்கியின் நினைப்பில். அப்பொழுது புறா ஒன்று சிறகடித்து வேறொரு மரத்துக்கு ஓடுகிறது. அதனிடம் கேட்கிறான் சிங்கன். கண்டிப்பாகவே கேட்கிறான்.

"புறாவே நீயும் சிங்கியின் குரலில் ஒலி எழுப்பத்தானே செய்வாய், இப்பொழுது ஏன் எழுப்ப வில்லை அப்படி" என்று.

ராகம் - ஆகிரி தாளம் - சாப்பு

**எட்டுக் குரலில்**

**ஒரு குரல் கூவும் புறாவே - எனது**

---

3. கள்உலவும் - தேன் சொட்டும். பிள்ளை மதிலான் நுதல் - பிறைச்சந்திரன் போல் ஒளிவிடும் நெற்றி. பேசாத வீறு அடங்க - வெறி தணிய. கிள்ளைமொழி - தத்தித் தத்திப் பேசும் தத்தைமொழி. கிள்ளை - கிளி.

**ஏகாந்த சிங்கியை**

**கூவாத தென்ன குலாவே (87)**

சிங்கி மாதிரியே நீலோற்பமும் அப்படி தன்னைப் பார்க்கிற மாதிரி தோன்றுகிறது சிங்கனுக்கு. பார்க்கும் இடம் எல்லாம் அந்தக்கண்ணும், பார்வையாகவுமே இருக்கிறது சிங்கனுக்கு. தாங்க முடியவில்லை அவனால் தத்தளிக்கவே செய்கிறான் சிங்கன். நீலோற்பத்திடமே சொல்கிறான்.

**கட்டித் திரவியம்**

**கண்போலும் நன்நகர்க் - காவியே!**

**கண்ட இடமெல்லாம்**

**அவளாகத் தோணுதே - பாவியே (87)**

(5) இனி, உச்சிக்கே ஏறுகிறது காதல் வெறி சிங்கனிடம் பாதி உளறல், பாதி கிறுக்கு என்று வருகிறது அவன் பேச்சு.

இராகம் - நீலாம்பரி தாளம் - ஆதி

கண்ணிகள்

**பேடைக் குயிலுக்குக்**

**கண்ணியை வைத்துநான்**

4. எட்டுக்குரலில் - குயில், மயில், வண்டு, கோழி, அன்னம், காடை, வண்டானம், புறா என்னும் எட்டுக்கும் தனித்தனி ஒலி. சுரத்தோடு ஒட்டிய ஒலி. அவற்றில் புறாவின் ஒலி ஒரு தனிச்சுரம் பேசும்.

மாடப் புறாவுக்குப்
போ னேன்
மாடப் புறாவும்
குயிலும் படுத்தேன்
வேடிக்கைச் சிங்கியைக்
கா ணேன்!
கோல மயிலுக்குக்
கண்ணியை வைத்துநான்
ஆலாப் படுக்கவே
போ னேன்
ஆலாவும் கோல
மயிலும் படுத்தேன் நான்
மாலான சிங்கியைக்
கா ணேன் (88)
வெவ்வாப் பறவையின்
வேட்டைக்குப் போய்க்காம

5. சிங்கியைத் தேடித்தான் புறப்பட்டேன். வழியில் பறவைகளின் நடமாட்டத்தைப பார்த்தேன். மனம் அவற்றோடு போனது. அவை கிடைத்தன. ஆனால் சிங்கி..... என்ன ஏமாற்றம் இது? என் கண்ணைக் கட்டி விட்டதே விதி என்று புலம்புகிறான் சிங்கன். பேடைக்குயில் - பெட்டைக்குயில். மாடப்புறா - மாடியில் கூடு கட்டிக் குடி இருக்கும் புறா. கோலமயில் - அழகிய மயில். ஆலா - ஒருவகைப் பறவை.

**வேட்டையைத் தப்பவிட்**

**டேனே**

**வௌவால் பறக்க**

**மரநாய் அகப்பட்ட**

**வைபவம் ஆச்சுது**

**தானே.**

**இவ்வாறு வந்த என்**

**நெஞ்சின் விரகத்தை**

**எவ்வாறு தீர்த்துக்கொள்**

**வேனே**

**செவ்வாய்க் கரும்பை**

**அநுராக வஞ்சியைச்**

**சிங்கியைக் காணுகி**

**லேனே** **(88)**

(6) புழுப்பூச்சியிலிருந்து சிங்கம், புலி, யானை வரை மனிதர், தேவர் மூவர் என்னும் சகல கோடி ஜீவராசிகளையும் குடுமியைப் பிடித்து ஆட்டுவது காதல்தான்.

5. வெவ்வா - விருப்பமாக. பறவை கிடைத்தது சிங்கி பறந்தோடிவிட்டாள் வவ்வாலை விட்டு மாநாய் பிடித்த கணக்குத்தான். காணுகிலேனே - பார்க்க முடியவில்லையே.

அதுதான் சிங்கனையும் இந்த ஆட்டு ஆட்டுகிறது. இனியும் பார்க்கலாம். அது ஆட்டுகிற ஆட்டத்தை.

இராகம் - தோடி தாளம் - ஆதி

**சிங்கியைக் காமப்**

**பசுங்கிளிப் பேடையை**

**சீர்வளர் குற்றாலர்**

**பேர்வளம் பாடிய**

**சங்கீதி வாரியை**

**இங்கித நாரியைச்**

**சல்லாபக் காரியை**

**உல்லாச மோகனச்**

"சிங்கியைக் காணேனே என் வங்கணச் சிங்கியைக் காணேனே" (89)

(7) பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான் சிங்கன். இதற்கு மேலும் பொறுக்க முடியவில்லை அவனால். வேட்டைக்குத் துணையாக வந்தவன் தான் நூவன். அதுவும் எடுபிடி வேலைக்குச் சிற்றாளாக வந்தவன் தான் நூவன் அவனிடமே சொன்னான் சிங்கன்.

"ஏலே, நூவா என்னாலே இன்னும் ஒரு எட்டுக் கூட எடுத்து வைக்க முடியாது காலை. நான் இங்கேயே இருக்கிறேன். சிங்கியை எப்படியாவது நீ தேடிப் பிடித்துக் கொண்டு வா. இங்கே கோவில் பக்கமே கூட்டிவா" என்றே சொல்லி விட்டான் சிங்கன்.

6. சல்லாபம் - கேள்வியும், பதிலுமாய் வரும் உல்லாசப் பேச்சு.

நூவனுக்கு ஒரு மாதிரியாகப் போய்விட்டது சிங்கன் சொல்லியது. ஆனாலும் சமாளித்துக் கொண்டு " அண்ணே, நான் பார்த்ததில்லையே அண்ணியை, எப்படி இருப்பார்கள் அண்ணி என்று சொன்னால், தேடிப் பார்த்துக் கூட்டி வருகிறேன்" என்றான் நூவன்.

என்னடா சொல்ல, எப்படியடா சொல்ல அவளைப்பற்றி, என்ன சொல்ல அடையாளம் என்று வெறி கொண்டவன் போல் பிதற்றுகிறான் சிங்கன்.

இராகம் - பியாகடை தாளம் - மிசுரம்

**நகையும் முகமும் அவள்**
**நாணயக் கைவீச்சும்**
**பகைவ ரும்திரும்பிப்**
**பார்ப்பா ரடா**
**தொகையாய்ச் சொன்னேன் இனிச்**
**சொல்லக்கூ டாததொரு**
**வகையாய் வருகுதென்னை**
**மயக்குவதை யே!** **(90)**

7. நகை - புன்முறுவல். தானே மலரும் ஆனந்தத்தின் மலர்ச்சி. நாணயக் கைவீச்சு - அதிகார தோரணையோடு கூடிய அட்டகாசமான கைவீச்சு.

# நூவனும் சிங்கனும்

(1) ஒழுங்கான முறையில் அடையாளம் சொல்ல முடியவில்லை சிங்கனால். குடிகாரன் உளறுகிறது போல் உளறினான். "சரி, சரி, வழிக்கு வராது இந்தப் பைத்தியம்" என்று தெரிந்து கொண்டான் நூவன்.

"சிங்கனை அவன் போகிற போக்கிலேயே விட வேண்டியதுதான். அதில் கொஞ்சம் உற்சாகப்படுத்த வேண்டியது தான். வேறு வழியில்லை" என்றும் பட்டது நூவனுக்கு.

"சிங்கியை எப்படியும் கண்டுபிடித்து உன்னிடம் கொண்டு வந்து சேர்க்கிறேன். அதற்கு என்ன கொடுப்பாய் கூலி எனக்கு" என்கிறான் நூவன்.

கொச்சகக் கலிப்பா

**சாட்டிநிற்கும் அண்டமெலாம்**
**சாட்டையிலாப் பம்பரம்போல்**
**ஆட்டுவிக்கும் குற்றாலத்(து)**
**அண்ணலார் நன்நாட்டில் ;-**
**காட்டுவிக்கும் உன்மோகக்**
**கண்மாயச் சிங்கிதனை**
**கூட்டுவித்தால் நீ கொடுக்கும்**
**கூலி என்ன சொல்வாயே** **(91)**

(2) நூவன் சொல்லியதைக் கேட்டு உயிரே வந்துவிட்டது சிங்கனுக்கு. ஜன்னலைத் திறந்து பார்ப்பது போல் கண்ணைத் திறந்து அகலமாகவே திறந்து நூவனை ஆசையோடு பார்த்தான் சிங்கன். " என்ன கூலி என்றா கேட்கிறாய். என்ன கேட்டாலும் கொடுக்கிறேன்" என்று உரக்கவே சொன்னான் சிங்கன். கையில் கையை வைத்து அடித்தே சொன்னான் சிங்கன். ஏதோ சத்தியம் பண்ணிக் கொடுக்கிற மாதிரி இருந்தது அவனுடைய உறுதிமொழி.

சிங்கனுக்கு எடுபிடி ஆள்தான் நூவன். சொன்னபடி கேட்கிற வேலைக்காரன்தான். ஆனாலும் சிரித்துவிட்டான் நூவன். சிரிப்பை அடக்க முடியவில்லை அவனால். சிரிப்போடு சிரிப்பாய்ச் சொன்னான் நூவன் "கேட்டவர்களுக்கெல்லாம் மனம் நிறையச் சந்தோஷத்தைக் கொடுக்கும் உன் சிங்கி, குறிகள் சொல்லி நம்பிக்கையூட்டும் உன் சிங்கி, இதே குற்றாலத்தில் எந்த வழி போனாள் தெரியுமா? இதோ பார், இந்த வழியில்தான், இது சமீபத்தில் புதிதாக

---

1. சாட்டி நிற்கும் அண்டம் -இதோ. இருக்கிறேன் பார் என்று பிரகாசிக்கும் கோடான கோடி நட்சத்திரங்கள். அண்டங்கள். காட்டுவிக்கும் கண்மாயச் சிங்கி - ஆசையை அப்படியே அள்ளி அள்ளிக் கையில் எடுத்துக் காட்டுவது போல் ஆடி விளையாடும் கண்ணழகியான சிங்கியை. உன் மோகச் சிங்கி - உன்னை இப்படியே மோக வெறிக்கு உள்ளாக்கும் சிங்கியைத்தான்.

உண்டான தெரு, புதுத்தெரு. இதில் வீடுகள் குறையத் தான் உண்டு. விசாரித்தால் தெரிந்துவிடும். யார் யாருக்குக் குறி சொன்னாள், பிறகு எங்கு போனாள் என்று.

"இவ்வளவும் கேட்டு விபரம் தெரிந்துவிட்டால் உடனே பார்த்துவிடலாம் சிங்கியை. சிங்கியைப் பார்த்ததும் அவ்வளவுதான் பிறகு எங்கே என்னைப் பற்றிய நினைப்பு வரும் உனக்கு.

**"ஆகாசமார்க்கமாகத்தானே பறப்பாய் நீ"**

**இப்படிப் பொடிவைத்துச் சொல்கிறான் நூவன்.**

விருத்தம்

**ஆற்றை நான். கடத்திவிட்டால்**
**ஆகாச மார்க்கம் ஓடத்**
**தேற்றம் நீ தெளிவாய் அன்றோ?**
**திரிகூட மலையில்ச் சிங்கா!**
**சாற்றுநன் மருந்துபோலச்**
**சகலர்க்கும் குறிகள் சொல்லிப்**
**போற்றும் உன் சிங்கிபோன**
**புதுத்தெரு இது கண்டாயே (92)**

(3) அப்படியா என்று துள்ளி எழுந்தான் சிங்கன். இருவரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்தபடியே அந்தத்தெருவில் போனார்கள். விசாரிக்கவும்

செய்தார்கள். குறி சொன்னாள் ஒரு குறத்தி. நேற்றுக் கூட அந்த வீட்டில் சொன்னாள் குறி என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு வீட்டைக் காட்டினார்கள். ஆனால் எந்தக் குறத்தி என்றோ அந்தக் குறத்தி எங்குபோனாள் என்றோ விபரம் மட்டும் கிடைக்கவில்லை.

பழைய படி மயங்கினான் சிங்கன். மயக்கத்தில் எங்கெங்கோ போய்த் தடுமாறுகிறான் சிங்கன். "எவனாவது ஒரு போக்கிரிப்பயல் குறி பார்க்க வேண்டும் 'வா' என்று கூப்பிட்டிருப்பான். குடுவையில் இருந்த கள்ளையும் சாராயத்தையும் ஒரு மண்டு மண்டி விட்டு புத்தி இல்லாமல் அவன் பின் போனாலும் போயிருப்பாள். "இப்படித் தடுமாறியது புத்தி சிங்கனுக்கு அதனால் எங்கு போய்த் தேட இனி அவளை என்று சலித்துக் கொள்கிறான்.

**மைக்குறி யாலெங்கும் வெல்லுவாள்**

**மனக்குறியும் கைக்குறியும் கண்டு**

**சொல்லுவாள் ;-**

---

2. ஆற்றை நான் கடத்திவிட்டால் - வழி காண்பித்தால். ஆகாச மார்க்கம் ஓட தேற்றம் நீ தெளிவாய் அன்றோ - உடனே சிங்கியுடன் ஐக்கிய மாகி விடுவாய். ஆனந்தத்தில் மிதப்பாய். என் ஞாபகம் வரவா செய்யும் அப்பொழுது. மருந்து - சஞ்சீவி.

சித்திர சபேசர் மேலே சிவசமயப்
புத்திஇல் லாப் பேயர் போலே
குத்தியில் அரக்கும் கள்ளும்
குடுவையில் தென்னங்கள்ளும்,
அத்தனையும் குடித்துப்
போட்டு யார் பின்னே
தொடர்ந்தா ளோ
எங்கேதான் போனாள் ஐயே
என் சிங்கி இப்போ
எங்கேதான் போனாளையே! (93)

---

3. மைக்குறி - மைப்போட்டு மயங்கவைப்பது போல மனசைக் கட்டுப்படுத்தும் சொற்களைப் போட்டுச் சொல்லும் குறி. சித்ரசபேசர் - சித்ரசபையில் நடனமாடும் நடராஜர், குற்றாலநாதர். குத்தி - குமிழ்போட்டு மூடிய குப்பி. அரக்கு - சாராயம்.

# கண்டான் சிங்கியைச் சிங்கன்

(1) காமவெறியில் புத்தி கலங்கித்தான் போனது சிங்கனுக்கு. நிலைதடுமாறி தத்தளிக்கிறான் சிங்கன். யாருக்கும் அப்படி ஒரு நிலை வரக்கூடாது புழுவாய்த் துடிக்கிறான் சிங்கன். என்ன அதிசயம்! வேறென்ன சொல்ல அதிசயம் என்று தான் சொல்ல வேண்டும். அந்த நேரம் பார்த்து வருகின்றாள் சிங்கி. பகல் கனவில் அல்ல உண்மையாகவே வருகிறாள், சொல்லிவைத்த மாதிரி டாண் என்று சிங்கன் எதிரிலேயே வருகிறாள்.

சிங்கனும் பார்த்தான். உண்மையாகவே பார்த்தான். கண்ணைத் துடைத்து அகல விழித்தபடியே பார்த்தான்.

அவன் பெற்ற ஆனந்தத்துக்கு அளவும் உண்டோ? பாடுபட்டுத் தேடினான் செல்வத்தை ஒருவன். கட்டித் திரவியமாய் பெருகி உயர்ந்து விட்டது அது. பெட்டியில் இடம் இல்லை பானையில் இடம் இல்லை குதிரில்க் கூட இடமில்லை. அப்படிச் சேர்ந்து விட்டது பணம்.

ஒருநாள் அது காணாமலும் போய்விட்டது. எப்படிப் போனது என்று தெரியவும் இல்லை. அது தெரிந்து ஆகப் போவதென்ன, துயரம், துயரந்தானே. ஓய்ந்தே போனான் பறிகொடுத்தவன்.

அவனுக்கு ஒரு அழகான மகள். அவளைத் திருமணம் செய்ய மாப்பிள்ளை வீட்டார் வந்து கேட்டார்கள். வசதி இல்லாததால் சம்மதிக்கவில்லை திருமணத்துக்கு இவன்.

"நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். நாங்களே பார்த்துக் கொள்கிறோம் என்று ஒரு மாப்பிள்ளை வீட்டார் உறுதி சொன்னார்கள். சம்மதித்தான்.

ஒரு வாரத்தில் நிச்சயம் பண்ண வந்தார்கள். அந்தச் சிறு விழாவில், வெள்ளித் தட்டில் வெற்றிலை பாக்கு, பழம், புஷ்பம் தேங்காய் வைத்து அதன்மேல் பேங்க் டிராப்ட் (வரைவோலை) ஒன்றையும் வைத்துக் கொடுத்தார் மாப்பிள்ளையின் தகப்பனார். பெண்ணின் தகப்பனாரிடம் ரூபாய் இருபத்தைந்து லட்சத்துக்கு டிராப்ட்'

ஆனந்தக் கண்ணீர் தாரை தாரையாகச் சொரிய சொல்குழற தத்தளித்தார் பெண்ணின் தந்தை. தாம்பாளத் தட்டுக் கொடுத்த மாப்பிள்ளையின் தகப்பனார் சொன்னார் "பத்து வருஷத்துக்கு முன் உங்கள் வீட்டில் களவாடிய பணம் இது. அதை வைத்து அதிரடி வணிகத்தில் இறங்கினேன். கோடி கோடியாய்க் கொட்டியது செல்வம். அதில் ஒரு துளி இது"என்று.

எப்படி இருக்கும் பெண்ணின் தகப்பனாருக்கு ஆனந்தம். கருணையே உருவான, கண்கண்ட தெய்வமாகவல்லவா தெரிவார் அவர் சம்பந்தி.

ஆனந்தம் அப்படி மாற்றிவிடும். பித்தளையைத் தங்கமாக்கி விடும்.சிங்கியைக் கண்ட சிங்கனையும்

அப்படியே மாற்றிவிட்டது. அவன் பெற்ற ஆனந்தம். அதை எப்படிக் கையில் எடுத்துக் காட்டுகிறது தமிழ். பாடலில் பார்க்கலாம்.

கொச்சகக் கலிப்பா

**ஆணாகிப் பெண்விரகம்**
**ஆற்றாமல்ப் போன சிங்கன்**
**சேணார் பெருந்தெருவில்ச்**
**சிங்கியை ; முன் தேடி வைத்துக்**
**காணாமல்ப் போன பொருள்**
**கண்டவர் போல்க் கண்டானே!** (94)

(2) இனி, தொண்டர்க்குத் தொண்டராய் வாழ்ந்தவர் சுந்தரமூர்த்தி நாயனார். நட்பும் தயையுந்தான் அவருக்குக் கடவுள். அவருக்குத் தோழராய் இருக்காமல் வேறு யாருக்குத் தோழராவார் கடவுள்.

சுந்தரமூர்த்தி நாயனாரைச் சுற்றிச் சுற்றி வந்தார் சிவபெருமான். அப்போதைக்கு அப்போது அவருக்கு வேண்டிய காரியங்களைச் செய்து உதவுகிறவரும் அவர் (பெருமான்)தான்.

---

1. ஆணாகிப் பெண் விரகம் ஆற்றாமல் போன சிங்கன் - ஆண் பிறவி என்று எடுத்துவிட்டால் யாரைத் தான் விட்டு வைக்கும் பெண் மோகம். சிங்கனும் அப்படியே சிங்கியின் மேல் வைத்த ஆசையில். சேணார் - நீண்ட, கண்ணுக்குக் கெட்டிய தூரம் வரை நீண்ட பெருந்தெரு - ராஜவீதி.

அதே சிவப்பரம்பொருள் தானே குற்றாலத்தில் வந்து குற்றாலநாதராய் அருள் பாலிப்பது.

அந்தக் குற்றாலத்தில் வைத்துத் தான் சிங்கியைக் கண்டான் சிங்கன். என்ன செய்தான் கண்டு.

**தொண்டாடும் சுந்தரர்க்குத்**
**தோழர்திரி கூட வெற்பில்**
**திண்டாடி நின்ற சிங்கன் ;**
**சீராடும் சிங்கிதனைக்**
**கண்டாடித், துள்ளாடிக் ;**
**கள்ளாடும் தும்பியைப் போல்**
**கொண்டாடிக் கொண்டாடிக்**
**கூத்தாடிக் கொண்டானே! (95)**

(3) காதல் வெறியில் மயக்கத்தில் அப்படியும் இப்படியும் ஆட்டம் போடுவது இயல்புதான். பாட்டுக்கு மேல் பாட்டு வருவதும் இயல்புதான்.

அதெல்லாம் கொஞ்சநேரத்துக்குத் தான். பிறகு அது புளித்துக் போகும். அப்புறம் என்ன, கொஞ்சிக் கொஞ்சிப் பேசுகிறதில் இருக்கிறது கனிவு. பேச்சிலும், பேச்சுக்கு ஏற்றபடி எல்லாம் முகத்தில் விளையாடும் உணர்ச்சியிலுமே இருக்கிறது காதல் கனிவு.

2. கள்ளாடும் தும்பி - தேனுண்ட மயக்கத்தில் தள்ளாடும் வண்டு. கள்வெறி ஏற ஏற புஷ்பத்தையே பார்த்து பார்த்து மயங்கும் வண்டு. அப்படி மயங்கினான் சிங்கன். சிங்கியைப் பார்த்துப் பார்த்து

கேள்வி, பதில், பிணக்கு, ஊடல் இவைதாம் இன்பத்துக்கு உயிர்கொடுக்கும் இன்பானுபூதிகள். உணர்ச்சியில் ஊறும் தேனும் அதுதான். ஆர்வத்தில் பொங்கும் அமிர்தமும் அதுதான்.

காணாததைக் கண்டவன் போன்று சிங்கியைக் கண்டு அனுபவிக்கிறான் சிங்கன் அவள் மேனியை, அங்கம் அங்கமாகத் தொட்டுப் பார்க்கத் துடிக்கிறான் சிங்கன்.

சிங்கிக்கும் அப்படியேதான். அது (அந்த உல்லாசம்) போடுகிற கோலம் எப்படி எப்படி, அடிக்கிறது டால் "வயிரக் கம்மல் போல் கல்பதித்த காதணி சிங்கியின் காதில் கிடந்து ஊஞ்சலாடுகிறது. அது வள்ளைக்கொடியில் துத்திப் பூ பூத்தது போல் தெரிகிறது சிங்கனுக்கு. கேட்கிறான் கேள்வி. பதிலும் வருகிறது சுடச்சுட.

ராகம் - தன்யாசி தாளம் - ஆதி

கண்ணிகள்

**வள்ளைக் கொடியிலே**

**துத்திப்பூ பூப்பானேன் சிங்கி; காதில்**

**வங்காளத் தாரிட்ட**

**சிங்காரக் கொப்படா - சிங்கா (96)**

3. வள்ளைக்கொடி - காது. துத்திப்பூ - காதணி. வங்காளம் வரை போய் வந்திருக்கிறாள் சிங்கி. அந்தக் காதணியின் பெயர்தான் சிங்காரக் கொப்பு.

இனி, மூக்கு முனையிலே புன்னை அரும்பு எப்படி எடுத்தது என்கிறான் சிங்கன்

**வன்னக் குமிழிலே**

**புன்னை அரும்பேது - சிங்கி - காயல்**

**முந்நீர்ச் சலாபத்து**

**முத்துமூக் குத்திகாண் சிங்கா. (96)**

கடைசியாகக் கேட்கிறான் சிங்கன். உன் மேனியே பளபளவென்று மின்னும். அதில் பளிச் பளிச் சென்று மின் வெட்டுகிற மாதிரி ஒளி அடிக்கிறதே அது ஏன் என்று. அதற்கும் வருகிறது பதில்.

விடமாட்டேன் என்கிறான் சிங்கன், சிங்கியைத் தான்

**பொன்னிட்ட மேலெல்லாம்**

**மின்வெட்டிப் பார்ப்பானேன் - சிங்கி - இந்த**

**வன்னப் பணிகளின்**

**மாணிக்கக் கல்லடா - சிங்கா (96)**

சரியான ஜோடிப் பொருத்தந்தான் சிங்கனும் சிங்கியும். திருமணப் பொருத்தம் பார்க்கிறவர்கள் இப்படிப்பட்ட பொருத்தத்தைப் பார்க்க வேண்டும். மிக மிக முக்கியமான பொருத்தம் இதுதான்.

★★★★★★★★★★★★★

3. வன்னக்குமிழ் - அழகிய மூக்கு. புன்னை அரும்பு - மூக்குத்தி. காயல் முந்நீர் சலாபம் - காயலோடு கூடிய கடலில் சலாபம் குளித்து எடுத்த முத்து.

## மங்கல வாழ்த்து

(1) வாரக்கணக்கில், மாதக்கணக்கில் கூட நடக்கும் நாடகம். நாடகத்தோடு சம்பந்தப்பட்டவர்களும் சரி, நாடகத்தை வந்து பார்க்கிறவர்களும் சரி, எல்லோருமே கலகலப்பாகவே இருக்கிறார்கள். சடைப்புப் புளிப்பில்லை ஒருவருக்கும். யாதொரு வில்லங்கமும் இல்லாமல் சந்தோஷமாய் நடந்து முடிகிறது காரியம் அப்படி என்றால் உள்ளம் பூரிக்கத்தானே செய்யும். ஆனந்தம் பொங்கத்தானே செய்யும். அந்த ஆனந்தமும், பூரிப்பும் வாழ்த்தாக வரும். போற்றிப் பரவும் வணக்கமாகவே வரும். எல்லாம் இறைவன் செயல். நம் காரியம் என்று ஒன்றும் இல்லை என்னும் ஞானம் அப்பொழுது உதிக்கும். அதுதான் பக்தி. அதுதான் பரவசம். அந்தப் பரசவம் பாடலாய் வருகிறது.

**சுற்றாத ஊர்தோறும்**
**சுற்றவேண்டாம் புலவீர்!**
**குற்றாலம் என்றொருகால்**
**கூறுமின் - வற்றா**
**வடஅருவி போல**
**வளம்பெருக்கும், மாளா**
**இடர்களையும் எந்தை**
**கழல் (97)**

1. மாளா இடர் - நீங்காத தொல்லை. எந்தைகழல் - குற்றால நாதரின் அருள். கழல் - திருவருள்.

(2) இப்படியாகக் குற்றாலத்தை வாழ்த்துகிறது தமிழ். ஒரு பக்கம் தென்றலும், அருவியும் சேர்ந்து அபிஷேகம் பண்ணுகிறது குற்றாலத்தை. இன்னொரு பக்கம் தமிழும் அபிஷேகம் பண்ணுகிறது. பாலாபிஷேகம், தேனாபிஷேகம் என்றால் தமிழ் பண்ணுகிற கவி அபிஷேகந்தான். இனி குற்றாலத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கும் குற்றாலநாதரை தமிழ் வாழ்த்துகிற வாழ்த்தைப் பார்ப்போம்.

கண்ணிகள்

**(1)** **கொற்றமதிச் சடையானை**
**குறும்பலா உடையானை**
**வெற்றிமழுப் படையானை**
**விடையானை வாழ்த்துவமே**

**(2)** **சித்ரநதி இடத்தானைத்**
**தேனருவித் தடத்தானை**
**சித்ரசபை நடத்தானைத்**
**திடத்தானை வாழ்த்துவமே**

**(3)** **பனகஅணி பூண்டவனை**
**பக்தர்களை ஆண்டவனை**
**அனவரதத் தாண்டவனை**

2. விடையான் - காளை வாகன மூர்த்தி. நடத்தான் - நடராஜமூர்த்தி. பனகஅணி - சர்ப்பத்தையே மணி மாலையாக அணிந்தவன். கடகரி - மத யானை. மறையவன் - ஞானசொரூபி. தட்சன் ஏவிய யானையைக் கொன்று அதன் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டான் இறைவன்.

**ஆண்டவனை வாழ்த்துவமே**

**(4) கடகரியை உரித்தவனைக்**

**கலைமதியம் தரித்தவனை**

**வட அருவித் துறையவனை**

**மறையவனை வாழ்த்துவமே (98)**

(3) பார்ப்பதற்குச் சாதாரணமாகத் தான் தெரிவார்கள் நாடகம் பார்க்க வந்து கூடுகிறவர்கள். ஆனால் விபரம் தெரிந்தவர்கள். அனுபவம் மிக்கவர்கள் என்றே சொல்ல வேண்டும் அவர்களை.

நாடகம் முடியும் அன்று எள்ளைப் போட்டால் ஒரு எள் கூடக் கீழே விழாது அப்படிக் கூடும் கூட்டம்.

நல்ல படியாக முடியும் கதை. முடிந்ததும் நாடகக் காரர்கள் நம் ஊரை எப்படி மதித்துப் பாடுகிறார் என்று கவனிப்பார்கள். ஊரைப் பாராட்டிப் புகழ்ந்த கையோடு, ஊர்த்தெய்வத்தை வாழ்த்தி வழிபடுகிறார்களா நாடகக்காரர் என்றும் பார்ப்பார்கள். அதோடு விடுவார்களா, நாடகம் பார்க்க வந்த நம்மை, நம் ஊர் ஜனங்களை என்ன சொல்கிறார் கொட்டகைக்காரர் என்றும் பார்ப்பார்கள். அதிலெல்லாம் மிக்க உஷாராகவே இருப்பார்கள்.

இனி நாடகம் பார்க்கப் பிரமுகர்களும் வந்து போவது உண்டுதானே. அவர்களும் கடைசிநாள் அன்று வந்துவிடுவார்கள். முக்கிய வேலை எதானாலும் அதை அப்படியே போட்டுவிட்டு வந்து விடுவார்கள்.

கம்பெனி ஆள் நம்மை என்ன சொல்கிறார் என்று பார்க்கத்தான்! பண்ணையார், குட்டி ஜமீன்தார், வள்ளல் பிரபு எல்லோருமே அதில் உஷாராய் இருப்பார்கள்.

அரசாங்கம் என்று ஒன்று உண்டு தானே. அதுவும் இதில் மிக்க உஷாராகவே இருக்கும். இவ்வளவையும் கரைத்துக் குடித்தவர் கொட்டகைக்காரர். பலமரம் கண்ட தச்சனாயிற்றே அவர். யாரையும் விடமாட்டார். சேர்த்து அணைத்து மங்களம் பாடி முடிப்பார்.

ஊரே அதிரும். கை தட்டலும், விசில் சத்தமும் ஆரவார முழக்கமும் அத்தனையும் சேர்ந்து. நாடகம் எதாகவும் இருக்கலாம். ஆனால் மங்களம் ஜாம், ஜாம் என்றிருக்கும். திரிகூடராஜப்பக் கவிராயர் எப்படிப் பாடி மங்களமாய் முடிக்கிறார் நாடகத்தை என்று பாருங்கள்

விருத்தம்

**வார்வாழும் தனத்திகுழல்**
**வாய்மொழிஅம் பிகைவாழி,**
**வதுவை சூட்டும்**
**தார்வாழி, திரிகூடத்(து)**
**இறைவாழி, குறுமுனிவன்**
**தந்தமிழ்ப் பாடல் கூட்டும்**
**சீர்வாழி, அரசர்கள் செங்**
**கோல்வாழி, நன்நகரத்**

**திருப்பேர் கொண்ட**

**ஊர்வாழி, குற்றாலத்**

**தலத்தடியார் வாழிநீ(டு)**

**ஊழிதா னே (99)**

ஜாம், ஜாம் என்று பாடி முடித்து விட்டார் மங்களத்தைக் கவிஞர். பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

---

3. வார்வாழும் தனத்தி - மார்பில் கச்சணிந்த உண்ணாமுலை அம்மை என்னும் குழல்வாய்மொழி. அம்மை. வதுவை சூட்டும்தார் - கல்யாணமாலை. சீர் - தாளம். பாடலோடு பாடலாய்க் கிடக்கும் நடன இயல். குற்றாலத்து அடியார் - குற்றாலத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோருமே. வாழி நீடூழி - வாழ்க வாழ்க வாழ்கவே.

# புறனடை

(1) "குற்றாலக் குறவஞ்சியே குறவஞ்சி" என்று தேவ வாக்குப்போல வந்தது ஒருவாக்கு, அருள்வாக்கு. குறவஞ்சிப் பாடல்களை இசையோடும், கூத்தோடும் பாடுகிறவர்கள் பாடி அனுபவிக்கிறவர்கள் அந்த வாக்கின் பொருள் இன்னதென்று காண்பார்கள்.

இனி, திரிகூட ராஜப்பக் கவிராயர் எல்லோரையும் போல் சாதாரண மனிதராகத் தான் வாழ்ந்தார். வானத்தைவில்லாக வளைக்கிறேன், மணலைக் கயிறாகத் திரிக்கிறேன் என்று செப்படி வித்தை எதுவும் செய்யவில்லை அவர். பழக்க வழக்கம், நடவடிக்கை, எல்லாம் எல்லாரையும் போலவே இருந்தது அவரிடமும். ஆனாலும் அவருக்குள்ளே ஒரு அதிசயச் சித்தர் இருந்தார். கவிச்சித்தரே இருந்தார். ஏன், தமிழே இருந்தது அவருள் என்றுதான் சொல்ல வேண்டும்.

இல்லை என்றால் பிரம்ம சிருஷ்டி போல் வருமா கவி. ஒவ்வொரு கவியும் ஒவ்வொரு அவதாரம். சிருஷ்டி தத்துவமே எடுக்கும் புதுப்புது அவதாரம். தமிழின் அவதாரம் தான் பாடல் ஒவ்வென்றும்.

இனி, நாடகத்தில் உள்ள கட்டுக் கோப்பையும், உறுதியையும் பார்த்தால், எங்கிருந்து வந்தது இந்தப் பொருத்தம், இந்த உறவு, இந்த நெருக்கம் என்று அதிசயிக்க வைக்கிறது. மூக்கின் மேல் விரல் வைத்தே

அதிசயப்பட வைக்கிறது. பாத்திரம், உணர்ச்சி, பேச்சு, வேகம், நயம் எல்லாம் கைகோர்த்து ஒன்றுக்கொன்று ஆதரவாய் இருக்கின்றன. அப்படியே பேசுகின்றன நடக்கின்றன. நடிக்கவே செய்கின்றன.

நாடகத்தை ஆசிரியர் நடத்தவில்லை. நாடகமே நடத்துகிறது நாடகத்தை என்று தான் சொல்ல வேண்டும்.

ஆனாலும் நாடக ஓட்டத்தை அங்கங்கே தடைப் படுத்துகின்றன ஒரு சில பாடல்கள். அழையா விருந்தாக வந்து கட்டுக்கோப்பை உலைக்கின்றன அப்பாடல்கள்.

விஷயம் இருக்கிறது. உணர்ச்சி இருக்கிறது. யாப்பியல் அருமையாய் அமைந்திருக்கிறது. இசையோடும், நடனத்தோடும் சேர்ந்து உணர்ச்சிக்குப் பாவ உருவம் கொடுக்கிற சிருஷ்டி தத்துவம் இருக்கிறது பாடலில்.

தமிழைப் பற்றிச் சொல்ல வேண்டாம். கணகண என்று பேசுகிறது ஒவ்வொரு சீரிலும், ஒவ்வொரு அசைவிலுமே.

ஆனால் பாடல்வந்து சப்பணம் போட்டு உட்கார்ந்த இடந்தான் சரியில்லை. அதனால் அந்தப் பாடல் ஒவ்வொன்றும் முள் குத்துகிற மாதிரி குத்துகிறது படிக்கிறவர்களை.

பாடல்கள், நல்ல பாடல்கள். அதனால் அவற்றை விட முடியவில்லை. ஆனால் வேண்டாத இடத்தில்

வந்து வேண்டா வெறுப்பாக நிற்கின்றன. அதனால் வைத்துக் கொள்ளவும் முடியவில்லை.

என்ன செய்ய, அந்தப் பாடல்களை தனியாக எடுத்து வைக்க வேண்டியதாகி விட்டது. நாடகத்தோடு ஒட்டி நிற்காமல் பிரிந்து நிற்கும் அப்பாடல்களை இனிப் பார்க்கலாம்.

★★★★★★★★★★★★

தமிழையும், தமிழ்பண்பாட்டையும், சமயவழி பாட்டுக்குக் கோவிலென்ன, குளமென்ன, தேர்த் திருவிழா என்ன இப்படிப்பட்ட சாதனங்களையும் கட்டி வளர்த்தவர்கள் பாண்டியர்கள்.

பல ஆயிரம் வருஷமாகவே தொடர்ந்து இவற்றைப் பேணி வளர்த்தவர் அவர்கள்.

தென்காசியை அடுத்தது சொக்கம்பட்டி சமஸ்தானம். தென்காசி வட்டாரம் முழுவதையும் தமிழ் மணம் மணக்க, சமயப் பண்பாட்டு மணம் மணக்க எவ்வளவோ காரியம் செய்திருக்கிறார்கள் சமஸ்தானத்தார்.

கவிஞரின் உள்ளத்தைக் குழைத்துப் பிசைகிறது. சமஸ்தானாதிபதிகளின் தர்ம கைங்கர்யம். உருகி விடுகிறார் கவிஞர்.

உருக்கமே செய்யுளாய் உருவெடுக்கிறது. எப்படி என்று பாருங்கள்

இராகம் - கல்யாணி தாளம் - ஆதி

கண்ணிகள்

ஆலயம் கட்டித்
திருப்பணி யுங்கட்டி,
அன்ன சத்திரம் கட்டி ;-
அப்பாலும் தென்காசி
பாலமும் கட்டிப்
படித்தரம் சேர்கட்டி,
பக்த ஜனங்களை
காக்கத் துசம்கட்டி,
மாலயன் போற்றிய
குற்றாலநாதர்
வழித்தொண்டு செய்திடக்
கச்சை கட் டிக்கொண் ட
சீலன் கிளுவையில்
சின்னணஞ் சேந்த்ரன்
சிறு காலச் சந்தி
திருத்துப் புறவெல்லாம் (100)

1. துசம்கட்டி - காப்பாற்றியே தீருவேன் என்னும் உணர்ச்சி மேலோங்கி நிற்க, கொடி கட்டிப் பறக்கிற மாதிரி உயர்ந்தோங்கி எழுந்து நிற்க. மால்அயன் - திருமாலும், பிரம்மாவும், கச்சை கட்டிக் கொண்ட சீலன் - உறுதியில் தளராது செயல்படும் உத்தமன். கிளுவை - சொக்கம்பட்டி. சின்னணம் சேந்த்ரன் - அரசர்

சொக்கம்பட்டி ஜமீனுக்குச் சொந்தமாகப் பல இடங்கள் புஞ்சை, திருத்திய நன்செய் (திருத்து) தோப்பு, விளை புறவு என்று எத்தனையோ இடங்கள்.

இனி சிங்கியைத் தேடி சிங்கன் கிளம்பி வந்தான். சிங்கியின் ஞாபகத்திலேயே வந்தான். வரும் நேரம் பிற்பகல் பொழுது இறங்கும் நேரம். பறவைகள் சாரை சாரையாய் நிரை சாய்ந்து பறக்கின்றன. இரை பொறுக்க இடந்தேடிச் சாய்கின்றன. பறவைகளைக் கண்டதும் நாவில் நீர் ஊறியது சிங்கனுக்கு. கண்ணி வைத்துப் பிடிக்கலாமா அவற்றை என்று நினைத்தான். ஆனாலும் சிங்கியை மறக்கவில்லை. அதன் ஆவேசத்தைச் சிறிது தணிக்கவே பறவைமேல் மனம் போனது. அந்த வேளையில் நூவன் வருகிறான். கண்ணி வைப்பதில் கெட்டிக்காரன் நூவன். அவனும், இவனும் சேர்ந்து பறவை இரைபொறுக்கும் இடம் எது எது என்று கவனிக்கிறார்கள்.

அரசரைப் பற்றியும், அரசரின் தர்ம கைங்கர்யம் பற்றியும் எவ்வளவோ சொல்லலாம். சொல்லச் சொல்ல ஆவலோடு கேட்பார்கள் ஜனங்கள். ஆனால் இந்த அவசரத்தில் அதை எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. தனியாக அதற்கென்று இடம் வகுத்து ஒதுக்கி சொல்ல வேண்டும்.

ஆனால் குறவஞ்சிக்குள் நேரம் காலம் தெரியாமல் பாராட்டுப் பத்திரம் வாசிக்கிற மாதிரி வருகிறது.

இரும்படிக்கும் இடத்தில் ஈக்கு என்ன வேலை

என்பது போல் பறவைக்குக் கண்ணி வைக்கும் நேரத்தில் சத்திரம் கட்டியது, ரோடு போட்டதை எல்லாம் பட்டியலிட்டுக் கொண்டிருக்க முடியுமா?

சமஸ்தானபதியோடு நிற்கவில்லை பட்டியல், அவர் மந்தரி, தந்திரி, கணக்குப் பிள்ளை என்று யார் யார் தருமகைங்கர்யம் செய்தார்களோ அவர்கள் பெயர் எல்லாம் ஏறுகிறது அட்டவணையில்.

**மன்னன் கிளுவையின்**
**சின்னைஞ் சேந்த்ரன்**
**வடகரை வீட்டுக்கு**
**மந்திரி யாகவும்,**
**செந்நெல் மருதூர்க்கு**
**நாயகம் ஆகவும்,**
**தென்காசி ஊருக்குத்**
**தாயகம் ஆகவும்**
**தன்னை வளர்க்கின்ற**
**குற்றால நாதர்**
**தலத்தை வளர்க்கின்ற**
**தானிக னாகவும்**
**நன்நகர்க் குற்றாலத்(து)**
**அந்நாதி சொன்னவன்**

1 கிளுவை - சொக்கம்பட்டி ஜமீன். பிச்சைப் பிள்ளை தான் மந்திரி மருதூர் அவர் சொந்தக்கிராமம். தென்காசி வட்ட கையில் கொடி கட்டிப் பறந்தது அவர் செல்வாக்கு குற்றாலம் கோவில் நிர்வாக தர்மகர்த்தாவும் அவர்தான்.

**நள்ளார் தொழும்பிச்சைப்**

**பின்னை திருத்தெலாம் (100)**

மந்திரி பிச்சைப் பின்னையோடு முடிகிறதா, இல்லையே, இழுக்க இழுக்க வந்து கொண்டே இருக்கிறது சவ்வுமிட்டாய் மாதிரி வாழ்த்து மடல்தான்.

அனந்தபத்மநாப பிள்ளை என்று ஒரு தானாவதி அவர் விளையிலும் இறங்கி இருக்கிறது கொக்கு முதலிய பறவை. அனந்தபத்மநாபபிள்ளை நல்ல மனம் படைத்தவர். புண்ணிய கைங்கர்யம் பல செய்திருக்கிறார்.

**நன்நகர் ஊர்கட்டிச்**

**சாலை மடம்கட்டி,**

**நாயகர் கோவில்**

**கொலுமண் டபம்கட்டி,**

**தென்னை மரம் பர**

**மானந்தத் தோப்பிட்டு**

**தெப்பக்குளம் கட்டி**

**தேர் மண்டபம் கட்டிப்**

**பன்னும் திரிகூடத்(து)**

**அம்பலம் கட்டி,**

**பசுப்பிரை கோடி,**

**திருப்பணி யுங்கட்டி**

**அந்நாளில் தர்மக்**

**களஞ்சியம் கட்டிய**

**அனந்தபத்ம நாபன்**

**கட்டளைத் திருத்தெலாம் (100)**

இனி, அனந்தபத்மநாபபிள்ளை வழிவந்தவர் வைத்தியநாத பிள்ளை. அவரும் சும்மா இருக்காமல் கோவில் வாசலில் ஒரு பிள்ளையார் சன்னதியையும் அதற்கு இரண்டு படிகளையும் கட்டி வைத்து விட்டார். அவரும் மாட்டிக் கொண்டார்.

**தந்தைமுன் கட்டின**

**அம்பலத் துக்கும்**

**தருமத்துக்கும் நிலைக்**

**கண்ணாடி போல**

**எந்தையார் வாசலில்**

**பிள்ளையார் செய்வித்(து)**

**இரண்டு குறிஞ்சிப்**

**படித்துறை யும் செய்த. (100)**

(வயித்தியநாதன் திருத்தெலாம்)

1. பரமானந்தத் தோட்டம் குற்றாலம் கோவிலுக்கு உண்டான தென்னந்தோப்பு. கட்டளைத் திருத்து - கோவிலுக்கென்று எழுதி வைத்த சொத்து. வயல்.

(2) இனி, மேலே குறிப்பிட்ட வயல், தோப்பு, விளை எங்குமே மேயுதடா பறவை, மேயுதடா 'பறவை' என்று கூப்பாடு போடுகிறான் சிங்கன். சத்தம் கேட்டு நூவன் ஓடி வருகிறான். வெறுங்கையோடு வருகிறாயே பயலே, கண்ணியை எங்கே. எடுத்துக்கொண்டு வா வேகமாக அதை என்று உத்தரவு போடுகிறான் சிங்கன்.

இராகம் - கல்யாணி தாளம் - சாப்பு

அனுபல்லவி

**கண்ணி கொண்டு வாடா**
**பண்ணவர் குற்றாலர்**
**காரார் திரிகூடச்**
**சாரலி லே வந்து**
**பண்ணிய புண்ணியம்**
**எய்தினால் போல**
**பறவைகள் எல்லாம்**
**பரந்தேறி மேயுது (கண்ணி) (101)**

மேலும் சொல்கிறான் சிங்கன். விபரமாகவே சொல்கிறான் சிங்கன் " ஏலே நூவா! குறவர் குலத்தை மட்டம் என்று நினைக்கிறாயா, வேட்டை ஆடுவதை இழிதொழில் என்று எண்ணுகிறாயா கண்ணியும் கையுமாக வல்லவா இருக்க வேண்டி உள்ளதென்று கூசுகிறாயோ அதை எடுக்க.

2. காரார் - மேகம் சூழ்ந்த. செய்த புண்ணியம் திரண்டு வந்தது போல் திரண்டு வந்தது பறவைக்கூட்டம்.

" ஏலே நூவா! திருமாலே வேடன் உருவெடுத்துத்தான்டா காகாசுரன் கண்ணைக் கொத்தினாரு. சிவபெருமானே வேட்டையாடினவர் தான். கொக்கு வேட்டையாடி அதன் சிறகை இன்னமும் சொருகி இருக்கிறாரே பார்த்தாயா தலையில்!

"தேவாதி தேவரெல்லாம் மதிக்கிறார்கள். நீ ஒரு மாதிரி பார்க்கிறாயே என்ன"

**கானவர் வேடத்தை**

**ஈனம்என்(று) எண்ணாதே ;**

**காக்கை படுத்தான்**

**கருமுகில் வண்ணனும் ;**

**மேல்நான்ப் படுத்திட்ட**

**கொக்கிற(கு) இன்னும்**

**விடைமேல் இருப்பவர்**

**சடைமேல் இருக்குது (கண்ணி) (101)**

மேலும் சொல்கிறான் சிங்கன். டாண், டாண் என்று மணியடித்த மாதிரியே சொல்கிறான்.

"நம்ம மனித சாதியிலேதான் பிரிவினை வேட்டையாடுகிற கூட்டம். வேட்டையாடாத கூட்டம். சைவம். அசைவம் என்றெல்லாம் பேதம். தேவர்களிடம் அப்படி ஒன்றும் பாகுபாடு கிடையாது.

கானவர் - வேடர். விடை மேல் இருப்பவர் - சிவபெருமான். விடை - காளை. பெருமான் முடியில் சந்திரன் மட்டுமா, கொக்கிறகும் கூடத்தான்.

எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் குலம் என்கிற பழக்கந்தான். அவர்கள் குடும்பமும் பரம்பரையுமே அப்படித்தான். அதுதான் அவர்கள் சந்தோஷமாக இருக்கக் காரணம்"

"கேளுடா நூவா நான் சொல்வதை" என்று கதை விடுகிறான் சிங்கன்.

**முன்நான்ப் படுத்த**

**பரும்பெருச் சாளியை**

**மூத்த நயினார்**

**மொடுவாய்க் கொடுபோனார்,**

**பின்னான தம்பியார்**

**ஆடும் மயிலையும்**

**பிள்ளைக் குறும்பால்**

**பிடித்துக் கொண்டே கினார் ;**

**பன்னரும் அன்னத்தை**

**நன்நகர் ஈசர்**

**பரிகலம் ஈந்திடும்**

---

101) மூத்த நயினார் - விநாயகப் பெருமாள். பெருச்சாளியை வேட்டையாடியவர் தான் அவர். வேட்டையில் சிக்கிய பெருச்சாளியையே வாகனமாக வைத்துக் கொண்டார். விநாயகர் தம்பி முருகன் மட்டுமென்ன, ஆடும் மயிலையே அப்படி மடக்கி வைத்தவர் தானே.

**பார்ப்பானுக்(கு) ஈந்தனர்,**

**வன்னப் பருந்தொரு**

**கள்வன் கொடுபோனான்**

**வக்காவும் நாரையும்**

**கொக்கும் படுக்கவே (கண்ணி) (101)**

முருகப்பெருமானுக்கும் சூரபத்மனுக்கும் சண்டை நடந்தது. கடுமையாகவே நடந்தது. முருகப் பெருமானுக்கு அதுதான் முதல் யுத்தம். கன்னிப் போர் என்றே சொல்ல வேண்டும் அதை. தாக்குப் பிடிக்க முடியவில்லை சூரனால். மாமரமாக உருமாற்றி நின்றான். மாமரத்துக்கு கொக்கு என்று பெயர். போரின் ஆறாம் நாள்முடிகிற வேளை. கொக்கை, சூரனைத்தான் தீர்த்துக் கட்டிவிட்டான் முருகன்.

எவ்வளவு பெரிய அரிய பெரிய செயல் அது. உலகத்தையே ஆட்டிப் படைத்த சனியனையே பீடையையே மண்ணில் போட்டு மிதி மிதி என்று மிதித்து விட்டான் முருகன். மிதித்துத் தேய்ததே விட்டான் முருகன்.

உலகம் முழுதும் கொண்டாடும் விழாவாகவே ஆகிவிட்டது சூரசம்காரம். கந்த சஷ்டி விழா என்றால் கொக்குப் படுத்த விழா தானே.

---

இனி பிரம்மாவுக்கு அன்ன (பறவை)த்தைக் கொடுத்தவர் சிவபெருமான். எல்லோருமே வேட்டையாடுகிறவர் தாம். பார்ப்பான் - பிரம்மன் ; கள்வன் - திருமால்.

"சட்டியில் போட்டு கொக்கை அவித்துச் சாறாக ஆக்கினான் முருகன். அந்தச் சாற்றுக்கு ஒரே அடிபிடி. எனக்கு உனக்கு என்று எல்லோரும் போட்டார்கள் போட்டி. இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம் என்று ஒரே தள்ளு முள்ளு"

கொக்கைச் சட்டியில் போட்டு அவித்தல் என்றால் சூரனை ஆறாம் நாள் போரில் கொன்று அழித்தல் என்று பொருள். சாறாக வடித்தல் என்றால் அதை விழா எடுத்துக் கொண்டாடி மகிழ்தல் என்று பொருள். எல்லோரும் அச்சாறுக்கு வேண்டினர் என்றால் உலகம் முழுதும் கொண்டாடியது விழாவை என்று பொருள்.

சாதாரண மக்கள் பேச்சில் அப்படி மறைபொருள் இருக்கும். அதற்கு வேகம் அதிகம். நயமும் அதிகந்தான்.

"அந்த முருகன் வேறு எங்கோ இருந்து வரவில்லை. இதோ தெரிகிறது பார் இலஞ்சி, அந்த ஊர்க்காரர்தான். நம் வேடர் குலத்தைச் சேர்ந்தவர் தான்.

"கொக்கை வேட்டை ஆடினவர் தானே அவர். சட்டியில் போட்டு அவித்து சாறு இறக்கினவர் தானே அவர்.

"அடே நூவா, வேடர் குலம் என்றால் சாதாரணம் இல்லைடா. நீ தான் ஒரு மாதிரியாக நினைக்கிறாய் வேடர்குலத்தை.

கொண்டுவாடா கண்ணியை என்று அதட்டியே சொல்கிறான் சிங்கன்.

இனிப்பாடல்

மீறும் இலஞ்சிக்
குறத்தியைக் கொண்ட செவ்[2]
வேள்க் குற வன் கன்னி
வேட்டைக்குப் போனநான்.
ஆறுநாள்க் கூடி
ஒரு கொக்குப் பட்ட(து)
அகப்பட்ட கொக்கை
அவித்தொரு சட்டியில்
சாறாக வைத்தபின்
வேதப் பிராமணர்
தாமும் கொண் டார் சைவர்
தாமும் கொண்டார்;
பேறா முனிவரும்
ஏற்றுக் கொண் டாரிதைப்
பிக்குச்சொல் லாமலே
கொக்குப் படுக்கவே (கண்ணி) (101)

2. செவ்வேள் குறவன் - முருகன். கன்னி வேட்டை - முதல்போர். கொக்கு - மாமரவடிவெடுத்த சூரபத்மன். சாறு - திருவிழா. எல்லோரும் கொண்டாடும் பொது விழாவாகி விட்டது. கந்த சஷ்டி பிக்குச் சொல்லாமல் - பிகுப்பண்ணாமல் (கண்ணியை எடுத்து வா)

(3) சிங்கன் விபரமாகவே சொன்னான். அதனால் தெளிவாகவே பட்டுவிட்டது விஷயம் நூவனுக்கு. ஒரே பாய்ச்சலில் தாவி ஓடினான். கண்ணை மூடி முழிப்பதற்குள் கண்ணியும் கையுமாய் வந்துவிட்டான் நூவன்.

கொச்சகக் கலிப்பா

**ஆனைகுத்திச் சாய்த்ததிற**
**வாளர்திருக் குற்றாலர்**
**கூனிகொத்தி முக்கிவிக்கிக்**
**கொக்கிருக்கும் பக்கமெலாம்**
**சேனைபெற்ற வான்க்காரச்**
**சிங்கனுக்குக் கண்ணிகொண்டு**
**பூனை கொத்தி நூவன் முழுப்**
**பூனைபோல் வந்தானே** **(102)**

(4) கண்ணியோடு வந்தான் நூவன். கண்ணியில் பலவகை. ஒவ்வொன்றையும் எடுத்தெடுத்து உதறிக் காட்டுகிறான் சிங்கனிடம். காட்டியபடியே சொல்கிறான் நூவன். இந்தக் கண்ணியில் இது சிக்கும், அந்தக்

3. ஆனை குத்தி சாய்தத திறவாளா் - தாருகா வனத்து முனிவா் விட்ட மதயானையைக் குத்திச்சாய்த்தவா் குற்றாலநாதா். கூனி - மீனில் ஒரு வகை. சேனை - ஆயுதம்.

கண்ணியில் அது சிக்கும் என்று. எந்தெந்த கண்ணியை எப்படி எப்படி வைக்க வேண்டும் என்னும் விபரமும் சொல்கிறான்.

இராகம் - காம்போதி          தாளம் - சாப்பு

**கலந்த கண்ணியை**

**நெருக்கிக் குத்தினால்**

**காக்கையும் படுமே – குளுவா**

**காக்கையும் படுமே**

**மலர்ந்த கண்ணியைக்**

**கவிழ்த்துக் குத்தினால்**

**வக்கா வும்படுமே – குளுவா**

**வக்கா வும்படுமே**

**உலைந்த கண்ணியை**

**நெருக்கிக் குத்தினால்**

**உள்ளானும் படுமே – குளுவா**

**உள்ளா னும் படுமே          (103)**

இப்படி அடுக்கிக் கொண்டு போன நூவனைப் பார்த்து சிங்கன் சொல்கிறான். தாறுமாறாய்க் கிடக்கின்றன உன் கையிலுள்ள கண்ணிகள். முதலில் ஒழுங்கு பண்ணு அவற்றை என்று.

---

4. கலந்த கண்ணி - அது இது என்று சேர்ந்து கலந்த கண்ணி

**குலைந்த கண்ணியைத்**

**திருத்திக் குத்தடா**

**குற்றால மலைமேல் - குளுவா**

**குற்றால மலைமேல் (103)**

(5) நூவன் தன் கையிலிருந்த கண்ணிகளை உதறி உதறிக் காட்டினான். பார்க்கப் பார்க்க சிங்கனுக்கு வந்து விட்டது சிங்கியின் நினைப்பு.

ஆவேசமாகவே வந்துவிட்டது நினைப்பு. குலைந்த கண்ணியைத் திருத்திக் குத்தடா என்பது அந்த ஆவேசத்தின் அவதாரந்தான். அதுதான் கையையும் காலையும் வீசித் தாண்டவம் ஆடுகிறது. குற்றால(ம்) மலைமேல் குளுவா குற்றால(ம்) மலை மேல் என்றே குதித்துக் குதித்துத் தாண்டவம் ஆடுகிறது.

இனி நூவனும், சிங்கனும் கண்ணி குத்தி வேட்டை ஆடுகிறார்கள். அவர்கள் யோகத்துக்கு நிறையவே படுகின்றன பறவை.

குட்டைகளில் புதுவெள்ளம் பாய்ந்து போயிருக்கிறது. அதனால் மீன் புதிது புதிதாக துள்ளுகின்றன. அவற்றைப் பிடிக்கக் கரையில் வந்து அமர்கின்றன கொக்குகள்.

இதை எல்லாம் பார்க்கிற சிங்கனுக்கு சிங்கியின் நினைப்பில் வேகம் ஏறுகிறது. "அடே நூவா! உனக்கு என்ன வேண்டுமானாலும் தருகிறேன். சிங்கியைத்

தேடிப் பாரடா. பார்த்து அழைத்து வாடா " என்று தனக்குள் தானே பேசிக் கொள்கிறான்.

இராகம் - கல்யாணி. தாளம் - ஆதி

**ஏறாத மீன்களும்**

**ஏறி வருகுது**

**எத்திசைப் பட்ட**

**குருகும் வருகுது**

**நூறாறு கண்ணியைப்**

**பேறாகக் குத்தியே**

**நூவனும் நானும்**

**இருந்தோம் ; உனக்கினிப்**

**பேறான சூளை**

**மருந்தா கினும்பிறர்**

**பேசாமல் வாடைப்**

**பொடியா கிலும், அரைக்**

**கூறா கிலும் ஒரு**

**கொக்கா கிலும் நரிக்**

5. ஏறாத மீன்கள் - இதுவரை பார்க்காத புதுப்புது மீன்கள். சூளை மருந்து - பெண்டிரை வசியப்படுத்தும் மருந்து. பிறர் பேசாமல் வாடைப்பொடி - மூக்கில் பட்டால் போதும். பேச்சு நின்று விடும். மயக்கம் தரும் மாயப்பொடி.

**கொம்பா கிலும் தாரேன்**

**வம்புகள் பேசியே (104)**

சாக்குப் போக்குச் சொல்லாமல் இப்பொழுதே போ, சிங்கியை எப்படியும் கண்டுபிடி, கொண்டு வா, சொக்குப் பொடி வேண்டுமா, மயக்க மருந்து வேண்டுமா? எது வேண்டுமானாலும் தருகிறேன். ஓடு, ஓடு என்று விரட்டுகிறான் சிங்கன். எல்லாம் பகல் கனவில்தான்.

கனவு சிறிது கலைகிறது. அடடா, எத்தனை கொக்குகள் சிக்குகின்றன கண்ணியில், நம்ப முடியவில்லையே என்று கண்ணைத் துடைத்துப் பார்க்கிறான் சிங்கன்.

இனி, நவாப் அரசாண்ட காலம். பட்டாணி ஒருவன் குதிரைமேலேறி குற்றாலம் கோவிலை நோக்கி வந்தான். கோவிலுக்கு முன்னே சிற்றாறு ஓடுகிறது. அதில் ஒரு பாறை. அந்தப் பாறையைக் காட்டி " இதுதான் உனக்கு எல்லை. இதற்கு மேல் நீ போகக்கூடாது" என ஊரார் தடுத்தனர். கேட்பானா பட்டாணி, குதிரைக்கு ஒரு சிமிட்டாக் கொடுத்து சவுக்கையை உதறினான். சிட்டாய்ப் பறக்க உன்னியது குதிரை. ஆனால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியவில்லை குதிரையால். பாறையோடு ஒட்டிக் கொண்டது குதிரையின் கால், குளம்புந்தான்.

குதிரை சிக்கின மாதிரி அல்லவா பறவை

சிக்குகின்றன என்று அதிசயப் படுகிறான் சிங்கன்.

இன்னும் எப்படிச் சிக்குகின்றன பறவைகள் கண்ணியில்.

பூசி உடுத்து
முடித்து வளையிட்டு,
பொட்டிட்டு மையிட்டுப்
பொன்னிட்டுப் பூவிட்டு
காசு பறித்திடும்
வேசையர் ஆசாரக்
கண்ணிக்கு ளேபடும்
காமுகர் போலவும் ;-
ஆசார ஈனத்
துலுக்கன் குதிரை
அடி ஒட்டி ப் பாறை
அடி ஒட்டினால்ப் போலும்
தேசத்துக் கொக்கெலாம்
கண்ணிக்கு ளே வந்து
சிக்குது பார்கதி
தக்குது பார் இனி (104)

(5) அடிஒட்டான் பாறையாவது சிறிது இளகும். வேசியர் நெஞ்சம் இளகவே இளகாது. அவர்தம் கண் வீச்சில் சிக்கியவர் சிக்கியவர்தாம். அதோ கதிதான் அவர் பாடு. இந்த இரண்டையும் எடுத்து விழுங்கிவிடும் போலிருக்கிறது. சிங்கன் பறவைக்கு வைக்கிற கண்ணி. அத்தனையும் சிக்கிவிட்டன கண்ணியில்.

சிக்கிய பறவை வெறும் பறவையாகவா தெரிகிறது. சட்டியில் போட்டு அவித்த துண்டமாகவே தெரிகிறது. நெய்விட்டு வெது வெது வென்று வதக்கி எடுத்த கறித்துண்டமாகவே தெரிகிறது. நாவில் தேனூறுகிறது சிங்கனுக்கு. வாயூற வாயூற எப்படி வருகிறது வார்த்தை சிங்கனிடமிருந்து.

**ஆலாவும் கொக்கும்**
**அருகே வருகுது**
**ஆசாரக் கள்வர்போல்**
**நாரை திரியுது.**
**வேலான கண்ணியர்**
**ஆசையினால், கீழும்**
**மேலும் திரிந்திடும்**

---

5. ஆச்சாரக் கண்ணிக்குளே படும் காமுகர் - வேசியர் கண் வீச்சும் கண்ணிதான். காமுகர்களை விழத்தட்டும் கண்ணியே தான். ஆசார ஈனத் துலுக்கன் - பட்டாணி சாய்பு. துப்புரவு கிடையாது அவனிடம். அடி ஒட்டான் பாறை எனச் சிறிது திரிந்து இன்னமும் இருக்கிறது அப்பாறை.

**வேடிக்கைக் காரர்போல்**

**காலால்த் திரிந்து**

**திரிந்து திரிந்தெங்கள்**

**கண்ணிக்கு ளாகும்**

**பறவையைப் போகட்டுப்**

**பாலாறும் நெய்யாறும்**

**பாய்கின்ற ஒட்டத்தில்**

**பல்லொடிக் கச்சிறு**

**கல்லகப் பட்டால்ப்போல் (104)**

(6) ஆசை பெருகுகிறது சிங்கனுக்கு. ஆசைப் பெருக்கில் ஏதேதோ சொல்கிறான் சிங்கன். உணர்ச்சியோடேயே, வெறியோடேயே சொல்கிறான் சிங்கன். இத்தனையும் காதில் விழத்தான் செய்கிறது நூவனுக்கு. ஆனாலும் இடித்து வைத்த புளி மூட்டையாகவே இருக்கிறான் நூவன். காதுக்கு உள்ளே ஒரு வார்த்தையும் போனதாகவே தெரியவில்லை. இதையும் கண்டு கொண்டான் சிங்கன்.

5. வேலான கண்ணியர் - பெண்டிர். காமப்பெண்டிர். போகட்டு - சட்டியில் போட்டு வதக்கிய வதக்கலில். பாலாறு, நெய்யாறு பாய்கின்ற ஒட்டத்தில் - நாவில் ஊறும் உமிழ் நீர். உதட்டில் ஒட்ட ஒன்றிரண்டு எலும்புத் துகள் உதட்டைக் கிழிக்கின்றன. பல்லை உடைக்கும் கல் கிடக்கிறது போல்தான் சாப்பாட்டில்.

அந்த நேரம் பார்த்து ஒரு ஆண் அன்னம், பெண் அன்னத்தின் மேல் தாவிப் பாய்ந்தது. ஜோடியாய் இரண்டும் நீந்திச் சென்றன. இத்தனையும் பக்கத்தில் உள்ள குளத்தில்தான். பெட்டைக்குளத்தில் தான்.

இதையும் பார்த்தான் சிங்கன். நூவனை விட்டுவிட்டான். சிங்கியின் சிங்கார மோகத்தில் சிக்கினான் சிங்கன். சிக்கெனச் சிக்கி விட்டான் சிங்கன். விருத்தத்தில் வருகிறது பாட்டு.

**காவலர் திரிகூடத் தில்**
**காமத்தால் கலங்கிநைந்து**
**நூவனைப் பழித்த சிங்கன்**
**நோக்கிய வேட்டைக் காட்டில் ;-**
**ஆவல்சேர் காமவேட்கை**
**ஆசையால் அன்னப் பேட்டைச்**
**சேவல்போய்ப் புணரக் கண்டான்**
**சிங்கிமேல் பிரமை கொண்டான் (105)**

(7) சிங்கியின் ஞாபகம் சிங்கன் குடுமியைப் பிடித்து ஆட்டுகிறது. பேயாட்டமே ஆடுகிறான் சிங்கன். எல்லாம் பேச்சில்தான் புலம்பலில் தான்.

---

6. காவலர் - குற்றாலநாதர். திரிகூடம் - குற்றாலம். வேட்டைக்காடு - பறவைகளை விழத்தட்டும் கண்ணி குத்திய காடு. சேவல் - ஆண் அன்னம். பிரமை - காம மயக்கம்.

கண்ணி வேட்டை பற்றிப் பேசுகிறான் சிங்கன். ஆனாலும் சிங்கியைப் பார்த்தே இழுத்துக் கொண்டு போகிறது பேச்சு.

செட்டி வினை என்பது போல் செட்டி பத்து என்று ஒரு இடம், முப்போகம் விளையும் இடம். அதில் தான் வைத்தேன் கண்ணியை. அப்படியே சிங்கி நடக்கும் நடை அழகை மனக் கண்ணால் பார்த்தேன். விழித்துப் பார்த்தால் பெட்டைக் குளத்தில் அன்னப்பேடு உல்லாசமாய் நடந்துபோகிறது தெரிகிறது. நீந்திப் போவதுதான் நடந்து போகிற மாதிரி தெரிகிறது. மறுபடி கண்ணைச் சிறிது மூடி யோசனை பண்ணினால், குற்றாலத்தில் வைத்த கண்ணிகளை வெட்டி முறித்து குருவிகள் பறந்தோடுகிறது தெரிகிறது. என்ன மயக்கம் என்று சலித்துக் கொள்கிறான் சிங்கன்.

கொச்சகக் கலிப்பா

**செட்டிபற்றில் கண்ணிவைத்துச்**

**சிங்கிநடைச் சாயலினால்**

**பெட்டைக் குளத்தில் அன்னப்**

**பேடை நடை பார்த்திருந்தேன் ;-**

**கட்டுற்ற நன்னகர்க்கென்**

**கண்ணிஎலாம் கொத்திவெட்டிக்**

**கொட்டிக்கொண்(டு) ஐயே**

**குருவிஎலாம் போயினவே (106)**

(8) "போய்விட்டன, போய்விட்டன, பறவைகள் எல்லாம் போய்விட்டன என்று கத்துகிறான் சிங்கன்.

இனி, தட்சன் ஒரு முரடன். சிவபெருமானுக்கு பெண் கொடுத்த மாமன்தான். ஆனாலும் முரடன் மருமகனை அழைக்காமலே யாகம் நடத்தினான் தட்சன். பெயருக்குக் கூடக் கூப்பிடவில்லை மருமகனை. மருமகன் யார்? சாட்சாத் சிவபெருமான்தான்.

கோபம் வந்துவிட்டது பெருமானுக்கு. கரும்புத் தோட்டத்துள் யானை புகுந்த மாதிரிதான் பாய்ந்தார் யாககூடத்திற்குள். எதிர்ப்பட்டவர்கள் எல்லோரையுமே, பூசாரிகள், வேதவித்துக்கள் என்று அகப்பட்ட அத்தனை பேரையுமே அடித்துத் துவைத்துவிட்டார் பெருமான்.

அவர்கள் அன்று ஓடிய ஓட்டம் இருக்கிறதே, அதுபோல் இதுநாள் வரை யாருமே ஓடிப் பார்த்ததில்லை.

---

7. செட்டி பற்று என்பது ஒரு வட்ட கையில் உள்ள வயல். பெட்டைக்குளம் என்று ஒரு சிறு குட்டம். கட்டுற்ற - கட்டுப்பாடு, ஒழுக்கம் நிறைந்த. கொட்டிக் கொண்டு - விசிலடித்ததுபோல் விர் என்று ஒலி எழுப்பிய படி. செட்டிபற்று பெட்டைக்குளம் என்பன போல் பல பெயர்கள் குறவஞ்சியில் வருகின்றன. அந்தந்தப் பெயரோடு அவை இன்றும் அப்படியே இருக்கின்றன. வருஷம் பல ஆனாலும் மாறவில்லை அவை.

சிங்கன் வலையில் விழுந்த பறவைகளும் அப்படிப் பறந்தோடிவிட்டன. கண்ணி (வலை)யைத் தும்பு தும்பாய்க் கிழித்த படியே ஓடிவிட்டன. இதையும் அவன் (சிங்கன்) தான் சொல்கிறான்.

இராகம் - முகாரி தாளம் - சாப்பு

பல்லவி

**போயினும் ஐயே - பறவைகள்**

**போயினும் ஐயே!**

அனுபல்லவி

**போயினும் ஐயே**

**நாயகர் குற்றாலர் ;-**

**பொல்லாத தட்சன்**

**மகத்தை அழித்த நாள் ;-**

**வாயில் அடிபட்(டு)**

**இடிபட்(டு) உதைபட்டு**

**வானவர் தானவர்**

**போனது போலவே! (போயினும்) 107)**

8. மகம் - யாகம். தானவர் - அசுரர். போயினும் ஐயே - போயே போய்விட்டது பறவைக் கூட்டம்.

எப்படி ஓடின பறவைகள். இன்னும் எப்படி எல்லாம் ஓடுகின்றன. பார்ப்போம். கூன்பாண்டியன் வெப்பு நோயால் அவதிப்பட்டான். மங்கையர்க் கரசியார் ஞானசம்பந்தப் பெருமானிடம் வேண்டினார். நாயகன் நோய் தீர்க்க. ஞானசம்பந்தப் பெருமான் அம்மையின் வேண்டுகோளுக்கு இரங்கி, பாண்டியன் மீது திருநீற்றை அள்ளித் தெளித்தார். பஞ்சாட்சர மந்திரத்தையும் (நமசிவாய என்னும் திருமந்திரத்தையும்) ஓதினார். பாண்டியனும் சேர்ந்து ஓதினான். உடனிருந்த எல்லோருமே ஓதினார்கள். உள்ளம் உருகி ஓத ஓத வெப்பு நோய் ஓடிவிட்டது. இருந்த இடம் தெரியாமல் போயே போய்விட்டது நோய்.

எப்படி அந்த வெப்பு நோய் மாயமாய் மறைந்தோடியதோ அப்படி ஓடிவிட்டன பறவைகள். கண்ணியில் சிக்கிய பறவைகளும் ஓடிவிட்டன. கண்ணியில் சிக்கி, உயிர்போய் செத்த சவமாய்க் கிடந்த பறவைகளும் ஓடிவிட்டன.

சரணங்கள்

**ஆயிரம் கொக்குக்குச்**
**கண்ணியை வைத்துநான்**
**அப்பாலே போய், ஒரு**
**மிப்பா யிருக்கையில் ;-**
**மாயிரும் காகங்கள்**
**ஆயிரம் பட்டு,**
**மறைத்து விறைத்துக்**

**கிடப்பது போலவே**

**காயம் ஒடுங்கிக்**

**கிடந்தது கண்டுநான்**

**கண்ணி கழற்றி**

**நிலத்திலே வைத்த பின் ;-**

**சேயிழை தன்பொருட்**

**டாலே பஞ்சாட்சரம்**

**செபித்த மன்னவன்**

**பாவம்போ னாற்போலே (போயினும்) (107)**

இன்னும் எப்படி, எப்படி ஓடிவிட்டன பறவைகள். குற்றாலம் வட அருவியில் தலையை நீட்டினால் போதும். அருவி அடிக்கிற அடியில் அழுக்கெல்லாம் பறந்தோடிவிடும். உடல் அழுக்கு மட்டுமா, மன அழுக்கும் ஓடிவிடும். பண்ணின பாவமும் ஓடிவிடும். அப்படி ஓடிவிட்டன பறவைகள். கண்ணியைக் கிழித்துக் கொண்டே ஓடிவிட்டன.

★★★★★★★★★★★★★

8. ஒருமிப்பாய் இருக்கையில் - குருடனுக்கு ஒரே மதி என்கிற கணக்கில் சிங்கியின் நினைப்பிலே இருந்து விட்டேன். காயம் ஒடுங்கி - தேகத்தில் அசைவு ஒன்று இல்லாமல் விறைத்துப் போய். (கிடந்த காகம் எல்லாம் கண்ணியைக் கழற்றவும் ஓடிவிட்டன) பஞ்சாட்சர மந்திரத்தின் பாண்டியன் நோய் ஓடியது போல் ஓடிவிட்டன. சேயிழை - மங்கையர்க்கரசியார்.

இனி, ஆதியில் குற்றாலத்தில் ஆலயம் சிவாலயந்தான். அதை எப்படியோ உழப்பிக் குழப்பி வைணவ ஆலயமாக உருவாக்கி விட்டார்கள். அகத்தியர் பார்த்தார். இப்படியும் உண்டா பித்தலாட்டம் என்று வருத்தப்பட்டார். வைணவர்கள் அசுரபலத்தோடு ஆதிக்கம் பண்ணினார்கள். அதனால் அவர்களிடம் விஷயத்தை எடுத்துச் சொல்வதில் யாதொரு பலனும் கிடைக்காது என்று தெரிந்து கொண்டார். அருவியில் போய் குளித்தார். தன் நெற்றியிலேயே நாமத்தைப் போட்டுக் கொண்டார். ராஜ மரியாதையோடு கோவிலுக்குள் விட்டார்கள். உள்ளே போனார் அகத்தியர். மூலஸ்தானத்துக்குள்ளேயே போனார். திருமாலின் நெற்றியில் கிடந்த நாமத்தைத் துடைத்தெறிந்தார். திருநீற்றைக் குழைத்துப் பூசிவிட்டார் நெற்றியில்.

அவ்வளவுதான் திருமால் சிவனாகிவிட்டார். வைணவர்கள் ஓடியே போனார்கள். அப்படி ஓடிவிட்டன பறவைகள்.

இனி, குற்றாலநாதரின் அடியார்களிடமிருந்த கவலை, தொல்லை, மனக்குழப்பம் எல்லாம் ஓடிவிடத்தானே செய்யும். அப்படியும் ஓடின பறவைகள்.

இனி ஒன்றே ஒன்று. நம்பினவன் கழுத்தை அறுத்து நயவஞ்சகம் பண்ணி, அவன் உடைமைகளை தன் உடைமைகளாகப் புரட்டிப் போடுகிறவன் உருப்படுவானா? வந்ததும் போய்விடும், இருந்ததும் போய்விடும் அவனிடமிருந்து. அதுபோலவே ஓடிவிட்டன பறவைகள்.

**தம்பம் என்(று) ஓம்பி**

**னோரைச் சதிபண்ணித்**

**தான்வாழப் பார்ப்பவர்**

**செல்வங்கள் போலவும்,**

**பம்பும் வடபால்**

**அருவியில்த் தோய்ந்தவர்**

**பாவம் கழுநீராய்ப்**

**போவது போலவும்,**

**கும்ப முனிக்குச்**

**சிவமான காலம்**

**குதித்தோடிப் போன**

**வயிணவர் போலவும்**

**அம்பிகை பாகர்**

**திரிகூட நாதர்**

**அடியவர் மேல் வந்த**

**துன்பங்கள் போலவும் (போயினும்) (107)**

8. தம்பம் என்று ஓம்பினோரை - நீயே தஞ்சம் என்று சொல்லி நம்பிக்கை வைத்துப் பழகுகிறவரை. சதிபண்ணி - மோசடி செய்து. பம்பும் - ஆர்ப்பரித்துக் கொட்டும். கும்பமுனி - அகஸ்தியர். அம்பிகை பாகர் - குற்றாலநாதர். அம்பிகை - குழல்வாய்மொழி அம்மை.

(9) எல்லாம் போய் விட்டனவே என்னும் வருத்தம் இருக்கத்தானே செய்யும் சிங்கனிடம். யாருக்குத்தான் இருக்காது வருத்தம். நம்பிச் செய்த காரியம் ஒவ்வொன்றும் பலன்தராமலே போய்விட்டால்?

ஏமாந்து போனோமே என்னும் துயரம், அதுவும் சிங்கி மேல் (ஒருபெண் மேல்) வைத்த மோக வெறியில் அல்லவா அத்தனையும் பாழாய்ப் போயின என்னும் நினைப்பு வர வர அவமானமாகவும் இருக்கத்தானே செய்யும்.

அவமானம் ஒருபக்கம், வேதனை ஒரு பக்கம் நிலைமையைச் சொல்லவும் முடியாமல் வெல்லவும் முடியாமல் திணறுகிறான் சிங்கன்.

இனி, "ஒரு பொட்டச்சிக்காக இப்படியா கோட்டை விடுவான் ஒருவன். சரியான கிறுக்கன் நம் சிங்கன்" என்று உள்ளுக்குள் ஒரு எக்காளம் நூவனுக்கு.

வெறும் வாயை மெல்கிறவன் அவல் கிடைத்தால் விடுவானா? புரட்டிப் புரட்டி எடுக்கிறான் சிங்கனை நூவன்.

" பருத்தி எடுக்கிறவள் பருத்தியை அல்லவா பார்த்து எடுக்க வேண்டும். போகிறவன், வருகிறவனைப் பார்த்தபடியே எடுத்தால் என்ன உருப்படும் "இப்படி இடித்துரைத்தான் நூவன்". குத்தி வாங்கின மாதிரி இருந்தது அவன் இடித்த இடி. மேலும் சொன்னான் நூவன் " கண்ட பயல்களில் ஒருவனை விட மாட்டாள் மகள், அவளே தன் தாயை அப்படி, இப்படி என்று புறம் பேசுகிறாள். கேட்கிறவர்கள் இதற்குச் சிரிக்காமல் வேறு

எதற்குச் சிரிப்பார்கள்? என்று விலாவில் குத்தின மாதிரியே குத்திக் கேட்டான் சிங்கனிடம் ? நூவன்.

குருவி வேட்டைக்கு வந்து இப்படியா கோட்டை விடுவது என்றும் குத்திக் காட்டினான் நூவன்.

**வருக்கையார் திரிகூடத்தில்**

**மாமியாள் மகன்மேல்க்கண்ணும்**

**பருத்திமேல்க் கையுமான**

**பான்மைபோல் வேட்டை போனாய்,**

**கருத்து வே றானாய் ;- தாயைக்**

**கற்பித்த மகள்போல் என்னைச்**

**சிரித்தனை சிங்கா உன்னைச்**

**சிரித்தது காமப் பேயே! (108)**

(10) பக்கவாட்டில் குத்தினான் நூவன் முதலில். இப்பொழுது நேர் குத்தாகவே விடுகிறான் சிங்கனை நூவன்.

"காமப் பேய்க்கு இப்படியா இடம் கொடுப்பது, புத்தியைக் கடன் கொடுத்துவிட்டாய். ஒரு நிலையில் நிற்க முடிகிறதா உன்னால். எட்டுக்கு எட்டு, அடிக்கடி புத்தி தடுமாறுகிறது உன்னிடம். நீயாவது பறவையை

9. வருக்கையார் - குற்றாலநாதர். குறும்பலா ஈசர். வருக்கை - பலாப்பழம்.

வேட்டையாடுவதாவது பேசாமல் சிங்கியைத் தேடி ஓடு. எந்த வழி போகிறோம் என்பதற்கு அடையாளமாக வழியில் இருக்கிற மரம், செடிகளுக்கு அடையாளம் போட்டுப்போ, இல்லை என்றால் வழி தெரியாமல் திண்டாடுவாய்"

**கடுக்கையார் திரிகூடத்தில்**
**காமத்தால் வாமக்கள்ளைக்**
**குடித்தவர் போலே வீழ்ந்தாய்**
**கொக்கு நீ படுத்துவாழ்ந்தாய்!**
**அடிக்கொரு நினைவேன் சிங்கா**
**ஆசைப்பேய் உனைவிடாது ;-**
**செடிக்கொரு வளையம் போட்டுச்**
**சிங்கியைத் தேடுவாயே (109)**

(11) மனசிலிருந்த ஆத்திரம் முழுவதையும் கொட்டித தீர்த்தான் நூவன். சாட்டையடி கொடுத்த மாதிரி தான் சுளீர், சுளீர் என்று விழுந்தன நூவனின் கிண்டலும் கேலியும். ஆனாலும் கோபம் வரவில்லை சிங்கனுக்கு. தோலில் சுரணையே இல்லை சிங்கனிடம். சோப்புப் போட்டுக் கழுவி, துடைத்தெடுத்த மாதிரி சுரணையை வழித்தெடுத்து விட்டது மோகினிப் பிசாசு.

10 கடுக்கையார் - குற்றாலநாதர். கொன்றை மாலை அணிந்தவர். கடுக்கை - கொன்றை. வாமக்கள் - கடுப்பான சாராயம். கொக்கு நீ படுத்து வாழ்ந்தாய் - நீயாவது வேட்டையாடுவதாவது. ஆசைதான் மறைத்து விட்டதே உன் கண்ணை. முதலில் சிங்கியைப் பார். அதன் பின் வேட்டைக்கு போகலாம்.

கொஞ்சம் கூட வெட்கம் இல்லாமல் சொல்கிறான் நூவனிடம், "நான் தேடிப் போகமாட்டேன். எனக்காக நீ போய்த் தேடிப்பிடித்து என்னிடம் கொண்டு வா சிங்கியை" என்று.

மேலும் சொல்கிறான் கிறுக்குவாக்கில் "ஊடல் காரணமாக" நீ ஒரு மெய்யில்லாதவன் (பொய்யன்) என்று சொல்லிவிட்டாள் குறத்தி என்னை. இது காதில் விழுந்தது மன்மதனுக்கு. கோபம் வந்துவிட்டது. மன்மதனுக்கு உடம்பே இல்லாத உருவிலி ஆயிற்றே அவன். தன்னைத்தான் திட்டுகிறாள் இந்த சிங்கி என்று எண்ணி விட்டான். மன்மதன், குறவனாகிய சிங்கனால் தானே இப்படி ஒரு ஏச்சும், பேச்சும் பொம்பளை வாயால் கேட்க நேர்ந்தது என்னும் ஆங்காரமே வந்துவிட்டது மன்மதனுக்கு. மலரம்புகளை எய்து என்னை சீரழித்துவிட்டான் மன்மதன். ஒரு எட்டுக் கூட எடுத்து வைக்க முடியாது என்னால். நீ போ எனக்காக என்று.

**வேடுவக் கன்னி ஓர் நாள்**

**மெய்யிலா தவனென்றென்னை**

**ஊடலில்ச் சொன்ன பேச்சால்**

**உருவிலி பகைத்தான் என் மேல் ;**

**போடுவான் புட்ப பாணம்,**

**புறப்பட மாட்டேன் நூவா**

**தேடி நீ திரிகூடத்தில்ச்**

**சிங்கியைக் காட்டுபாயே (110)**

(உருவிலி - மன்மதன்)

(12) கெஞ்சித் கூத்தாடித்தான் வேண்டினான் சிங்கன். ஆனால் அதை ஏற்கவில்லை நூவன். உதறி எறிந்து விட்டான் சிங்கனின் வேண்டுகோளை.

சிங்கியை நீ அடைந்தால் என்ன? அடையா விட்டால் என்ன? லாபமும் நஷ்டமும் உன்னைச் சேர்ந்தது. உன் சொந்த விவகாரத்தில் என்னை ஏன் இழுக்கிறாய் சிங்கா? பார்த்துத்தான் ஆக வேண்டும் சிங்கியை என்றால் நீ போ தேடி. கண்டுபிடித்து அழைத்து வா சிங்கியை.

"இவள்தானப்பா உன் சிங்கி என்று அப்பொழுது வேண்டுமானால் அடையாளம் காட்டுகிறேன் நான்" என்று"இப்படி விழுந்தது அறை. சவுக்கடி மாதிரிதான் விழுந்தது நூவன் அறைந்த அறை.

**அங்கணர் திரிகூடத்தில்**

**அவளை நீ அணைந்தால் என்ன**

**நுங்களில்ப் பிரிந்தால் என்ன**

**நூவனுக்(கு) உண்டோ நட்டம்?**

---

12. அங்கணர் - குற்றாலநாதர். அவளை - சிங்கியை. நீங்கள் சேர்ந்தால் என்ன? பிரிந்தால் என்ன லாப நஷ்டங்கள் உங்களோடு. எனக்கென்ன சம்பந்தம் அதில். கரிசனம் - அக்கறை கங்கணம் - ஒரே நினைப்பு. கொங்கணச் சிங்கி - பைத்தியமாக்கும் சிங்கி.

**கங்கணம் எனக் கேன் சிங்கா**
**கரிசனை உனக்குண்டா னால்**
**கொங்கணச் சிங்கிதன்னைக்**
**கூட்டிவா காட்டுகேனே (111)**

(13) லேசுப்பட்ட ஆளில்லை சிங்கன். கெஞ்சினால் மிஞ்சுவான். மிஞ்சினால் கெஞ்சுவான். சிங்கி மேல் வைத்த மோகக் கிறுக்கில் நூவனின் கையைப் பிடித்தான். காலைப் பிடித்தான். ஒன்றுக்கும் மசியவில்லை. நூவன். கல்லுளி மங்கனாய் நின்றுவிட்டான் நூவன் இரண்டு பேருமே குறவர்தானே. என்ன இருந்தாலும் குறவன் குறவன்தான்.

நமது பாச்சா ஒன்றும் பலிக்காது நூவனிடம் என்று தெரிந்து விட்டது சிங்கனுக்கு. சரி, தேடிப் போகலாம் சிங்கியை என்று நடையைக் கட்டினான் சிங்கன்.

பொல்லாத ஆள்தான் சிங்கன். எங்கெல்லாம் தேடிப் போனான்.

விருத்தம்

**திருவண் ணாமலை காஞ்சி**
**திருக்கா ளத்தி**
**சீர்காழி சிதம்பரம் தென்**
**ஆரூர் காசி,**
**குருநாடு கேதாரம்,**
**கோலக் கொண்டை**
**கோகரணம் செகந்நாதம்**

**கும்ப கோணம்**
**அரியலூர், சீரங்கம்**
**திருவா னைக்கா,**
**அடங்கலும் போய்ச் சிங்கிதனைத்**
**தேடிச் சிங்கன்**
**வருசிராப் பள்ளிவிட்டு,**
**மதுரை தேடி**
**மதிகொண்டான் திரிகூடம்**
**எதிர் கொண்டானே (112)**

குற்றாலம் வந்தானோ இல்லையோ சிங்கன் சிங்கியும் வந்து விட்டாள் அவன் எதிரில். "பிரிந்தவர் கூடினால் பேச வேண்டுமோ" என்பாரே கம்பர்; அதுபோல்த் தான் பேச்சென்ன வேண்டிக் கிடக்கிறது பேச்சு. ஆனந்தக் கடலில் நீந்தினார்கள் சிங்கனும் சிங்கியும்.

பாடல்கள் எல்லாம் அபாரமாய்த் தான் இருக்கின்றன. விருத்தங்களும் சரி, கொச்சகக் கலிப்பாக்களும் சரி, இசைப்பாடல்களும் சரி, பல்லவி என்றோ, அனுபல்லவி என்றோ, சரணம் என்றோ, கொடுக்கப்பட்டுள்ள இசைக் கூறுகளும் சரி ஒவ்வொன்றும் மணி மணியாய்த்தான் இருக்கின்றன.

---

13. காஞ்சி - காஞ்சிபுரம். தென்ஆரூர் - திருவாரூர். குருநாடு - பாண்டவர் தேசம். இன்றைய அரியானா, டெல்லி பிரதேசம். கேதாரம் - அதற்கும் வடக்குள்ள (இமய) மலைப்பிரதேசம். கோகர்ணம் - திருக்கோகர்ணம். மதிகொண்டான் - சந்திரனைச் சடையில் வைத்திருக்கும் குற்றாலநாதர். திரிகூடம் - திருக்குற்றாலம்.

# செய்யுள் முதற்குறிப்பகராதி


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| அடிசினை மலரும் | 9 | காராரும் செட்டிகுளம் | 307 |
| அங்கணர் திரிகூடத்தில் | 369 | காவலர் திரிகூடத்தில் | 357 |
| அண்டர் கூட்டமும் | 21 | கிளைகளாய்க் கிளைத்த | 3 |
| அந்தரதுந்துபி முழங்க | 200 | குழல்மொழி இடத்தார் | 268 |
| அரியோடும் அயனறியா | 238 | குற்றாலர் கிளைவளத்தை | 242 |
| ஆசை கொண்டு | 104 | கைக்கரும்பென்ன | 134 |
| ஆடல்வளை | 180 | கொக்கிறகு சூடிக்கொண்டு | 292 |
| ஆளாகிப் பெண்ணாய் | 326 | கொத்தடி பூங்குழல் சரிய | 78 |
| ஆலயம் கட்டி (அரசர் வழிமுறை) | 338 | கொத்து மலர்க்குழல் | 35 |
| ஆளிபோல்ப்பாய்ந்து | 293 | கொட்டகைத் தூண்போலும் | 297 |
| ஆற்றை நான் | 321 | கொட்டழகுக் கூத்துடையார் | 310 |
| ஆனேறும் செல்வர் | 259 | கொற்றமதிச் சடையானை | 331 |
| ஆனைகுத்திச்சாய்த்த | 349 | சாட்டிநிற்கும் | 319 |
| இடியின் முழக்கமும் | 29 | சாயினும் ஐயோ | 305 |
| இந்தச்சித்தர் யாரோ | 89 | சிங்கியைக் காணேனே | 317 |
| இருண்ட மேகம் (வசந்தவல்லி அழகு) | 57 | சித்தர் கணம் தேவர் கணம் | 164 |
| ஈராயிரம் கரத்தான் | 305 | சிலைநுதலில் | 193 |
| உன்னைப்போல் எனக்கவன் | 281 | சுற்றாத ஊர் தோறும் | 330 |
| எட்டுக்குரலில் | 313 | செட்டிக் கிரங்கி | 311 |
| என்ன குறியாகிலும் நான் | 254 | செங்கையின் வண்டு | 70 |
| ஏழை பங்கர் | 262 | செட்டி பற்றில் | 358 |
| ஏறாத மீன்களும் | 352 | சென்னியிலே புனல் | 301 |
| ஐயோ என்ன செய்வம் | 108 | சேனைப் பெருக்கமும் | 32 |
| ஒரு மானை | 46 | சைவர் மேலிட | 30 |
| கடித்திடும் அரவம் பூண்ட | 274 | சைவமுத்திரையை | 187 |
| கடுக்கையார் | 367 | சொல்லக் கேளாய்குறி | 275 |
| கங்கை எனும் வட அருவி | 239 | தடுப்பதொரு கரம் | 25 |
| கண்ணி கொண்டு வாடா | 343 | தண்ணமுதுடன் | 119 |
| கலந்த கண்ணியை | 350 | தண்ணிலாக் குடைப்பிடிக்க | 123 |
| கலவிக்கு விழிவாள் | 253 | தரைப் பெண்ணுக்கு அணி | 145 |
| கள்ளுலவும் | 312 | தவளமதி | 6 |
| கன்னி என்று நானிருக்க | 280 | | |
| காதலஞ்செழுத்தர் | 294 | | |

| | பக்கம் |
|---|---|
| தாரினை | 15 |
| திங்களை | 97 |
| திருவண்ணாமலை | 370 |
| தூது நீ | 157 |
| தெண்ணீர் | 172 |
| தொடரும் ஒரு | 20 |
| தொண்டாடும் | 327 |
| நகையும் முகமும் அவள் | 318 |
| நடை கண்டால் | 103 |
| நன்று நன்று குறவஞ்சி | 277 |
| படி ஏழுடையார் | 133 |
| பந்தடித்தனளே | 84 |
| பல்லியும் பலபலென்ன | 257 |
| பவனி வந்தனரே | 20 |
| பாடிய மறை | 177 |
| பாமாலைத் திரிகூடர் | 290 |
| பாலேறு விடையான் | 38 |
| புரத்து நெருப்பை | 155 |
| புலியொடு புலியைத் தாக்கி | 296 |
| பெண்ணிலே குழல் | 117 |
| பேடைக் குயிலுக்கு | 314 |
| போயினும் ஐயே (பறவை) | 360 |
| மன்னர் திரிகூடநாதர் | 285 |
| மாமதத் தருவிபாயும் | 12 |
| மாதம் மூன்று | 222 |
| மாறாமல் இருநிலத்தில் | 265 |
| முத்திரை மோதிரமிட்ட | 260 |
| முருகு சந்தனக் குழம்பு | 115 |
| முனிபரவும் | 98 |
| முன்னம் கிரிவளைத்த | 197 |
| மூக்கெழுத்தமுத்துடையார் | 18 |
| மூவகை மதிலும் | 299 |

| | பக்கம் |
|---|---|
| மெய்யர்க்கு மெய்யர் | 137 |
| மைக்குறியால் | 322 |
| வங்காரப் பூஷணமிட்டு | 51 |
| வசந்த ஒய்யாரவல்லி | 153 |
| வஞ்சி வந்தாள்குற | 199 |
| வண்மையோ வாய்மதமோ | 282 |
| வருக்கையா | 366 |
| வருசங்க வீதிதன்னி | 88 |
| வள்ளைக்கொடியிலே | 328 |
| வாகனத்தில் ஏறிவரும் | 279 |
| வார்வாழும் | 333 |
| வானரங்கள் கனி | 279 |
| வானவர் திருக்குற்றாலர் | 110 |
| வித்தகர் திரிகூடத்தில் | 67 |
| வித்தாரம் என்குறி | 247 |
| வேடுவக் கன்னி | 368 |
| வேரிலே பழம் பழுத்து | 147 |